விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI
தமிழ்த்தந்தி
# தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 06 தந்தி 48 ஞாயிற்றுக்கிழமை 28.10.2018 Sunday 28th October 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com



# மகிந்தவை பிரதமராக்கிய மைத்திரியின் பிரம்மாஸ்திரம் என்ன?

**இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் அரசியலமைப்பின் 42 மற்றும் 46 ஆவது சரத்துகளே மைத்திரியினதும் ரணிலினதும் தீர்மானங்களுக்கு பிரதான காரணம்**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட அரசியல் மாற்றமானது பலரையும் திகைக்க வைத்துள்ளது. எப்படி மகிந்த ராஜபக்ஷவை எவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக்கினார் என்று அனைவரும் திகைத்துப் போயுள்ளனர். மைத்திரிபால சிறிசேன அவர்கள் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய அந்த பிரம்மாஸ்திரம்தான் என்ன என்று பலரும் குழம்பிப்போயுள்ளனர்.

குறிப்பாக இலங்கை அரசிலமைப்பின் 46 (2) சரத்து படி, பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது என்று ரணில் விக்ரமசிங்க உட்பட பலர் தெரிவித்திருக்கிறார்கள். அதில் உண்மை இல்லாமல் இல்லை.

ஆனால், அதே 46 சரத்துக்கு அமைய

02ஆம் பக்கம் பார்க்க

## நானே பிரதமர்!



தன்னை பிரதமர் பதவியில் இருந்து விலக்க வேண்டுமானால் புதிய பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்து அதனை வெற்றி கொள்ள வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நேற்று

02ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேசத்தில் மீண்டும் தலைதூக்கும் இனச்சுத்திகரிப்பு கோஷமும் போர்க்குற்ற விசாரணையும்



சர்வதேசத்தில் இனச்சுத்திகரிப்பு கோசமும் போர்க்குற்ற விசாரணையும் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

அண்மையில் மகிந்தவை பிரதமராக்கியவுடன் பிபிசி தனது செய்தியினை இனச்சுத்திகரிப்பைச் செய்த போர்க்குற்றவாளி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராகினார் என்ற செய்தியை வெளியிட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் பெயருக்கு முன்னால் அவரின் தந்தையின் பெயருக்கு பதிலாக போர்க்குற்றவாளி மகிந்த ராஜபக்ஷ என்று பிபிசி தனது செய்தியை வெளியிட்டது.

போர் உக்கிரமடைந்து மக்களுக்கு உணவனுப்பாமல், அவர்கள் பட்டினியில் வாடும் பொழுதும் குண்டுகள் வீசப்பட்டு மக்கள் கொத்துக் கொத்தாக குழந்தைகள், கர்ப்பிணிகள் என்ற வித்தியசாமின்றி கொன்று குவிக்கின்ற பொழுது இனச்சுத்திகரிப்பு, போர்க்குற்றம் என்று வாய்திறக்காத பிபிசி மகிந்த ராஜபக்ஷவின் பதவியேற்பை மீண்டும் போர்க்குற்றவாளி மகிந்த ராஜபக்ஷ பிரதமரானார் என்று செய்தி வெளியிட்டது.

நல்லாட்சியை சர்வதேசத்தின் உதவியுடன் இந்தியா ஆட்சிக்கு கொண்டு வந்ததன் முக்கிய நோக்கம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையமும், பலாலி விமானத்தளமும் திருமலை எண்ணைய் கிணறுகளையும் தன்வசப்படுத்துவதும் சீனாவின் ஆதிக்கத்தை நிறுத்துவாதமாகத் தான் இருந்தததுது.

ஆனால் இந்தியா நினைத்தபடி சீனாவை இலங்கையிலிருந்து அகற்ற முடியவில்லை. அதேநேரம் வட,கிழக்கிலுள்ள பலாலி விமான நிலையம், திருமலை எண்ணெய்

02ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் அணிவகுத்த விதம்

மைத்திரிபால சிரிசேன அவர்கள் ஜனாதிபதியாகி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து 100 நாள் அரசாங்கம் அமைக்கப்பட்டது.

2015 ஆகஸ்ட் மாதத்தில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதிர கட்சி 96 ஆசனங்களையும் வென்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 2015 ஆகஸ்ட் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவானார். பின்னர் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்ததுடன், மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொது எதிர்கட்சியாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினர். தேசிய அரசாங்கத்தில் 43 அமைச்சர்கள் தெரிவாகி இருந்ததுடன், ஸ்ரீசுக உட்பட தேசிய மக்கள் சுதந்தரி கூட்டணி அரசாங்கத்தில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து தேசிய அரசாங்கம் முடிவிற்கு வந்தது.

கூட்டணி தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகியதுடன் அமைச்சரவையும் செயலிழக்கின்றது என்று நீதி விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை மிக விரைவில் பதவியேற்க உள்ளது.

## முற்போக்கு முன்னணிக்குள் குழப்பம்



தற்பொழுது தென்னிலங்கை அரசியல் சூடுபிடித்துள்ள அதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் சிறுபான்மைக் கட்சிகள் தங்கள் ஆதரவுகளைத் தெரிவித்து வருகின்றன.





02ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனுக்கு ஆசை காட்டும் ரணில்



### செல்வம் அடைக்கலநாதனுக்கு பிரதிக் குழுக்களின் தலைவர் பதவி

ரணிலுக்கு ஆதரவளித்தால் எதிர்கட்சிப் பதவி சம்பந்தனுக்கும் பாராளுமன்ற பிரதிக்குழுக்களின் தலைவர் பதவி அடைக்கலநானுக்குகும் வழங்க ரணில் உறுதி

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை காப்பாற்ற வேண்டுமென்பதிலே இந்திய அரசாங்கம் தீவிர முயற்சியை எடுத்து

02ஆம் பக்கம் பார்க்க



வடமாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன்

## கூட்டமைப்பு மீண்டும் மக்களுக்கு துரோகமிழைக்கக் கூடாது!

இன்றைய நிலையைப் பொறுத்தவரையில் மத்தியில் ஆட்சி மாற்றங்கள் வேகவேகமாக இடம்பெற்று வரும் நிலையில் அடுத்து வரும் தேர்தல் பொதுத்தேர்தலா அல்லது மாகாண சபைத் தேர்தலா என்று தெரியவில்லை. அப்படி வரும் பொழுது எங்கள் கொள்கைகளுடன் இணைந்து பயணிப்போருடன் கூட்டு வைத்து தேர்தல்களில் போட்டியிடுவோம்.

மிகக்குறைந்த நிதிப்பங்களிப்புடன் நான் மாகாண

02ஆம் பக்கம் பார்க்க

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினருடன் புலம்பெயர் அமைப்பு பிரதிநிதிகள் சந்திப்பு



எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கவிருக்கின்ற கூட்டத்தொடரில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யக்கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றது. அந்த வகையில் ஒக்டோபர் 26 ம் திகதி

02ஆம் பக்கம் பார்க்க

## ஆளுநர்கள் மாற்றம்?

கல்முனை நிருபர்

மத்திய அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை தொடர்ந்து வட மாகாண சபைக்கு புதிய ஆளுனர் நியமிக்கப்பட உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே வட மாகாண ஆளுனராக பதவி வகித்த மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளை தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரின் பெயர்கள் இந்

02ஆம் பக்கம் பார்க்க

## பெருந்தோட்ட மக்களை அவமானப்படுத்தும் வகையில் விளம்பரப்பலகை




மஸ்கெலியா நிருபர்

பெருந்தோட்ட மக்கள் அன்றாட வாழ்க்கை செலவுக்காக போராட்டத்தை தொடர்ந்து நடாத்தி வரும் நிலையில் மஸ்கெலியா பொலிஸ் நிலையம் முன்பாக மக்களை கோபமூட்டும்

02ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸாரின் விடுமுறைகள் இரத்து

உடன் அமுலுக்குவரும் வகையில் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மறு அறிவித்தல் வரை அனைத்து தரத்திலும் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.



## மழை தொடரும்!

நாட்டின் தென்கிழக்கு பகுதியின், கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக தற்போது காணப்படும் மழையுடன் கூடிய வானிலை தொடரக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும்

02ஆம் பக்கம் பார்க்க

## இந்திய அகதிமுகாம்களில் வாழும் இலங்கை அகதிகளை விரைவில் மீளக்குடியேற்றுவோம்

கந்தளாய் நிருபர்

யுத்தம் காரணமாக இந்திய அகதிமுகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களை மீள்குடியேற்றுவதில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அடிப்படை மனித உரிமைகள் விடயத்தில் கடந்த அரசாங்கத்தை விட தற்போதைய அரசு அதிக கரிசணையுடன் செயற்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தியாவில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயம் நிகழ்த்தும் நினைவேந்தல் நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சென்னை சென்றடைந்தார்.

02ஆம் பக்கம் பார்க்க



# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக காவத்தை நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!





**இரத்தினபுரி நிருபர்**

ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென கோரி காவத்தை நகரில் தோட்டத் தொழிலாளர்கள், வர்த்தகர்கள், இளைஞர், யுவதிகள் ஒன்யிணைந்து நேற்று முன்தினம் காவத்தை நகரின் மணிக்கூட்டு கோபுரத்தின் அருகாமையில் காவத்தை பிரதான வீதி வழிமறைத்து மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காவத்தை யாயின்ன சந்தியிலருந்து தோட்டத் தொழிலாளர்கள், வர்த்தகர்கள், இளைஞர், யுவதிகள் பாதயாத்திரை மூலம் காவத்தை மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக ஒன்யிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் காவத்தை பிரதேசத்தை அண்மித்த அவுப்பை, எந்தான, சமரகந்த, ஒப்பாத்த, வெள்ளந்துர, கலலெல்ல, நீலகாமம், பொரோணுவ, ரில்லேன, உனுவல, உட்பட மேலும் பல தோட்டங்களை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள், வர்த்தகர்கள், இளைஞர், யுவதிகள், சமூக சேவையாளர்கள் உட்பட 1000க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

முதலாளிமார் சம்மேளனம் தோட்டத் தொழிலாளியிடம் வேலையை மட்டும் வாங்காதே? தோட்டத் தொழிலாளர்களையும் கண் விழித்துப்பார், தோட்ட மக்களை காலால் மிதிக்காதே, உடனடியாக தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்கு என்று பல்வேறு கோஷங்களையும் எழுப்பி பதாதைகளையும் கருப்பு கொடிகளையும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி ஆர்ப்பாட்டம் காரணமாக காவத்தை நகரில் பல மணி நேரம் போக்குவரத்து தடை ஏற்றட்டதும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு சென்னை விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டதோடு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் மற்றும் அரசியல் பிரமுகர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. அதன்பின் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் மத்தியில் அமைச்சர் மேலும் பதிலளிக்கையில் கூறியதாவது;

தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையிலுள்ள இழுபறி நிலைக்கு தீர்வுகாணவேண்டும். இதற்காக இரு நாடுகளின் மீனவ சங்கங்கள் உள்ளடங்கலாக வெளியுறவு அமைச்சு மட்டத்திலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களின் சிபார்சுகளில் நாங்கள் தீவிர கரிசணை செலுத்திவருகிறோம் என்றார்.

## பெருந்தோட்ட...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

வகையில் பதாகை ஒன்றை காட்சி படுத்தப்பட்டுள்ளது.

அப்பதாகை மஸ்கெலியா பிளான்டேசனால் இப்பதாகை காட்சி படுத்தப்பட்டுள்ளது. இப்பதாகையில் பெருந்தோட்ட பெண்கள் இரு சக்கர வாகனத்தில் நவீன ஆடை அணிந்து கொண்டு கொழுந்து கூடையுடன் பயணம் செய்யும் விதத்தில் இருப்பது கோபத்தை ஏற்படுத்துவதாக தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## ஆளுநர்கள்...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

நியமனத்துக்காக முன்னிலைப்படுத்தப்பட்டு உள்ளன என்று தெரிகின்றது.

இதே நேரம் கிழக்கு மாகாண சபைக்கும் புதிய ஆளுனர் நியமிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மீண்டும்...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி** வருகின்றது. ஆட்டம் கண்டுள்ள ரணிலின் ஆட்சியினூடாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை தருவதாக ஏமாற்றிய இலங்கை அரசிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்வதற்கு பலாலி விமானத்தைளத்தையும், திருகோணாமலை எண்ணெய்க் குதங்களையும் பெற்றுக் கொள்வதற்கும் பேரம் பேசி வருகின்றது.

அதே சமயம் தமக்கு ஆதரவளிக்கும் பட்சத்தில் கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை சம்பந்தனுக்கும் பிரதிக்குழுக்களின் தலைவர் பதவியை அடைக்கநாதனுக்கும் வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க உத்தரவாதமளித்துள்ளார்.

## முற்போக்கு...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

அந்த வரிசையில் தமிழ் முற்போக்கு முன்னணிக்குள் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பதில் பாரிய குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக பழனி திகாம்பரமும், மனோ கணேசனும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமது ஆதரவை வழங்குது என்று கூறியவேளையில் இராதகிருஷ்ணன் அவர்கள் யார் பிரதமராகின்றாரோ அவருக்கே எங்கள் ஆதரவு என்ற மாறுபட்ட கருத்தினை கூறுகின்றார்.

தமிழ் முற்போக்கு முன்னணியில் மனோ கணேசனின் கட்சியும், திகாரம்பரத்தின் கட்சியும், இராதகிருஷ்ணனின் கட்சியும் இணைந்து உருவாக்கப்பட்ட போதும் இராதாகிருஷ்ணன் தனது கட்சியின் நிலைப்பாடு திகாரம்பரம் மற்றும் மனோ கணேசனின் கட்சியின் நிலைபாடுகளுக்கு மாறான கருத்தைக் கொண்டுள்ளார்.

ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்திருந்த அதேச சமயம் திகாரம்பரமும் மனோ கசேனும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்த அதேநேரம் இராதாகிருஷ்ணன் தனது மாற்றுக் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

## சர்வதேசத்தில்...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

குதங்களை எடுத்தாலும் அம்பாந்தோட்டையை கைப்பற்றுவதில் பெரும் சிரமத்தையே எதிர்கொள்கின்றது. தெற்கிலே இந்தியாவின் ஆதிக்கம் முடக்கப்படுவதையும் சீனாவின் ஆதிக்கம் மேலோங்குவதையும் இந்தியா உணர்ந்துள்ளது. மீண்டும் ராஜபக்ஷ அவர்கள் பதவிக்கு வருகின்ற பொழுது இலங்கை சீனா வசம் வருவது தவிர்க்க முடியாது. இதனால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வருமென்பதை சர்வதேச அவதானிகள் கருத்துகளை தெரிவித்து வருகின்றார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை சீனாவிடமிருந்து கட்டுப்படுத்துவதற்கு சர்வதேசம் பயன்படுத்தும் ஆயுதம் போர்க்குற்றமும் இனச்சுத்திகரிப்பும் என்று பிபிசியின் செய்தியறிக்கை காட்டுகின்றது.

## நானே...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

முன்தினம் (26) இரவு அலரி மாளிகையில் இடம் பெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

இதற்கு முன்னரும் எனக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை அதிகவாக்குகளால் தோல்வியடைந்தது. என்னால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியும். பாராளுமன்றம் கூடியவுடன் நான் அதனை நிரூபிக்கின்றேன்.

அரசியலமைப்பின் 42ம் பிரிவிற்கமைய நான் பிரதமராக செயற்படுவேன். பாராளுமன்றத்தில் பெரும்பாலானவர்கள் எனக்கு ஆதரவு தருகின்றனர். பாராளுமன்ற பெரும்பான்மை இருக்கும் வரை நான் பிரதமராக இருப்பேன். வேறு யாராலும் பாராளுமன்ற பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது. பாராளுமன்ற சம்பிரதாயம் மற்றும் அரசியலமைப்பிற்கு அமைய நான் தொடர்ந்தும் பிரதமராக செயற்ப்படுவேன் என ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை இரவு ஐக்கிய தேசிய கட்சியின் அதிகளவு பிமுகர்கள் அலரி மாளிகைகு வருகை தந்திருந்தனர்.

## மழை...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பி.ப 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி, மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100-150 மி.மீ அளவான மழைபெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

இடியுடன் கூடிய மழையின்போது அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றுவீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டுக்கு தென்கிழக்காக வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட கீழ் வளிமண்டல தளம்பல் நிலை காரணமாக கடற்பரப்புகளில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை தொடருமென்று திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டையிலிருந்து மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மாலையில் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளின்; சில இடங்களில் பலமான மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மட்டக்களப்பிலிருந்து காங்கேசன் துறை ஊடாக புத்தளம் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும். இக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 10-20 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## பிரித்தானிய...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

கன்சவேர்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் Nick Hurd அவர்களுடன் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. காலை 10.20 மணியளவில் 32, High Street Northwood, H A6 1BN எனும் இடத்தில் ஆரம்பமாகிய இச்சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்றது.

நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் மற்றும் விளையாட்டு மற்றும் சமூக நலன் பேணும் பிரதியமைச்சர் செராக்கலிங்கம் யோகலிங்கத்தினுடைய நெறிப்படுத்தலில் செயற்பாட்டாளர்களான பொன்ராசா புவலோஜன், நுஜிதன் இராசேந்திரம், துஷ்யந்தன் பாலசுந்தரம், டக்ளஸ் மென்டிசன் அற்புதம் ஆகியோர் கலந்துகொண்ட குறித்த சந்திப்புக்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் கொண்டுவரப்பட்ட 30/1, 34/1 தீர்மானங்களானது எந்தளவிற்கு இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டு அது தொடர்பான இலங்கையின் நீதிப்பொறிமுறை அமைவுகளை கண்காணிக்கும் பொறுப்புடைமைக்கான சர்வதேச நிபுணர் குழுவின் (Srilanka monitoring and accountability panel) அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு (International crimimal court) எதற்காக பரிந்துரைக்க வேண்டும் என்பது பற்றிய மனுவும் கையளிக்கப்பட்டது. குறிப்பிட்ட மனுவில் பாராளுமன்ற உறுப்பினர் கையொப்பமிட்டு ஆதரவு தெரிவித்ததுடன் தொடர்ந்து இது தொடர்பாக பாராளுமன்ற விவாதம் வரும் பட்சத்தில் கேள்விகளை முன்வைப்பதாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தமிழர் தாயக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள்இ நீண்ட நாட்களாக எந்தவித விசாரணையுமின்றி சிறைகளில் வதைபட்டுக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சனைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் அண்மையில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம் மற்றும் செயற்பாட்டாளர்கள் தொடர்பாக பிரித்தானிய காவல்துறையின் செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டதுடன் இதற்கு தீர்வு காணவும் வலிறுத்தப்பட்டது.

## கூட்டமைப்பு...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

சபையில் எனது கீழுள்ள அமைச்சுகளில் சுமார் ஒன்றரை வருடங்கள் பணியாற்றினேன். எங்கள் அமைச்சுக்கு மிகச் சொற்பமாகவே நிதி ஒதுக்கப்பட்டது. அப்படியிருந்தும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்களால் இயன்றளவுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நாங்கள் முயற்சி செய்துள்ளோம். போதுமானளவு நிதிப் பங்களிப்பு இருந்திருக்குமாக இருந்தால் இன்னும் பாரியளவிலான வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கலாம். அது சார்ந்த குற்றவுணர்வு என்னிடம் உண்டு.

வடமாகாண மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு போன்றவற்றிற்கு மத்திய அரசாங்கத்திலிருந்தும் மகளிர் விவகார அமைச்சிலிருந்தும் ஒருசதமேனும் நிதியொதுக்கப்படவில்லை. அதேபோல் புனர்வாழ்வு அமைச்சிலிருந்தும் எங்களுக்கான நிதிப்பங்களிப்புக்கள் இல்லை. அதேநேரம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டத்தை செய்யுங்கள் என்று புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதனிடம் முன்வைத்தும் அவர் அவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்களை செய்யவில்லை.

கூட்டமைப்பு இதயசுத்தியுடன் செயற்படாமையே என்னுடைய மற்றும் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களுடைய வெளியேற்றங்களுக்கு மூல காரணம். நேற்றுமுன்தினம் தெற்கு அரசியலில் பெரும் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அதில் பிரதமரான மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தமிழர்களுடைய மனங்களை வெல்வதற்காக, சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை உடனடியாக மேற்கொள்வாராக இருந்தால் அவரை எங்களுடையை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழல் உருவாகும்.

ஆனால் இதுவரை இந்த விடயத்தில் கூட்டமைப்பு மௌனமாகவே இருந்து வந்துள்ளது. இனியும் அப்படித்தான் இருக்கும். கடந்த காலத்தில் நல்லாட்சி அரசாங்கம் ஒன்றைக் கொண்டுவந்து சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரை ஜனாதிபதியாகவும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவரை பிரதமராகவும் ஆட்சிப் பீடமேற்றினார்கள். அப்படியிருந்தும் கூட்டமைப்பு பக்கச் சார்பாக ஐக்கிய தேசிய கட்சியின் பின்னால் சென்றதன் காரணத்தால் ஜனாதிபதியின் அனைத்து வேலைத் திட்டங்களும் இங்கு முடக்குப்பட்டதற்கான பிரதான காரணம். அப்படி ஒருகட்சிக்கு ஆதரவளிக்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு பல நல்ல காரியங்களைச் சாதித்திருக்கலாம்.

தனிப்பட்ட ஒரிருவரின் விருப்பங்கள் தான் அங்கு கோலோச்சியதே தவிர இதயசுத்தியுடனான மக்களுடைய அபிலாசைகள் எவையும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் ஐயா இருந்தும் எதையும் சாதிக்காத காலமாகத்தான் இந்தக் காலம் இருந்திருக்கின்றது. இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது.

எத்தனையோ தடவை அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருந்துள்ளார்கள். உயிருக்கு ஆபத்தான நிலைமையைக் கூட சந்தித்திருக்கின்றார்கள். அதனை விட அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் காலம்காலமாக கொல்லப்பட்டதும், இந்த நல்லாட்சி அரசாங்கம் வந்தபின்னர் கூட கொல்லப்பட்டதும் கூட வரலாற்று நிகழ்வாக இருக்கின்ற பொழுது எப்பவோ செய்திருக்க வேண்டிய பல காரியங்கை இவர்கள் ஆற்றாமல் விட்டுள்ளார்கள் என்பதுதான் உண்மை.

வடக்கு மாகாண சபையின் ஆரம்பகாலங்களில் முதலமைச்சர் அவர்கள் கூட்டமைப்பின் சொல்லைக்கேட்டு அவர்கள் சொன்னதையே செய்து வந்து கொண்டிருந்தார். ஏனென்றால் அவருக்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக சிந்தனை அப்போது இருந்திருக்கவில்லை. அதன்பிற்பாடு நாங்கள் போருக்குள் இருந்து வந்தவர்கள் என்றவகையில் எங்களுக்கு அதுஇருந்தது. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்கின்ற காலமாகத்தான் முதலமைச்சருக்கு அது இருந்தது.

அதன்பின்னர் அவர் தெற்கிற்கு விசுவாசமாகவோ அல்லது தெற்கை பாதுகாப்பதை கணக்கில் கொள்ளாமல் முதன்முதலாக மாகாணசபையில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற பிரேரணையை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடைய எதிர்ப்பையும் மீறி சபையில் கொண்டு வந்து நிறைவேற்றியதன் காரணம்தான் கூட்டமைப்புக்கும் முதல்வருக்குமான பனிப்போரின் ஆரம்பப்புள்ளி. அதன் விளைவாகத்தான் முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தார்கள். அன்றிலிருந்து எங்கள் சபை இயங்காத நிலையில்தான் இருந்தது. பிரேரணைகளை மட்டும் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஆரம்பத்தில் முதலமைச்சர் பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கூடவே சென்றார். காரணம் முதலமைச்சரை தங்கள் பிடிக்குள் வைத்து இயக்கும் நிலைமையே அன்று காணப்பட்டது. ஆனால் பின்னர் மக்களுடைய பாதிப்புகள், அவர்களுடைய வெளிப்பாடுகள், சந்திப்புக்கள் போன்றவை முதலமைச்சரின் மனதை மாற்றியிருக்கலாம். அந்தவகையில்தான் கூட்டமைப்புக்கும் முதலமைச்சருக்கும் இடையிலான முறுகல்நிலை தோன்றியது.

எமது கட்சியில் தற்பொழுது தாமாக முன்வந்து மக்கள் இணைந்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். எமது கட்சியின் நிதிப்பங்களிப்பை நாங்கள் உள்நாட்டிலேயே மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். ஆனாலும் புலம்பெயர் உறவுகள் இங்குள்ள தமது உறவுகள் மூலமாக எமக்கான நிதியைக் கையளிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். எமக்கு தற்பொழுது நகரை அண்டிய இடத்தில் அலுவலகம் அமைப்பதற்குரிய இடத்தை தீவிரமாக தேடி வருகின்றோம்.

எங்களின் கட்சி கொள்கைக்காக உருவாக்கப்பட்டது. அரசியல் ரீதியான அழுத்தத்தை பிரயோகிப்பதற்கான கட்சியாக தோற்றம்பெற்றுள்ளது. எங்களின் கொள்கைகளை உணர்ந்து கொண்டவர்கள் ஏற்றுக் கொண்டவர்கள் எங்களுடன் இணைந்து பணியாற்றலாம். சமூக மாற்றங்களைக் கொண்டு வருவதாக எங்களின் கட்சி இருக்கும்.

## மகிந்தவை...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி** அமைச்சரவை உறுப்பினர்கள் 30 ஐ விட அதிகரிக்க முடியாது என்றும், குறித்த அமைச்சரவை நடைமுறையில் இருக்கும் வரைதான் 46(2) பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வரையறை செய்துள்ளது. பிரதம அமைச்சரின் பதவிக்காலத்தையும் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் என்போரின் எண்ணிக்கையினதும் பதவிக்காலத்தினதும் வரையறையை சரத்து 46 விபரிக்கின்றது.

அதில், 46 (1) (அ) அமைச்சரவை அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முப்பதை விஞ்சுதலாகாது, அத்துடன்,

(ஆ) அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் கூட்டு மொத்த எண்ணிக்கை மொத்தத்தில் நாற்பதை விஞ்சுதலாகாது. 46 (2) பிரதம அமைச்சர்

(அ) ஜனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறந்தாலொழிய அல்லது (ஆ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாலொழிய

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரனை தொடர்ந்தும் பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும். 46 (3) அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் அல்லது அமைச்சரவை உறுப்பினரல்லாத ஓர் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(அ) பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது அவர் ஜனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அகற்றப்பட்டிருந்தாலொழிய (ஆ)சனாதிபதிக்கு முகவரிட்டனுப்பும் அவருடைய கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் தமது பதவியைத் துறந்தாலொழிய அல்லது (இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லாதொழிந்தாலொழிய

இதுவே பிரதமரை நீக்கும் அதிகாரம் என்று ரணில் தரப்பு தெரிவிக்கின்றது.

ஆனால் தற்போதைய அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டு கட்சிகளை கொண்ட தேசிய அரசாங்கம் என்பதை வரையறுத்து அதிகரிக்கப்பட்டது. இந்த இரு கட்சிகளில் ஒரு கட்சி தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகும் போது, தேசிய அரசாங்கம் கலைகிறது. அதையொத்து (அதிகரிக்கப்பட்ட) கபினட்டும் கலைகிறது. ஐமசுமு தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகுகிறோம் என்று தனது செயலாளர் ஊடாக முதலில் அறிக்கைவிடுத்தது. தேசிய அரசாங்கம் கலைக்கப்படும் என்றால், நடைமுறையில் இருந்த கபினட்டும் தானாக கலைந்துவிடும். கபினட் கலைந்தவுடன் அரசியமைப்பின் 42(4) இற்கு அமைய, பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் என்று கருதும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை பிரதமராக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வந்துவிடுகிறது.

42(1) குடியரசின் அரசாங்கத்தைப் நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும். (2) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பாகவிருத்தலும் வகை சொல்லற்பாதலும் வேண்டும்.

(3) ஜனாதிபதி அமைச்சரவையின் ஓர் உறுப்பினராயிருத்தல் வேண்டும் என்பதுடன் அமைச்சரவையின் தலைவராயிருத்தலும் வேண்டும். (4) ஜனாதிபதி அவரது கருத்துப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளவராக இருக்கின்றரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும். இந்த துரும்பையே ஜனாதிபதி பாவித்துள்ளார்.

# அமைச்சர் சுவாமிநாதனுடைய கருத்துக்கு குரு பீடம் கண்டனம்

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

இந்தியாவில் உள்ள சபரிமலை யாத்திரயில் ஆண், பெண் என்ற வேறுபாடில்லை யாரும் செல்லலாம் என்று இந்திய ஊடகங்களுக்கு இலங்கையின் இந்துக் கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்த கருதை இலங்கையில் உள்ள சர்வதேச இந்துமத குருபீடாதிபதியும், சபரிமலைக் குரு முதல்வருமான ஸ்ரீ ஐய்யப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியரும், அகில இலங்கை சபரிமலை குருசுவாமி ஒன்றியத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் மற்றும் அதன் செயலாளர் ரவிசாமி ஆகியோர் கூட்டாக தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

மேற்படிக் கண்டனத்தை தெரிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை கொழும்பு கொட்டாஞ்சேனையில் ஸ்ரீ ஐய்யப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதியும், சபரிமலைக் குருமுதல்வருமான ஸ்ரீ ஐய்யப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.

சபரிமலை ஐயப்பசுவாமி யாத்திரையில் அணைத்து வயதப் பெண்களும் செல்லலாம் என்ற இந்திய அரசின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து பல சர்ச்சைகளும், ஆர்ப்பாட்டங்களும், கண்டன ஊர்வலங்களும் நடைபெற்று வருகின்றது. இது வேதனையைத் தருகின்றது. ஆலயம் என்பது லயப் படுகின்ற இடமாகும். ஆலய வழிபாட்டில் பல சர்ச்சைகளை உண்டாக்குவதும், மலை யாத்திரைக்காக சென்ற சுவாமிகள் தாக்கப்பட்டமைகள் எல்லாம் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இது மனதிற்கு வேதனையைத் தருவதுடன் அது தேவையற்ற குழப்பமுமாகும்.

வேற்றுமதத்தவர்கள் சபரிமலைக்கச் சென்ற போது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். அடுத்தமாதம் கார்த்திகை முதலாம் திகதி மண்டல விரதம் ஆரம்பமாக விருக்கின்றது. அத்தருணத்தில் இந்திய அரசும், கேரள அரசும் இவற்றைக் கவனத்திற் கொண்டு பல்லாயிரக் கணக்கான அடியார்களும் மன நிறைவோடு இருக்க வழி செய்ய வேண்டும். எல்லா வயதினரும் செல்லலாம் என்ற தீர்ப்பிலிருந்து பல்வேறுபட்ட ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வருவதுடன் இலங்கையிலும் இடம் பெற்று வருகின்றது. அகில இலங்கை சபரிமலை சார்சாஸ்திரி குருசாமியார் ஒன்றியத்தின் மூலம் வவுனியா, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்திய ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் ஆகியோருக்கு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நாங்கள் மணு ஒன்றைக் கையளித்துள்ளோம். இவ்வாறான நிலையில் இலங்கையில் இந்து சமயத்திற்கு பொறுப்பான அமைச்சர் சபரி மலைக்கு சகல பெண்களும் செல்லலாம் ஆலயத்திற்கு ஆண், பெண் என்ற பாகுபாடு



கிடையாது இருவரும் செல்லலாம், எல்லா வயதினரும் செல்லலாம் என்ற கருத்தைக் கொடுத்துள்ளமை இது உண்மையில் உலகலாவிய ரீதியில் எதிர்ப்புத் தெரிவித் நிலையில் கண்டனத்திற்குரியதுடன் வேதனையைத் தருகின்றது. இலங்கைத் திருநாட்டில் உள்ள ஐயப்ப சாமிகள், அகில இலங்கை குருசாமி ஒன்றியம் மூலமும், மனுக் கொடுத்துள்ள நிலையில் சுவாமி நாதன் தெரிவித்த கருத்துக்கு அந்த அரசு நாம் கொடுத்த மனு விடயத்தில் சிந்திப்பார்கள்.

ஆலயத்திற்குச் செல்ல அணைத்து ஆண், பெண்கள் செல்லலாம், பாகுபாடு இல்லை என்பதை சுவாமிநாதன் சொல்லித்தான் இந்தக்கள் தெரிந்து கொள்ளத் தேவையில்லை. இது ஒரு தவறான கருத்து சார்வதேச குரு பீடத்தினூடாகவும், அகில இலங்கை குருசாமிகள் ஒன்றியத்தின் மூலமாகவும் சபரி மலை சார்சார்பகத்தின் மூலமாகவும் அமைச்சரின் கருத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

# கந்தளாயில் உணவகம் சேதம்

**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை கந்தளாய் பகுதியில் இனந்தெரியாதோரால் உணவம் ஒன்றின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர் .

இவ் உடைப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் நகரில் அமைந்துள்ள முஸ்லிம் நபருக்கு சொந்தமான உணவகம் ஒன்றின் கண்ணாடிகளை உடைத்து இவ்வாறு சேதப்படுத்தியுள்ளதாகவும்,பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த பதினைந்து நாட்களுக்கு முன்னரும் இவ்வாறு ஒரு உணவகத்தின் கண்ணாடிகள் உடைத்து சேதமாக்கப்பட்டதோடு,

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரும் இவ்வாறு குறித்த உணவகத்தின் வெளிக் கதவுகள் மற்றும் கண்ணாடிகள் போன்ற உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக நகரில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டீவி கானொலிகளை பயன்படுத்தி குறித்த உணவகம்உடைப்புடன்தொடர்புடையவர்களை கைதுசெய்ய நடாவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வடக்கு. கிழக்கைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் புறக்கணிப்பு



**வவுனியா நிருபர்**

ஐக்கிய அமெரிக்காவின் நிதியனுசரனையில் ஐ.டபிள்யூ. பி.ஆர் அமைப்பினூடாக புலனாய்வு அறிக்கையிடல் தொடர்பான பயிற்சி பட்டறையின் விருது வழங்கும் நிகழ்வில் வடக்கு கிழக்கு தமிழ் ஊடகவியலாளர்கள் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர்

கடந்த 2016ம் ஆண்டு இலங்கையின் அனைத்து மாகாண ங்களில் இருந்தும் தொழில் சார்ந்த ஊடகவியலாளர்கள் அமைப்பு உருவாக்கப்பட்டு அதில் இருந்து தொழில் சார்ந்த ஊடகவியலாளர்கள் சம்மேளனம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அமைப்பினால்ஐக்கிய அமெரிக்காவின் நிதியனுசரனையில் ஐ.டபிள்யூ. பி.ஆர் அமைப்பினூடாக புலனாய்வு அறிக்கையிடல் தொடர்பான பயிற்சி பட்டறை தொடர்ச்சியாக கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்ற துடன் இதில் பங்கு பற்றியவர்கள்

இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கைகளுக்கான விருது கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் மேற்படி பயிற்சி பட்டறையில் இரண்டு வருடங்கள் பங்குபற்றி அறிக்கைகளை எழுதி வெளியீடு செய்த வடக்கு கிழக்கை சேர்ந்த சேர்ந்த தமிழ் ஊடாக வியலாளர்கள் விருது வழங்கும் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்

இந்த விருது வழங்கும் நிகழ்வில் வடக்கு. கிழக்கைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் முழுமையாக புறக்கணிக்கப் பட்டுள்ளனர்

இவ்வாறு கடந்த யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் களை திரட்டி அவர்களின் திறன் விருத்தியை மேம்படுத்துவதாக நிதியினை பெற்று வடக்கு கிழக்கை சஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்

கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அவர்கள் கலந்து கொண்ட நிகழ்விலேயே வடக்கு. கிழக்கைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்கள் முழுமையாக புறக்கணிக்கப் பட்டுள்ளனர்.

# பதவியைத் துறப்பாரா ஆறுமுகன் தொண்டமான்?



**பூண்டுலோயா நிருபர்**

சம்பளப்பிரச்சனை பெரும் பிரச்சனையாக அமைந்துள்ளது. ஒட்டுமொத்த மலையகமும் எவ்வித பாகுபாடின்றியும் பெருந்தோட்ட சம்பள விவகாரத்தில் ஆதரவளித்து வருகின்றனர். அந்தவகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இதில் அவர் கூறும் போது 31ம் திகதிக்கு முன்னர் 1000 ரூபாய் சம்பளம் உயர்த்தி தராவிட்டால் தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமம் செய்வதாக அறிவித்துள்ளார்.31ம் திகதி அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் நினைவு தினம் என்பதால் அத்தினத்திலேயே தான் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். அதன்பிறகு மக்களோடு கலந்தாலோசித்துவிட்டு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கம்பனிகாரர்களுக்கு எச்சரிக்கும் வகையில் பாரிய போராட்டத்தை முன்னெடுக்க போவதாகவும் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் ஆர்ப்பாடம்



**பூண்டுலோயா நிருபர்**

மலையகத்தின் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காக பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். மக்களுக்காக அடிப்படை சம்பளம் 1000 ரூபாய் கிடைக்க வேண்டும் என்பதே ஒட்மொத்த மக்களின் ஆர்ப்பாட்ட கோரிக்கையாக அமையப்பெருகின்றது.

அந்தவரிசையில் நாளாந்தம் பல பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் நாளாந்தம். நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றனர். அந்தவரிசையில் கொட்டக்கலை அரசினர் கலாச்சாலை ஆசிரிய மாணவர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாடம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கொட்டக்கலை ஆசிரிய கலாச்சாலை முன்னால் முன்னெடுக்கப்பட்ட இவ் ஆரப்பாட்டத்தில் அனைத்து ஆசிரிய கலாச்சாலை மாணவர்களும் பங்கு கொண்டனர். அதுமட்டுமல்லாது எம் நாட்டின் முதுகெலும்பே எம் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தான் எனவே அவர்களுக்கு ஊதியத்தை பெற்றுக்கொடுக்க வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் தங்கள் கருத்துக்களை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

# 30 வருடங்களுக்கு பிறகு கல்முனை இளைஞர் விளையாட்டுக்கழகம் வரலாற்றுச் சாதனை

**கல்முனை நிருபர்**

30வது தேசிய இளைஞர் உதைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் இணைச் சம்பியனாக கல்முனை பிரதேச தேசிய இளைஞர் விளையாட்டு கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாத்தறை விளையாட்டு மைதானத்தில் பதுளை இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரை எதிர்த்து நடைபெற்ற போட்டியில் மழை காரணமாக இரு அணிகளையும் இணைத்து இணை சம்பியனாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளாவிய ரீதியில் அணைத்து மாவட்டங்களையும்பிரதிநிதித்துவப்படுத்தி 18 கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் போட்டியிட்டன.



**இந்த வருடம் நடைபெற்ற தரம்- 05 புலமை பரிசில் பரீட்சையில் பண்டாரவளை, கிரேக் ஸ்ரீ காயத்ரி தமிழ் வித்தியாலயத்தில் 173 புள்ளிகளைப் பெற்று செல்வி சதுர்ஷனா, அவரோடு செல்வன். ருஷான் 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலை பெருமை சேர்த்துள்ளனர். சித்தியெய்திய மாணவர்களுடன் பாடசாலை அதிபர் போல் ஜோன்சன் மற்றும் கற்பித்த ஆசிரியர் . பிரபாகரன், மற்றும் பெற்றோரையும் படத்தில் காணலாம்.**

**ஆர். சிசுபாலன், பண்டாரவளை**



**அண்மையில் கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வைத்து தியத்தலாவை எச்.எப். ரிஸ்னா எழுதிய வைகறை சிறுகதைத் தொகுதி நூலின் முதற்பிரதியை சாகித்யரத்னா பேராசிரியர் சபா ஜெயராசாவிடமிருந்து இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொண்டபோது எடுத்த படம். கலைஞர் கலைச்செல்வன், பூங்காவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியை வெலிகம ரிம்ஸா முஹம்மத், நூலாசிரியை எச்.எப். ரிஸ்னா ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.**




**மன்னார் கல்வி வலயத்தில் கல்விப் பணியாற்றி தனது 60 ஆவது அகவையில் மணிவிழாக் காணும் மன்/வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எஸ். சுகந்தி செபஸ்ரியன் அவர்களுக்கு அண்மையில் மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற மணி விழாவின் போது சுற்றாடல் ஆணையாளர் சுஜப் எம். ஹாமித் மற்றும் இஸ்லாஹியா பெண்கள் அரபிக் கல்லூரிப் பணிப்பாளர் மௌலவி எஸ்.எச்.ஏ. ஹாதி ஆகியோரினால் ஷஷஓய்வு இல்லா வெய்யோன் என்ற பட்டமும், நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.**

**படமும் தகவலும்: வெலிகம ரிம்ஸா முஹம்மத்**



**இந்த வருடம் நடைபெற்ற தரம்- 05 புலமை பரிசில் பரீட்சையில் பண்டாரவளை, பலகல எல்ல தமிழ் வித்தியாலயத்தில் 186 புள்ளிகளைப் பெற்று செல்வி. டீ. கபிலாயினி மாவட்ட ரீதியில் 06ம் இடத்தைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரோடு செல்வி. டீ. அக்ஷிகா 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலை பெருமை சேர்த்துள்ளனர். சித்தியெய்திய மாணவர்களுடன் பாடசாலை அதிபர் மு.சேதுகாந் மற்றும் கற்பித்த ஆசிரியை ரிஸ்வானா ஆகியோரை படத்தில் காணலாம்.**

**படம்: ஆர். சிசுபாலன், பண்டாரவளை**



# கேரள அரசுக்கு உயர் நீதிமன்றம் எச்சரிக்கை!




சபரிமலையில் போராட்டம் நடத்தியவர்கள் என்ற போர்வையில் சுய விளம்பரத்துக்காகக் கைது நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள், மிகப்பெரிய விலை கொடுக்க நேரிடும் என்று கேரள அரசை உயர் நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

சபரிமலைக்கு அனைத்து வயதுப் பெண்களும் சென்று சாமி தரிசனம் செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் 28-ம் தேதி தீர்ப்பளித்தது. ஆனால், சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு 10 வயது முதல் 50 வயது உள்ள பெண்கள் செல்ல அனுமதியில்லை எனும் பாரம்பரிய நடைமுறை நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

இதனால் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு கேரளா முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. நாள் தோறும் போராட்டங்கள் நடைபெற்று வந்தன

இந்நிலையில், கடந்த 17-ம் தேதி மாதாந்திர பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை திறக்கப்பட்டது. ஆனால், கோயில் திறந்தபின் உச்ச நீதிமன்ற தீர்ப்பைக் காரணம் காட்டி கோயிலுக்குள் செல்ல முயன்ற பெண்கள், பெண் சமூக செயற்பாட்டாளர்கள், செய்தியாளர்கள் போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டு, திருப்பி அனுப்பிவிடப்பட்டனர்.

இந்தச் சூழலில் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் கடந்த இரு நாட்களாக போலீஸார் தீவிரமாக இறங்கி உள்ளனர். கடந்த இரு நாட்களில் இதுவரை 452 வழக்குகள் பதிவு செய்துள்ளனர். 2,300 பேரை போலீஸார் இதுவரை கைது செய்துள்ளனர். இதில் 700 பேர் மட்டும் பத்தினம்திட்டா மாவட்டத்தில் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பத்தினம்திட்டாவைச் சேர்ந்த சுரேஷ் குமார், அனோஜ் குமார் ஆகியோர் கேரள உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர். அதில், சபரிமலைப் போராட்டத்தில் பங்கேற்றோம் எனக் கூறி அப்பாவி மக்களையும், அந்த போராட்டத்துக்கு தொடர்பில்லாதவர்களையும் போலீஸார் கைது செய்து வழக்குப் பதிவு செய்து வருகிறார்கள். சட்டத்துக்குப் புறம்பாக நடத்தப்படும் கைது நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரி மனுவில் தெரிவித்திருந்தனர்.

இந்த மனுயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள் மாநில அரசைக் கடுமையாக எச்சரித்தனர். சபரிமலையில் போராட்டம் நடத்தினார்கள் என்ற போர்வையில் சுய விளம்பரத்துக்காகக் கைது நடவடிக்கையில் அரசும், போலீஸாரும் இறங்கக்கூடாது. கைது நடவடிகைக்கை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதற்கான விளக்கம் தேவை.

போராட்டத்தில் பங்கேற்று இருந்தார்கள் என்று உறுதி செய்த பின்புதான் போராட்டக்காரர்களைக் கைது செய்ய வேண்டும். அதைவிடுத்து அப்பாவிகளையும், போராட்டத்தில் பங்கேற்காதவர்களையும் கைது செய்தால், அரசு மிகப்பெரிய விலை கொடுக்க நேரிடும் என்று நீதிபதிகள் எச்சரித்தனர்.

# கன்னடம் கற்கும் சசிகலா



சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறை தண்டனைவிதிக்கப்பட்ட ஜெயலலிதாவின் தோழி சசிகலா பெங்களூருவில்உள்ள பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டார்.

அங்கு இருக்கும் சிறை ஊழியர்கள்மற்றும் சக பெண் கைதிகள் மூலமாக கன்னடத்தில் பேசவும், எழுதவும் கற்றுக்கொள்ள தொடங்கினார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு,முறையாக கன்னடம் கற்க விரும்புவதாக சிறை அதிகாரிகளிடம் சசிகலா தெரிவித்துள்ளார்.இதுகுறித்து பெங்களூரு பல்கலைக்கழக தொலைதூரக் கல்வித் துறையின் பொறுப்பாளர் மயிலாரப்பா கூறியதாவது:தொலைதூரக் கல்வித் திட்டத்தின் மூலம் கன்னடம் கற்க சசிகலா விரும்புவதாக சிறை அதிகாரிகள் தகவல் அளித்தனர்.

இதன்பேரில், சிறைக்குச் சென்று கன்னடம் பயிற்றுவிப்பது குறித்து அதிகாரிகளிடம் விளக்கினேன். இதையடுத்து, சசிகலாவுக்கு கன்னடம் கற்பதற்கான விண்ணப்ப படிவம் வழங்கப்பட்டது. சசிகலாவை போலவே, இளவரசியும் கன்னட பட்டய வகுப்பில் இணைந்துள்ளார் என அவர் கூறினார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறை தண்டனைவிதிக்கப்பட்ட ஜெயலலிதாவின் தோழி சசிகலா பெங்களூருவில்உள்ள பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டார்.

# போலி நோட்டு கொடுத்து ரூ. 2 லட்சத்திற்கு தங்க நகை வாங்கி தப்பிச் சென்ற தம்பதி

லூதியானாவில் தங்க நகைக்கடையில் குழந்தைகள் விளையாடும் போலி ரூபாய் நோட்டுக்களை கொடுத்து 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளை தம்பதியினர் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் தங்க நகைக்கடை வர்த்தகம் செய்து வருபவர் சியாம் சுந்தர் வர்மா. இவரது கடைக்கு அண்மையில் ஒருவர் தனது மனைவியுடன் வந்துள்ளார். பல்வேறு டிசைன் நகைகளை பார்த்த அவர்கள் சுமார் 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளை பார்த்து அவற்றை வாங்கியுள்ளனர்.

அதற்கான பணம் 2 லட்சம் ரூபாயை, 500 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் நோட்டுக்களாக ரொக்கமாக செலுத்தியுள்ளனர். தங்களுக்கு அவசர பணி இருப்பதாக கூறி உடனடியாக செல்ல வேண்டும் எனக் கூறியுள்ளனர். இதனால் நோட்டு எண்ணும் இயந்திரத்தில் போட்டு நோட்டுக்களை மட்டும் சியாம் சுந்தர் எண்ணியுள்ளார்.

கொடுக்க வேண்டிய பணம் சரியாக இருந்ததால் நகைளை கொடுத்து வழியனுப்பி வைத்துள்ளார். இதையடுத்து கடையை அடைக்கும் முன்பாக அந்த பணத்தை ஊழியர்கள் தற்செயலாக பார்த்தபோது அதிர்ச்சியடைந்தனர். பார்ப்பதற்கு அசல் ரூபாய் நோட்டுக்களை போல இருக்கும் அவை உண்மையில் குழந்தைகள் விளையாடும் போலியான ரூபாய் நோட்டுக்கள். ‘ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா’ என்ற இடத்தில் ‘எண்டர்டெயின்மெண்ட் ஆப் இந்தியா’ என இருப்பதை கண்டு ஊழியர்கள் அதிர்ந்தனர். உடனடியாக சியாம் சுந்தரிடம் சென்று கூறியுள்ளனர். அவரும் பார்த்து அதிர்ச்சியில் உறைந்தார். இது குறித்து அவர் அளித்த புகாரின் பேரில் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கடையில் சிசிடிவி கேமரா இருந்ததால் அந்த காட்சிகளை பெற்று அதன் அடிப்படையில் போலீஸார் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

# இளவரசிக்கு 15 நாள் பிணை



சொத்து குவிப்பு வழக்கில், சசிகலாவுடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள, அவரது உறவினர் இளவரசிக்கு, 15 நாள், பிணை கிடைத்ததை அடுத்து அவர் சென்னை திரும்பினார்.

சொத்து குவிப்பு வழக்கில், சசிகலா, அவரது உறவினர்கள் இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர், கர்நாடக மாநிலம், பெங்களூரு பரப்பனஅக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.உடல் நலக்குறைவுசசிகலாவின் கணவர் நடராஜன் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதும், அவர் இறந்த போதும், சசிகலாவுக்கு பரோல் கிடைத்தது.இந்நிலையில், இளவரசியின் சகோதரர் வடுகநாதன், உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, சென்னையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.இளவரசியின் காதில் பிரச்னை ஏற்பட்டுள்ளதால், அதற்காக அவர் சிகிச்சை பெற திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியானது.

இந்த இரண்டு காரணங்களையும் குறிப்பிட்டு, 15 நாட்கள் பரோல் கேட்டு, சிறைத்துறை அதிகாரிகளிடம், இளவரசி சார்பில் விண்ணப்பிக்கப்பட்டது.சகோதரரின் மருத்துவ அறிக்கை குறித்த ஆவணங்கள், இளவரசியின் சிகிச்சை குறித்த ஆவணங்களை சரிபார்த்த சிறைத்துறை அதிகாரிகள், தமிழக போலீசாரிடம் தடையில்லா சான்றிதழ் பெற்றனர்.இதையடுத்து, இளவரசிக்கு, 15 நாள் பிணை வழங்கி, சிறை தலைமை கண்காணிப்பாளர், சோமசேகர் நேற்று உத்தரவிட்டார்.

நிபந்தனைகள் இளவரசி, சென்னையை தவிர வேறெங்கும் செல்லக் கூடாது; ஊடகங்களை சந்திக்க கூடாது; அரசியல் நிகழ்ச்சிகளில் பங்கேற்க கூடாது உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து, அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. இளவரசி தன் மகன் விவேக்குடன், காரில் சென்னைக்கு புறப்பட்டார்.

# நடிகர் ரஜினி கட்டளை: தி.மு.க., பாய்ச்சல்



நான் அரசியலுக்கு வந்தால், அதை வைத்து பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தோடு இருப்போர், இப்போதே விலகி விடுங்கள் என, நடிகர் ரஜினி கூறினார். இதனால், கடும் கோபம் அடைந்த தி.மு.க., ரஜினி மீது திடீரென பாய்ந்துள்ளது.

அரசியலுக்கு வரப் போவதாக அறிவித்த, நடிகர் ரஜினி, அரசியல் கட்சி துவக்குவதற்கான, அடிப்படை கட்டமைப்புகளை ஏற்படுத்தி வரு கிறார். ரஜினி மக்கள் மன்றம் என்ற அமைப்பை துவக்கி, உறுப்பினர்களை சேர்ப்பதுடன், மாவட்ட வாரியாக நிர்வாகிகளையும் நியமித்து வருகிறார்.

சில தினங்களுக்கு முன், அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது: மன்ற உறுப்பி னர்கள் நியமனம், மாற்றம், ஒழுங்கு நடவடிக்கை என, அனைத்துமே, என் பார்வைக்கு கொண்டு வரப்பட்டு, என் ஒப்புதலுடன் தான்அறிவிக்கப்படுகின்றன. நான் அரசியலுக்கு வந்தால், அதை வைத்து, பதவி வாங்கவும், பணம் சம்பாதிக்கவும் எண்ணுகிறவர்களை, அருகிலேயே சேர்க்க மாட்டேன். அப்படிப்பட்டவர்கள், இப்போதே விலகி விடுங்கள்.இவ்வாறு ரஜினி கூறியிருந்தார்.

மேலும், புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவே, நான் அரசியலுக்கு வருகிறேன் என்றும், அவர் கூறியிருந்தார். இது, தி.மு.க., தலைமைக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. அக்கட்சியின் அதிகாரப் பூர்வ நாளிதழில், நேற்று ரஜினியை விமர்சித்து, கட்டுரை வெளியானது.ரஜினி அறிக்கையில் இருந்த கருத்துகள் குறித்து, அவரது ரசிகர்கள் கேள்வி கேட்பது போல, ரஜினியை கடுமையாக சாடியிருந்தனர்.

ரஜினி, யாருடைய கயிற்று அசைவிலோ, ஆடும் பொம்மையாகி விட்டதாக, அதில் குறிப்பிட்டு இருந்தனர். தி.மு.க., திடீரென ரஜினி மீது பாய்ந்தது, அரசியல் வட்டாரத்தில், சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.இந்நிலையில், நேற்று சென்னையில், கோடம்பாக்கம், ராகவேந்திரா மண்டபத்தில்,மன்ற நிர்வாகிகளுடன், ரஜினி திடீர் ஆலோசனை நடத்தினார்.

அதிருப்தியாளர்களை சமாதானப்படுத்தும் நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்பட்டது. பின்,

நீக்கப்பட்டவர்களை, சில நிபந்தனைகளின் அடிப்படையில், மீண்டும் சேர்க்க முடிவு எடுக்கபட்டு உள்ளது. அதன்பின், ரஜினி வெளியிட்ட அறிக்கையில், என்னையும், ரசிகர்களையும், யாராலும் பிரிக்க முடியாது என, தி.மு.க.,வுக்கு பதிலடி தந்துள்ளார்.ரஜினி வெளியிட்ட அறிக்கை:நான், 23ம் தேதி வெளியிட்ட அறிக்கையில், மக்கள் மன்ற செயல்பாடுகள் குறித்து, சில உண்மைகளை சொல்லியிருந்தேன்.

அது, கசப்பானதாக இருந்தாலும், அதில் உள்ள உண்மையையும், நியாயத்தையும், ரசிகர்கள் புரிந்து கொண்டதற்கு நன்றி.என்னையும், ரசிகர்களையும், யாராலும், எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது. நாம் எந்தப் பாதையில் போனாலும், அந்த பாதை, நியாயமானதாக இருக்கட்டும். ஆண்டவன், நமக்கு துணை இருப்பான்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திருடர்கள் செய்த நகைச்சுவைக்காரியம்!



திரைப்படங்களில் நடிகர் வடிவேல் தனது சகாக்களுடன் திருடச் சென்று சிக்கிக்கொண்டு அடி, உதை வாங்கும் காமெடிக் காட்சிகளைக் கண்டு ரசித்திருக்கிறோம். ஆனால், அதைக் காட்டிலும் என்ன மாதிரியான திருடர்கள் இவர்கள் என்று சொல்லி, சொல்லிச் சிரிக்கும் அளவுக்கு இந்தச் சம்பவத்தில் சிக்கிய திருடர்கள் கதை இருக்கிறது.

பெல்ஜியம் நாட்டின் பிரஸல்ஸ் நகரின் தெற்குப்பகுதியில் உள்ளது சார்லிராய் நகரம். இந்த நகரில் ஒரு கடையில்தான் இந்த மகா காமெடி சம்பவம் கடந்த இரு நாட்களுக்கு முன் அரங்கேறியது.

சார்லிராய் நகரில் இ-சிகரெட் கடை நடத்தி வருபவர் டிடயர். கடந்த இரு நாட்களுக்குக் காலையில் தனது கடையைத் திறந்த சில மணிநேரத்தில் 6 பேர் கொண்ட கும்பல் கடைக்குள் வந்தனர். அவர்கள் திடீரென கத்தி, துப்பாக்கி ஆகியவற்றைக் காட்டி டிடயரை மிரட்டி கடையில் உள்ள பணத்தை எடுக்குமாறு மிரட்டினார்கள்.

அதற்குக் கடையின் முதலாளி டிடயர், நான் கடையைத் திறந்து சிலமணிநேரம் மட்டுமே ஆவதால், பணம் இல்லை என்றார். ஆனால், கொள்ளையர்கள் பணம் இல்லாமல் அங்கிருந்து செல்ல முடியாது எனக் கூறி அவருடன் வாக்குவாதம் செய்தனர். ஒரு கட்டத்தில் என்னிடம் தற்போது ஆயிரம் டாலர்கள் மட்டுமே இருக்கிறது. இதை வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள்.

கொள்ளையடிப்பதற்கு மதியம் 3 மணிக்கு வந்தால் என்னிடம் என்ன இருக்கும், ஆயிரம் டாலர்கள் தவிர என்னிடம் ஏதும் இல்லை. இதை வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், இரவு நேரத்தில் நீங்கள் வந்தால், கடையில் ஏராளமான பணம் இருக்கும் அப்போது அதிகமாக கொள்ளையடித்துச் செல்லலாம் என்று அவர் தெரிவித்தார்.

ஆனால், புத்திசாலி கொள்ளையர்கள், கடையின் முதலாளி சொன்னது உண்மைதான் என நம்பி தங்களுக்கு இப்போது ஆயிரம் டாலர்கள் தேவையில்லை இரவில் வருகிறோம். கடையில் பணத்தை வைத்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று மிரட்டிவிட்டுச் அங்கிருந்து புறப்பட்டனர்.

அந்தக் கொள்ளையர்கள் அங்கிருந்து சென்றபின், டிடயர் பிரஷல்ஸ் நகர போலீஸாருக்கு தகவல் அளித்தார். மேலும், இங்கு நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கூறி, இரவில் வரும்போது, போலீஸ் உடையில் இல்லாமல் இருக்குமாறு கூறினார்.

ஆனால், போலீஸாரும் நம்பவில்லை. திருடர்கள் கடையின் முதலாளியிடம் சொல்லிவிட்டா திருடுவார்கள், அல்லது கடையின் முதலாளிதான் பணத்தை வைத்துவிட்டுச் செல்வாரா என்று சொல்லி சிரித்தனர். இருந்தாலும், புகார் கொடுத்து விட்டதால் என்ன நடக்கிறது, புத்திசாலி கொள்ளையர்கள் வருகிறார்களா என்று பார்க்க கடைக்குள் பதுங்கிக்கொண்டனர்.

ஆனால், வாக்குத் தவறாத புத்தாசாலிக் கொள்ளையர்கள் 5 பேர் இரவில் கடையை பூட்டும் நேரத்தில் மீண்டும் வந்தனர். இதைப் பார்த்த போலீஸாருக்கு வியப்பும், அதேசமயம், இப்படிப் போய் சிக்கிக்கொண்டார்களே என்ற பரிதாபத்துடன் திருடர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்து, நையப்புடைத்தனர். பிடிபட்ட 5 கொள்ளையரில் ஒருவர் சிறுவன், இவர்கள் 5 பேரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து கடையின் முதலாளி டிடயர் தனியார் செய்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்கூறியதாவது:

நான் திருடர்களின் கவனத்தைத் திசை திருப்பவே இரவில் வாருங்கள் பணம் நிறைய இருக்கும் கொள்ளையடித்துச் செல்லுங்கள். இப்போது என்னிடம் இல்லை என்றேன். இதைத் திருடர்களும் நம்பிவிட்டார்கள்.

இதுபோன்ற காமெடித் திருடர்கள் நான் பார்த்ததே இல்லை. அதுமட்டுமல்லாமல் என் வார்த்தையை நம்பிச் சென்ற திருடர்கள் நிச்சயம் வருவார்கள் என்றும் நான் நினைக்கவில்லை. என்னைப் பொருத்தவரை பெல்ஜியத்தின் பெயரைக் கெடுக்க வந்த திருடர்கள். பெல்ஜியம் நாட்டிலேயே முட்டாள் திருடர்கள் என்றால் இவர்களாகத்தான் இருப்பார்கள்.

நான் போலிஸிடம் நடந்த சம்பவங்களைக் கூறியபோது அவர்கள் பலமாக சிரித்தார்கள். மீண்டும் கடைக்கு திருடர்கள் வருவார்கள் என நம்புகிறீர்களா என்று என்னைக் கிண்டல் செய்தனர்.

ஆனால், திருடர்கள் மகா முட்டாள்கள் நிச்சயம் வருவார்கள் நீங்கள் பிடிக்கலாம் என்று தெரிவித்தேன்.

ஆனால், திருடர்கள் வந்ததே போலீஸாரால் நம்ப முடியவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கூகுள் நிறுவனத்தையும் விட்டு வைக்கவில்லை!

உலகம் முழுவதுமே ‘மீடூ’ விவகாரம் பெரும் புயலை கிளப்பியுள்ள நிலையில் கூகுள் நிறுவனத்தில் நடந்த பாலியல் புகார்கள் குறித்து பல்வேறு தகவல்கள் வெளி வந்த வண்ணம் உள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் பாலியல் புகாரில் சிக்கி 48 ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.

கூகுள் நிறுவனத்தின் மூத்த நிர்வாகிகள் சிலர் பாலியல் புகாருக்கு ஆளானதாக சமீபத்தில் தகவல் வெளியாகியது. அவர்களை பாதுகாக்கும் வகையில் நீண்ட விடுமுறை அளித்து கூகுள் நிறுவனம் அனுப்பியுள்ளதாகவும் கூறப்பட்டது.

கூகுள் நிறுவனத்தின் ஆண்ட்ராய்டு நிர்வாகி ரூபின், 2014-ம் ஆண்டு சக ஊழியர்களுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த புகாருக்கு ஆளானதாகவும், இதனால் அவர் நீண்ட விடுமுறையில் அனுப்பப்பட்டதாகவும் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

மேலும் இந்த விவகாரத்தால் ரூபினுக்கும் அவரது மனைவிக்கும் பிரிவு ஏற்பட்டு விவாகரத்து வரை சென்றதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இதனை ரூபின் தரப்பு இதனை மறுத்தது. தனிப்பட்ட காரணங்களால் அவர் நீண்ட விடுமுறையில் சென்றதாகவும் அவர் மீது யாரும் பாலியல் புகார் அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, ஊழியர்களுக்கு இ-மெயில் மூலம் சில விளக்கங்களை அளித்துள்ளார். அதில், ‘‘கூகுள் நிறுவனத்தில் பாலியல் புகார் தொடர்பான விஷயங்களில் 2015-ம் ஆண்டே திட்டவட்டமான முடிவுகளை நிறுவனம் எடுத்துள்ளது.

உயரதிகாரிகள் யாருக்கும், சக ஊழியர்களுடன் பாலியல் தொடர்பு இருப்பது தெரிய வந்தால் அவர்கள் பணியாற்ற முடியாது. ரூபின் பற்றி வந்துள்ள செய்திகள் கடினமானது. அந்த பிரச்சினைக்குள் செல்ல விரும்பிவில்லை. கடந்த 2 ஆண்டுகளில் பாலியல் புகாரில் சிக்கிய 48 ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 13 பேர் மிக மூத்த நிர்வாகிகள். அவர்களுக்கு பணநீக்கத்துக்கு பிந்தைய நிதி உதவியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது’’ எனக் கூறியுள்ளார்.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 28.10.2018
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# தமிழரின் அரசியல் பலம் சிதறுகின்றது

இலங்கைத் தமிழரின் இனவிடுதலை ஓட்டத்தில் ஆயுதரீதியான பலமானது சர்வதேச நாடுகளையே தமிழரின் அடிப்படைப் போராட்டத்தை திரும்பிப் பார்க்க வைத்தது. பேரினவாத அரசாங்கத்துடன் பேரம் பேசும் அளவிற்கு அரசியல் ரீதியான பலத்தை கொடுத்தது என்பது யாவரும் மறுக்க முடியாத உண்மையாகும். தமிழரின் அரசியல் பலம் யுத்தத்திற்கு பின் படிப்படியாகச் சிதறியது என்றுதான் கூற வேண்டும். குறிப்பாக யுத்தகாலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டங்கள் அதிகாரங்கள் நிலவிய காலத்தில் தமிழர் விடுதலை நீரோட்டத்திற்கு அரசியல் ரீதியான பலம் சேர்க்கும் சக்தியாக உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு. இதில் பல கட்சிகள் இணைந்தாலும் யுத்தம் முடிந்த பின்னர் தமிழரசுக் கட்சியானது தனது வழமையான பழமைவாத சிந்தனையில் தன்னிச்சையான பல முடிவுகளில் செயற்பட விளைந்ததும் அதனால் அதில் இருந்த சில கட்சிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகுவதாக அறிக்கை விடுவதும் தேர்தல் காலத்தில் சேர்ந்து இயங்குவதுமாக கடந்த 21 வருட அரசியல்பாதை வெகுவேகமாக நகர்ந்துள்ளது. இதே காலத்தில் தமிழரசுக் கட்சிக்கு அடுத்த படியாக அரசியல்பலம் பெற்றிருந்த தமிழர் காங்கிரஸ் அதிலிருந்து விலகி கொள்கை அடிப்படையில் தனியான கட்சியாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் ஒரு மாற்று அரசியல் சக்தியாக இயங்குகின்றது. அதன் எழுச்சியை கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அதே தளத்தில் ஒருகாலத்தில் ஆயுதக் குழுக்களாக இயங்கி பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்ற கட்சிகள், தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு நீங்கினால் தமது பாராளுமன்ற மாகாணசபை உறுப்புரிமைகள் பறிபோய் விடும் என்ற ஏக்கத்தில் தொடர்ந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கள் பல முரண்பாடுகள் மத்தியிலும் தேர்தல் அரசியலில் ஈடுபட்டு வருகின்றன. இதில் இன்று ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி தன்னை தனித்து இயங்கு கட்சியாகவே காட்டுகின்றது.

ஒரே தமிழர் விடுதலைக்கு புறப்பட்ட தமிழ் இளைஞர்கள் முப்பதுக்கு மேற்பட்ட குழக்களாக இயங்கி கடைசியில் எல்லாக் குழுக்களும் தமது நோக்கத்தை அடைய முடியாமலே போனது. இன்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி ஊடாக தேர்தல் அரசியலுக்கு வந்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணியை உருவாக்கியுள்ளார். முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற தனிக்கட்சியை மிக அண்மையில் உருவாக்கியுள்ளார். ஐங்கரநேசனும் புதுக்கட்சி ஆரம்பிக்கின்றார். கஜேந்திரகுமார் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஆனந்தசங்கரி அணி, அங்கஜன் அணி, சுயேட்சை அணி, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஐக்கிய தேசிய கட்சி என வடக்கு கிழக்கு துண்டாடப்பட்டது போல் தமிழரின் ஒருமித்த வாக்குப்பலமும் துண்டாடப்படவிருக்கின்றது. இதனால், தமிழர்கள் அரசியல்ரீதியான பலவீனமான நிலையை அடையவுள்ளார்கள். எப்போதும் தமிழர்கள் ஒன்று சேராதது அவர்களின் சாபக்கேடாகும்.

அடுத்த மாகாணசபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி.யோடு இணைந்து ஆட்சி அமைக்கலாம் என்ற நப்பாசையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இருக்கின்றது. உண்மையில் கிழக்கு மக்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பேரினவாதிகளிடமிருந்தும் சக தமிழ் பேசும் சமூகங்களிடமிருந்தும் கிழக்கு தமிழ் மக்களைப் பாதுகாக்கும் ஓர் அரசியல் தலைலைமையின் தேவைப்பாடே தற்போது உள்ளது. வடக்கின் அரசியல் சக்திகளாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியும், விக்னேஸ்வரின் அணியும் ஈ.பி.டி.பி.யும் செயற்படுகின்றது. இதுவொரு பெரும் அரசியல் இடைவெளியாகும். இன்று பேரினவாதம் தமது திட்டமிட்ட காய்நகர்த்தல்களால் தமிழரின் வாக்குகளை சிதறடிக்க வைக்கின்றது. இதன் பின்னணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து இயங்கும் பேரின சார்பிலான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. போன்றோரின் அரசியல் பக்கச்சார்பு செயற்பாடுகளும் மிக முக்கிய காரணமாக அமைகின்றது. தமிழரசுக் கட்சி தனது வரலாற்றுக் கடமையிலிருந்து தவறியது என்றுதான் சொல்ல வேண்டும். இனி மூத்த அரசியல் தலைமைகள் கட்சி பேதங்களை ஒழித்து ஒன்றுபட்டு தேர்தல் அரசியலை நகர்த்துவதாலேயே தமிழரின் அரசியல் பலத்தை உறுதிப்படுத்த முடியும்.

# இரு தளத்தில் பயணிக்கும் கூட்டமைப்பு

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

வட கிழக்கில் போரின் அழிவுகளிலிருந்து மீண்ட எச்ச சொச்ச தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய நிலையேற்பட்டும் கூட இன்றுவரையும் தம் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியாதவர்களாகவே நல்லாட்சி அரசிலும் தமிழ் மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். இதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களாக நல்லாட்சியாளர்களே காணப்படுகின்றார்கள். எனவே இலங்கையில் கடந்த ஆட்சிக்காலங்களில் நடைபெறாத பல விடயங்கள் இக்காலகட்டத்தில் ஆட்சிமாற்றம் என்ற ஒன்று இந்த நாட்டில் ஏற்பட்டால் நிச்சயம் நடைபெறும் என்ற தீவிரமான நம்பிக்கை கொண்டுதான் தமிழ்பேசும் மக்கள் ஓர் ஆட்சி



மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அரசியல் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற விடயத்துக்கு அப்பால் தங்களுடைய சாதாரண பிரச்சினைகளான காணி விடுவிப்பு, கைதிகளின் விடுதலை, காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான நீதி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களிலாவது ஆட்சி மாற்றம் ஒரு சாதகமான தீர்வை பெற்றுத்தரும் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். ஆனால் இந்த ஆட்சி மாற்றம் தமிழ்மக்களுக்கு எந்தவொரு விடயத்திலும் முழுமையான தீர்வை பெற்றுத்தரவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு போதியளவு வாய்ப்புக்கள் கிடைத்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அதற்கான வாய்ப்பை நழுவவிடும் சந்தர்ப்பங்களையே அதிகம் பிரயோகித்து வருவதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்நிலையில், தமிழ் மக்கள் குறித்த பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரிய தீர்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் அவை முற்றுப் பெறாத முடிவாகவே காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடத்திவரும் பேச்சுவாடத்தைகளுக்கு செவி சாய்ப்பதுடன், இதனைப் பொறுப்பேற்று உடன் தீர்த்துவைப்பது இன்றைய அரசின் கையில் தங்கியுள்ளது. உடனடித் தீர்வைப் பெறுவதே அவர்களது இன்றைய ஆட்சிமாற்றத்தின் பிரதான தேவையாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் அரசியல் யாப்பு செயற்பாட்டிலிருந்து, கூட்டமைப்பு வெளியேறுமாக இருந்தால் அதனை கூட்டமைப்பு தான் குழப்பிவிட்டது என்ற பார்வையை சர்வதேசத்திற்கு காட்டும் முயற்சிகள் நடைபெறவும் வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் சர்வதேசம் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள கரிசனை இல்லாமல் போய்விடும். இவ்வாறான விடயங்களை அடிப்படையாக வைத்துத்தான் (கூட்டமைப்பில் சிலர் )நாங்கள் இந்த பயணத்தில் பொறுமை காத்து பயணித்து வருகின்றோம் எனவும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துவருகின்றனர்.

அதுமட்டுமின்றி இன்று தென்னிலங்கை அரசியல் மேடையில் இடம்பெற்றுவரும் சம்பவங்களை பார்க்கும் பொழுது, முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் யாப்பு விவகாரமும் கடந்த காலங்களைப் போன்று தமிழ் மக்களை ஏமாற்றிவிடும் என்ற நிலைமையை தோற்றுவித்திருக்கின்றதாக அரசியல்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகக் கொண்டுவருவதற்கு தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்கியதற்கு காரணம், சாதாரண பிரச்சினைகளான காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதி, சிறைக் கைதிகளுடைய விடுதலை, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற அடிப்படையில் தான். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று வருடங்களாகின்ற போதிலும் மேற்கூறிய விடயங்களில் ஒரு விடயத்தில் கூட இந்த அரசாங்கம் நியாயபூர்வமாக தீர்வுகளை வழங்குவதில் இழுத்தடிப்புக்களையே மேற்கொள்கின்றது என்றே கூறலாம்.

இன்று நாட்டில் இளைஞர்களுக்கான மற்றும் வட கிழக்கு பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு விடயத்தில் கூட நல்லாட்சி அரசாங்கம் நியாயமாக நடக்கவில்லை. சிற்றூழியர்களை கூட தென்னிலங்கையிலிருந்து தெரிவுசெய்து வட - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பும் நிலைமையே இன்றும் நடைபெற்று வருகிறது. இது விடயமாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு கூட்டமைப்பு முறைப்பாடுகளை செய்திருக்கிறது. ஆனால், இதுவரை அவை தொடர்பில், அரசாங்கம் கவனம் செலுத்தியதாக இல்லை. தொடர்ந்தும் அந்த நடவடிக்கைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என அவ்வப்போது கருத்து வெளியிடும் சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பினர் கூறி மறைகின்றனர். மேற்கூறிய சிறிய விடயங்களிலாவது முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு அவற்றில் ஒன்றிலாவது சிறியளவு முன்னேற்றம் கூட நடைபெறாதது அனைவருக்கும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது.

இந்நிலையில் தமிழ்மக்கள் தங்களது பிரச்சினைக்கான தீர்வு கோரி பல வழிகளில் போராடி, சர்வதேசத்தின் தலையீட்டுடன் கூடி தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நல்லாட்சிக்கு இரண்டு வருடகால அவகாசம் வழங்கி நிற்கும் இத்தருணத்தில் அரசாங்கத்தில் இருக்கின்ற சிலர் சர்வதேசத்தை பகைக்கும் ஒரு நிலைமையை இன்று அவதானிக்க முடிகிறது. இவ்வாறு மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் சர்வதேசத்தை பகைத்துக் கொள்கின்ற அதேவேளை, தமிழ் மக்கள் குறித்த தீர்வு விடயத்தி லும் பல முரண்பாடான கருத்துகளை தெரிவித்து வருகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் நல்லாட்சி என்று கூறிக்கொள்கின்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முரணானவையாகவே மக்களால் நோக்கப்படுகின்றன. எனவே, இவ்வாறான செயற்பாடுகளை ஜனாதிபதியும் பிரதமரும் கவனத்திலெடுத்து நிறுத்த வேண்டியதே நல்லாட்சிக்கு ஆரோக்கியமானதாகும் என்பதுடன் தீர்வு விடயத்திலும் சாதகமான முடிவுகளைப் பெற வழிவகுக்கும் எனலாம்.


யுத்தத்துக்கு பின்னர் அரசியலமைப்பு மாற்றத்தினூடாக அடையப்பெறும் நியாயமான அதிகாரப் பரவலாக்கல்தான் இந்த நாட்டை ஒரு முன்னேற்றகரமான நாடாக மாற்றும் என இலங்கை வந்திருக்கும் ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது மிகத் தெளிவாக தெரிவித்திருந்தார். இந்த விடயத்தை தெற்கில் இருக்கின்ற பலர் உணர்ந்திருந்தாலும் கூட, அவர்களுடைய முழுப் பார்வையும் அடுத்த தேர்தலை நோக்கியதாக இருக்கிறது. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் வைத்து பார்த்தால் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது ஆட்சிக்காலத்தில் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பில் நாட்டுக்கு மிகத்தெளிவாகக் கூறியிருந்த போதிலும் அவர் இரண்டாவது தடவையாக தேர்தலில் போட்டியிட்ட போது அவருக்கு 62 வீதமான வாக்குகள் கிடைத்திருந்தன. எனவே, சிங்கள மக்கள் இனவாதிகள் அல்லர் அரசியலுக்காக இனவாதம் பேசுகின்றவர்களால் தான் இந்த நாடு தொடர்ந்தும் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றது என்பதே சாலப்பொருத்தமான கருத்தென்பது பல புத்திஜீவிகளின் நிலைப்பாடாகும்.

எனவே காலம் கனிந்துள்ள இந்நல்லாட்சியில் அதற்கான முயற்சிகளை த. தே. கூட்டமைப்பு எடுக்க வேண்டும். ஏனெனில் இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் நழுவவிட்டுவிட்டு மீண்டும் புதிதாக ஒரு விடயத்தை ஆரம்பிப்பது என்பது காலத்தை வீண் விரயம் செய்யும் நடவடிக்கை என்பதுடன், மக்கள் எதிர்பார்த்திருக்கும் உரிய தீர்வைப் பெறும் விடயம் மேலும் மேலும் பின்னடைந்து கொண்டு செல்லும். எனவே தமிழ் மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி உடன் தீர்த்து வைக்க வேண்டியபாரிய பொறுப்பில் தமிழ்த் தலைமைகள் தம்மை அர்ப்பணித்து செயற்பட வேண்டும் என்பது தமிழ் மக்களது ஏகோபித்த வேண்டுகோளாகும்.

**தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்கியதற்குக் காரணம், சாதாரண பிரச்சினைகளான காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதி, சிறைக்கைதிகளுடைய விடுதலை, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே ஆகும். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று வருடங்களாகின்ற போதிலும் மேற்கூறிய விடயங்களில் ஒரு விடயத்தில் கூட இந்த அரசாங்கம் நியாயபூர்வமாக தீர்வுகளை வழங்கவதில் இழுத்தடிப்புக்களையே மேற்கொள்கின்றது**

எனினும் தமிழர்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் இன்று சில நகர்வுகள் இடம் பெற்று வரும் நிலையில், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் மத்தியில் சில முரண்பாடுகள் இருந்து வருவதை அவதானிக்க முடிவதுடன், அண்மையில் வடமாகாண சபை விவகாரத்திலும் பல முரண்பாடுகளை அவைதோற்றுவித்திருந்தன. இதனால் பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பின் ஒற்றுமையை இன்று சர்வதேசம் கூட வலியுறுத்தி வருகின்றது. தமிழ் மக்களும் அந்த வலியுறுத்தலைத் தான் விடுத்து வருகிறார்கள். கூட்டமைப்புக்குள் சில போட்டி அரசியல் காரணமாகத்தான் இந்த ஒற்றுமையீனம் நிலவுவதாக பலர் கூறுகின்றனர். எது எப்படியிருந்தாலும் கூட்டமைப்பு ஒரு பொழுதும் உடையாது என்பது அசைக்க முடியாத நம்பிக்கை என கூட்டமைப்பின் சில கூறுப்பினர்களே தெரிவித்துவருவதென்பது கூட்டமைப்பின் ஆரோக்கிய அரசியல் நகர்வுக்கு வித்திட்டுள்ளது அல்லது பலம் சேர்த்துள்ளது என்றே குறிப்பிடலாம்.





# முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மாற்றுத்தலைமையும் சவால்களும்

தமிழ் தேசியக் கூட்டமைப்பால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டு வடக்கு முதலமைச்சராக்கப்பட்ட முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்து அரசியல் பயணத்தை தொடரப்போவதாக அறிவித்திருக்கிறார். இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

வடக்கு மாகாணசபையின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சபையின் பதவிக்காலம் முடிவடைந்த தினத்தில் தமிழ் மக்கள் கூட்டணி என்ற தனது புதிய அரசியல் கட்சி பற்றிய அறிவிப்பையும் தனது எதிர்கால அரசியல் திட்டங்கள் பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டதோடு தான் சார்ந்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது மிகக்கடுமையான விமர்சனங்களையும் தனது 32 நிமிட உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பே தன்னை புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு தள்ளிவிட்டிருக்கிறது என்ற வாக்குமூலத்தையும் வழங்கியிருக்கிறார்.

தமிழ் மக்கள் பேரவை ஒரு அரசியல் கட்சியாக உருவெடுக்காது, அது மக்கள் இயக்கம் தான் என கடந்த மூன்று வருடங்களாக கூறிவந்த விக்னேஸ்வரன் அவர்கள் அதே மக்கள் பேரவையை தனது புதிய அரசியல் கட்சி உருவாக்குவதற்கு பயன்படுத்திக்கொண்டார் என்பதுதான் உண்மை. அது அவரின் அரசியல் தந்திரோபாயம் என்றும் சொல்லலாம்.

புதிய அரசியல் கட்சியை அமைக்கும் நோக்கத்துடன் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது என்ற உண்மையை வடமாகாணசபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் வெளிப்படையாக சொல்லியிருந்தால் அல்லது தான் தேர்தலில் போட்டியிட்ட தமிழரசுக்கட்சியிலிருந்து விலகுகிறேன் என ஏற்கனவே அறிவித்திருந்தால் அது விக்னேஸ்வரனுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கும். இதனால் தான் தனது 5ஆண்டுகால பதவிக்காலத்தின் இறுதி நாளில் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் புதிய




**தமிழ் தேசிய கூட்டமைப்பு தவறான வழியில் செல்கிறது. எனவே எனது தலைமையை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றே விக்னேஸ்வரன் அவர்கள் அழைப்பு விடுத்திருக்கிறார். அவருடைய இலக்கு முழுமையாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது அதிருப்தி கொண்ட வாக்களர்களை நோக்கியதாகவே உள்ளது**

கட்சியை ஆரம்பித்திருக்கும் வேளையில் பல்வேறு கேள்விகள் மக்கள் மத்தியிலும் அரசியல் விமர்சகர்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

1. ஏற்கனவே பல விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு விக்னேஸ்வரன் அவர்களின் புதிய கட்சியினால் வடக்கு கிழக்கில் தனது ஆதரவு தளத்தை இழக்குமா?

2. விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி வடக்கு கிழக்கில் மக்களின் அமோக ஆதரவை பெற்று தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக உருவெடுக்குமா?

3. கிழக்கில் தமிழ் மக்கள் கூட்டணி மக்கள் ஆதரவை பெறுமா?

இந்த கேள்விகளுக்கு விடையை தேடினால் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் எதிர்காலத்தை கணிப்பிட முடியும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் ஆதரவு தளத்தை இழக்குமா என்ற கேள்விக்கான விடையை தேடுவதற்கு முதல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்த காலச்சூழலில் உருவாக்கப்பட்டது, அதற்கான தேவை ஏன் ஏற்பட்டது என்பதை முதலில் பார்க்க வேண்டும்.

தமிழ் கட்சிகள் ஒரே அணியில் செயற்பட்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என கிழக்கில் வலியுத்தப்பட்டு வந்த போதிலும் அதற்கான உடனடி தேவை 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை அடுத்து உணரப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க கூடிய தமிழ் கட்சிகள் ஒரே அணியில் இருந்து தமது இனத்திற்கான பிரதிநிதித்துவத்தை தக்க வைத்து கொள்ள வேண்டும் என்ற தேவை கிழக்கில் தான் அதிகம் உணரப்பட்டது.

**இரா.துரைரத்தினம்**
**சுவிட்சர்லாந்து**

யாழ். மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் பிரிந்து நின்று தனித்தனியாக போட்டியிட்டாலும் தெரிவு செய்யப்படுபவர் தமிழராகத்தான் இருப்பார்.

ஆனால் வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழ் கட்சிகள் பிளவு பட்டு நின்றால் கொண்டாட்டம் சிங்கள முஸ்லீம் கட்சிகளுக்கு தான்.

2000ஆம் ஆண்டு தேர்தல் கிழக்கு மாகாணத்தில் இதை உணர்த்தியிருந்தது.

தமிழர் தாயகத்தின் தலைநகர் என சொல்லப்படும் திருகோணமலையில் 2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு தமிழர் கூட தெரிவு செய்யப்படவில்லை. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோய் இருந்தது. இது பற்றி ஏற்கனவே கடந்த காலங்களில் புள்ளிவிபரங்களுடன் எழுதியிருக்கிறேன்.

2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஏற்பட்ட படிப்பினையை தொடர்ந்தே தமிழ் கட்சிகள் ஒரே அணியில் போட்டியிட வேண்டும் என்ற நோக்கத்தில் அதற்கான முயற்சிகள் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பில் நடந்த சந்திப்புக்கள் பேச்சு வார்த்தைகளின் தொடராக கொழும்பில் 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி கொழும்பில் பிரபல வர்த்தகரும், தமிழ் உணர்வாளருமான சேகரம்பிள்ளை வடிவேற்கரசன் அவர்களின் வீட்டில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ், தமிழீழ விடுதலை இயக்கம் ( ரெலோ) , ஈழமக்கள் புரட்சிக்கர விடுதலை முன்னணி ( ஈ.பி.ஆர்.எல்.எவ்), ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டன.

வடக்கு கிழக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பலமான அரசியல் தலைமை ஒன்றின் அவசியம் கருதி உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு 17வருடங்களை கடந்து வந்த நிலையில் பல உடைவுகள் பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒப்பந்தம் செய்த நான்கு கட்சிகளில் பல இப்போது இல்லை. இருந்த போதிலும் தமிழ் கட்சிகள் ஒரே அணியில் இருந்து தமது ஒற்றுமை மூலம் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்து கொண்டு தமிழ் மக்களுக்கான உரிமைகளை பெற்றுத்தர வேண்டும் என்ற விருப்புடனேயே கடந்த உள்ளுராட்சி தேர்தல் வரை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்கி வந்திருக்கிறார்கள்.

குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் ஒரே அணியில் நின்று தமது பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்றே கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

விக்னேஸ்வரன் என்ற தனிமனிதரை முன்னிறுத்தியே தமிழ் மக்கள் கூட்டணி உதயமாகியிருக்கிறது. விக்னேஸ்வரன் அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் பெரும்பாலும் யாழ். குடாநாட்டை மையப்படுத்தியதாகவே இருந்து வந்திருக்கிறது. அவரின் ஆதரவுத்தளம் கூட யாழ். மேல்தட்டு வர்க்கத்தினரை சுற்றியதாகவும் யாழ். பல்கலைக்கழகம் போன்ற கல்விசார் வட்டங்களை சுற்றியதாகவுமே உள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளில் நம்பிக்கை இழந்த மக்களின் எண்ணிக்கை யாழ். குடாநாட்டில் கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது. இதனை கடந்த உள்ளூராட்சி தேர்தலில் காணமுடிந்தது. இந்த அதிருப்தியாளர்கள் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சிக்கு வாக்களித்திருந்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை இழந்த மக்கள் கூட்டம் தனக்கு ஆதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கைதான் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களிடமும் காணப்படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவறான வழியில் செல்கிறது, எனவே எனது தலைமையை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றே விக்னேஸ்வரன் அவர்கள் அழைப்பு விடுத்திருக்கிறார். அவருடைய இலக்கு முழுமையாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது அதிருப்தி கொண்ட வாக்காளர்களை நோக்கியதாகவே உள்ளது.



**தமிழ் மக்கள் மாற்றுத் தலைமையை அல்லது அரசியலை இலகுவாக ஏற்றுக்கொள்வதில்லை. கடந்த காலங்களில் மாற்று அரசியலை மேற்கொண்டவர்கள் உடனடியாக தமிழ் மக்களினால் தூக்கி வீசியெறியப்பட்டமையை வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கிறது**

ஈ.பி.டி.பி, ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளின் வாக்கு வங்கியில் விக்னேஸ்வரனால் கைவைக்க முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது அதிருப்தி அடைந்தவர்களை தங்கள் பக்கம் இழுத்து தமக்கான ஆதரவுத்தளத்தை கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சி உருவாக்கி வருகிறது.

விக்னேஸ்வரன் அவர்களும் இலக்கு வைத்திருப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது நம்பிக்கை இழந்த வாக்காளர் கூட்டத்தைதான்.

எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது நம்பிக்கை இழந்த தரப்பைத்தான் விக்னேஸ்வரனின் கட்சியும் கஜேந்திரகுமாரின் கட்சியும் பிரிக்கப்போகிறார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் நடவடிக்கைகளில் அதிருப்தியினால் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் அக்கட்சி கணிசமான பின்னடைவை சந்தித்திருந்தது. இன்னுமொரு தேர்தல் வருகின்ற போது இந்த அதிருப்தியாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம். இந்த அதிருப்தியாளர்களை கஜேந்திரகுமாரும், விக்னேஸ்வரனும் பங்கு போட்டு கொள்வார்கள்.

ஏற்கனவே நிறுவனப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளூராட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிராம மட்டத்தில் கட்சிக்கிளைகள் என கொண்டு இயங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளின் ஆதரவு தளத்தை தகர்த்து அந்த வாக்காளர்களை தன் பக்கம் இழுக்கும் அளவிற்கு விக்னேஸ்வரன் அவர்களால் கிராம மட்டங்களுக்கும் சென்று ஆதரவு தளத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா என்பதும் கேள்விக் குறிதான்.

விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஆரம்பித்திருப்பதால் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சிக்கு தான் அதிக பாதிப்பாக இருக்கும்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி விக்னேஸ்வரன் உருவாக்கியிருக்கும் தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்திருப்பதால் தாம் விக்னேஸ்வரன் அணியில் இணைந்து கொள்ள மாட்டோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித்திருக்கிறது. தற்போது இந்த நிலைப்பாட்டில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இருந்தாலும் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து கொள்ள மாட்டார்கள் என உறுதியாக சொல்லமுடியாது.

வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு சவாலாக விக்னேஸ்வரன் அவர்களின் தமிழ் மக்கள் கூட்டணி உருவெடுத்தாலும் கிழக்கில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கும்.

தமிழ் கட்சிகள் பிளவு பட்டு நின்று தமிழர்களின் வாக்குகளை பிரிப்பதை கிழக்கு மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாது தமிழர் பிரதிநிதித்துவம் தக்க வைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான வித்து இடப்பட்டது. தமிழ் கட்சிகள் ஒரே அணியில் இருக்க வேண்டும் என்பதற்கான தேவை கிழக்கில் தான் அதிகம் காணப்பட்டது.

தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்க கூடாது ஒரே அணியில் தான் இருக்க வேண்டும் என்ற குரல் கிழக்கில் இன்றும் பலமாக ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

கிழக்கில் தமிழ் கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டு தமிழர்களின் வாக்குகளை பிரிப்பதால் ஏற்படும் ஆபத்தை கிழக்கு தமிழர்கள் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறார்கள். அதனால் தான் கடந்த கிழக்கு மாகாணசபை தேர்தல், பொதுத்தேர்தல், இறுதியாக நடந்த உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் கூடுமானவரை தமிழர்களின் வாக்குகள் பிரியாது தமது பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் நடந்து கொண்டார்கள்.

எனவே கிழக்கில் எந்த ஒரு தளத்தையும் கொண்டிருக்காத விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மக்கள் மத்தியில் ஆதரவை பெறும் என சொல்ல முடியாது. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் ஈ,பி. ஆர்.எல்.எவ் கட்சி மட்டக்களப்பில் ஏற்கனவே அறிமுகமான கட்சிதான். அக்கட்சிக்கான அமைப்பாளரும், கட்சி அலுவலகமும் அங்கு உள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்ட போதிலும் எந்த ஒரு சபையையும் கைப்பற்றும் அளவிற்கு வாக்குகளை பெறவில்லை.

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது புதிய கட்சி அறிவிப்பை வெளியிடுவதற்காக தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக சட்டபீடாதிபதி குமாரவடிவேல் குருபரன் கூறிய விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

தமிழ் மக்கள் மாற்று தலைமையை அல்லது அரசியலை இலகுவாக ஏற்றுக்கொள்வதில்லை. கடந்த காலங்களில் மாற்று அரசியலை மேற்கொண்டவர்கள் உடனடியாக தமிழ் மக்களினால் தூக்கி வீசியெறியப்பட்டமையை வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழ் மக்களுடைய அரசியலை பொறுத்தவரையில் முதலாவதாக தந்தை செல்வா மாற்று அரசியலை தெரிவுசெய்யதார். அகில இலங்கை தமிழ் காரங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி தமிழரசு கட்சியை ஆரம்பித்த தந்தை செல்வா, தான் எதிர்கொண்ட அடுத்த தேர்தலில் படுதோல்வியடைந்தார். தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் அவரால் தேர்தலில் வெற்றி பெறமுடியவில்லை.

பின்னர் தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறிய திரு.நவரட்ணம் அவர்கள் மாற்று அரசியலை தெரிவுசெய்து சுயாட்சிக் கழகத்தை உருவாக்கினார். ஆனால் அவரை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேபோன்று போருக்கு பின்னரான அரசியல் சூழலில் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் மாற்று அரசியலை தெரிவுசெய்தனர். அவர்களாலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையமுடியவில்லை என யாழ்.பல்கலைக்கழக சட்டபீடாதிபதி குருபரன் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்னிலையில் தெரிவித்தார்.

சட்டபீடாதிபதி குமாரவடிவேல் குருபரன் அவர்களின் கூற்றை இலகுவில் நிராகரித்து விட முடியாது.

# அரசியல் கைதிகளுக்கு விடிவு எப்போது?

அரசியல் கைதிகள் உள்ளே நடத்தும் போராட்டத்தை வைத்து வெளியே அரசியல் செய்வதற்கும் அவர்களின் விடுதலைக்கு தாமே உதவியதாக தம்பட்டம் அடிப்பதற்கும் தாராளமாகவே அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

இந்த விவகாரத்தை வைத்து அரசியல் இலாபம் தேடிக்கொள்வதில் அரசியல்வாதிகள் மாத்திரம் அக்கறைப்படுகிறார்கள் எனக் கூறமுடியாது. அதற்கு அப்பாலுள்ளவர்களுக்கும் அந்த ஆர்வம் உள்ளது

தமிழ்த் தேசிய அரசியலில் அவ்வப்போது சில பிரச்சினைகள் திடீரென மேற்பரப்புக்கு வருவதும், பின்னர் தணிந்து போவதும் இயல்பான ஒன்றாகி விட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து காணிகளை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை சார்ந்த பிரச்சினை போன்றவற்றை இவ்வாறு குறிப்பிடலாம்.

இந்தப் பிரச்சினைகள் காலத்துக்குக் காலம் மேல் நோக்கி எழுந்து வரும், போராட்டங்கள் நடக்கும். அரசியல்வாதிகள் கொதிப்புடன் பேசுவார்கள். மாறி மாறி ஒருவர் மீது மற்றவர் சேறடித்துக் கொள்வார்கள். கடைசியில் எல்லாமே தணிந்து போகும்.

இந்த வகையில் இப்போது, மீண்டும் தலைதூக்கியிருப்பது, அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டம்.

அநுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் 8 பேர், ஒன்பது ஆண்டுகளாக சிறையில் கழித்துவிட்ட தம்மை, குறுகியகால புனர்வாழ்வுக்கு அனுப்பி விடுவிக்க வேண்டும் என்று கோரி உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கிட்டத்தட்ட ஒரு மாதமாக நடந்த இந்தப் போராட்டமும் அதனை வைத்து நடத்தப்படும் அரசியலும் தான் இப்போது தமிழ் அரசியல் பரப்பின் முக்கிய விடயமாக மாறியிருக்கிறது.


தமிழ் அரசியல்வாதிகள் ஒரு பக்கமும், அரசாங்கத்தில் இருக்கும் அரசியல்வாதிகள் இன்னொரு பக்கமுமாக இந்த விவகாரத்தைப் பந்தாடிக் கொண்டிருக்கின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்- குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டவர்கள், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள், இன்னமும் வழக்குத் தாக்கல் செய்யப்படாதவர்கள் என்று மூன்று வகையானவர்கள்- இந்த அரசியல் கைதிகளின் பட்டியலில் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்களின் பெரும்பாலானவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையாக இருப்பதே, குற்றஒப்புதல் வாக்குமூலம் தான். ஆனால், நீதிமன்றத்தில் சுயமாகப் பெறப்படாத குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்படும்.

வேறு ஆதாரங்கள் ஏதுமின்றி, குற்றஒப்புதல் வாக்குமூலங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, பெரும்பாலான அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்குகளையும், வழக்குத்தாக்கல் செய்வதையும் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.

தற்போது 107 அரசியல் கைதிகள் இருப்பதாக சில புள்ளி விபரங்கள் கூறுகின்றன. ஆனால், அரசாங்கமோ அரசியல் கைதிகள் என்று எவரும்



இல்லை என்று கூறுகிறது.

நீதியமைச்சர் தலதா அத்துகோரள இதனைத் தாம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரனிடம் கூறிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

ஆனால், தமிழ் மக்களின் அரசியல் போராட்டங்களில் பங்கேற்றதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் தான் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ் கட்சிகள், அமைப்புகளும் வாதிடுகின்றன.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான போராட்டங்கள், போர் முடிவுக்கு வந்த காலத்தில் இருந்து- கடந்த 10 ஆண்டுகளாக நடந்து வருகின்றன.

இந்தப் போராட்டங்கள் முழு அளவில் வெற்றியளிக்கவில்லை எனக் கூறமுடியாது. முன்னர் பல நூற்றுக்கணக்கில் இருந்த அரசியல் கைதிகளின் எண்ணிக்கை, இப்போது, 107 ஆக குறைந்திருக்கிறது. அதற்கு இந்தப் போராட்டங்கள் தான் காரணம்.

9 தொடக்கம், 25 ஆண்டுகள் வரை சிறையில் கழித்த அரசியல் கைதிகள் பலர் உள்ளனர். இவர்களை விடுதலை செய்வதற்கு அரசியல் ரீதியாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும், அதனை அரசாங்கம் பெரும்பாலும் பொருட்படுத்தவில்லை என்றே கூறலாம்.

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து, ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர், சட்டமா அதிபர் என்று மாறி மாறி பேச்சுக்கள் நடத்தப்படுகின்ற போதிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், வாக்குறுதிகள் அல்லது நழுவலான பதில்களுடன் முடிந்து போகிறது.

சில சமயங்களில் உண்ணாவிரதப் போராட்டங்கள் உச்சமடைகின்ற போது, அரசாங்கமும், அரசாங்கத்தின் சார்பாக தமிழ் அரசியல் தலைமைகளும் வாக்குறுதிகளை அளிப்பதும், அதனால் போராட்டங்கள் கைவிடப்படுவதும் வழக்கம்.

எனினும், இந்தப் பிரச்சினை மாத்திரம் முடிவுக்கு வருவதாக இல்லை.

இப்போதைய போராட்டம் ஒரு மாதமாகியும், உரிய தீர்வை எட்டுவதற்கு பல பேச்சுக்கள் நடத்தப்பட்ட போதும்- எதுவுமே பலனளிக்கவில்லை.

அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர், நீதியமைச்சர் உள்ளிட்டவர்களுடன் இரா.சம்பந்தனும், சுமந்திரனும் ஒருமுறை பேசினார்கள்.

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி வந்ததும் பேச்சு நடத்தலாம் என்று அதன் போது உறுதி அளிக்கப்பட்டது.

அதற்குப் பின்னர் நீதியமைச்சில் ஒரு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது, அதிலும் முடிவு காணப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், இரா.சம்பந்தன் பேசுவதற்கு எடுத்த முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. சம்பந்தனுடன் பேசுவதற்கு இடமளிக்காமல் ஜனாதிபதி நழுவிக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பிரச்சினையை பாராளுமன்றத்தில் எழுப்பிய போது, நீதியமைச்சர் வெளிநாடு சென்றிருக்கிறார். அவர் நாடு திரும்பியதும் பேசி முடிவெடுக்கலாம் என்று பதிலளித்திருக்கிறார் பிரதமர்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசியல் ரீதியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு ஜனாதிபதியோ, அரசாங்கமோ தயாராக இல்லை.

அதனால் தான், ஜனாதிபதி, பிரதமர், சட்டமா அதிபர், நீதியமைச்சர் என்று வெளிநாடு செல்வதை சாட்டாக வைத்து இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது அரசாங்கம்.

அதேவேளை, தமிழ் அரசியல் கைதிகளை எப்படி விடுதலை செய்ய வேண்டும் என்ற விடயத்திலும் தமிழர் தரப்புக்குள் கருத்து ஒருமைப்பாடு இல்லை.

அநுராதபுர சிறையில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகள், தம்மை குறுகிய கால புனர்வாழ்வுக்கு அனுப்பி விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்று கோருகிறது.

ஆனால், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் அமைப்பாளரான அருட்தந்தை சக்திவேல், நிபந்தனையின்றி அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும், பொதுமன்னிப்பு என்ற விடயம் பொருத்தமற்றது என்கிறார்.

அரசியல் கைதிகள் உள்ளே நடத்தும் போராட்டத்தை வைத்து வெளியே அரசியல் செய்வதற்கும், அவர்களின் விடுதலைக்கு தாமே உதவியதாக தம்பட்டம் அடிப்பதற்கும் தாராளமாகவே அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

இந்த விவகாரத்தை வைத்து அரசியல் இலாபம் தேடிக் கொள்வதில் அரசியல்வாதிகள் மாத்திரம் அக்கறைப்படுகிறார்கள் எனக் கூறமுடியாது.

10 ஆம் பக்கம் பார்க்க....



# 1000 ரூபாவும் கூட்டுஒப்பந்தமும்!

இலங்கையில் உள்ள ஏனைய இனக் குழுக்களையும் விட தனித்துவமான அரசியல் வரலாற்றைக் கொண்ட இனக்குழுவாக மலையக மக்கள் காணப்படுகின்றனர். இந்தத் தனித்துவத்திற்கு 19 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு தொழிலாளர்களாக குடியேற்றி தோட்டம் என்ற தனி இராஜ்ஜியத்திற்குள் நகர தொழிலாளர்களிடம் இருந்தும் கிராம விவசாயிகளிடம் இருந்தும் பிரித்து வாழ வைக்கப்பட்டமையும் இலங்கையில் ஏனைய பிரஜைகள் பிரித்தானிய காலனித்துவத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற வேளையில் அவர்களது அனைத்து சிவில் , அரசியல் உரிமை பறிக்கப்பட்டமையும் காரணமாகும். இதில் குடியுரிமை பறிக்கப்பட்டமையானது மலையக அரசியலில் முதன்மையான அம்சமாகும். பறிக்கப்பட்ட குடியுரிமையை மீட்பதற்கான போராட்டமாகவே சுதந்திரத்துக்குப் பின்னரான நான்கு தசாப்தத்திற்கு





மேலான அரசியல் நிலை பெற்றது. இன்று குடியுரிமைப் பிரச்சினை சட்ட ரீதியாக தீர்க்கப்பட்டிருக்கின்ற போதும் இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளுக்கு உரித்தற்றவர்களாகவே மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

முகவரி, வீடு மற்றும் காணி உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் தொழில் பாதுகாப்பின்றி இன்றும் நாட் கூலிகளாகவே வேலை செய்து வருகின்றனர். தேசிய அரச நிர்வாகத்தில் முழுமையாக இணைய முடியாத நிலை, பிரதேச சபைக்கு, மாகாண சபைக்கு வாக்களித்தாலும் அதில் இருந்து அபிவிருத்திகளை பெறுவதில் சட்ட ரீதியான தடை என உரிமை மறுப்புக்கு உட்பட்டே மலைய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எனவே, மலையக மக்கள் வாக்காளர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள போதும் ஏனைய 'இன பிரஜைகள்' அனுபவிக்கும் உரிமைகள் அற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

**நக்கீரர்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஏகாதிபத்திய வடிவமான காலனித்துவத்தினால் இலங்கைக்குத் தொழிலாளர்களாக குடியேறி தோட்ட இராச்சியத்திற்குள் தீவிர உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டமை, காலனித்துவவாதிகள் வழங்கிய சமமான அரசியல் உரிமையைப் பெற்று வாழ ஆரம்பித்த நிலையில் சிவில் அரசியல் உரிமைகள் இனத்துவ நோக்குடன் சுதேச ஆட்சியாளர்களினால் பறிக்கப்பட்டமை, குடியுரிமை மீட்புப் போராட்டத்தின் அவலங்கள், தொழிலாளர் வர்க்க ஒடுக்குதலுடன் இன்று வரை தமது வாழ்க்கையை நகர்த்திவந்தனர்.

அந்தவகையில் கடந்த சில வாரங்களாக அடிப்படைச் சம்பளத்துடன் தமது குடும்பத்தை கொண்டு நடத்த முடியாமலும் 19 மாதங்களாக நடத்தப்படாமல் இருந்த கூட்டு ஒப்பந்த முறையில் தமது சம்பளம் ஆயிரம் ரூபாவாக மாற்றப்பட்டு வருடத்தில் 300 நாட்கள் வேலை, என்ற கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று காத்திருந்த மக்கள் அவை இழுத்தடிப்புச் செய்யப்படுவதானால் தங்களுக்குரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மலையகத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் தங்களது ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் கண்டனங்களையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர்.

இன்று வரையும் தமக்கான 1000 ரூபாசம்பளம், நிலுவை சம்பளமும் 300 நாட்கள் வேலையும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இதுவரையும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். 800ற்கும் 1000; க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் மலையகப் பிரதேசங்களான அக்கரபத்தனை - பெல்மோரல், கிரன்லி, கிலஸ்டல் ஆகிய பல்வேறு பிரதேசங்களில் வசிக்கும் தோட்ட தொழிலாளர்கள் தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்துவருகின்றனர்;.

மேலும் ஆரம்பத்தில் பேரணியாக தொழிற்சாலை வரை சென்ற தொழிலாளர்கள் கடந்த 24 ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் நாடளாவிய இளைஞர்கள் ஒன்றுகூடலாக 1000 ரூபாய் சம்பளம் கேட்டு போராடியிருந்தார்கள். அங்கு தரையில் அமர்ந்து கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். கடந்த காலங்களில் இதே தினங்களில் உருவ பொம்மைகளை எரித்தும், டயர்களை எரித்தும், தேங்காய்களை உடைத்தும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியமை நாம் பார்த்தும் கேட்டும் அறிந்தவையே.

இவ்வாறான நிலைமையின் போது ,தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் மலையக தலைமைகள் மௌனம் சாதிப்பது, அம்மக்களுக்கு செய்யும் பாரிய துரோகமாகும் என விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆர்.எம்.கிருஸ்ணசாமி குறிப்பிட்டிருந்தார்.

'தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் மாவை. சேனாதிராஜா, கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதமர் கொறடா தினேஸ் குணவர்தன உள்ளிட்ட பலர் குரல்கொடுத்து வருகின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்களும் மலையகத்தின்பால் அக்கறையுள்ளவர்களும், தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு ஆதரவுத்



**தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுப்போம் என்ற தேர்தல் கால வாக்குறுதியை உரிய பிரதிநிதிகள் நிறைவேற்றாமையினாலேயே தொழிலாளர்கள் இன்று வீதிக்கு வீதி இறங்கிப் போராடும் நிலை ஏற்பட்டுள்ளது**

தெரிவித்து, தலைநகரிலேயே ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும்போது மலையக தலைமைகள் மாத்திரம் இவ்விடயத்தில் மௌனம் சாதித்து வருகின்றமையுடன் கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தத்தின்படி 730 ரூபாயாக மாத்திரம் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளமை மக்கள் மத்தியில் மேலும் பல கேள்விகளை எழுப்பி தொடர் போராட்டங்களில் ஈடுபட வைத்தது.

ஆக்காலத்தில் இதன்போது பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான நிலுவைப் பணத்தையாவது பெற்றுத் தராது விடின் எதிர்வரும் தீபாவளியை கறுப்புத் தீபாவளியாகக் கொண்டாடவுள்ளமையை தமது ஆர்ப்பாட்டங்களின் போது கூறியிருந்தனர். இனி மலையகத்துக்கென எந்த அரசியல் பிரதிநிதிகளோ மலையகத் தலைமைகளோ இல்லை என்றும் அவர்கள் அழிந்து விட்டார்கள் என்றும் இனி எமக்கு தேவையில்லை என்பதையும் சுட்டிக்காட்டி கறுப்புத் தீபாவளி கொண்டாடவுள்ளதாக குறிப்பிட்டுவருகின்றனர். இது நல்லாட்சி அரசாங்கத்தின் பயணத்திற்கு ஆரோக்கியமானதல்ல என்பதை அரசாங்கம் உட்பட மலையகத் தலைமைகள் உணர்ந்து அவர்களுக்குரிய நிலுவைச் சம்பளத்தையாவது தீபாவளிக்கு முன்னர் பெற்றுக் கொடுப்பதற்கு வழிசெய்ய வேண்டியது தற்போதைய அரசியலில் மிகமுக்கியமானதாகும்.

கடந்த வருடம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 620 ரூபாயிலிருந்து 110 ரூபாயை மட்டும் அதிகரித்துள்ள முதலாளிமார் சம்மேளனமானது, 730 ரூபாய்க்கு மேலும் ஒரு சதத்தையேனும் அதிகரிக்க முடியாது என கூறியுள்ளது. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் நிலுவைச் சம்பளம் தொடர்பில் எதுவித பேச்சுவார்த்தைகளோ ஒப்பந்தங்களையோ செய்யவில்லை என்பது புரியாத புதிராகவே உள்ளது. மேலும் இதன்போது இந்தச் சம்பளமும் 3 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படுமெனவும் மீதமுள்ள நாட்களுக்கு தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தின் நிறைக்கு ஏற்பவே கிலோவுக்கு 35 ரூபா வழங்கப்படுமெனவும் அறிவித்திருந்தது. மலையக பிரதிநிதிகள் மற்றும் கூட்டொப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் இதனை ஏற்றுகொண்டுள்ளமையானது மக்கள் மத்தியில் மேலும் எதிர்ப்பலைகளையே தோற்றுவித்துள்ளது.

அத்துடன் 18 மாதங்களுக்கு பின் கைச்சாத்திடப்படும் புதிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் மாதம் தொடக்கமே சம்பள உயர்வு வழங்கப்படும் என்று முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது. இது கூட்டொப்பந்த சரத்துக்கு மாறானது. இந்நாட்டில், ஏனைய துறைகளிலுள்ள உள்ளவர்களைவிடவும், அதிக உழைப்பை கொடுத்து குறுகிய சம்பளத்தை பெறுவது தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமே ஆவர்.

அரசாங்கத்துறை, தனியார்துறை ஊழியர்களின் சம்பள பிரச்சினையில், அரசாங்கம் நேரடியாக தலையிட்டு சுமூகமான தீர்வை பெற்று கொடுக்கும். ஆனால், பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை கடந்த 18 மாதங்களாக தீர்;க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் இந்த அரசாங்கம், ஏன் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்று கொடுக்கவில்லை என்பது பதிலில்லாத வினாவாகவே இருந்துவருகின்றது.

மலையக தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளாது, தனித்தனியாக பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதே, தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுகொடுப்பதற்கு தடையாக உள்ளது எனலாம். தொழிலாளர்கள் ஒற்றுமையாக மேற்கொள்ளும் இப்போராட்டம் பலம் அடைவதைக் கருத்தில் கொண்டு தொழிற்சங்க தலைவர்கள் ஒன்றுபட்டு பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு மலையக மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

தங்களுடைய நாளாந்தச் சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக அதிகரிக்குமாறு வலியுறுத்தி, தோட்டத் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக ஒரு பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதென, பெருந்தோட்டத்துறை அமைச்சு கடந்த காலங்களில் அறிவித்திருந்தது. அத்துடன் தொடர்ச்சியாக தொழிலாளர்கள் முன்னெடுத்த போராட்டங்களால், தொழிலாளர்கள் 8,000 ரூபாய் வரை இழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டிய, ஸ்ரீ லங்கா சுந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன், இதற்கு யார் பொறுப்பு என்றும் வினவியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,000 ரூபாயை பெற்றுக்கொடுப்போம் என்ற தேர்தல் கால வாக்குறுதியினை உரிய பிரதிநிதிகள் நிறைவேற்றாமையினாலேயே தொழிலாளர்கள் இன்று வீதிக்கு வீதி இறங்கி போராடும் நிலை ஏற்பட்டுள்ளது

நல்லாட்சி அரசாங்கமானது 1,000 ரூபாய் சம்பளத்தை பெற்றுத்தருவதாக கூறவில்லை. 1,000 ரூபாய் என்பது தேர்தல்கால வாக்குறுதியாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளை பெற்றுகொள்ளும் நோக்கிலேயே, 1,000 ரூபாய் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது அரசாங்கத்தின் தலையீட்டினூடாக தற்போது, 730 ரூபாய் சம்பளவுயர்வு கிடைக்கப்பெற்றுள்ளது. ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளடங்கலாக, தொழிலாளர்களுக்கு 805 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள், அரசியல்வாதிகளினால் முன்னெடுக்கப்படும் போலி பிரசாரங்களிலிருந்து தெளிவடைய வேண்டியது இப்போராட்டத்தின் மூலம் பெற்றுக் கொண்ட படிப்பினையாகக் கொள்ளவேண்டும்.

**மலையக தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளாது, தனித்தனியாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதே தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கு தடையாக உள்ளது**


தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டம் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் முன், போராட்டத்தின் நிலையுணர்ந்து, தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, இந்தப் போராட்டத்தை நிறுத்த நல்லாட்சி அரசாங்கம் உடனடியாக தீர்மானம் எடுக்க வேண்டும்

தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையாக முன்வைத்துள்ள ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு மற்றும் வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள் தொழில் ஆகியவற்றின் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் ஆராய்ந்து தலையிடும் நிலைமைக்கு தொழிலாளர்களின் போராட்டம் உச்ச நிலைமைக்கு சென்றுள்ளது. காலம் காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு உரிமை பெற்று வந்த இம் மக்கள் தற்போது விழித்து கொண்டுள்ளனர் என்பது இத் தொடர் போராட்டங்களினால் புலனாகியுள்ளது.

18 மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த சம்பள பேச்சுவார்த்தை இன்னும் முடிவுக்கு வரவில்லை. மாறாக கடந்த தேர்தலில் மலையக மக்களின் வாக்கினால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அமைச்சர்கள் சிலர் 1,000 ரூபாயை கிடைக்க விடாமல் கம்பனிகளுக்கும் அரசாங்கத்துக்கும் துணைபோகின்றார்கள். எனவே, தொழிலாளர்களின் நலனை கருத்திற் கொண்டு உடன்படிக்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எனவே இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களையும் நலன்களையும் பெற்றுக்கொடுக்க நல்லாட்சி அரசாங்கம் முன்வந்துள்ளதைப்போலவே மலையக மக்களின் சம்பள உயர்வு, நிலுவைச் சம்பளம், தொடர்பில் அரசாங்கமும் மலையக மக்களின் வாக்குகளால் இன்று பாராளுமன்ற அரியாசனம் ஏறியிருக்கும் மலையகத் தலைமைகளும் மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்வரவேண்டியது காலத்தின் தேவையாகும். இன்றேல் கடந்த 3 தசாப்தங்களின் பின்னர் இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நல்லாட்சி அரசாங்கத்திற்கும், நாட்டின் அரசியல் வரலாற்றிலும் என்றுமே மறக்கவியலாத நிகழ்வொன்றினை (படிப்பினை) நிகழ்த்திக்காட்டுவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# விக்னேஸ்வரனின் புதிய பரிணாமம்!



**இலங்கையில் பல மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்துள்ள போதிலும் இதுவரையிலும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் இடம்பெறவில்லை. எங்கள் நாடுகளில் ஜனநாயகம் செழிப்படைவதற்கு உரிய தருணத்தில் தேர்தல்கள் இடம்பெறுவது முக்கியமானது. தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படாமையே பல பிரச்சினைகளுக்கு இன்றும் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியாமலிருப்பதற்குக் காரணமாகும்**

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பாலமாக நிற்பதாக கூறி, தேர்தலில் களமிறங்கி வெற்றிபெற்று, அரசினால் மாகாணசபை உறுப்பினருக்கு, நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படுகின்ற அத்தனை சலுகைகளையும் வேண்டாம் எனக் கூறாது, அவற்றினையும் பெற்று, மக்கள் போராட்டங்களை நடாத்துகின்ற போதும், முக்கிய நிகழ்வுகள் இடம்பெறுகின்ற போதும், நித்திரையில் இருப்பவரை தட்டும் போது கனவு காண்பவரைபோல திடுக்கிட்டு தீர்வு எனக்கூறி, ஊடகங்களிலும், நாடாளுமன்றங்களிலும் பேசியதே இன்றுவரை எச்சமாயுள்;ளது. இன்று, நாளை என நாட்களை இழுத்துக்கூறுகின்ற பண்பும் தமிழ் தலைமைகளிடையே இருக்கத்தான் செய்கின்றது. இதனால்தான் என்னவோ, அரசாங்கத்துடன் ஒட்டியுறவாடி, அவர்களின் சலுகைகளைப் பெற்று பேசாமடந்தைகளாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் இருப்பதாக ஏனைய தமிழ் கட்சிகள் கூறிவருகின்றனர்.

**முனையூரான்**

அதேவேளையில், அதேபாணியில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.விக்னேஸ்வரனும் கூறுகின்ற போது, ஆளும் வர்க்கத்தின் செல்லப் பிள்ளைகளாக என்றென்றும் இருக்க விரும்புகின்ற சிலரின் அப்பட்டமான கீழ்த்தரமான நடவடிக்கைகளாலேயே சிங்கள ஆட்சியாளர்கள் எம்மீது குதிரை விடப் பார்க்கின்றார்கள். இதேவேளை, தமிழ் அரசியல்வாதிகளும் அலுவலர்களும் சுயமாகச் சிந்திக்கத் திராணியற்றவர்களாக அரசாங்கத்தின் அடிவருடிகளாக அவர்களைத் திருப்திப்படுத்துகின்ற அநாகரிகச் செயல்களில் ஈடுபட்டு வருவது வேதனைக்குரியது எனக் குறிப்பிட்டிருந்தமையின் மூலமாக தற்போதைய தமிழ் தலைமைகளின் அரசியல் பண்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது.



வடமாகாணசபையின் ஆயுட்காலம் நிறைவுபெற்றுள்ள நிலையில், மாகாணசபைகளுக்கான தேர்தல் தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படமாலே உள்ளது. இந்நிலையில்தான், கட்சி முரண்பாடுகள் வேறு, மாகாண சபை தேர்தல் வேறு என்பதை புரிந்து மாகாண சபைதேர்தலை விரைவில் நடத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும். அரசாங்கம் மாகாணசபை தேர்தலை விரைவில் நடத்தும் என்ற எதிர்பார்ப்பு இல்லை. அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளும் இல்லை. ஆனால் ஆளும் கட்சிகள் இரண்டுமே தேர்தலை நடத்துவதில் காலதாமத்தை ஏற்படுத்தி வருகின்றன.

மாகாணசபை தேர்தலை காலந்தாழ்த்த இருகட்சிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறிவினை அரசாங்கம் தனக்கு சாதகமாக பயன்படுத்தி வருகின்றது. கட்சி முரண்பாடுகளை மையமாக கொண்டு தேர்தலை காலந்தாழ்த்துவது முறையற்றதாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். அதேபோன்று, இலங்கையில் பல மாகாணசபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்துள்ள போதிலும் இதுவரையிலும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் இடம்பெறவில்லை. எங்கள் நாடுகளில் ஜனநாயகம் செழிப்படைவதற்கு உரிய தருணத்தில் தேர்தல்கள் இடம்பெறுவது முக்கியமானது. தேர்தல்கள் உரியகாலத்தில் நடாத்தப்படாமையே பல பிரச்சினைகளுக்கு இன்றும் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருப்பதற்கு காரணமாகும். இதனால் பலர் ஏமாற்றமடைந்திருப்பார்கள். எங்கள் நாடுகளில் ஜனநாயகம் செழிப்படைவதற்கு உரிய தருணத்தில் தேர்தல்கள் இடம்பெறுவது முக்கியமானது என இலங்கைக்கான பிரிட்டனின் உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் தனது டுவிட்டரில் பதிவொன்றினை வெளியிட்டிருந்தார். இக்கருத்தின் மூலம் பலசாராரும் தேர்தலை எதிர்பார்த்திருக்கின்ற நிலையிலும், அரசு தேர்தலை நடாத்தாது காலத்தினை நீடித்துக்கொண்டு செல்வது நியாயமல்ல.

தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் ஆட்சி நிறைவுற்றிருக்கின்றதான நிலையில், கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தேர்தலில் இறங்குவதன் மூலமே, மாகாணத்தில் சாதிக்கமுடியும் என்கின்றதான நிலையில், வடக்கு மாகாணத்தில் புதிய கட்சி ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக வட மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் சீ.விக்னேஸ்வரன் அண்மையில் தமிழ் மக்கள் கூட்டணி என்ற நாமத்தில் கட்சியொன்றினை ஆரம்பித்து, அதன்கீழ் தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து வருடங்களாக வடபகுதியின் முதலமைச்சராக பணிபுரிந்துவருவது பலருக்கு மிக்க இடைஞ்சல்களை கொடுத்திருப்பதை நான் உணர்கின்றேன். ஒவ்வொருவரும் தாம் தாம் நினைத்த வகையில் செயற்படுவதற்கும் தமது நேர்வழியற்ற சிந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் எனது இருப்பு மிக்க இடைஞ்சல்களை கொடுத்திருப்பதாக நான் உணர்கின்றேன். மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத ஒரு கட்டமைப்பே மாகாண சபைக் கட்டமைப்பு என்ற யதார்த்தம் தெரிந்திருந்தபோதிலும் பிழையானவர்களின் கைகளில் அதிகாரம் சென்று எமது மக்களுக்கு மேலும் ஆபத்தாக முடியக்கூடாது என்ற காரணத்தினாலேயே தேர்தலில் போட்டியிட்டு வட மாகாண சபையைக் கைப்பற்றினோம். கைப்பற்றிவந்தபின் நாம் எதுவும் செய்யவில்லை என்று கொக்கரிப்போர் யார் என்று பார்த்தால் பிழையானவர்கள் கைகளுக்கு செல்லக்கூடாது என்று யாரை அன்று அடையாளப்படுத்தினோமோ அவர்களே. அவர்கள் அரசாங்கத்திற்கு மண்டியிட்டு அல்லது பிச்சை கேட்டு ஏன் உங்கள் காரியங்களை நீங்கள் இயற்றவில்லை என்றே கேட்கின்றார்கள். பணிந்துபோய் பகடைக் காயாகி பல நூறு வேலைத் திட்டங்களை ஏன் இயற்றவில்லை என்றே அவர்கள் கேட்கின்றார்கள். அவர்களுக்கு பதில் சொல்வதானால் எமக்கு எமது உரிமைகள் முக்கியம். சலுகைகள் அன்று என்ற படியால்தான் எமக்கு எமது வருங்கால நிரந்தரத் தீர்வு அவசியம். இன்றைய ஓர் அடிமைப்பட்ட சொகுசு வாழ்க்கையல்ல.

நான் எந்த ஒரு கட்சியையும் சார்ந்தவன் அல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொது வேட்பாளராகவே கடந்த தேர்தலில் போட்டியிட்டேன். ஆனால் என்னை ஒரு பொம்மையாக வைத்து அரசியலை நடத்துவதற்கு அதன் தலைவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அதற்கு என்னால் இடமளிக்கமுடியவில்லை. எனக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைக்கும் இடையே கடந்த 4 வருடங்களில் இடைவெளி பெரிதும் அதிகரித்துள்ளது. இது நான் பெரிது நீ பெரிது என்ற மனப்பான்மை காரணமானதாகவோ அல்லது தலைமைத்துவப்போட்டி காரணமாகவோ ஏற்படவில்லை. மாறாக எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் கோட்பாடு ரீதியாகவும் அணுகுமுறை ரீதியாகவும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே இந்த வேறுபாடுகள் ஏற்பட்டன. ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மீண்டும் போட்டியிடுவதை என்னால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. நான் கைப்பொம்மையாக இருக்க சம்மதிக்காதவரை எனக்கு மீண்டும் இடமளிக்க அவர்களும் தயார் இல்லை. பல நண்பர்கள் ஒற்றுமை அவசியம் என்பதால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்தே போட்டியிட வேண்டும் என்றார்கள். கொள்கையில் திடமாக இல்லாது முன்பு 'துரோகிகள்' என்று வர்ணித்தவர்களின் வழித்தடத்திலேயே இப்பொழுது பயணம் செய்யும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் எனக்கென்ன வேலை என்று கேட்டு அவர்கள் வாய்களை அடைத்துவிட்டேன். அதனால் தமிழ்தேசிய கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது சாத்தியமற்ற ஒன்று என்ற கருத்தினை முன்வைத்திருந்தார்.

இதன்மூலம் தனது நியாயத்தினை வெளிப்படுத்துவதற்கு முதலமைச்சர் விளைந்திருக்கின்றார். ஆனாலும் இதனை முதலமைச்சர் சார்பானவர்கள் ஏற்றுக்கொண்டாலும் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது. குறிப்பாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கூறுகின்ற போது, சிங்களத்துடன் இரண்டறகலந்து, நீதி அரசர் பதவிபெற்று சிங்கள சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களை சிறையில் தள்ளிய, பட்டை வேடதாரி, கட்சி அரசியல் இன்றி தமிழர்களை ஒன்றாக்கி தமிழ் மக்கள் பேரவை ஊடாக சாத்வீக போராட்டம் மூலம் தமிழர் உரிமையை நிலை நாட்டபோகின்றோம் என்று சொன்னவர்களின் சாயம் வெளுத்து போனது.

புத்தி ஜீவிகளாக தம்மை அடையாளம் காட்டி தமிழ் மக்கள் பேரவையூடாக வெகுஜன போராட்டத்தை கட்சி வேறுபாடுகள் இன்றி முன்னெடுக்க இருந்த சந்தர்ப்பத்தையும் தவிடு பொடியாக்கி தடம்புரண்டு வேடதாரியின் புதிய கட்சியில் சங்கமித்த பேரவைக்கு ஒரு வாசகம் சொல்கிறேன்.

மறத்தமிழனால் ஒதுக்கப்பட்ட பின் போலி வேசம் போட்டு புதிய கட்சி ஆரம்பித்த பேரவை நேற்றிலிருந்து உங்களை நீங்களே சுயபரிசோதனை செய்துகொள்ளவேண்டியது அவசியம். தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கத்தின் போது முதலமைச்சர் பூண்டு கொண்ட வேடத்தை தானே கூக்குரலிட்டு தடம்புரண்டு ஆற்றிய உரை அவரது சுய கௌரவத்தை கேள்விக்குறியாக்கி நீங்கள் ஒரு பொய்யன் என்பதை பறைசாற்றியுள்ளது.

என்ற கருத்தின் மூலமாக முதலமைச்சரின் புதிய கட்சி தொடர்பிலும், அவரது செயற்பாடு தொடர்பிலும் அவர்கூறவிளைகின்ற கருத்துக்கள் உள்ளங்கை நெல்லிக்கனியாக வெளிப்பட்டு நிற்கின்றன.

அமைச்சர் மனோ கணேசன் விக்கினேஸ்வரனின் புதிய கட்சி தொடர்பில் கூறுகின்ற போது, விக்கினேஸ்வரனின் குடை சிறியது எனக்கு பெரியகுடையே தேவை எனக்கு அங்கு இடமில்லை. பெரியகுடையாக வரும்போது யோசிக்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

மாகாணசபை தேர்தல் அறிவிக்கப்பட வேண்டுமென கூறுகின்ற நிலை ஒருபக்கமாகவிருக்கின்ற அதேவேளையில், ஒருசாராரை ஒருசாரார் சாடி கட்சிகளை உருவாக்கவே நினைக்கின்றனர். ஆனால் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முன்வரவில்லை.

எனவே அரசியற் தீர்வுகள் பற்றி விரைவான பேச்சினை முன்னெடுக்கவில்லையென, கூறவிளைகின்ற அனைத்து சாரார்களும் மக்கள் குறித்து ஆழமாக சிந்தித்து செயற்படவேண்டும். தமது வாக்குகளுக்காக எதனையும் கூறி சாதித்துவிடலாம் என நினைக்கும் அனைத்து அரசியல்வாதிகள் குறித்தும் தெளிவுற ஆராய்ந்து செயற்பட வேண்டியது மக்களின் அத்தியாவசிய கடமையாகியுள்ளது என்பதே காலத்தின் நிதர்சனமாகும்.



ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்ற ஒரு தளமாக பார்க்க வேண்டியிருக்கிறது. பல்கலைக்கழக ஊழியர்கள் பிரச்சினை, விரிவுரையாளர்கள் பிரச்சினை, மாணவர்கள் பிரச்சினை, கட்டிடத்தை விடுவிக்குமாறு பிரச்சினை, நிருவாகிகளை நிருவாகம் செய்ய விடாமல் பிரச்சினை, புதிய மாணவர்களை வரவேற்பதில் பிரச்சினை, ஊழலில் ஈடுபட்டார் என்கிற பிரச்சினை இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளின் மொத்தத்தளமாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இருந்து வருகிறதா என்று பல்கலைக்கழத்தில் தன்னுடைய மகள் பட்ட மேற்படிப்பினை மேற்கொள்கின்றாள். ஆனால் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிறுதுநாட்களே விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.

இந்நிலையில் மாணவர்களின் எதிர்காலம் குறித்து இவ்வாறான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் மாணவர்களும்சரி, ஏனைய ஊழியர்களும்சரி, நிருவாகிகளும்சரி ஏன் அரசும்சரி மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு குந்தகமாக செயற்படுகின்றவர்களுக்கு நியாயமான தண்டனை வழங்கப்பட்டு மாணவர்கள் சுயமாக சுதந்திரமாக, பல்கலைக்கழக சூழலில் சிறந்த முறையில் கற்று நாளை இலங்கையில் மாத்திரமன்றி உலகின் எப்பாகத்திலும் சிறந்த கல்வியாளராக திகழ்வதை விட்டுவிட்டு வந்தோம், தடையை ஏற்படுத்தினோம், விரிவுரைகளை பகிஷ்கரித்தோம் என்று கூறுமளவுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகம், அங்குள்ள மாணவர்களின் ஒரு குறித்த பிரிவினர் தொடர்ச்சியாக சிக்குமுக்காடச்செய்வதை தவிர்ப்பதற்கு ஒரு நிரந்தரமான தீர்வுக்கட்டமைப்பினை உருவாக்க முனையவேண்டியது நிருவாகத்தின் கடமைப்பாடாகும் என்கிறார்கள் தென்கிழக்கு பிரதேசவாழ் முற்போக்குச் சிந்தனையுடையவர்கள்.

சில தினங்களுக்கு முன்னர் தென்கிழக்குப் பல்லைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இரண்டுவாராங்களாக தமது சகமாணவர்களில் சிலரை விரிவுரைகளிலிருந்து விலக்கிவைத்தமையை முடிவுக்கு கொண்டுவந்து விலக்கியவர்களை இணைத்துக் கொள்ளுமாறும் கோரியே பீடமொன்றின் மாணவர்கள் இதனை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்திருந்தனர். கடந்த புதன்கிழமை இரவு அக்கரைப்பற்று பொலிசார் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக மேற்கொண்ட சுற்றிவளைப்பின் காரணமாக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்கள் நிருவாகத்தினரோடு பேசவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள். இருப்பினும் இவ்வாறான நிகழ்வுகளை தடுத்து நிறுத்தி மாணவர்கள் சிறந்த கற்றல் சூழலுக்குள் செல்வதற்கான அத்தனை வசதிகள் இருந்தும் தேவையற்ற விடயங்களில் தலையை நுழைத்து, வீண் அலைச்சலுக்கும், வீனான பிரச்சினைகளுக்கும் இடையில் கஷ்டப்படுவதைத் தவிர்க்குமாறும் மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் இது தொடர்கதையாகவே தொடர்கின்ற மர்மமானது விலக்கப்பட்டு மாணவர்கள் தங்களுடைய எதிர்காலத்திற்கான தளமாகவே பார்க்க வேண்டியதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத ஒன்றாகும்.

கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்று வந்த பிரச்சினையின் காரணமாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கடந்த புதன்கிழமை தொடக்கம், மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாகவும், பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், பல்கலைக்கழக பதிவாளர் எச். அப்துல் சத்தார் தெரிவித்தார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டடத்தை கடந்த இரண்டு வாரகாலமாக, அந்த பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆக்கிரமித்துள்ளமையின் காரணமாகவே, மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு, நிருவாகம் தீர்மானித்திருக்கிறது. இந்த நிலையில், பல்கலைக்கழகத்திலும், அங்குள்ள விடுதிகளிலும் தங்கியுள்ள அனைத்து மாணவர்களையும், அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர், அங்கிருந்து வெளியேறுமாறு பல்கலைக்கழக நிருவாகம் அறிவித்துள்ளது.

இந்த உத்தரவினையும் மீறி, பல்கலைக்கழகத்தினுள் தங்கியிருப்பது சட்டவிரோதமாகக் கருதப்படும் எனவும், தென்கிழக்குப் பல்கலைக்கழக நிருவாகம் கூறியுள்ளது. இந்த உத்தரவினையும் மீறி, பல்கலைக்கழகத்தினுள் தங்கியிருப்பது சட்டவிரோதமாகக் கருதப்படும் எனவும், தென்கிழக்குப் பல்கலைக்கழக நிருவாகம் கூறியுள்ளது. தென்கிழக்கு பல்லைக்கழக நிருவாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்த மாணவர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு ஏற்கனவே, அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.அதனையும் மீறி, தொடர்ச்சியாக அந்த மாணவர்கள் நிருவாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்தமையினால், அவர்களை கைது செய்யுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பிருந்தது.இந்த நிலையில், குறித்த மாணவர்களை கைது செய்யாமல், பொலிஸார், அலட்சியமாக நடந்து கொண்டார்கள் எனக் குற்றம் சாட்டியிருந்த பல்கலைக்கழக சமூகத்தினர், பொலிஸாருக்கு எதிராக அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அம்பாறை மாவட்டத்தின் கரையோரக் கிராமங்களில் ஒன்றான ஒலுவிலில் பிரதான வீதியிலிருந்து பல்கலைக்கழகக் பூங்காவானத்தில் சுமார் ஒன்றை கிலோமீற்றருக்குள் அமையப்பெற்றிருக்கிறது. இது இலங்கையின் பத்தாவது தேசிய (அரச) பல்கலைக்கழகமாகும். கொழும்பிலிருந்து ஏறத்தாழ 350 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் நிறுவனர், முஸ்லிம் காங்கிரசின் நிறுவனரும் முன்னாள் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் ஆவார். தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 24ம் பிரிவுக்கமைய பல்கலைக்கழக கல்லூரியாக 1995 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் நாள் நிறுவப்பட்டது. பின்னர் அது 1995ம் ஆண்டு மே 15 ஆம் திகதி சுயாதீனமான பல்கலைக்கழகமாக மாற்றியமைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

2011 இன் ஆரம்பத்தில் இருந்து வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணி பட்டத்திற்கான கற்கையினையும் ஆரம்பித்துள்ளது. கிழக்கிலங்கையின் அறிவுப் பொக்கிஷம் தென்கிழக்கு பல்கலையின் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகம் கூறிக் கொண்டிருக்கி;றது. அந்தளவுக்கு மாணவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தும் அளவுக்கு இங்குள்ள பீடங்கள் மாத்திரமன்றி அனைத்து துறைசார்ந்தவர்களும், துறைசார்ந்த வகையில் நிறைவான பயிற்சிகள் கற்றல் செயற்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்ற தென்கிழக்குப் பல்கலைக்கழத்தில் அடிக்கடி இவ்வாறான பிரச்சினைகள் முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது அது ஏனைய மாணவர்களையும் பாதிக்கவே செய்கின்றன. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோரி தொடர் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இன்னொரு காலகட்டத்தில் துணைவேந்தர் பதவியை வைத்துக் கொண்டு பல்கலைக்கழகத்தை துஷ்பிரயோகம் செய்கிறார் என்கிற அறிவிப்புக்களை சில விரிவுரையாளர்கள் செய்தியாளர்களை அழைத்து தெரிவித்திருந்தனர்.

விரிவுரையாளர் ஒருவர் மாணவியிடம் பாலியல் இலஞ்சம் கோரினார் என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் ஒருவர் எழுப்பிய சர்ச்சையின் காரணமாக தென்கிழக்குப் பல்கலைக்கழத்தின் பெயர் மேலும் வித்தியாசமான முறையில் நோக்கப்பட்டது. இவ்வாறு அடிக்கடி இப்பல்கலைக்கழகத்தின் நிருவாகத்தினை முடக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை நல்லதோர் சகுணமாக தெரியவில்லை என்பதுதான் இப்போதுள்ள விடயமாகும். சம்மாந்துறை மற்றும் ஒலுவில் பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள இப்பலைக்கழகத்தின் வியாபகத்தன்மை பற்றி முன்னாள் அமைச்சர் அஷ்ரப் அவர்கள் நீண்ட கனவொன்றை கண்டிருந்தார். பாலமுனையில் வைத்தியாசாலை பீடமும், பொத்துவிலில் அறபு இஸ்லாமிய பீடமும், தீகவாப்பியில் பௌத்த பீடமும், திருக்கோவில் பிரதேசத்தில் இந்துசமய பீடமும் அமையப்பெறவேண்டும் என்றும் கடல் மற்றும் விவசாயம் சார்ந்த பிரதேசமாக இப்பிராந்தியம் காணப்படுவதால் மக்களுக்கு இலகுவான முறையில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இப்பல்கலைக்கழம் காணப்பட வேண்டும் என்றும் கனவு கண்டார். ஒலுவில் துறைமுகத்தின் ஊடாக இங்கிருந்து கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இப்பிராந்தியம் பொருளாதார ரீதியில் உற்பத்தியாக்கங்களை அமைப்பதற்கும் கனவுகண்டார்.

இப்போது அவரால் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒலுவில் துறைமுகம் மண்ணால் நிரம்பியுள்ளது. கப்பல் வருமோ என்னவோ தெரியாது துறைமுகத்திற்குள் சாதாரண வள்ளம்கூட நுழைய முடியாதளவுக்கு துறைமும் மணலாம் மூடப்பட்டிருக்கிறது. இழுந்து மூடவேண்டிய நிலையில் ஒருவில் பல்கலைக்கழகம் கூட இழுபறி நிலையில் காணப்படுவது மனவேதனை அளிப்பதாகக் பெற்றோர்கள் கவலை கொள்கின்றனர். மூன்றாடுகள், நான்கு ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகளில் நிறைவடைய வேண்டிய படிப்புக்கள் இவ்வாறான இழுபறி நிலைகளால் நீடிக்கும் நிலைமை தோன்றும்.

அதன் காரணமாக வயது அதிகரித்துச் செல்லும். தொழில்வாய்ப்பிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அதேவேளை இப்பல்கலைக்கழம் ஒரு தேசிய பல்கலைக்கழகமாக இருந்தபோதிலும் இதன் தனித்துவம் அனைத்தும் இஸ்லாமியர்களின் பல்கலைக்கழகமாகவே பார்க்க வேண்டியிருக்கிறது.

நாட்டில் நாலா புறமும் காணப்படுகின்ற ஏனைய பல்கலைக்கழகங்கள் ஏனைய சமயத்தவர்களுக்கு காணப்படுவதுபோல தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்திருந்தாலும் இன்று இது அனைவருக்குமான ஒரு தேசியத்துவம் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

கூட்டு மொத்தத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளின், முன்னிலை வகிக்காத விடுபட்டுப்போன கலைக்கூடமாகவே இதனைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

அரசியல்வாதிகள் இதன் அபிவிருத்தியிலும், முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றபோது அரசியல் பக்கம் இருந்து நியாயத்தன்மையை எடுத்துக்கூறி அறிவுவிருட்சத்திற்கு உதவும் கலைக்கூடமாகவும், முஸ்லிம் அரசியலின் மத்தியநிலையமாகவும் கனவுகண்ட அஷ்ரப் அவர்களின் வழியில் நின்று தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வியாபிக்க வேண்டும் என்பதையே அஷ்ரப் அவர்களின் வழியில் நின்று நிதானிக்கின்றவர்கள் நினைக்கின்றனர். நிறைவேறுமா என்ன?

# தென்கிழக்குப் பல்கலைக்கழகம் போராட்டங்களை நடத்துகின்ற தளமா?




தந்திமகன்



---

## அரசியல்...

07 ஆம் பக்கத் தொடர்ச்சி



அதற்கு அப்பாலுள்ளவர்களுக்கும் அந்த ஆர்வம் உள்ளது.

அநுராதபுர சிறையில் அரசியல் கைதிகள் போராட்டத்தை ஆரம்பித்த ஒரு சில நாட்களின் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அங்கு சென்று அரசியல் கைதிகளை பார்வையிட்டார். அரசுடன் பேசுவதாக உறுதியளித்தார்.

அதற்கு சில நாட்களின் பின்னர், மகசின் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த இன்னொரு தமிழ் அரசியல்வாதி வெளியே வந்து, கூட்டமைப்பினர் தம்மை வந்து பார்வையிட்டு ஒன்றரை வருடங்களாகின்றன என்று அரசியல் கைதிகள் குறை கூறினர் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை குறை கூறுவது, குற்றம்சாட்டுவது, தமிழ் அரசியல் பரப்பில் வழக்கமான ஒரு உத்தியாக மாறியிருக்கிறது. அநுராதபுர சிறைச்சாலைக்குச் சென்று வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரனும் இதனைத் தான் கூறியிருந்தார்.

தம்மை விடுதலை செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை, கடந்த முறை வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதற்கு இதனை ஒரு நிபந்தனையாக முன்னிறுத்த தவறி விட்டது என்றெல்லாம் அரசியல் கைதிகள் குறைபட்டுக் கொண்டதாக தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

அரசாங்கத்துடன் பேரம்பேசக் கிடைக்கும் வாய்ப்புகளை கூட்டமைப்பு தவற விடுகிறதா என்ற சந்தேகங்களும் கேள்விகளும் பரவலாகவே இருக்கின்றன. ஆனாலும், இந்த விவகாரத்தில் கூட்டமைப்பு ஒன்றுமே செய்யாமல் ஒதுங்கியிருக்கிறது என்று கூறமுடியாது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்ட போது, அதற்கு எதிராக வாக்களிக்க, அரசியல் கைதிகளின் விடுதலையை ஒரு நிபந்தனையாக முன் வைத்ததாக கூட்டமைப்பு கூறியிருந்தது.

அந்த வாக்கெடுப்பில் பிரதமர் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்த - ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின், சிவசக்தி ஆனந்தன், அலரி மாளிகைக்குச் சென்று பிரதமருடன் தனியாகப் பேச்சு நடத்தியிருந்தார்.

அதன்போது எழுத்துமூல உடன்பாடு காணப்பட்டது என்றும், ஒரே ஒரு உறுப்பினரைக் கொண்ட தம்மால் பேரம் பேசி இதனைச் செய்ய முடிந்த போது, 15 பேரைக் கொண்ட கூட்டமைப்பினால் செய்ய முடியாது போனது எப்படி என்றும் அப்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

ஆனாலும், அந்த எழுத்துமூல உடன்பாட்டுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. அதுபோன்ற நிலை தான், கூட்டமைப்புக்கும் ஏற்பட்டது.

மன்னாரில் ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி, இந்தப் பிரச்சினையை எழுப்பினார். ஆனாலும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. தீர்வும் கிடைக்கவில்லை.

அரசியல் கைதிகள் விடயத்தில், அரசாங்கம் உருப்படியான தீர்மானம் எடுக்கும் நிலையில் இல்லை என்பதையே இது காட்டுகிறது. ஆளை ஆள் கைகாட்டி நழுவிக் கொள்வது தான், நடந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை வைத்துக் கொண்டு, தமிழ் அரசியல் பரப்பில் அரசியல் இலாபம் தேடுவதும் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் செய்தியாளர்களிடம் பேசிய போது, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதங்களை எழுதியும், பேச்சுக்களை நடத்தியும் களைத்துப் போய் விட்டேன் என்று அலுத்துக் கொண்டு கூறியிருந்தார்.

ஐந்து ஆண்டுகளாக அரசியல் செய்யும் அவருக்கே, களைத்துப் போய் விட்டது என்றால், 15, 20 ஆண்டுகளாக போராட்டங்களை நடத்தும் அரசியல் கைதிகளின் நிலை எத்தகையதாக இருக்கும்?

அவர்கள் சலிப்படைவது, தம் மீது சமூகமும், அரசியல்வாதிகளும் அக்கறைப்படவில்லை. குற்றம் சுமத்துவதிலும் அர்த்தம் உள்ளது.

அதனை வைத்துக் கொண்டு, வெளியே நிற்கும் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு அப்பட்டமாக அரசியல் செய்வது அபத்தமானது.

# மஹிந்தவும் மைத்திரியும் இணையும் நிலை இனிமேல் உருவாகுமா?





இலங்கை அரசயலில் பௌத்த சிங்கள பேரின வாதம் என்ப து பண்டரநாயக்கா ஆட்சியின் பின் துரித வளர்ச்சி பெற்று இன்று அது உச்ச நிலையை அடைந்து கொண்டிருக்கின்றது.

போர் முடிவுக்கு வந்தும் நாட்டிற்கு தலைமை வகித்த அரச தலைவர்களோ இராணுவ பக்கம் சாய்ந்து செயற்படுவதே வழக்கமாக இருந்து வருகின்ன்றது. சிங்கள அரசியல் தலைமைகள் எல்லோருமே இதற்கு விதி விதிலக்கல்ல.

குறிப்பாக இடதுசாரி கட்சிகளில் விகிரபாகுகருணரத்தின தவிர எவருமே இடதுசாரிக் கொள்கைப் பிடிப்பில் பற்றுறுதி காட்டவில்லை.

வாசுதேவ நாணயகார தடம்மாறி மஹிந்தவுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். அவரின் அரசியல் கருத்துக்கள் ஆரோக்கியமானதாக இல்லை. ஜேவிபியில் இருந்து அரசியலை ஆரம்பித்த விமல் வீரவங்ச இன்று மஹிந்தவின் சால்வையில் முற்றுமுழுதாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றார்.

அரசியலில் காலடி பதித்துள்ள பிக்குமாரும் மத அடிப்படைத் தத்துவங்களையும் கோட்பாடகளையும் தள்ளி வைத்துவிட்டு சிங்கள பேரினவாதத்தைத் தாலாட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜேவிபி மட்டும் வித்தியாசமான முறையில் அரசியல் செய்து கொண்டிருக்கின்றார்கள். எனினும் இவர்கள் ஆதாரபூர்வமான மக்களுக்கு தெளிவாக வழங்கிய போதும் அவர்களின் கை ஓங்குவதற்கான சாத்தியங்கள் குறைவாகவே இருக்கின்றது.

இலங்கையில் டி.எஸ்.சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா போன்ற நேர்வையான அரசியல் தலைவர்கள் அவர்களுக்குப் பின் இன்னும் உருவாகவில்லை.

பண்டாரநாயக்கா ஆரம்பித்துவைத்த இனத்து வேஷ அரசியல் இனத்துவ அரசியல் ஆக ஜெ.ஆர் ஜயவர்த்தனாவால் உரமூட்டப்பட்டு அளவுக்கதிகமான அதிகாரங்களையும் நாட்டின் தலைவர்களுக்கு அள்ளி வழங்கியது. தொடர்ச்சியாக பிறேமதாசா. சந்திரிகா போன்றோர் அத்தகைய அதிகாரங்களை ஓரளவே பயன்படுத்தினர். சந்திரிகா பின்னால் இருந்து செயற்பட்டவர்களின் வழி நடத்தல்களால் இடறவே செய்தார்.

ஆனால் மஹிந்த நாட்டின் தலைவராக ஆன போதுதான் அதிகாரங்கள் அனைத்தையும் கையிலெடுத்து சர்வாதிகாரியாகவே செயற்பட்டார்.

அவர் முப்படைகளையும் தனக்கேற்ற விதத்தில் பயன்படுத்தி நாட்டைச் சின்னாபின்னபடுத்தி இராணுவத்தினருக்கு மேலதிக அதிகாரங்களையும் வழங்கி போரை நடாத்தினார். போர் முடிந்த 10 வருடங்கள் கடந்தபோதும் அதன் தாக்கங்கள் இன்னமும் குறைந்தபாடில்லை.

எனினும் மஹிந்த சிங்கள மக்கள் மத்தியில் ஹுரோ என்ற இமேஜை இன்னமும் இழக்காமல் தக்க வைத்துக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியப் பட வைக்கின்றது. பக்கம் பக்கமாக அவரைப்பற்றி மற்றும் அவர் குடும்பத்தினரைப் பற்றிய ஊழல் மற்றும் சொத்துக் குவிப்பு சம்பந்தமாக ஊடகங்கள் வெளியிட்டுவரும் கருத்துக்கள் அவரின் மக்கள் செல்வாக்கில் போதிய தாக்கத்தை இன்னமும் ஏற்படுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

அதுதான் தற்போதைய சிங்கள அரசியல் தலைவர்களையும் சிந்திக்க வைத்துக் கொண்டிருக்கின்றது என்பதை அண்மைக்கால அரசியல் நகர்வுகள் தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

அரசியல் புலத்தில் நிலைத்திருக்க மஹிந்த பாணியே சிறந்தது என்ற மனப்பாங்கு அண்மைக் காலமாக மைத்திரியை ஆட்கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் சதித் திட்டம் என்ற புதிய தகவலும் அவரையும் மெல்ல மெல்ல படைத் தரப்பக்களோடு நல்லுறவைப் பேண வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்குத் தள்ளிக் கொள்வதாகவே இருக்கின்றது.

அதன் வெளிப்பாடாகவே படைத் தரப்புக்களை சரியான குற்றங்களை காணாமல் சந்தேகத்தின் பேரில் கைது செய்வது பொருத்தமற்றது என தெளிவ படுத்தியுள்ளார்.

இராணுவம் அல்லது பொலிஸ் என்றவுடன் அவரது அதிகாரங்கள் பாவிக்கப்பட்டு அவர்களின் விடுதலைக்கு அல்லது கைது தவிர்ப்பிற்கு இருப்பதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

## கல்லாறு கடல் நாச்சியான்

வெளிநாட்டில் இருந்து குற்றச்சாட்டின் பெயரில் திருப்பியழைக்கப்பட்ட இராணுவ அதிகாரிக்கான கடிதத்தை இரத்துச் செய்து அவரைக் காப்பாற்றினார்.

இராணுவத்தினரை போர் குற்றச்சாட்டில் இருந்து மீட்டெடுப்பதற்கான முன் முயற்சிகளில் தற்போது அவர் முழு மூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்.

ஆனால் தமிழ் இளைஞர்கள் வழக்குகளுமின்றி வருடக்கணக்கில் சிறையில் வாடிக் கொண்டிருப்பது மட்டும் அவர் கண்கணில் இன்னமும் படுவதாக இல்லை. இது அப்பட்டமான இராணுவத்திற்கு ஒரு நிலைப்பாடும் தமிழ் இளைஞர்களக்கு ஒரு நிலைப்பாடும் என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ் இஞைர்களை விடுதலை செய்தால் மஹிந்த தரப்பு தனக்கெதிரான பிரசாரங்களைச் செய்ய வாய்பளித்தமாதரி போய்விடும் என்ற மனப் பயமும் அவருக்கு இருக்கலாம்.

அவர் ஜனாதிபதியாகிய ஆரம்ப காலத்தில் மீண்டும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்று தெளிவாக் கூறியிருந்தார். அனால் மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதில் தற்போது உறுதியாக இருக்கின்றார்.

அதனால் அவர் செயற்பாடுகள் அனைத்தும் சிங்கள மக்களின் செல்வாக்கை எப்படி சேர்த்துக் கொள்வது என்பதிலேயே தெளிவாக இருக்கின்றார்.

அதனால் ஊழல் ஒழிப்பிற்காக உருவிய வாளை மீண்டும் உறையில் போட்டுவிட்டார். மஹிந்தவிற்கு ஹம்பாந்தோட்டை மாதிரி மைத்திரிக்கு பொலநறுவை என்ற செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றார்.

அவரை ஜனாதிபதியாக உருவாக்கவதற்கு முன்னின்று உழைத்த சந்திரிகாவும் மைத்திரி தற்போது பழைய மாதிரி இல்லை என்று ஆதங்கப்பட்டுள்ளார். அதேபோல அவரின் வெற்றிக்கு வழிவகுத்த ரணிலும் பழைய நெருக்கமான ஆரம்பகால உறவு தற்போது அவரோடு பேணுவதில்லை. அதிகார முரண்பாடுகள் அவர்களுக்குள் வலுப்பெற்று வருகின்றன.

அவரை உச்சத்திற்கு கொண்டு வந்த தமிழ் மக்களும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனோர். காணி விவகாரங்கள் போன்றவற்றால் மைத்திரிமீது மிகுந்த வெறுப்பில் இருக்கின்றார்கள்.

கடந்த தேர்தலில் மைத்திரி ஜனாதிபதியாவதற்கு ஆதரவளித்த ஜேவிபியும் மைத்திரியோடும் அரசாங்கத்தோடும் கடும் கடுப்பில் இருக்கின்றது.

எனவே அவரை தேர்தலில் ஆதரித்த எந்த தரப்பும் மீண்டுமொருமுறை அவர் தேர்தலில் நிற்கும் போது ஆதரிப்பார்களா? என்பது சந்தேகமே.

அனேகமாக இம்முறை ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிக் கட்சி சார்பாக தனித்து நின்று போட்டியிடக் கூடிய ஏதுநிலை இருக்கின்றது.

அத்துடன் மஹிந்த சார்பில் கோட்டபாய அல்லது பஷில் போட்டியிடக்கூடிய எதிர்பார்ப்பும் இருக்கின்றது. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தனித்து நின்று போட்டியிட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

அப்படி போட்டியிடுவதானால் தனித்து சிங்கள மக்களின் வாக்குகளை வசீகரிக்க வேண்டும். அதனால்தான் மஹிந்த பாணியில் அவர் செயற்பாடுகள் அமைந்து வருகின்றது. அதைத் தவிர வேறு வழியில்லை.

அவர் போர் இமேஜில் தனக்கும் பங்குண்டு என்பதை அவர் அண்மையில் வெளிப்படுத்தியிருந்தார். போர் உச்ச இறுதி கட்டத்தில் மஹிந்தவும், கோட்டாவும் வெளிநாட்டில் இருந்ததால் தானே பதில் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்டார் என்பதை தெளிவுபடுத்தினார்.

காலம் கடந்து இந்த தகவலை அவர் வெளியிட்டுள்ளமையானது மஹிந்தவின் இமேஜில் தானும்

15 ஆம் பக்கம் பார்க்க....





# வீட்டுக்கு வீடு இராணுவம்!

## தமிழ் அரசியல் தலைமைகளின் தோல்வியா? இராணுவத்தரப்பின் வெற்றியா?

'ஊர் மக்கள் ஒன்றுகூடி சப்பரம் இழுத்த பின்னர், அதை அப்படியே ஆலய முன்பக்க வீதியில் விட்டுச்சென்று விட்டனர். அதை பழையபடி இருந்த இடத்துக்கே இழுத்துச்சென்று விடுவதற்கு இராணுவத்தினரை அனுப்ப முடியுமா?' இவ்வாறு யாழ்.மாவிட்டபுரம் இந்து ஆலயம் ஒன்றின் நிர்வாகத்தினர், கடந்த செப்டம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் இராணுவத்தினரின் உதவியைக் கோரியுள்ளனர். வயாவிளான் பகுதிப்பாடசாலை ஒன்றின் அதிபரான அருட்தந்தை ஒருவர், தனது காரியாலயம், வகுப்பறைகள், பாடசாலைச்சுற்று மதில்களை தீந்தை (பெயின்ட்) பூசி அழகுபடுத்துவதற்கு தீந்தைகளையும் பெற்றுத்தந்து, இராணுவத்தினரையே குறித்த பாடசாலையை அழகுபடுத்தித் தருமாறும் கேட்டுள்ளார்.

இந்த இரண்டு சம்பவங்களையும் சாதாரண செய்திகளைப்போல பார்த்துக்கடந்து போய்விட முடியாது. இந்த இரண்டுக்கும் அரசியல் ரீதியாகவும், சமூக கட்டமைப்பு ரீதியாகவும் இருவேறு பார்வைகள் உண்டு. முதலாவதாக சமூக ரீதியாக நோக்கின், பொதுவாக தமிழ் சமூகத்தில் ஆலய திருவிழாக்களின் வகிபங்கு தான் என்ன? ஒரு கிராமம் அல்லது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்குரிய மக்களை, ஒரு மக்கள் கூட்டமாக திரண்டு வரச் செய்வதில் ஆலய திருவிழாக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவ்வாறாயின், இப்பத்தியின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள 'சப்பறத்தை இழுத்து தெருவில் விட்ட' சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போமாயின், சமீபகாலமாக 'கூட்டிணைவு - கூட்டு முயற்சி - கூட்டு உயர்வு' அற்ற ஒரு சமூகமாக தமிழ் சமூகம் மேலெழுந்து வருகின்றதா? இது முதலாவது கேள்வி.



இரண்டாவதாக, ஒரு பாடசாலையின் நிர்வாக கட்டமைப்பில், பெற்றோர் சங்கம், ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் எனப்பல பிரிவுகள் உண்டு. இவர்கள் ஒரு கட்டமைப்பாக திரண்டு செய்ய வேண்டிய பொதுப்பணிகளும் உண்டு. அவ்வாறாயின், இப்பத்தியின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள 'தீந்தை பூசி அழகுபடுத்தும்' சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போமாயின், 'கூட்டு உழைப்பு - அர்ப்பணிப்பு' அற்ற ஒரு சமூகமாக வாழப்பழகிக் கொண்டிருக்கிறோமா? இது இரண்டாவது கேள்வி. இந்த இரண்டு பெரும் கேள்விகள் பெருத்த உறுத்தலாக தொக்கு நிற்கின்றன.

அடுத்ததாக அரசியல் ரீதியாக நோக்கின், பாடசாலையை அழகுபடுத்துவதற்கு ஒரு சிறுதொகை நிதி ஊட்டம் போதுமானது. அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அந்த தொகுதிக்குரிய பாராளுமன்ற உறுப்பினரதோ, மாகாணசபை உறுப்பினரதோ, பிரதேசசபை ஒன்றின் உறுப்பினரதோ உதவியைக்கோரி இருக்க முடியும். இத்தனைக்கும் வடக்கு மாகாணத்துக்கென்று ஒரு கல்வி அமைச்சர் இருக்கிறார். அவ்வாறாயின், தாங்கள் வாக்களித்து வெற்றிபெறச்செய்த அரசியல்வாதிகள் மீது மக்கள் மொத்தமுமாக நம்பிக்கை இழந்து விட்டனர் என்று எடுத்துக்கொள்ளலாமா?

அல்லது, யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள கடந்த ஒன்பது வருடங்களில், தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொள்வதற்காக, பெரும் எடுப்பில் இராணுவத்தினர் முன்னெடுத்துவரும் மனிதநேய வேலைத்திட்டங்களில் கணிசமான அளவு முன்னேறியிருக்கிறார்கள் என்றோ, பெருமளவில் வெற்றி கண்டிருக்கின்றார்கள் என்றோ கருதலாமா?

இவ்விடத்தில் அதீத கவனிப்புக்குரிய இன்னுமொரு விடயம் உண்டு. தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து 'இராணுவ வெளியேற்றம்' தொடர்பில், காலத்துக்கு காலம் தம்மை சந்தித்துவரும் பன்னாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள், ஐ.நா சபை உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகளுக்கு, பக்கம் பக்கமாக அறிக்கைகள் கொடுத்துக்கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இணைத் தலைவராக கொண்டுள்ள தமிழ் மக்கள் பேரவை உள்ளிட்ட பிரமுகர் அமைப்புகளும், வெறுமனே கனவான் அமைப்புகளாகவோ அன்றி மேட்டுக்குடி சிந்தனை கட்சிகளாகவோ தொடர்ந்தும் இயங்கத்தான் போகின்றனவா?

இவை களத்தில் இறங்கி வேலைசெய்து, 'மக்கள் என்ன நினைக்கிறார்கள்? அவர்களின் தேவைகள் - விருப்பங்கள் என்ன?' என்று கருத்துகளை கேட்டறியாமல், மக்களின் உணர்வுகளை புள்ளி விவரங்கள் ரீதியாக மதிப்பிடாமல், 'டீக்கடை பெஞ்' குழுக்கள் போல தமக்குள் மட்டும் கூடிப்பேசிவிட்டு, 'மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்காத அறிக்கைகளை'பன்னாட்டு அமைப்புகளுக்கும் சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றனவா? எனும் கேள்வி இங்கு பலமாக தொனிக்கின்றது. ஏனெனில், குறித்த பிரமுகர் அமைப்புகள் மற்றும் கட்சிகள் வலியுறுத்தும் அரசியலுக்கும், நிஜத்தில் பொது மக்களின் வாழ்க்கை முறைமைகளுக்கும் ஏகப்பட்ட முரண்நிலைகள் உண்டு.

'போரில் அவையங்களை இழந்துள்ள எனக்கு வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த ஒரு பெட்டிக் கடை அமைத்து தரவும். நாளாந்த சீவியத்தை முன்கொண்டு நகர்த்த கறவைமாடு வாங்கித்தரவும். எனது குடும்பம் குடியிருப்பதற்கு சிறிய வீடு கட்டித் தரவும். பாடசாலைக்கு நீண்டதூரம் நடந்துசெல்லும் எனது பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டி வாங்கித்தரவும். பல்கலைக்கழக கல்வியைத் தொடரும் எனக்கு மாதாந்த உதவிக்கொடுப்பணவு தரவும். உயர்கல்வி கற்கும் எனக்கு மடிக்கணனி வாங்கித்தரவும். பகுதி நேரக்கற்றலுக்கு அப்பியாசக்கொப்பிகள் வாங்கித்தரவும். கூலிவேலை செய்து பிழைப்பு நடத்தும் எமக்கு நிவாரணப்பொருட்கள் தரவும். கண், இதயம், சிறுநீரக நோய்களுக்கு இலவச அறுவைச்சிகிச்சை செய்ய உதவவும். வேலைவாய்ப்பு இன்றி தவிக்கும் எனக்கு சிறுகைத்தொழில் முயற்சிக்கு உதவவும், தையல் இயந்திரம் தரவும். வீட்டுத் தோட்டம் செய்வதற்கு நீர்ப்பம்பி தரவும். மலசலகூட வசதி செய்து தரவும். குடிநீர் வசதி இன்றி அவதியுறும் எமக்கு கிணறு அமைத்து தரவும்.'

இவ்வாறான கோரிக்கைகளில் அமைந்த உதவி கோரும் கடிதங்கள், யாழ்ப்பாண பாதுகாப்பு படைக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ன ஹெட்டியாராச்சிக்கு பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பொருளாதார ரீதியாக நலிவுற்றுள்ள குடும்பங்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து நாளாந்தம் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தனிநபர் உதவிகோரல்களோ இவ்வாறிருக்க,

சமூகத்தின் முக்கிய கட்டமைப்புகளாகிய பாடசாலைகள், ஆலயங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மரண ஆதாரச்சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளிலிருந்தும் கற்றல் உபகரணங்கள், பாதணிகள், சீருடைகள், அலுவலக தளவாடங்கள், சீமெந்து, மணல், கூரைத்தகடுகள், கம்பித்தூண்கள் உள்ளிட்ட கட்டுமாணப் பொருட்கள் வாங்கித்தருமாறும், மைதானத்தை புனரமைத்துத் தருமாறும், முகப்பு நுழைவாயில், சுற்றுமதில், கட்டடங்கள், பாதுகாப்பு வேலிகள் அமைத்து தருமாறும், மாணவர்களுக்கான மதிய உணவு தயாரிப்பதற்கு விறகுகள் தருமாறும், கிணறுகளை சுத்தப்படுத்தியோ ஆழப்படுத்தியோ தருமாறும், யாழ்ப்பாண மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சிக்கு முகவரியிட்டு அனுப்பப்படும் 'நிர்வாக அமைப்பு ரீதியான பலதரப்பட்ட கோரிக்கை கடிதங்களால்' பலாலி அஞ்சலக தபால்பெட்டி நிறைந்து வழிவதாக அறியக்கிடைக்கின்றது.

அதாவது, தாங்கள் தேர்தல் ஒன்றில் வாக்களித்து வெற்றிபெறச்செய்த அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உரிமையோடு கேட்பது போலவே, அவர்களின் ஸ்தானத்தில் இருத்தி, மேஜர் ஜெனரல் தர்ன ஹெட்டியாராச்சியிடம் 'தமது வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கு உதவுமாறு' மக்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு இராணுவத்தினரது மனிதநேய வேலைத்திட்டங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. இந்த விவகாரத்தில், நைந்துப்போயுள்ள சனங்களின் உளவியலை - வறுமையை பயன்படுத்தி இராணுவத்தினர் 'ஸ்கோர்' செய்துவிட்டதாக, வெறுமனே எழுந்தாமானமாக இராணுவத்தினர் மீது தமிழ் அரசியல் தரப்புகள் வழமைபோலவே குற்றம் சாட்டப்போகின்றனவா? அல்லது மக்களை அரசியல் மயப்படுத்த தவறிய தமது பக்க குற்றம் குறைகளை ஏற்றுக்கொள்ள, நம்மிடையே எத்தனை கட்சிகள், அமைப்புகள் தயார்?

இவ்விடத்தில் 2018ஆம் ஆண்டின் முற்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும். பணி இடம் மாற்றலாகிச் செல்லும் அந்தப் பிராந்தியத்துக்கு பொறுப்பான கேர்ணல் தர இராணுவ அதிகாரி ஒருவரை, அப்பகுதிக்குரிய ஊர் மக்கள் ஒன்றுகூடி, கட்டிப்பிடித்து ஆரத்தழுவி, அழுது புலம்பி, தமது தோள்களில் தூக்கிச்சுமந்து கொண்டாடி வழியனுப்பியிருந்தனர்.

இத்தனைக்கும் இராணுவத்தில் வழக்கமான மரபு ஒன்று உண்டு. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சாதாரண சிப்பாய்களிலிருந்து உயரதிகாரிகள் வரை பணி இடம் மாற்றம் வழங்கப்பட்டுக்கொண்டே இருக்கும். அவ்வாறாயின், அந்த இரண்டே வருடங்களில் குறித்த இராணுவ அதிகாரியால் தமிழ் மக்களின் மனங்களை வெற்றிக்கொள்ள முடிந்திருக்கிறது என்றால், ஐந்து வருடங்களாக பதவியில் தொடரும் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர், இந்த விடயத்தில் தோல்வி கண்டிருக்கின்றார் என்று தானே அர்த்தப்படும். இத்தனை வருட தமிழ் அரசியல் பரப்பில், தேர்தல் ஒன்றில் தமது பிரதிநிதி ஒருவர் தட்டுத்தடுமாறி தோற்றுவிட்டார் என்பதற்காகவோ, அல்லது அரசியலில் இருந்து ஓய்வுபெறுகிறார் என்பதற்காகவோ, அவரது தொகுதிக்குரிய ஊர் மக்கள் பெருந்திரளாக ஒன்றுகூடி, தாளாத சோகத்தில் அழுது புலம்பியதாக பதிவுகள் உண்டா? அரசியல் அநாதை ஆக்கப்பட்டுள்ள தங்களை 'வரலாம் வரலாம் வா வைரவா' எனும் கணக்காக, மறுபடியும் அரசியலுக்கு வந்து தத்தெடுக்குமாறு அழைத்ததுண்டா?

இந்த நடப்பு ஆண்டில் எதிரும் புதிருமான இருவேறு சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. இதுவரை காலமும் தமிழ் மக்கள், தாங்கள் யாருக்கு எதிராக பகைமை உணர்ச்சிகளை கொண்டிருந்தனரோ, அந்த இராணுவத்தரப்பை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியிருக்கிறார்கள். 'தமிழ் தேசியத்தின் பெயரால்' பெரும் எழுச்சியாக திரண்டு வந்து வாக்களித்து வெற்றிபெறச்செய்து வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பை செருப்பால் அடித்துத் துரத்தியிருக்

**செஞ்சுடர்.சே**

கிறார்கள். (யாழ்.வடமராட்சி கிழக்கில், இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவுக்கு இத்தகையதொரு கசப்பான சம்பவம் நிகழ்ந்திருக்க, வடக்கு கிழக்கில் ஆங்காங்கே இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரனின் கொடும்பாவிகளும் செருப்புகளால் மாலையிட்டு இழுத்துவரப்பட்டு பின்னர் எரியூட்டப்பட்டிருந்தன.) இது எப்படி சாத்தியமாயிற்று?

நீண்ட நெடிய போருக்கு முன்னரும் சரி, போருக்குப் பின்னரான காலத்திலும் சரி, இராணுவத்தினர் மீது தமிழ் மக்களுக்கு ஒருவித வெறுப்புணர்ச்சியும், பகைமை உணர்வும் கூடியளவில் இருந்தது உண்மை தான். ஆனால் இந்த வெறுப்புணர்ச்சியை இரட்டிப்பாக்கி, அதை வைத்தே மக்களிடத்தில் எதிர்ப்பு அரசியல் செய்து ஆதாயம் தேடிக்கொள்வதில், தமிழ் அரசியல் தரப்புகள் கூடியளவு சிரத்தைக்கொண்டிருக்க, மாறாக இராணுவ தரப்பினரோ 'ரிஸ்க்' எடுத்து, இரு தரப்புக்கும் இடையில் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தி, நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் கூடியளவு வெற்றி கண்டிருக்கின்றனர் என்பதையே இத்தகைய சம்பவங்கள் இயம்புகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கீரிமலை பிரதேசத்தில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்ட 'நல்லிணக்கபுரம்' மாதிரிக்கிராமம் கூட தமிழ் அரசியல் தலைமைகளுக்கு பலத்த பேரிடி தான்.

இவை ஒருபுறமிருக்க, முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு பகுதிக்குரிய தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொண்டுள்ள அளவுக்கு, அதே மாவட்டத்தின் கிழக்கு மூலைப்பகுதியான 'ஈழத்தின் இதயப் பகுதி என்று அழைக்கப்படும் மணலாறு' பிரதேசத்தின் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு பகுதி வாழ் தமிழ் மக்களின் மனங்களை, இராணுவத்தினரால் வெற்றிக்கொள்ள முடியவில்லை என்றே சொல்லவேண்டும். அங்கு எல்லையோரக் கிராமங்களில் நடைபெற்றுவரும் சிங்கள குடியேற்றங்களாலும், சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளினாலும் தமிழ் - சிங்கள இன முரண்பாடுகளினால் கலவரபூமியாகிக் கிடக்கிறது அந்தப்பகுதி. நல்லிணக்கத்தை தாறுமாறாக சீர்குலைக்கும் இதை ஒத்த சம்பவங்கள் யாழ்.வடமராட்சி கடல் பிரதேசங்களிலும், ஆனையிறவு சுண்டிக்குளம், மாத்தளன் சாலை கரையோரப்பகுதிகளிலும் இடம்பெற்றுவருவதாக தமிழ் மக்களுக்கு மெத்த மனக்கசப்பு உண்டு. அரசாங்கத்தின் ஆசீர்வாதத்தோடும், இராணுவத்தினரின் அனுசரணையோடும் இவை நிகழ்த்தப்படுவதாக தமிழ் அரசியல் தரப்புகள் காரசாரமாக குற்றம் சாட்டுகின்றன. ஆதலால் நல்லிணக்கம் தொடர்பில் சம்பந்தப்பட்டுள்ள தரப்புகள், இந்தப் பகுதிகளிலும் கொதித்துக்கொண்டிருக்கும் முரண்பாடுகளை அணைப்பதே நன்மை பயக்கும். நிலையான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு இது மிகவும் அவசியமானது.

'யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்றுள்ள மக்கள் தத்தமது காணிகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். மக்களுக்கு உரித்துள்ள ஆதனங்கள் மக்களிடமே கையளிக்கப்பட வேண்டும். குறித்த கொள்கைக்கு அமைய, கட்டம் கட்டமாக காணிகளை விடுவித்து மக்களின் மீள்குடியேற்றத்துக்கும், இயல்பு வாழ்க்கைக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம். ஆயினும், தேசிய பாதுகாப்பு காரணங்களினால் இவ்வாறு சில காணிகள் கையளிக்கப்பட முடியாது போனால், அந்தக்காணிகளுக்கு உரித்துடையவர்களுக்கு தகுந்த இழப்பீடு வழங்கி மாற்றுக்காணிகளில் குடியமர்த்த வேண்டும். இதற்கென நிலையான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும். கடந்தகால அரசாங்கம் இந்த விடயத்தில் தவறிழைத்து உள்ளது. தற்போதைய அரசாங்கமாவது இதைக்கவனத்தில் கொள்ள வேண்டும்.' என்று கடந்த 24 மார்ச் 2018 அன்று, யாழ்.பாதுகாப்பு படைக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி கூறியுள்ளார். இதற்கமைய ஒழுங்கமைக்கப்பட்டவாறு பகுதி பகுதியாக காணிகள் விடுவிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. 2015 டிசெம்பர் 30ஆம் திகதியிலிருந்து 2018 ஒக்டோபர் 19ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வடக்கில் 88 ஆயிரத்து 599 ஏக்கர் காணிகளும், கிழக்கில் 61 ஆயிரத்து 126 ஏக்கர் காணிகளும் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்பு படைகளின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை, இவ்வருட இறுதிக்குள் (டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர்) காணி உரிமையாளர்களிடம் வழங்க வேண்டும் என்று, ஒக்டோபர் 03.2018 அன்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற 'வடக்கு கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி தொடர்பான' ஜனாதிபதி செயலணியின் மூன்றாம் கட்டக்கூட்டத்தின் போது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சமகாலத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைவாசி ஏற்றம், வேலைவாய்ப்பின்மை, உழைப்புக்கேற்ப ஊதியம் இன்மை உள்ளிட்ட நாளாந்த சீவியத்துக்கான பிரச்சினைகளினால் இலங்கை திணறிக்கொண்டிருக்கின்றது. அதிலும் யுத்தத்தால் மிகவும் மோசமாக சிதைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்தப்பிரச்சினையோ பூதாகரமாக தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது. வேலையற்ற பட்டதாரிகள் நாடு முழுவதும் கவனவீர்ப்பு, கண்டனப்பேராட்டங்களை நடத்திவருகின்றனர். இத்தகையதொரு நெருக்கடியான சூழலில் எப்படியாவது பணம் சம்பாதித்து விட வேண்டும் எனும் உந்துதலில், சட்டவிரோத



தொழில்களில் ஈடுபடவும் தமிழ் இளைஞர் யுவதிகள் தலைப்பட்டுள்ளதை நாளாந்தம் செய்திகளில் காணக்கிடைக்கின்றது. இந்நிலையில் அவர்களுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவதையும், நெறிபிறழ்வான நடத்தைகளுக்குள் இழுபட்டுச்செல்வதை தடுத்துநிறுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு, இராணுவ கட்டமைப்புக்குள்ளே இராணுவம் சாராத தொழில்வாய்ப்புகளை உருவாக்கி, கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் மட்டும் ஐந்தாயிரத்துக்கும் அதிகமான இளையோர்கள், இலவச மருத்துவ காப்பீடு - ஓய்வூதியம் உள்ளிட்ட அரச சலுகைகள் அடங்கலாக, நாற்பதாயிரம் முதல் நாற்பத்தைந்தாயிரம் வரையான அரசாங்க ஊதியக்கொடுப்பணவோடு தொழில்நிலைகளில் அமர்த்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் கூறுகின்றன.

இதற்கமைய, யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியால், பலாலி படைத்தளப்பிரதேசத்தில் நூற்றுக்கும் அதிகமானோருக்கு தொழில்நிலைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த தொழில்நிலைகளில் அதிகளவாக உள்வாங்கப்பட்டுள்ளோர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் ஆவர். கூடவே, பட்டதாரிகளுக்கு அவர்களின் பட்டப்படிப்புகளுக்கு ஏற்ப இராணுவத்தில் தொழில்களை வழங்கமுடியாது எனினும்கூட, சாதாரணநிலைப் பணிகளுக்கு அவர்களை உள்ளீர்த்து தொழில்நிலைகள் வழங்கப்பட்டுள்ளன. 'இது உப்புக்கல்லை நீரில் போட்டக்கதை தான். கடைசியில் உப்புக்கல்லைத் தேடும் போது அது எப்படி கரைந்து காணாமல் போயிருக்குமோ, அதையொத்த இதுவொரு

14 ஆம் பக்கம் பார்க்க....

# அதிகரிக்கும் சிறுவர் வன்முறைகளும் அதற்கான காரணங்களும்!

**சி.திவியா**

சிறுவர் வன்முறை மற்றும் துஸ்பிரயோகம் என்பது இன்று பல்வேறு இடங்களிலும் நடபெற்று வருவதனை நாளாந்தம் அறிய முடிகின்றது. வேலைத்தளங்கள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள், சிறுவர் இல்லங்கள் என அவை நீண்டு சென்று இன்று வீட்டுக்குள் அவை அரங்கேறத் தொடங்கிவிட்டன. சிறுவர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துல், பாலியல் தொல்லை கொடுத்தல், சிறுவர்களை வேலைவாங்குதல், சிறுவர்களை துன்புறுத்துதல், சிறுவர்களுக்கு அடித்தல், சிறுவர்களின் மனத்தை பாதிக்கும் வகையில் செயற்படல், மன உளைச்சலை ஏற்படுத்தல் என பல வடிவங்களில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும், துஸ்பிரயோகங்களும் நடைபெறுகின்றது. இவை அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதை அவதானிக்கவும் முடிகிறது.

இலங்கையில் நாளாந்தம் 16 வயதிற்கு குறைந்த 4 சிறுமிகள் பாலியல் வன்புனர்ச்சிக்குட்படுத்தப்படுகிறார்கள் என அரச புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கடந்த இரண்டு வருடத்துக்குள் சிறுவர் பாலியல் வன்புனர்ச்சி உட்பட சிறுவர் துஸ்பிரயோகம் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2017, 2018 ஆம் ஆண்டில் 1089 சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்புனர்ச்சி மற்றும் சிறுவர் வன்முறைகள் தொடர்பான முறைபாடுகள் வவுனியா மாவட்ட செயலக புள்ளிவிபரங்களில் பதிவாகியுள்ளது.

| முறைப்பாட்டின் தன்மை | எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2017 | 2018 (மார்ச் வரை) |
| பாடசாலை இடைவிலகல் | 230 | 65 |
| 18 வயதின் கீழ் திருமணம், கர்ப்பம் | 26 | 06 |
| உடல் ரீதியான துன்புறுத்தல் | 126 | 09 |
| மனரீதியான துன்புறுத்தல் | 159 | 32 |
| பாலியல் துன்புறுத்தல் | 28 | 04 |
| புறக்கணித்தல் | 175 | 33 |
| சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் | 03 | - |
| ஏனையவை | 05 | - |

இதில் பாடசாலை இடைவிலகியவர்கள் தொடர்பாக 230 முறைப்பாடுகள், 18 வயதிற்க்கு உட்பட்டவர்கள் திருமணம் செய்யாமல் குழந்தை பெற்றவர்கள் தொடர்பான 26 முறைப்பாடுகள், உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டவர்கள் தொடர்பான 126 முறைப்பாடுகள், மனரீதியாக துன்புறுத்தப்பட்டவர்கள் தொடர்பான 159 முறைப்பாடுகள், துஸ்பிரயோகங்கள் தொடர்பாக 28 முறைப்பாடுகள், புறக்கணித்தல் தொடர்பாக 175 முறைப்பாடுகள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான 5 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இம்முறைப்பாடுகள் பல்வேறு வழிகளிலும் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் தலைமை காரியாலயத்தில் 65 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதுடன், சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான இலவச தொலைபேசி இலக்கமான 1929 மூலம் 97 முறைப்பாடுகளும், அலுவலக மற்றும் உத்தியோகத்தர்களின் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக 248 முறைப்பாடுகளும், கிராம, பிரதேச மட்ட அமைப்புகள் மற்றும் சிறுவர் பெண்களுடன் தொடர்புடைய அமைப்புக்கள் மூலம் 208 முறைப்பாடுகளும் கிடைக்கப்பட்டுள்ளன. இதில் 299 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதுடன், 224 முறைப்பாடுகளுக்கு தற்காலிக தீர்வு எட்டப்பட்டவையாகவும், 193 முறைப்பாடுகள் தலைமை காரியாலயங்களுக்கு தீர்வுக்காக அனுப்பப்பட்டும் உள்ளது. இதில் 90 சதவீதமான முறைப்பாடுகள் வன்புனர்ச்சிகள் நியதிச் சட்ட வன்புனர்ச்சிக் குற்றங்களாகும். அதாவது 16 வயதுக்கு குறைவான ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அந்தப் பெண்ணின் சம்மதத்துடன் பாலுறவு கொண்டாலும் அது நியதிச் சட்ட வன்புனர்ச்சிக் குற்றமாகும். 16 வயத்திற்கு மேற்பட்ட ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அப்பெண்ணின் சம்மததுடன் பாலுறவு கொண்டால் அது வன்புனர்ச்சி ஆகாது என்பது சட்ட வரைவிலக்கணமாகும்.



வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் கடந்த காலங்களை விட அதிகரித்து வருகிறது. தொலைபேசி பாவனை, இணையம், போதைவஸ்து பாவனை, தவறான நண்பர் கூட்டம் என்பன இந்த அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளதுடன் பெற்றோர்கள் சரியான முறையில் தமது பிள்ளைகளை கண்காணிக்காமையும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற துணைபுரிந்துள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.ஐ.ஹனீபா தெரிவித்துள்ளார்.

பொதுவாக பெண்கள் தாம் விருப்பத்துடன் ஒன்று சேர்ந்தாலும் அது வெளியில் தெரிய வரும் போது பெண்கள் தாங்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கூறுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் பாலாத்காரமாக பாலுறவுக்கு உட்படுத்தப்படுகின்ற பெண்கள், சிறுவர் தொடர்பான விடயங்கள் அதிகமாகவுள்ளது. பாலியல் உறவு என்பது திருமணத்தினூடாக சட்டரீதியாகவும், திருமணத்திற்கு அப்பால் சம்மந்தப்பட்ட தரப்பினரின் பூரண சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற போது, அது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்ககூடியதாகவுள்ளது. உயிரினங்களுக்கு இயற்கையாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய உடல், உளத்தேவையாக பாலுறவு அமைகிறது. இதனை பிள்ளைகளை பெற்றுக்கொள்வதற்கான அதாவது மறு உற்பத்திகான ஒரு உறவே பாலுறவு எனலாம்.

பெண்கள் காட்சிப்படுத்தலுக்குரிய பண்டமாகவும், பாலியலுக்குரிய நுகர்வுப் பண்டமாகவும் முதலாளித்துவ சமூகத்தின் அபிவிருத்தியின் விளைவாக மாற்றப்பட்டுள்ளனர். இதில் பெருபாலான சிறுவர்களும், பெண்களும் வயது வந்த இரு பாலாரினதும் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பலவீனமான, வசதியான பண்டங்களாக்கப்பட்டுள்ளனர். இந்தப் பின்புலத்தில் இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள பாலியல் துஷ்பிரயோகங்களை பொருளாதாரம், அரசியல், பண்பாடு, சுகாதாரம் மற்றும் மனோவியல் ரீதியாகப் பார்ப்பதன் மூலம் அதனை கட்டுப்படுத்தி நீண்ட காலத்தில் இல்லாமல் செய்வதற்கான ஒரு சமூகத்தை படைக்கும் நோக்கத்துடன் முன்னேற முடியும்.

பெரும்பாலான பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் பிரிந்து வாழ்வோராகவோ, வெளிநாட்டில் பண்புரிவோராகவோ உள்ளனர். பாதிக்கப்பட்டோர் கூடுதலாக குறைந்த வருமானங்களில் வாழும் குடும்பங்களை சேர்ந்தவர்கள். யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரான காலப்பகுதியில் பெண்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சனைகளில் ஒன்றாக பொருளாதாரப் பிரச்சனை காணப்படுகின்றது. இப் பொருளாதார பிரச்சனை காரணமாக பல பெண்கள் தமது குடும்பங்களையும், பிள்ளைகளையும் பிரிந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்கின்றார்கள். இவ்வாறு செல்பவர்களில் சிலர் முறையான அனுமதி பெற்று செல்கின்ற அதேவேளை, இன்னும் சிலர் முறையான அனுமதிகளைப் பெறாது முகவர் ஊடாக செல்கின்றார்கள். இவர்கள் சென்ற பின்னும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஏராளம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்ற சிலர் வீடு திரும்பாமையும், சிலர் சடலமாக மீண்டு வந்தையும் நாம் நாளாந்தம் அறியக் கூடியதாகவும் உள்ளது. இவ்வாறு செல்பவர்கள் தமது எதிர்காலம் குழந்தைகள், தமக்கு இதனால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து போதியளவில் சிந்திக்க தவறிவிடுகின்றனர். இத்தகைய பெண்கள் பணம் சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாக கொள்கின்றார்களே தவிர, தமது குடும்பம் இதனால் சீரழியும் என்பதை துளியளவும் நினைப்பதில்லை. இதனால் தனித்து விடப்படுகின்ற பிள்ளைகள் பல ஆபத்துக்களை சந்திக்கின்றார்கள்.



வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றில் வாழும் 14 வயதில் துன்புறுத்தலுக்குள்ளான சிறுமி ஒருவர் தெரிவிக்கையில், எனது அப்பா கூலிவேலை செய்கிறார். எனக்கு மூன்று சகோதாரர்கள். குடும்ப வறுமை காரணமாக எனது அம்மா மத்திய கிழக்கு நாட்டிற்கு வேலை வாய்ப்புக்கு சென்றுள்ளார். இதன்பின் நாம் பாட்டியுடனேயே வசித்து வந்தோம். அம்மா போனதில் இருந்து அப்பாவும் ஒழுங்காக வீட்டிற்கு வருவதில்லை. பாட்டியும் கூலி வேலைக்கு செல்கின்றார். வீட்டில் ஒருவரும் இல்லாத நேரம் பக்கத்து வீட்டு அண்ணா வந்து எங்களுடன் நின்று என்னை தவறாக பயன்படுத்தினார். பல தடவை அவ்வாறு நடந்த பின்னரே பாட்டியிடம் தெரியப்படுத்தி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டோம். தற்போது இந்த பிரச்சனையால் நான் பாடசாலை செல்வதில்லை எனத் தெரிவித்தார்.

தாய்மார் வெளிநாடு சென்றதும் கணவன் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு பல பிரச்சனைகள் ஏற்படுகின்றது. இத்தகைய பிரச்சனைகள் அந்த குடும்பத்தின் வாழ்க்கையையே மாற்றி விடுகின்றது. என்ன தான் பணத்தை சம்பாதித்தாலும் மீண்டும் வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியாத நிலையே இருக்கிறது. இவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக வெளிநாடு செல்கிறார்கள். இங்கு கணவன்மார் போதைக்கு அடிமையாகிறார்கள். பலருடனான தவறான தொடர்பு, மறுமணம், சிறுவர் துஸ்பிரயோகம் என அவர்களது காலங்கள் சீரழிகின்றது. சிறுவர்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகும் சந்தர்ப்பங்களும், சிறுவர் துஷ்பிரயோகங்களும், இளவயது திருமணங்களும், விவாகரத்துக்களும் ஏற்படுகின்றது.

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் வசிக்கும் 15 வயது சிறுவன் ஒருவர் தெரிவிக்கையில், எனக்கு அப்பா இல்லை. அம்மா கூலி வேலைக்கு தான் செல்கின்றார். எனக்கு 3 சகோதாரர்கள். அம்மாவின் வருமானம் எமது குடும்பத்திற்கு போதாது. அதனால் நான் பாடசாலையையில் இருந்து இடைவிலகி தற்போது கூலி வேலைக்கு செல்கின்றேன். எமது குடும்ப நிலை காரணமாக எனது படிப்பும் இடையில் நின்றுள்ளது எனத் தெரிவித்தார்.



வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்கு பின்பு பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் இயங்கத் தொடங்கியதன் பின்னரும், இத்தகைய முறைபாடுகள் அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக வவுனியா மாவட்டத்திலும் சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் அதிகரித்துள்ளது. போருக்கு பின்னர் இளம் சமூகத்தை சரியான முறையில் வழிநடத்தாமை இந்த அதிகரிப்புக்கு காரணம் என வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ.ஜெயக்கெனடி குறிப்பிட்டார்.

பாலியல் வன்புணர்ச்சி பற்றி இலங்கையின் தண்டணைச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனுடைய ஆரம்ப சட்டத்தில் இருந்த தண்டணையை விட அதிகரித்த தண்டனையையும், பாலியல் வன்புனர்ச்சி குற்றத்தை நிரூபிக்கும் தராதரத்தை நெகிழ்வுப்படுத்தும் வகையிலும் 1995 தண்டனைச் சட்ட கோவைக்கு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்த திருத்தச் சட்டத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தாலும், வன்புனர்ச்சியாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தவிர, இலங்கை சட்டத்தின் படி பாலியல் வன்புணர்ச்சி சம்பந்தப்பட்ட குற்றங்கள் ஆரம்பத்தில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட போதும் சந்தேக நபருக்கு எதிரான வழக்குகளை சட்டமா அதிபர் மேல் நீதின்றத்தில் தாக்கல் செய்வார். சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை பொறுத்த வரையில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் வன்புனர்ச்சி, சிறுவர்களை பாலியல் தொழிலில் உட்படுத்தல், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர்களை கடத்தி விற்றல் போன்றவை அடங்கும். இங்கு சிறுவர்களை பாதுகாக்க வேண்டியவர்களே அவர்களை சின்னபின்னமாக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றது. இது வேலியே பயிரை மேய்ந்த கதையாகும்.

பாலியல் தொழில் வறுமை காரணமாக தொடங்கியதாகச் சொல்லப்பட்ட போதும் சட்டவிரோதமான விடுதிகளில், வாகனங்களில் மறைமுகமான சட்ட அங்கீகாரத்துடன் பாலியல் தொழிலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு இருபாலாரான சிறுவர்களும் விநியோகிக்கப்படுவது வழக்கம். இது தவிர சிறுவர்கள் ஆபாசத் திரைப்படங்கள், படக்காட்சிபடுத்தல் என்பவற்றால் தூண்டப்படுகின்றனர். அத்துடன் சிறுவர்களை கடத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறனர்.

பாலியல் பழக்கவழக்கங்கள் பண்பாட்டு ரீதியாக ஒழுக்கத்தின் மையமாக கொள்ளப்பட்ட போது விழுமியமாக பார்க்கப்பட வேண்டும். பாலியல் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களை சமூகத்தில் தீண்டத்தகாதவர்களாக பார்க்கும் தன்மை நிலவி வருகிறது. அது மட்டுமல்லாது பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டமையால் பிறந்த பிள்ளைகளை பண்பாட்டு ஒழுக்கம் என்ற நோக்கில் சமூகத்திலிருந்து நிராகரித்தும் தள்ளியும் வைக்கின்றனர்.

இதேவேளை, துஷ்பிரயோகங்களை மேற்கொள்வோர் பெரும்பாலும் சமூகத்தின் பிடியிலிருந்து தப்பியே இருக்கின்றனர். இந்தநிலை அவர்களை மேலும் குற்றச்செயல்களை தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இதனால் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்தும் செல்கிறது. பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களில் ஈடுபடுவோர் பணம் படைத்தவர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட ஆபாசத்திரைப்படங்கள், ஆபாச இணையத்தளங்கள் என்பவற்றின் ஈர்ப்பால் அவர்களின் நுண்ணிய உணவுத் தூண்டலினாலும் தூண்டப்பட்டு அவர்களின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கேளிக்கை விடுதிகளை நாடுகின்றனர். ஆனால் அவ்விடுதிகளில் அறவிடப்படும் கட்டணங்களை எல்லோராலும் செலுத்த முடியாது. இதனால் சாதாரண சூழலில் உள்ள அப்பாவிச் சிறுவர்களும் பெண்களும் இவர்களின் இச்சைகளுக்கு இரையாகின்றனர்.



பாலியல் குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் வன்முறைகள் தொடர்பாக முறைப்பாடுகள் அதிகரித்த போதம் பலர் தாமாக முன்வந்து இதத்கைய முறைப்பாடுகளை செய்ய விரும்பதில்லை. இதன் காரணமாக குற்றவாளிகளுக்கு எதிராக எம்மால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு பொலிசார் விரைந்து செயற்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஹிந்த வில்வ ஆராய்ச்சி தெரிவித்தார்.

இதேவேளை குற்றச்செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பெரும்பாலும் மது, போதைவஸ்துப் பழக்கத்திற்கு அடிமையானவர்களாகவே உள்ளனர். குறிப்பாக இளம் வயதினர் மற்றும் மாணவர்கள் கஞ்சா, சிகரெட், ஹெரோயின், கொக்கெயின், அபின், போடீன் போன்ற போதைவஸ்துப் பாவனைக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றனர். இந்த பழக்க வழக்கங்களுக்கு ஏதுவானதாக தொழில்நுட்பத்தின் பாதகமான வளர்ச்சி காணப்படுகின்றது.



குற்றம் புரிபவர்களுக்கும், துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்களும் மீள்வதற்கு முடியாத கடினமான மனரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்பதை அறிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்றவகையில் அதிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் உளவியல் ரீதியான ஆலோசனைகளை தேர்ந்தெடுத்து வழங்க வேண்டும். துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டோர் உளரீதியாக மட்டுமல்லாது உடல் ரீதியாகவும் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். அவர்களை மீட்டெடுக்கும் மருத்துவ உள சிகிச்சைகளை வழங்குவது அவசியமானதாகும். அத்துடன் இவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்டு சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்படுகின்றார்கள். இத்தகைய குற்றச்செயல்களை நாளாந்தம் கேட்டும் பார்த்தும் வாசித்தும் வரும் பெண்களும், சிறுவர்களும், பெற்றோர்களும் தங்களுக்கும் இது ஏற்பட்டுவிடுமோ என்ற உளவியல் பயத்தால் கஷ்டப்படுகின்றனர். எனவே இது தொடர்பில் கவனம் செலுத்தி பாதிக்கப்பட்டோர் தொடர்பில் உளவியர் ரீதியாக ஆற்றப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும் என மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் தெரிவித்துள்ளார்.

மனிதவளம் நாட்டுக்கும், சமூகத்திற்கும் முக்கியமானதாகும். இதில் பாதிக்கப்படும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பெரும்பாலான குற்றமிழைக்கும் ஆண்களும் அடங்குகின்றனர். இவ்வாறான குறைபாடாக இருக்கும் மனிதவளம் குன்றியே உள்ளது. குன்றிப் போய் உள்ள மனித வளத்தினால் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொள்ள முடியாது.

ஒரு குழந்தை பிறந்து பெற்றேர்களின் கைகளில் இருந்து பிரிந்து தனது மூன்றாவது வயதில் முன்பள்ளியில் சேர்க்கப்படுகின்றது. பின்னர் ஆறு வயதில் பாடசாலையில் சேர்க்கப்படுகின்றார்கள். கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகள் ஆசிரியர்களால் வளர்க்கம்பட்டு பிள்ளைகள் தமது 18 ஆவது வயதில் ஒரு மனிதனாக சமூகமயமாக்கப்படுகின்றது. இவ்வாறு சமூகமயப்படுத்தப்படும் மாணவர்கள் பாடசாலை கல்வியை பூர்த்தி செய்து அல்லது பல்கலைகழக பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கு தூண்டவேண்டும். இதற்கு ஆலயதர்மகத்தாசபை, சனசமூகநிலையம், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் மகளீர் சங்கங்கள், விளையாட்டு கழகங்கள், கலை இலக்கிய செயற்பாட்டு மன்றங்கள் போன்றன இவர்களை இணைத்து செயல்படவேன்டும். அவ்வாறு செயல்படுவதன் மூலம் ஒரு ஆளுமை மிக்க, தைரியமான, ஒழுக்கமுள்ள மனிதர்களாக மாற்றி வாழ்கையை எதிர் நீச்சல் போட்டு தைரியமாக எதிர்கொள்ளக் கூடிய மனிதர்களாக மாற்ற முடியும் என வவுனியா தெற்கு வலய உதவி கல்விப்பணிப்பாளர் சு.அமிர்தலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.



எனவே வக்கிரத்துக்கு உட்படுவோர், வக்கிரகங்களை புரிவோர் ஆகியோரை மீட்கும் நோக்கில் புனர்வாழ்வு பற்றிய கவனம் செலுத்தப்படவேண்டியதன் அவசியம் உருவாகியுள்ளது. புனர்வாழ்வு மற்றும் உடல், உள ரீதியான சிகிச்சைகளை இவர்களுக்கு வழங்குவதன் மூலம் ஆக்க பூர்வமான மனித வளமாக இவர்களையும் மாற்ற முடியும். குறிப்பாக சிறுவர் துஸ்பிரயோகம் அதிகளவில் இடம்பெற்று வரும் பிரதேசங்களை இலக்காககொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அரசு ஆரம்பித்து வைத்தல் வேண்டும். போரினால் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இத்தகைய விழிப்புணர்வு பிரச்சார செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். குறிப்பாக சிறுவர்கள் இளம்பெண்கள் மீது எடுத்துவரக்கூடிய தீங்கினை புரிந்துகொள்ளச் செய்யும் விதத்தில் சமூகங்கள், பாடசாலைகள், இளைஞர் குழுக்கள் ஆகிய தரப்பினருக்கு விழிப்புணர்வூட்டுதல் வேண்டும். இதற்கான உபாய ரீதியான ஒரு பிரச்சார இயக்கம் உருவாக்கப்பட்டு அதில் தேசிய மற்றும் உள்ளூர் ஊடகப்பிரச்சாரங்களையும் சமூகத்தலைவர்கள், பொலிசார் மற்றும் சட்டத்தை அமுல்செய்யும் ஏனைய ஆளனியினர், அரசாங்க (சுகாதார மற்றும் மருத்துவத் துறை) அதிகாரிகள் ஆகியோரையும் உள்ளடக்குதல் வேண்டும்.

அத்துடன் சமூகங்கள், பாடசாலைகள், இளைஞர் குழுக்கள் ஆகிய தரப்பினருக்கு விழிப்புணர்வு செய்வதுடன் அறநெறிக்கல்வியை (மறைக்கல்வியை) கட்டாயமாக கற்கவேண்டும் என்று ஒரு நிபந்தனையை அமுல் செய்து கட்டாயக்கல்வியாக அறநெறிக்கல்வியை போதிக்கவேண்டும். பெரும்பாலான சிறுவர்கள் பொருளாதார பிரச்சனைகள் மற்றும் பல்வேறு பட்ட கஸ்டங்களில் வாழ்கின்றனர். இவர்களது பெற்றோர் நாட் கூலிக்கு வயல்களிலும் தோட்டங்களிலும் வேலை செய்வோராக இருக்கின்றனர். நாட் கூலி என்பது மிக மிகக் குறைவான வருமானம். அதிலும் நிச்சயமற்ற தொழில். ஆகவே நிச்சயமற்ற வருமானம். இவ்வாறான நிலையில் தமது குழந்தைகளுக்கு ஒழுங்கான உணவையோ கல்வியையோ வழங்க முடியாதவர்களாக இருக்கின்றனர். இதனால் குழந்தைகளின் எதிர்காலமாவது நன்றாக அமைய வேண்டும் என்பதற்காக இவ்வர்களுக்கான சுயதொழில் வாய்ப்பு செயல்திட்டங்களை செயல்படுத்தவேண்டும். இத்தகைய தூர நோக்கு கொண்ட செயற்பாடுகளே சிறுவர்களினதும், பெண்களினதும் பாதுகாப்பை எதிர்காலத்தில் உறுதி செய்யும்.

# அரேபிய நாடுகளில் காணாமல் போகும் இலங்கைப் பெண்கள்

## கண்டறிவது யார்?

சிலர் குடும்பத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டு சடலமாக நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்வர்களை காணாமல் போனோர் என அவர்களது உறவுகள் கூறுகின்றன. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில மட்டும்; அதிகாரபூர்வ தகவலின்படி 2017 வரை ஆகக் குறைந்தது ஐந்நூறு பேர்வரை தொடர்பு துண்டிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்படுள்ளனர்.

14.10.2018 மட்டக்களப்பு மாவட்டம் முக்கியமானது காணாமல் போனவரின்தாய்

எனது மகள் பணம் ஒண்டும் அனுப்பத் தேவையில்லை அவளது குரலை ஒரு முறையாவது கேட்டால் போதும் நான் நிம்மதியாக இருப்பபேன் இவ்வாறு மட்டக்களப்பு ஆறுமுகத்தான்குடியிருப்பைச் சேர்ந்த அரியமலர் நிக்கலஸ் பெனார்ன்டோ கூறுகிறார். வீட்டுப் பணிப்பெண்ணாக சவூதி அரேபியாவுக்குச் சென்ற எனது மகள் இன்றுவரை திரும்பி வரவே இல்லை. ஐந்து ஆண்டுகளுக்கு முன் மகளுக்கும் எங்களுக்குமான தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது என்கிறார் சின்னலெப்பை ஆஷியா உம்மா (வயது73). யுத்தத்தில் காணாமல் போனவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் வெளிநாட்டு வேலைக்கு என்று சென்று பல பெண்கள் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் இரு பெண்களின் கும்பத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தற்போது 'வெளிநாடுகளில் தொழில்வாயப்புக்குச் சென்று காணாமல் போனோர்' என்ற பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யுத்தத்திற்குப் பின்னர் தொழில்வாய்ப்பின் நிமிர்த்தம் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் நோக்கியும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் நோக்கியும் வீட்டுப் பணிப்பெண்களாக பெண்கள் செல்கின்றனர்.

யுத்தம் காரணமாக தங்களது குடும்ப பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குடும்பத் தலைவன் இழப்பு பிரதான உழைப்பாளியான ஆண் அங்கவீனமடைந்திருத்தல் போன்ற காரணங்களினால் இழந்துபோன பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டுதான் வெளிநாட்டு வேலைவாய்ப்பை அவர்கள் நாடுகிறார்கள். சட்ட ரீதியாக தொழில்வாய்ப்பு பெற்று சட்ட ரீதியான ஆவணங்களுடன் இவர்கள் தொழில் பெற்று சென்றிருந்தாலும் இவர்களில் சிலர் காணாமல் போயிருப்பது அவர்களது குடும்பத்தினருக்கு அதிச்சியையும் பேரிடியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

வெளிநாட்டுக்கு தொழில் பெற்றுசென்றவர்கள் பலர் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளார்கள். அந்நாட்டு தொழில் சட்டங்களையும் பொதுவான மனித உரிமை மீறல்களையும் அவர்கள் சந்தித்துக் கொண்டிருக் கிறார்கள். அதேவேளை இன்னும் சிலர் குடும்பத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டு சடலமாக நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்வர்களை காணாமல் போனோர் என அவர்களது உறவுகள் கூறுகின்றன. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில மட்டும்; அதிகாரபூர்வ தகவலின்படி 2017 வரை ஆகக் குறைந்தது ஐந்நூறு பேர்வரை தொடர்பு துண்டிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்படுள்ளனர்.

| ஆண்டு | காணாமல்போனோர் எண்ணிக்கை |
|---|---|
| 2013 | 85 |
| 2014 | 120 |
| 2015 | 135 |
| 2016 | 75 |
| 2017 | 45 |

தகவல் : மட்டக்களப்பு மாவட்ட செயலகம்.

இவ்வாறு தொடரப்பு துண்டிக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் மட்டக்களப்பு - ஆறுமுகத்தான் குடியிருப்பிலிருந்து சவுதியரேபியா நாட்டுக்குச் சென்ற நிக்கலஸ் பெனார்ன்டோ றீட்டா. குடும்பத்தில் இரண்டாவது மகளாக பிறந்த நிக்கலஸ் பெனார்ன்டோ றீட்டா (தற்போது வயது 34) தனது முதலாவது வயதிலே தந்தையை இழந்தவர். தாயின் கூலித்தொழில் ஊதியத்தில் வளர்ந்த பிள்ளை. அவருக்கு ஒரு தங்கையும் உண்டு. கலியாணம் செய்யிரத்துக்கு ஒரு வீடாவது தேவை நாம இருக்கிற சூழ்நிலையில் வீடு கட்ட முடியாது வெளிநாட்டுக்கு போய் வீடு ஒன்ட கட்ட போறன் என மகள் றீட்டா என்னிடம் அடிக்கடி கூறிவந்தார். அவரை வெளிநாட்டுக்கு அனுப்புறத்துக்கு எனக்கு விருப்பமே இல்ல. எனது

2015 சித்திரை மாத்தில்தான் மகளுடன் இறுதியாகப் பேசினேன். விருப்பத்துக்கு மாறாக பிடிவாதமாக வெளிநாடு செல்வதற்கான முயற்சிகள் செய்து, 2010ஆம் ஆண்டு தை மாதம் 07ஆம் திகதி ஏறாவூரிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஊடாக சவுதி அரேபியாவிற்கு பணிப்பொண்ணாக சென்றார். அவர் போய் ஓரிரு மாதங்களிலிருந்தே 40 ஆயிரம் ரூபாய் வீதம் ஒவ்வொரு மாதமும் பணம் அனுப்பி வந்தார். நாங்கள் அவளை நான்கு ஆண்டுகள் முடிந்தவுடன் நாட்டுக்கு வருமாறு அழைத்தோம். கொஞ்ச காலம் அங்க வேலை செய்தா குறையோட இருக்கிற வீட்டினை முடிச்சிருவன் இங்க வந்து கல்லாணம் பண்ணலாம் என கூறி தொடர்ந்த அங்கேயே தொழில் புரிந்தார். எனக்கும் வருத்தாக உள்ளது நீ நாட்டுக்கு வந்து கல்லாயம் பண்ணு என 2015ஆம் ஆண்டு மீண்டும் வருமாறு அழைத்தோம் நோன்பு பெருநாள் முடிந்தவுடன் வருகிறேன் என கூறினார் நோன்பு பெருநாள் முடிந்தவுடன் ஹஜ் பெருநாள் முடிந்தவுடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறோம் என எனது மகள் வேலை செய்த வீட்டின் உரிமையாளர் கூறினார். ஹஜ் பெருநாள் முடிந்தவுடன் வீடு திருப்புவாள் என் எதிர்பார்ப்புடன் இருந்தோம். 2015 சித்திரை மாத்தில்தான் மகளுடன் இறுதியாகப் பேசினேன். அதன் பின் அந்த தொலைபேசி இலக்கமும் துண்டிக்கப்பட்டு விட்டது. அன்றிலிருந்து எனது மகளுக்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. என்று அழுகிறார் தாய்.

இது சம்பந்தமாக அவரை அனுப்பி வைத்த முகவரிடம் கேட்டுள்ளனர். 'நாங்கள் அனுப்பிய இரண்டு வருட ஒப்பந்த காலம் முடிந்துவிட்டது இதற்கு மேல் எங்களால் ஒன்றுமே செய்ய முடியாது' என முகவர் நிலையம் கூறியுள்ளது. அத்துடன் விடாது, இலங்கை வெளிநாட்டு பணியகத்திற்குச் சென்று 2016 ஆவணி 08 ஆந் திகதி முறையிட்டுள்ளனர். அவர்கள் சவுதி அரேபியாவிலுள்ள பணியகத்தினைத் தொடர்பு கொண்டு நடவடிக்கையெடுப்பதாக கூறியிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் நடவடிக்கை எடுத்தும் உள்ளனர் என தெரியவருகிறது. வெளிநாட்டுப் பணியகம் காணாமல் போன பெண்ணின் தாயார் கொடுத்த முகவரியை ஆராய்ந்து பார்த்ததாகவும் அந்த முகவரிக்குரிய வீட்டில் யாரும் இல்லை, வீடு பூட்டி இந்ததாக இந்தத் தாய்க்கு ஒரு மாதத்தின் பின் தகவல் அனுப்பியுள்ளது. இதன்பின் என்ன செய்வதென்று தெரியாது இருக்கிறார் இந்த தாய். அவர் தன் அடுத்த மகளைக் காப்பாற்றுவதற்காக வீடுவீடாகச் சென்று துணிகளைத் துவைத்து வருகிறார்.

முகவர் நிலையங்களும் வெளிநாட்டுப் பணியகமும் தம்பங்கிற்கு செய்வேண்டியதைச் செய்துவிட்டோம் என இதை மூடிவிட்டு இன்னொரு புதிய பிரச்சினைக்கு சென்றுவிட்டன. ஆனால் இந்த தாய்க்கு இது தீராத பிரச்சினை.

இலங்கையின் வருமானம் ஈட்டுதலில் வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் வருமானம் அதிகளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. அதிலும் சவுதி அரேபியா, கட்டார், குவைத், டுபாய், போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்குச் மட்டக்களப்பிலிருந்து சென்று வருமானம் ஈட்டித்தருவோர் அதிகமானோர் உள்ளனர். இதேபோல் இன்னுமொருவருக்கு நேர்ந்தது..

ஏறாவூர் காயர் வீதியைச் சேர்ந்த முஹம்மது ஹனீபா பிர்தௌஸியா (தற்போது வயது 33) என்ற பெண் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02ஆம் திகதி கொழும்பிலுள்ள முகவரினூடாக வீட்டுப் பணிப்பெண்ணாகத் தொழில்வாய்ப்புப் பெற்று சவூதி அரேபியா சென்றுள்ளார். ஆரம்பத்தில் பணம் அனுப்பியுள்ளார்.

கடந்த 4 வருடகாலமாக அவரின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக யுவதியின் தாயார் கூறுகிறார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நல்லிணக்கப் பிரிவுக்கு 2013 ஜனவரி 16 ஆம் திகதியன்று முறைப்பாடு செய்தபோது அடுத்த வினாடியிலிருந்தே தமது பணியகம் நடவடிக்கை எடுக்கும் என்று பத்திரம் ஒன்று தரப்பட்டது. ஆனால் இந்த உத்தரவாதம் அளிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கழிந்து விட்ட போதிலும் மகளின் விடயமாக எதுவித பதிலையும் அவர்கள் தரவில்லை என்கிறார் இந்தத் தாய்.

இங்கு மட்டுமல்லாது ஏறாவூர் நகர பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவு தொடக்கம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நல்லிணக்கப் பிரிவு, மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழு, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பல இடங்களில் முறைப்படுகள் செய்யப்பட்ட போதும் சாதகமான எந்தப் பதிலும் இதுவரை கிடைக்கவில்லை என்கிறார் அந்த ஏழைத்தாய்.

இவ்வாறு தொழிலுக்காக வெளிநாடு சென்று தொடர்பற்று இருப்பவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். இங்கு கடன்தொல்லை, குடும்ப பிரச்சனை, கணவனை இழந்தோர், திருமணமாகாத பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், போன்ற வர்க்கத்தினர்தான் அதிகளவு மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மாவட்ட மனித உரிமை ஆணைக்குழு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், போன்றவற்றின் உள்ள பதிவுகளின் அடிப்படையில் கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டுவரையில் வெளிநாடு சென்றவர்களில் சுமார் 460 பேரின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதில் ஆண் பெண் இருவரும் அடங்குகின்றனர்.

இவற்றில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சிக்கு 350 நபர்களின் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டு முறைப்படு செய்யப்பட்டதென்றும் அவற்றில் சுமார் 250 நபர்களை கண்டறிந்து விபரம் எடுத்து உறவினர்களுக்கு வழங்கப்பட்டதாக பணியகம் தெரிவிக்கிறது. இதன் அடிப்படையில் 2017 வரை சடலங்களாக 35 பேர் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். இவற்றில் 32பேர் பெண்களாவர். இவற்றில் இரண்டு சடலங்கள் மலேசியா நாட்டிலிருந்தும் ஏனையவை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் இலங்கைக் கொண்டுவந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இந்த காணாமல் போன பணிப்பெண்களின் நிலை என்ன என்பதை குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமன்றி சமூகமும் அறிய ஆவலாய் உள்ளது. கண்டறிவது யார்?

**நன்றி: த கட்டமரன்**

---

### வீட்டுக்கு...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசியல் நிகழ்ச்சிநிரல். தமிழ் இளைஞர் யுவதிகளை காலப்போக்கில் இராணுவத்துக்குள் முழுமையாக உள்ளீர்த்து, அவர்களின் இனத்தத்துவத்தை மூழ்கடிக்கும் நீண்டகால நோக்கத்தைக்கொண்ட வேலைத்திட்டம் இது.' என்று, தமிழ் அரசியல் அவதானிகள் சாடுகின்றனர். அவர்களின் சந்தேகங்களை களைந்து, குறித்த விமர்சனங்கள் - குற்றச்சாட்டுகள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டியதும் இராணுவ தலைமையகத்தின் கடமை.

எதுவாயினும், விவசாயப்பண்ணை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முன்னாள் போராளி ஒருவருடன் உரையாடும் சந்தர்ப்பம் இந்த பத்தியாளருக்கு கிடைத்தது. 'தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் குடும்பத்தின் மொத்தச்சுமையும் என்மேல் பொறுத்துவிட்டது. இப்படியொரு சுமை 2009க்கு முன்னர் என்மீது விழுந்ததில்லை. ஆதலால் எனக்கு இதுவொரு புதிய அநுபவமாக இருந்தது. நிரந்தரத்தொழில் தேடி அலைந்துகொண்டிருந்தேன். எனக்கானது என்று ஒரு தொழிலை வரையறை செய்துகொள்வதில் இலக்கு அற்று ஓடிக்கொண்டிருந்தேன். கூலி வேலைகளுக்கு கையாள் ஆக யார் யாரெல்லாம் கூப்பிடுகிறார்களோ, அவர்களுக்குப் பின்னால் எல்லாம் ஒரு எடுபிடியாக திரிந்துகொண்டிருந்தேன். போதியளவு ஊதியம் கிடைக்கவில்லை. குடும்பச்சுமை என்னை மேலும் மேலும் அழுத்திக்கொண்டிருந்தது. அதிலிருந்து வெளியே வந்து அமைதியாக இருக்கமுடியவில்லை. வாழ்க்கை பற்றிய பெரியதொரு பயம் எப்போதும் என்னை சூழ்ந்திருந்தது. என்ன வாழ்க்கை இது? எதற்காக இந்தப்பிழைப்பு? என்று சலித்துக்கொண்டு பல சந்தர்ப்பங்களில் பலதரப்பட்ட மனிதர்களுக்கு முன்பாக கூனிக்குறுகி அவமானப்பட்டு நின்றிருக்கிறேன். யாருக்கும் தெரியாமல் எங்காவது அநாதரவாகப்போய் அடையாளம் காணாமல் செத்துவிடுவோம் என்றுகூட சிலநேரங்களில் யோசித்திருக்கிறேன். ஆனால், வயோபதி கால நோய்களால் அவதியுறும் அம்மா, திருமண வயதை தாண்டியிருக்கும் அக்கா, உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும் தங்கை, இப்படி அவர்கள் பற்றிய எண்ணங்கள் எல்லாம் அடிக்கடி என் கண்முன்னே வந்து அச்சுறுத்திக்கொண்டிருக்கும். களத்தில் நின்று போராடியதை விடவும், நாளாந்தம் வாழ்க்கையோடு போராடி மேலே வருவது பெரும் போராட்டமாய் போய்ச்சு. செத்துவிடுவோமோ? தோற்றுவிடுவோமோ? என்று, பயந்து பயந்து மீண்டுவர முடியாத அளவுக்கு மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தேன். அந்த நாட்கள் மிகவும் கொடிய பயங்கரமான கருப்பு நாட்கள். நித்தமும் செத்துச்செத்து பிழைத்துக்கொண்டிருந்தேன். தனியார்துறைகளில் தொழில் கேட்டுப் போனால் 'முன்னாள் போராளி' என்பதைக்காரணம் காட்டி, தொழில்தருநர்கள் மிரண்டுபோய் நிற்கிறார்கள். அரசாங்க வேலை, அதை கற்பனை செய்துகூடப்பார்க்க முடியாது. குறைந்தபட்சம் அங்கு ஓ.எல் தரச்சித்தி கேட்கிறார்கள். நான் படித்தது என்னவோ எட்டாம் தரக்கல்வி வரைக்கும் தான். ஆனால் இன்று இந்த வேலைவாய்ப்பு, சமுகத்தில் நானும் வாழத்தகுதியுடையவன் என்ற தைரியத்தை எனக்கு தந்திருக்கு. மற்றவர்களுக்கு நானும் சமமானவன் என்று ஒரு உணர்வு இப்போது எனக்குள் இருக்குது. யாருக்கும் கைகட்டி நின்று சேவகம் செய்ய வேண்டியதில்லை. அம்மாவின் மருத்துவ செலவுகளை கவனிக்க முடியுது. தங்கையின் உயர்படிப்புக்கு சேமித்து வைக்க முடிந்திருக்கு. அக்காவுக்கு நல்லதொரு வாழ்க்கைத் துணையைத்தேடி அமைத்துக்கொடுக்க உதவியிருக்கு. எனது திருமணத்துக்காகவும் கொஞ்சப்பணம் சேமித்து வைத்திருக்கிறேன்'

இப்படி அவர் சொல்லி முடிக்கும்போது, அவரது கண்களை உற்றுப்பார்த்தேன். அவரது கண்கள் கலங்கியிருந்தன. அந்தக்கண்ணீரில் தமிழ் சமூகம் சாட்டுவது போல, 'இனத்துக்கு எதிரான துரோகம்' தெரியவில்லை. மாறாக, 'தான் சார்ந்திருக்கும் சமூகம் தகுந்த நேரத்தில் தன்னைத் தாங்கிப்பிடிக்கவில்லையே, தன்னைத் தேற்றவில்லையே, தன்னை வாழவைக்கவில்லையே' என்ற கோபமும், விரக்தியுமே அந்தக் கண்ணீரில் எனக்குப்பட்டது. ஆம், உண்மை தான். தாம் சார்ந்திருக்கும் இனத்தின் விடுதலைக்காக போராடப்புறப்பட்டு களமுனைகளில் அபாரமான வெற்றிகளைப் பெற்றபோதெல்லாம், அந்தப் போராளிகளை தலையில் தூக்கி வைத்துக்கொண்டாடிய ஒரு சமூகம், யுத்தத்தில் தோல்வியடைந்த பின்னர் அதே போராளிகளைத் தூக்கி குப்பைத்தொட்டிக்குள் கடாசி வீசியிருக்கிறது.

இறக்கைகள் துண்டிக்கப்பட்ட ஒரு பறவையை வானத்துக்கு சுமந்து சென்று, அதனைத் திடீரென்று அந்தரத்தில் மிதக்க விட்டால், அது எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாக தரையை நோக்கி வந்து முகம் குப்புற வீழ்ந்து அடிபட்டுத் துடிக்குமோ? அதுபோலவே துடித்துக்கொண்டிருந்த முன்னாள் போராளிகள், இராணுவத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள தொழில்துறைகளை, 'இதர அரசாங்க உத்தியோகத்தர்கள் போலவே தாங்களும் சமூகத்தில் சமவாய்ப்புடன் வாழ்வதற்கு' கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகவே உணருகின்றனர்.

பேருந்து தரிப்பிடம் ஒன்றில் தரித்து நிற்கும்போது, இராணுவ வீரர் ஒருவருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. 'யாழ்ப்பாணத்தில் மினிபஸ் ஒன்றில் பயணித்துக்கொண்டிருக்கும் போது, அதில் ஏறிய தமிழ் கர்ப்பிணிப்பெண் ஒருவருக்கு யாருமே எழுந்து இடம்கொடுக்கவில்லையாம். இதனை அவதானித்த எங்கோ தொலைவில் அமர்ந்திருந்த மற்றுமொரு இராணுவ வீரர் தான் அந்த கர்ப்பிணிப் பெண்ணை கூப்பிட்டு, எழுந்து தனது இருக்கையை கொடுத்து உதவியதாகக் கூறி, தமிழ் மக்களிடம் இரக்க மனோபாவம் இல்லை'என்று குறைபட்டுக்கொண்டார். இந்த குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலும் இல்லை. சமீபகாலமாக மூத்தோரை மதிப்புறுத்தும் மாண்பு, தமிழ் சமூகத்தினரிடையே அருகி வருவதை பொதுஇடங்களிலும், பேருந்து பயணங்களின் போதும் தாராளமாக காண முடிகின்றது. அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டு இதழான நிமிர்வின் ஆசிரியரும், எனது ஊடக நண்பருமாகியவர் தனது முகப்புப்புத்தக பக்கத்தில், 'பனங்கொட்டை பதியம் போடுவதற்கு கூட, கூலிக்கு ஆட்களை தேடியலைவதைக் காண முடிகின்றது. உடல் உழைப்பும் - அர்ப்பணிப்பும் அற்ற ஒரு சமூகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றோமா?' என்று பதிவிட்டு, தனது ஆழ்ந்த இரங்கலை வெளிப்படுத்தியிருந்தார். அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் 'பனம்' பழத்தின் சுவையை விடவும், 'பணம்' பழத்தின் சுவை அதிகமாகவே உணரப்படுவதால் தான், இந்த நிலைமையோ? யார் அறிவார்?

இருந்தபோதிலும், அந்த இராணுவ வீரருக்கு இருவேறு சம்பவங்களை சுட்டிக்காட்டினேன். இலங்கை இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, 'யுத்த காலத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை உரித்துடையவர்களிடம் மீளவும் ஒப்படைக்க வேண்டும். யுத்த காலத்தில் இருந்த நிலைமைகள் தற்போது இல்லை. ஆதலால் படைகள் நிலைகொண்டுள்ள பிரதேசங்களை குறுக்கி, நிலங்களை மக்களிடம் கையளிப்பதற்காக சில இடங்களை அடையாளப்படுத்தி உள்ளோம். பொதுமக்களின் காணிகளில் உள்ள படைமுகாம்கள் மற்றும் இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கும், அந்த இடங்களிலிருந்து இராணுவ முகாம்களை அப்புறப்படுத்துவதற்கும் சிறிது காலஅவகாசம் தேவைப்படுகின்றது.' என்று, எவ்வளவுக்கு எவ்வளவு மனிதாபிமானத்தை வெளிப்படுத்த முடியுமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நியாயத்தோடு பேசியிருக்கிறார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள முன்னாள் இராணுவத்தளபதியும், இந்நாள் அமைச்சருமாகிய சரத்பொன்சேகா, 'இராணுவ பாதுகாப்பு கல்லூரியில் படிக்காதவர்களை இராணுவத்தளபதியாக நியமித்தால் இதுதான் நிலைமை. இப்படித்தான் முட்டாள்த்தனமாக ஏதாவது உளறிக்கொண்டிருப்பார்கள். காணிகளை ஒப்படைத்து படைகளை குறைக்கும் யோசனையானது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஆகும். இந்த நடவடிக்கை இராணுவத்தளபதியின் அநுபவ இன்மையைக் காட்டுகின்றது. இராணுவத்தளபதி இடிஅமீன் போல சர்வாதிகாரமாக தொழில்படுகின்றார். காணிகளை ஒப்படைப்பதற்குப் பதிலாக, தேவையேற்பட்டால் மக்களின் காணிகளை இன்னும் கையகப்படுத்தி, இராணுவத்தை பலப்படுத்தி நிலைகொள்ளச்செய்ய வேண்டும். நான் பதவியில் இருந்தால், எனது நடவடிக்கைகள் இப்படித்தான் இருக்கும்.' என்று, எவ்வளவுக்கு எவ்வளவு இனத்துவேசத்தை கக்க முடியுமோ, அவ்வளவுக்கு அவ்வளவு மு;டியை முறுக்கிக்கொண்டு நிற்கிறார். தமிழ் - சிங்களம் இருதரப்பிலும் நல்ல பண்புகளை உடையவர்களும் உள்ளனர். குரூர எண்ணங்களை உடையவர்களும் உள்ளனர். எதையும் பொத்தம் பொதுவாக மதிப்பிட்டுப் பேசிவிட்டுப் போக முடியாது என்று, அந்த இராணுவ வீரருக்கு தெளிவுபடுத்தினேன்.

இத்தகைய குரூர சிந்தனைகளைக் கொண்டுள்ள சரத்பொன்சேகாவுக்கு தானே, தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஆதரவு வழங்கி, 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் வாக்களித்து அவரை பெற்றிபெறச்செய்யுமாறு, தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இன்றைக்கு அந்தச்சூழலை மீள்நினைவுபடுத்தும்போது, சந்தர்ப்பவாதங்களுக்கு ஏற்ப மட்டும் முடிவுகளை எடுத்து, தமிழ் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களை எப்படியெல்லாம் தவறாக வழிநடத்திச் சென்றிருக்கிறது? மக்களின் வாக்குரிமையை எப்படியெல்லாம் கபளீகரம் செய்திருக்கிறது? என்பதன் ஆபத்தை உணர முடிகின்றது அல்லவா? மைத்திரி - ரணில் கூட்டு அரசிலும்கூட சரத்பொன்சேகா, தனக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவியைத்தருமாறு ஒற்றைக்காலில் நின்றார், நிற்கின்றார். இப்போதும் அந்த அமைச்சு பதவி பற்றியே கனவு காண்கின்றார்.

ஆனால் சரத்பொன்சேகாவுக்கு கிடைத்தது என்னவோ, வனஜீவராசிகள் அமைச்சு பொறுப்புத்தான். காட்டாட்சி சிந்தனை கொண்டுள்ளவருக்கு இது மிகவும் பொருத்தமான அமைச்சு தான்.

நிலைமைகள் இவ்வாறிருக்க, இராணுவத்தினரின் மனிதநேய வேலைத்திட்டங்கள் தொடர்பில், வவுனியாவில் வசிக்கும் சிவில் சமூக மனித உரிமைகள் செயல்பாட்டாளர் ஒருவரிடம் கருத்துக்கேட்டேன். 'அவர்கள் மக்களுக்கு என்ன தான் செய்தாலும், இறந்த காலத்தில் நடத்தப்பட்டுள்ள சம்பவங்களுக்கு பொறுப்புக்கூறும் பொறிமுறையில் தவறிழைத்து விடுவார்களாயின், அது இதுநாள் வரைக்கும் அவர்கள் நடந்துவந்து கொண்டிருக்கும் நல்லிணக்கப் பாதையிலிருந்து நீண்ட தூரம் அவர்களை பின்னோக்கித்தள்ளிவிடும்' என்று எச்சரித்தார்.

யாழ்.பாதுகாப்பு படைகளின் தலைமையகம் பலாலியில், கடந்த 20 செப்டம்பர் 2018 வியாழக்கிழமை அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில், 'யார் விமர்சித்தாலும் - தடுத்தாலும், தமிழ் மக்களுக்கான எமது நலவாழ்வுத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கும். எவரது விருப்பு வெறுப்புகளுக்காகவும் திட்டங்களை நிறுத்த முடியாது. இவை, எத்தகைய பிரதிஉபகாரங்களையும் எதிர்பாராமல், மக்களுக்கான சேவை என்பதை மட்டுமே முழுவதும் நோக்கமாகக் கொண்டு, இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக மேம்பாட்டுக்கான உதவித்திட்டங்கள்' என்று, யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ன ஹெட்டியாராச்சி அறிவித்திருக்கிறார்.

இந்த பத்தியின் தொடக்கத்தில் ஏலவே நான் குறிப்பிட்டுள்ளதைப்போல, தமிழ் மக்களும் அவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப்போல நித்தமும் அணுகத்தொடங்கிவிட்டனர். இளகிய இரும்பைக் கண்டால், கொல்லன் எதையோ தூக்கித்தூக்கி அடிப்பானாம். அதைப்போலவே இராணுவத்தினரும் முன்னரைப்போல அதிக 'ரிஸ்க்' ஏதும் இல்லாமல், 'உதவித்திட்டங்களின் பெயரால்' தமிழ் மக்களின் மனங்களில் சாவகசமாகப் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல்பிரிவைப் போன்று இனிவரும் காலங்களில் இலங்கை இராணுவத்தினரும், பலாலி கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு வெளியே, கிராம அலுவலர் பிரிவுகளை 'கோட்டங்களாக' ஒருங்கிணைத்து, ஆங்காங்கே 'மக்கள் நலன் காப்பகம்'என்ற பெயரிலோ, 'மக்கள் தொடர்பகம்' என்ற பெயரிலோ, சிவில் அலுவலகங்களை திறந்தாலும் கூட இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

'சிங்களப்படை வெறியன் சிரிச்சா, நீ சிரிக்காத. அவன் சிரிச்சுப் பேச வீட்டுக்கு வந்தா, பாய் விரிக்காத' என்று, இனஓர்மம் கற்பிக்கும் ஈழத்தின் உணர்ச்சிப்பாவலர் காசி ஆனந்தனின் பாடல்களுக்கான தேவைகள் அற்றுப்போய், 'வீட்டுக்கு வீடு வாசல்படி போல, வீட்டுக்கு வீடு இராணுவம் வேண்டும்.'என்று, தமிழ் மக்களே வலிந்து திணித்து கேட்பது போல, ஒரு ஈர்ப்புச்சூழல் உருவாகி வருகிறது. 'பல்லுக்குத்தவும், தலைவலிக்கு தைலம் தேய்க்கவும் கூட இராணுவத்தினரை கூப்பிடும் அளவுக்கு' மக்களின் மனம் நெகிழ்ச்சி அடைந்திருக்கிறது. இந்தப்போக்கு நல்லதா - கெட்டதா? சரியா - தவறா? என்பதற்கு அப்பால், இது இராணுவத்தரப்பினரின் வெற்றியா? இல்லை, தமிழ் அரசியல் தரப்புகளின் தோல்வியா?

இவ்வருடம் செப்டம்பர் மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழமுதம் விழா முற்றத்தில் நின்று, தமிழகத்தைச் சேர்ந்த ஈழ உணர்வாளரும் பிரபல ஓவியருமான புகழேந்தி அவர்கள் கூறியது போலவே, 'அறிவற்ற உணர்வும் - உணர்வற்ற அறிவும், ஈழத்தமிழர்களுக்கு இனி ஒருபோதும் தேவையே இல்லை தான்' என்பது எத்தனை பொருத்தம்!

# ஊடக கர்வம் உடைகிற தருணம்



ஊடகத் துறையில் இயங்கிக்கொண்டிருப்பதில் மனநிறைவு, பெருமை என்பதையெல்லாம் தாண்டி ஒரு கர்வம் கொண்டவன் நான். யாரையும் கேள்வி கேட்க முடிகிற வாய்ப்பால் வளர்ந்த கர்வம் அல்ல, சமுதாய மாற்றத்தில் ஒரு மையமான பாத்திரம் வகிக்கிற ஊடகத்தில் ஒரு சிறு புள்ளியாகவேனும் இருக்கிறோம் என்ற உணர்வால் ஏற்பட்ட கர்வம் அது. அந்தக் கர்வம் தகர்ந்து கூசிப் போய் நிற்கிற தருணங்களும் ஏற்படுவதுண்டு. ‘மீ டூ’ இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்காகச் சென்னையில் தென்னிந்தியத் திரைப்படப் பெண்கள் சங்கம் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி அத்தகைய தருணங்களில் ஒன்று.

### அறம் துறந்த சுதந்திரம்

ஊடகச் சுதந்திரமும் ஊடக அறமும் பிரித்துப் பார்க்க முடியாதவை. யாரை நோக்கிக் கேள்வி கேட்கிறோமோ, அவருக்குப் பதில் சொல்வதற்கான உரிமை முழுமையாக இருக்கிறது. அந்தப் பதிலை முழுமையாகப் பெற்றுக்கொண்டு, அதை அவரவர் கோணத்தில் செய்தியாக்கலாம், அந்தப் பதிலில் நேர்மையில்லை என்றுகூடச் சொல்லலாம். ஆனால், அவருடைய பதிலைக் காதுகொடுத்துக் கேட்க மறுப்பது நம் கேள்வியை அவமதிப்பதேயாகும்.

மேடையில் இருப்பவர்கள் ஏதோ பதில் சொல்ல முயல்கிறார்கள், வார்த்தைகளை அவர்கள் தொடர்வதற்குள் அடுத்த கேள்வி வீசப்படுகிறது. அதற்கு விளக்கம் தரத் தொடங்குகிறார்கள். உடனே இன்னொரு கேள்வி வீசப்படுகிறது. தாங்கள் இந்த இயக்கத்திற்கு ஆதரவளிப்பது ஏன் என்று அமைப்பாளர்கள் ஓர் அறிக்கையை வாசிக்கிறார்கள்; இதையெல்லாம் கேட்பதற்கு நாங்கள் வரவில்லை என்று கூறி வாசிக்க விடாமல் தடுக்கப்படுகிறது. அவர்கள் செய்தியாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ததே அந்த அறிக்கையை வாசித்து வெளியிடுவதற்காகத்தானே? அதை முடித்த பிறகு அது தொடர்பான கேள்விகளைத் தொடங்கி பின்னர், நாம் கேட்க நினைக்கிற கேள்விகளைக் கேட்பதுதானே செய்தியாளர் நெறியாக இருக்க முடியும்?

### ஊடகத்தினரின் ஆணாதிக்க மனப்பான்மை

சுற்றிச் சுற்றி என்ன கேள்விகள் வருகின்றன? சமூக ஊடகங்களில் வருகிற, சில அரசியல் தலைவர்கள் வாயிலிருந்து வருகிற, குற்றம்சாட்டப்பட்டவர்களின் ஆதரவாளர்களிடமிருந்து வருகிற கேள்விகளே அங்கேயும் கேட்கப்பட்டன. இத்தனை ஆண்டுகள் கழிந்த பிறகு சொல்வது ஏன்? உண்மையிலேயே குற்றம் நடந்திருந்தால் காவல் துறையில் புகார் செய்ய வேண்டியதுதானே? வழக்கு தொடுத்திருக்கலாமே? குற்றச்சாட்டுக்கு ஆதாரம் என்ன? புகழேணியில் இருப்பவர்களுக்குக் களங்கம் கற்பிக்கிற சூழ்ச்சிதானே? விளம்பரம் தேடுகிற உத்திதானே?

இந்தக் கேள்விகள் அனைத்திலும் நியாயம் இருக்கலாம். ஆனால், யாரையுமே முழுமையாகப் பேசவிடாமல் குறுக்கிட்டுக்கொண்டே இருந்ததில் கொஞ்சமும் நியாயமில்லை. அப்படிக் குறுக்கிட்டதில் வெளிப்பட்டது ஊடகவியலாளர் என்ற அடையாளமல்ல, பெண்கள் என்பதால் எப்படி வேண்டுமானாலும் குறுக்கிடலாம் என்ற ஆணாதிக்க மனநிலைதான்.

யேய் வாயை மூடு, நான் கேட்கிறதுக்கு மட்டும் பதில் சொல்லு என்று மிரட்டி உளவியலாக ஒடுக்குகிற போலீஸ் மனப்பான்மையும் இதிலே இருக்கிறது. இத்தகைய ஒரு குற்றத்தால் தாக்கப்பட்டவரால் உடனடியாகக் கோவையாகப் பதிலளிக்க இயலாது, சில பல ஆண்டுகள் கடந்த பின், மனதில் அசைபோட்டுக்கொண்டே இருந்ததன் விளைவாக நிதானத்துடன் பதிலளிக்க இயலும் என்பது உளவியல் பாடம்.

மீ டூ இயக்கம் வழக்குத் தொடுக்கிற அமைப்பு அல்ல, சாதாரணப் பெண்கள் துணிந்து முன்வந்து தங்களுக்கு நேர்ந்த கொடுமையை வெளிப்படையாகப் பேச ஊக்குவிக்கிற இயக்கம்தான் அது என்று சங்கத்தின் சார்பில் லட்சுமி ராமகிருஷ்ணன் சொன்னார். அதைச் செய்தியாளர்களில் ஒரு பகுதியினர் காதில் வாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை. ஆவணப்பட இயக்குநர் லீனா மணிமேகலை வந்தபோது, அவருடைய குற்றச்சாட்டைச் சுற்றியே மேற்படி கேள்விகளோடு வலம் வந்தார்கள். அவர், அந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக ஏற்கெனவே ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தி விளக்கமளித்துவிட்டதைக் கூறி, இந்தச் சந்திப்பின் நோக்கம் வேறு என்று அவர் அளித்த பதிலை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை, இங்கே இப்போதே ஆதாரம் என்ன? ஏன் இப்போது சொல்கிறீர்கள்? என்ற கேள்விகளுக்கு மட்டுமே அவர் பதில் சொல்லியாக வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.

பாடகர் சின்மயி எழுந்து நின்று கண்கலங்கிக் கையெடுத்துக் கும்பிட்டு ஏதோ சொல்ல அனுமதி கேட்கிறார். அந்த அனுமதியும் மறுக்கப்படுகிறது, மறுபடி என்ன ஆதாரம், ஏன் இத்தனை ஆண்டுகள் என்ற கேள்விகளே வீசப்படுகின்றன. நடிப்புக் கலைஞர் ஸ்ரீரஞ்சனி, தனது ‘மீ டூ’ வெளிப்பாட்டைத் தொடர்ந்து, குற்றம்சாட்டப்பட்ட மற்றொரு ஆண் கலைஞர் அதை ஒப்புக்கொண்டு வருத்தம் கோரியதைக் குறிப்பிடுகிறார், அப்படிப்பட்ட ஆக்கபூர்வமான நிகழ்ச்சி பற்றி வெளியே தெரியவிடக் கூடாது என்று முடிவு செய்ததுபோல அவரையும் தொடர்ந்து பேசவிடாமல் தடுக்கிறார்கள்.

ஊடகவியலாளர்கள் பல கோணங்களிலும் கேள்விகளை எழுப்பத்தான் வேண்டும், அழைத்தவர்கள் சொல்வதை அப்படியே குறிப்பெடுத்துக்கொண்டு போக வேண்டியதில்லை. ஆனால், ஒரே மாதிரியான கேள்விக்குத்தான் பதில் சொல்ல வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிற கட்டப் பஞ்சாயத்தாரர்களாக மாறிவிடக் கூடாது.

வெட்கப்படவைத்த தருணம்

பத்திரிகையாளர் கவின் மலர் இந்த நிகழ்ச்சி பற்றி முகநூலில் பதிவிட்டிருக்கிறார். முன்பு வெளியான ‘விதி’ என்ற திரைப்படத்தின் நீதிமன்றக் காட்சியில், பாலியல் புகார் கூறிய பெண்ணைக் கூண்டில் நிறுத்திக் கேள்வி கேட்கிற வழக்குரைஞர் ஜெய்சங்கர், குற்றம் எப்படி நடந்தது, எதிரி எங்கே தொட்டான், எப்படித் தொட்டான் என்றெல்லாம் அந்தப் பெண்ணைக் கூனிக் குறுகி நிற்க வைக்கிற கேள்விகளாகக் கேட்பார். அதுபோல் இருந்தது இந்தச் செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி என்று கூறும் கவின் மலர், ஊடகத் துறையில் இருப்பதற்காக வெட்கப்படுகிறேன் என்று தனது பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு சமூகச் செயற்பாட்டாளர், பிரஸ் மீட் நிகழ்ச்சியை ஒரு பிரபலமான ஆண் நடத்தியிருந்தால் இப்படி நடந்துகொண்டிருந்திருப்பார்களா? என்று நொந்து போய்க் கேட்டார். அமைச்சர்களோ, இதர அரசியல் தலைவர்களோ அறிக்கை வாசிக்கிறபோது, இதைக் கேட்பதற்காக நாங்கள் வரவில்லை என்று சொல்லியிருக்க முடியுமா?

மறுபடியும் தெளிவுபடுத்திவிடலாம் - திரைப்படப் பெண்கள் சங்கத்தினரின் அறிக்கையை தங்கள் கண்ணோட்டப்படி வரவேற்றோ, விமர்சித்தோ செய்தியாக்குவதற்கு ஊடகவியலாளருக்கு முழு உரிமை இருக்கிறது. வரவேற்கிறோமா, விமர்சிக்கிறோமா என்பது அவரவர் கொள்கை நிலைப்பாட்டைப் பொறுத்தது. தனிப்பட்ட முறையில் ஒரு செய்தியாளருக்கு ஒரு கண்ணோட்டம் இருந்தால்கூட, அவர் பணியாற்றுகிற ஊடக நிறுவனத்தின் கண்ணோட்டத்திற்கு உட்பட்டே செய்தியாக்க முடியும் என்பது வேறு விவகாரம். ஆனால், பேட்டியளிப்பவர்கள் என்ன பேச வேண்டும் என்று தீர்மானிப்பவர்களாக ஊடகவியலாளர்கள் மாறுவதில் என்ன நெறி இருக்கிறது?

### கடமை தவறும் ஊடகங்கள்

எனக்குள் ஏற்படும் இந்த ஊடக கர்வ பங்க உணர்வு, செய்தியாளர்கள் சில பேர் இப்படி நடந்துகொண்டார்கள் என்பதால் மட்டுமல்ல, இது ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகப் பரிணமிப்பதற்கு உதவுகிற முயற்சிகளைப் பெருவாரியான பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் வலைதள ஏடுகளிலும் காண முடியவில்லையே என்ற ஆதங்கத்தாலும்தான்.

திரைப்படத் துறை மட்டுமல்லாமல், அரசியல் அரங்கம், ஆன்மிக மடம், பல்கலைக்கழகம், பள்ளிக்கூடம், தொழிற்கூடம், அரசு அலுவலகம், ஊடக நிறுவன வளாகம் என எங்கும் களையாகப் புகுந்திருக்கிற பாலியல் அத்துமீறல்கள் பற்றிய விரிவான, ஊக்கமளிக்கிற விவாதங்களுக்கான வாய்ப்பு இப்போது துளிர்விட்டிருக்கிறது. அந்தத் துளிரில் முளையிலேயே அமிலம் ஊற்றுவது, குற்றம்சாட்டப்படுகிறவர்களுக்குச் சாதகமாக, குற்றம்சாட்டுகிறவர்களைப் பின்வாங்க வைக்கிற கைங்கரியம்தான்.

செய்தியாளர் சந்திப்பு நடந்ததற்கு மறுநாள் சென்னையில் சமூகச் செயற்பாட்டாளர்கள் நடத்திய பொது விசாரணையில் பங்கேற்ற உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு, முதல் முறையாக இப்படியொரு முன்முயற்சி தொடங்குகிறபோது, புகாரை ஆராய வேண்டுமேயல்லாமல் ஆதாரம் கேட்டுக்கொண்டிருப்பது முறையல்ல என்றார். இப்படிப்பட்ட குற்றங்களுக்கு ஆதாரங்கள் தாக்கல் செய்வது அவ்வளவு எளிதல்ல. அதற்காக யாரும் எப்போதும் தங்களுக்கு நேர்ந்தது பற்றிப் பேசக் கூடாதா? குற்றம் சாட்டப்பட்டவர்கள் வழக்குத் தொடர எந்தத் தடையும் இல்லை என்பதையும் மறந்துவிடலாகாது.

குற்றச்சாட்டு உண்மையல்ல என்றால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அதற்கான நீதித் தீர்ப்பைக் கோர முடியும். அது, தற்காலிகக் குற்றச்சாட்டுக் களங்கத்திலிருந்து கம்பீரமாக விடுபடச் செய்து அவர்களுக்குப் பெருமை சேர்க்கும். குற்றச்சாட்டு உண்மையெனில், அதை ஒப்புக்கொள்வதும், அதற்காக மனம் வருந்தி மன்னிப்புக் கோருவதும்தான் மாண்பு. அது அவர்களுக்கு இரட்டிப்புப் பெருமை சேர்க்கும். இன்றைய நிலையில் யாருடைய குற்றச்சாட்டு உண்மையானது, யாருடைய மறுப்பு நம்பகமானது என்பதை இனிவரும் நிகழ்ச்சிப் போக்குகள்தான் தீர்மானிக்கும். அதற்குள்ளாக இதில் சாதியையும் இனத்தையும் புகுத்துவது ஒருபோதும் உதவாது, யாருக்கும் உதவாது. பெண்களைப் பாலியல் நுகர்பொருளாக வைத்திருப்பதில் எந்தச் சாதியும் இனமும் சளைத்ததில்லை.

பாதுகாப்பற்ற பல சமூக வேலிகள், நீ என்ன யோக்கியமா? என்ற தரத்திலான கணைகள் ஆகியவற்றைச் சமாளித்துத்தான் இந்த இயக்கம் பரவ வேண்டியிருக்கிறது. பெண்களேகூட இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களே என்று சிலர் கேட்கிறார்கள். குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், வரதட்சணை தடைச் சட்டம் போன்றவை வந்தபோதும்கூட பெண்களை முன்னிறுத்தி எதிர்ப்புகள் கிளப்பப்பட்டதுண்டு. இந்து பெண்களுக்கான சொத்துரிமைக்காக அன்று சட்ட அமைச்சர் அம்பேத்கர் கொண்டுவந்த சட்ட முன்வரைவுக்குத் தீ வைத்தவர்களில் பெண்களும் இருந்தார்கள். அதற்காக இந்தச் சட்டங்கள் செல்லாதவையாகிவிடுமா?

### தடைகளை மீறி வளரும் இயக்கம்

குற்றம்சாட்டுகிற பெண்கள் மீது ஒழுக்கக் கேடு முத்திரைகள் குத்தப்படும், அவர்களுக்கான வாய்ப்புகளும் மறுக்கப்படும் என்ற அபாயங்கள் இருக்கின்றன. ஆகவே, எந்த ஆதாயமும் தராத மீ டூ பதிவுகளால் விளம்பரம் தேடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு அர்த்தமிழக்கிறது.

தற்போது வெளியில் வந்திருக்கிற பெண்களாவது பாதுகாப்பான சூழலைப் பெற்றிருக்கிறவர்கள், புகழ் வெளிச்சத்தில் நிற்பவர்கள். ஆனால், புகார்க் குரலை எழுப்பவே இயலாத தலித் பெண்கள் நாடு முழுக்க இருக்கிறார்கள். தலித் என்பதால் சாதிய ஒடுக்குமுறைக்கும், பெண் என்பதால் பாலியல் வன்முறைக்கும் இரையாக்கப்படுகிறவர்கள் அவர்கள். பழங்குடியினப் பெண்கள் நிலைமை இன்னும் மோசம். உழைக்கும் பெண்கள் பணித்தளங்களில் எதிர்கொள்கிற, வெளியே சொன்னால் வேலை போய்விடும் என்ற அப்பட்டமான அச்சுறுத்தலோடு கூடிய பாலியல் அத்துமீறல் கொடுமைகள் ஏராளம். அலுவலகங்களில் பாலியல் புகார் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற சட்ட விதி 90 சதவிகித இடங்களில் செயல்படுத்தப்படாததற்குக் காரணம், சட்டம் பற்றிய தகவலறிவு இல்லை என்பதல்ல. அந்த அலட்சியத்தின் அடியில் இருப்பது ஆண் திமிரே. இத்தகைய பெண்கள் சந்திக்கும் அவலங்கள் எப்போதோ நடப்பதல்ல, தினந்தோறும் நடப்பவை. உலகத்தின் கவனத்திற்கே வராமல் கடக்கப்படுபவை.

இன்று, மக்களுக்கு நன்கு அறிமுகமாகியிருக்கிற, முன்னேறிய தளங்களில் இருக்கிற பெண்களிடையேயிருந்து தொடங்கியிருக்கிற இந்த நானும் கூட சீண்டப்பட்டேன் என்ற மீ டூ இயக்கம், நிச்சயம் எதிர்காலத்தில் இந்தப் புகாரைத் தெரிவிக்கவே தகுதியற்றவர்களாக ஓரங்கட்டப்பட்டிருக்கிற பெண்கள் இனி நானும்கூடத் துணிந்துவிட்டேன் என்று உரக்க முழங்கிப் புறப்படுகிற பேரெழுச்சியாகப் பரிணமிக்கட்டும். அந்தப் பேரெழுச்சி, சட்டம் பாயும் அல்லது பெயர் கெட்டுப்போகும் என்ற ஆணின் அச்சத்திலிருந்து அல்லாமல், பாலியல் அத்துமீறல்கள் மானுடப் பண்பல்ல என்ற அறத்திலிருந்து, பாலியல் சுரண்டல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கட்டும்.

**கட்டுரையாளர் அ.குமரேசன்**

# 12 தொகுதிகளில் தி.மு.க. தோற்கும்!

தகுதிநீக்க வழக்கின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இருக்கிறார் டி.டி.வி.தினகரன். ‘18 தொகுதிகளுக்குத் தேர்தல் வந்தாலும் எட்டு தொகுதிகள்தான் நமக்கு சிரமமாக இருக்கும்’ என அமைச்சர்களிடம் விவாதித்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

மதுரையில் தனியார் ஹோட்டல் ஒன்றில் 18 முன்னாள் எம்.எல்.ஏ-க்களுடன் இன்று ஆலோசனை நடத்தினார் டி.டி.வி.தினகரன். கூட்டத்தின் முடிவில்,‘தகுதிநீக்க வழக்கின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 30 முதல் 90 நாள்களுக்குள் முறையிடுவது’ என முடிவு செய்யப்பட்டது. மேலும், தீர்ப்பால் பாதிக்கப்பட்ட 18 பேரும் சிறையில் சசிகலாவைச் சந்திப்பது எனவும் 22 தொகுதிகளிலும் உண்ணாவிரதம் இருப்பது எனவும் முடிவாகியுள்ளது. தீர்ப்பை எதிர்த்து, தினகரன் தரப்பினர் மேல்முறையீட்டுக்குச் செல்ல வாய்ப்பிருப்பதை அறிந்த ஆளும்கட்சியும், சபாநாயகர் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் கேவியட் மனுவைத் தாக்கல் செய்துள்ளது. ‘மேல்முறையீட்டுக்குச் சென்றாலும் உடனடியாகத் தீர்ப்பு வருவதற்கு வாய்ப்பில்லை. 18 தொகுதிகளில் தேர்தல் நடத்துவது எனத் தீர்மானித்தாலும் நாடாளுமன்றத் தேர்தலோடு நடத்தப்படவே வாய்ப்பு அதிகம். எனவே, தீர்ப்பின் மூலம் எடப்பாடி பழனிசாமி அரசுக்கான வாய்ப்பு நீட்டிக்கப்பட்டிருக்கிறது’ எனக் கருத்து தெரிவித்துள்ளனர் அரசியல் விமர்சகர்கள்.

அதேநேரம், ‘இந்தத் தீர்ப்பு ஆளும்கட்சி வட்டாரத்துக்கும் சேர்ந்தே அபாய மணியை ஒலிக்கவிட்டுள்ளது’ என்கிறார் அரசியல் விமர்சகர் ஒருவர். அவர் நம்மிடம் பேசும்போது,‘நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஏழு மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வந்துவிடும். இந்த இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு நாளையும் மிகக் கவனமாகவே கடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி’ என்றவர், ‘அ.தி.மு.க அரசுக்கு ஆதரவாக 116 எம்.எல்.ஏ-க்களும் தி.மு.க கூட்டணிக்கு 97 எம்.எல்.ஏ-க்களும் உள்ளனர். இவர்களைத் தவிர, அறந்தாங்கி, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி ஆகிய தொகுதிகளின் அ.தி.மு.க எம்.எல்.ஏ-க்கள் மூன்று பேரும் தினகரனுக்கு ஆதரவாக உள்ளனர். கருணாஸ், அன்சாரி நிலைப்பாடுகளும் ஆளும்கட்சிக்கு சாதகமாக இல்லை. தனியரசு மட்டும், எடப்பாடி பழனிசாமி பக்கம் போவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த ஆறு பேரைக் கணக்கிட்டால், 110 பேர் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக உள்ளனர்.







உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால், ஒரு சிலர் அணி மாறினாலே இந்த ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடும். இன்னும் ஆறு மாதங்களுக்குள் 20 தொகுதிகளுக்குத் தேர்தல் வந்தாலும் வெற்றி பெறுவதற்காகக் கடுமையாகப் போராட வேண்டிய சூழல் உருவாகும். எனவே, தற்போதுள்ள சூழ்நிலையை அ.தி.மு.க எம்.எல்.ஏ-க்கள் பயன்படுத்திக்கொள்ளவே விரும்புகின்றனர். 110 பேரும் அமைச்சர்களாகத்தான் தங்களை நினைத்துக்கொள்கின்றனர். இவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய சூழலை, இந்தத் தீர்ப்பு வழங்கிவிட்டது. இனி வரும் நாள்களில் அ.தி.மு.க எம்.எல்.ஏ-க்களின் தேவைகளை நிறைவேற்றுவதே சவாலான பணியாக இருக்கும். இதற்கிடையில், நம்பிக்கையில்லா தீர்மானத்தைத் தி.மு.க கொண்டு வந்துவிட்டால், ஆளும்கட்சி எம்.எல்.ஏ-க்களுக்கு டிமாண்ட் அதிகமாகிவிடும். அனைத்து சூழல்களையும் கண்காணித்தபடியே ஆட்சியை நகர்த்திக்கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி’ என்றார் விரிவாக.

ஆனால், இந்த விவகாரம் குறித்து நம்மிடம் பேசிய அ.தி.மு.க முன்னணி நிர்வாகி ஒருவர், ‘கருணாநிதி, ஜெயலலிதாபோல ஆவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. தினகரனை அவர் எந்தக் காலத்திலும் கட்சிக்குள் எப்போதும் சேர்க்கப் போவதில்லை. இந்தத் தீர்ப்பால், மக்கள் மனதில் தினகரன் தரப்பினர் மீது ஓர் அனுதாபம் ஏற்பட்டுள்ளதையும் ஆளும்கட்சி உணர்ந்திருக்கிறது. இந்தத் தொகுதிகளில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டாலும், ஆளும்கட்சிக்கு எந்தவிதச் சிக்கலும் இருக்கப் போவதில்லை.

இதுகுறித்து எங்களிடம் பேசிய முதல்வர், ‘18 தொகுதிகளிலும் போட்டியிடுவதில் நமக்கு எந்தச் சிரமமும் இல்லை. தேர்தல் வந்தால் 12 தொகுதிகளில் ஆர்.கே.நகர் போல தி.மு.க-வுக்கு டெபாசிட் பறிபோகும். இந்தத் தொகுதிகளில் எப்படி வெற்றி பெறுவது என்பது எனக்குத் தெரியும். ஆர்.கே.நகரில் தினகரன் வெற்றி பெற்றுவிட்டதால், இந்த 18 தொகுதிகளிலும் அவருக்கு செல்வாக்கு இருக்கும் என நினைக்க வேண்டியதில்லை. தினகரன் நிறுத்தப்போகும் வேட்பாளர்களுக்கு வெற்றி கிடைக்கப்போவதில்லை. தஞ்சை, பூந்தமல்லி, திருப்போரூர், பெரம்பூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட 8 தொகுதிகள்தான் நமக்குக் கொஞ்சம் சிரமமாக இருக்கும். மற்ற தொகுதிகளில் நாம் எளிதாக வெற்றி பெறுவோம். தினகரனுக்கும் சசிகலாவுக்கும் இனி அரசியல் எதிர்காலம் கிடையாது’ என்றார். அவரது கருத்தை அமைச்சர்கள் சிலரும் ஏற்றுக்கொண்டனர்’என்றார் விரிவாக.

**ஆ.விஜயானந்த்**

---

## மகிந்தவும்...

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

பங்கெடுப்பதற்காகவே இருக்கும் என்று தெரிகின்றது. அதன்மூலம் தனது மக்கள் செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது அவரின் மனக் கணக்காக இருக்கலாம். எனவே தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் போர் குற்றங்களில் இந்த தகவல் மூலம் அவருக்கும் இடமிருக்கின்றது. எனவே இவர்மீது கொண்டுள்ள நம்பிக்கை தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் நாசமாகிக் கொண்டிருக்கின்றது. எனவே தமிழ் மக்களைப் பொறத்தவரையில் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்பட கூடிய ஆபத்து உருவாகிக் கொண்டிருக்கின்றது என்பதே உண்மையாகும். எனவே தற்போதுள்ள அரசியல் சூழலில் மஹிந்தவோடு உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபடக் கூடும். அப்படி இருவரும் மீண்டும் ஒன்றிணைந்தால் இருவருக்கும் சாதமான சூழல்கள் உருவாகலாம்.

மஹிந்த எண்ணமெல்லாம் பிரதம மந்திரி பதவியைச் சுற்றியே நிற்கின்றது. மைத்திரி ஜனாதிபதியாக மீண்டும் வரவேண்டும் என்ற ஆசையில் இருக்கின்றார். எனவே இருவரும் தாங்கள் விரும்பும் பதவிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடக் கூடிய நிலைமை இந்த இணைப்பின் மூலம் உருவாகக் கூடும். அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பது என்பது இதன் மூலம் அவர்களின் இணைப்பு மூலம் அரசியல் அரங்கில் உறுதிப்படுத்தப்படும்.

# விராட் கோலியாக இருப்பது எளிதானதல்ல!



இங்கிலாந்து தொடருக்குப் பிறகு ஆசியக் கோப்பையில் விராட் கோலியின் பணிச்சுமையைக் குறைக்க அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டது. பிறகு மே.இ,தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலும் அசத்தி தற்போது ஒருநாள் போட்டிகளிலும் அடுத்தடுத்து சதம் விளாசி சாதனைகள் பல செய்து வருகிறார்.

இந்நிலையில் விராட் கோலியின் சதங்கள், சாதனைகள் உலக அளவில் நிபுணர்களை கவர்ந்திழுத்துள்ளதோடு, நம் ஹர்பஜன் சிங்கிடமும் திகைப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு ஹர்பஜன் சிங் அளித்த பேட்டியில் விராட் கோலியாக இருப்பது சுலபமானதல்ல என்று தெரிவித்துள்ளார்.

விராட் கோலியைப் பற்றி பேசினால்... நான் அவருக்கு சல்யூட் செய்கிறேன்.. ஒவ்வொரு முறையும் அவர் பலத்த எதிர்பார்ப்பில் களமிறங்கும் போதெல்லாம் ரன் குவிக்கிறார்.

அவரை பார்க்க அதிசயமாகவே உள்ளது, நம்ப முடியவில்லை.. அவர் ஒரு ரன் எந்திரம், விராட் கோலியாக இருப்பது எளிதானதல்ல. அணியின் ஒட்டுமொத்த சுமையையும் தோள்களில் சுமக்கிறார்.

அவரது ஆட்டம் மிகப்பிரமாதமாக உள்ளது. சந்தேகமின்றி சில ஆண்டுகளாக நான் பார்த்த வரையில் கோலிதான் நம்பர் 1 பேட்ஸ்மென். என்று ஹர்பஜன் சிங் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

# இன்னொரு ஷேன் வார்ன்? ஆஸி. இளம் லெக் ஸ்பின்னர் உள்நாட்டு கிரிக்கெட்டில் 7 விக். வீழ்த்தி சாதனை



ஆஸ்திரேலியாவின் உள்நாட்டுக் கிரிக்கெட் தொடரான ஷெஃபீல்ட் ஷீல்ட் போட்டியில் தெற்கு ஆஸ்திரேலியா அணியின் 18 வயது இளம் லெக்ஸ்பின்னர் லாய்ட் போப் குவீன்ஸ்லாந்துக்கு எதிராக ஒரு இன்னிங்சில் 7 விக்கெட்டுகளை வீழ்த்திய இளம் பந்து வீச்சாளர் என்ற சாதனையை நிகழ்த்தினார்.

ஷேன் வார்னுக்குப் பிறகு ஒரு ஜீனியஸ் பவுலரை உருவாக்க ஆஸ்திரேலியா திணறி வரும் நிலையில் லாய்ட் போப் 7 விக்கெட்டுகளை 87 ரன்கள் கொடுத்து வீழ்த்தியது ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

அடிலெய்ட் ஓவலில் முதல் நாள் ஆட்டத்தில் குவீன்ஸ்லாந்து அணி லாய்ட் போப்பின் சுழலைச் சமாளிக்க முடியாமல் 231 ரன்களுக்குச் சுருண்டனர். அதுவும் அடிலெய்ட் ஓவல் பிட்ச் வேகப்பந்து, ஸ்விங்குக்குச் சாதகமாக இருக்கும் முதல் நாளில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தியது லாய்ட் போப் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

லாய்ட் போப் ஏற்கெனவே நியூசிலாந்தில் நடந்த யு-19 உலகக் கோப்பை கிரிக்கெட்டில் இங்கிலாந்துக்கு எதிராக 35 ரன்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியதும் குறிப்பிடத்தக்கது.

ஜோ மென்னி என்ற பவுலர் முன்னதாக மேட் ரென்ஷா, மார்னஸ் லபுஷான் ஆகியோரை வீழ்த்த, சாத் சேயர்ஸ், சார்லி ஹெம்ப்ரி என்ற வீரரை வீழ்த்த 3/29 என்று குவீன்ஸ்லாந்து சரிவு கண்டது.

இதன் பிறகு 24வது ஓவர்தான் லாய்ட் போப் பந்து வீச அழைக்கப்பட்டார். முதல் பந்திலேயே சாம் ஹியாஸ்லெட்டை வீழ்த்தினார். டெஸ்ட் வீரர் ஜோ பர்ன்ஸ் அரைசதம் எடுக்க ஜாக் வில்டர் ஸ்மித்தும் துணை நிற்க ஸ்கோர் 133/4 என்று இருந்தது, ஆனால் அதன் பிறகு லாய்ட் போப் கூக்ளியை நன்றாக திருப்பினார்.

பிறகு முதல் 3 விக்கெட்டுகள் நீங்கலாக அதன் பிறகு அனைத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தி 87 ரன்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை கைப்பற்றி ஷெஃபீல்ட் ஷீல்டில் ஒரு இன்னிங்சில் 7 விக்கெட்டுகளை இளம் வயதில் கைப்பற்றிய சாதனையை நிகழ்த்தினார் லாய்ட் போப்.

# தோனிதான் எனக்குப் பிடித்த வீரர்: பாக். வீராங்கனை



தோனிதான் எனக்குப் பிடித்த வீரர் மற்றும் கேப்டன் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் மகளிர் அணியின் முன்னாள் கேப்டனும், பந்து வீச்சாளருமான சனா மிர் தெரிவித்திருக்கிறார்.

கிரிக்கெட் தொடர்பான தனியார் நிகழ்ச்சி ஒன்றில் சனா மிர் பங்கேற்றார்.

அதில் நீங்கள் எதிர்காலத்தில் எந்த கிரிக்கெட் வீரரைப் போல் ஆக விரும்புகிறீகள் என்ற கேள்விக்கு சனா பதிலளித்தபோது, பாகிஸ்தானைப் பொறுத்தவரை எனக்கு இம்ரான் கான் பிடிக்கும். மற்றபடி தோனிதான் எனக்குப் பிடித்த வீரர். எனக்குப் பிடித்த கேப்டனும் தோனிதான் என்று தெரிவித்தார்.

பாகிஸ்தான் மகளிர் அணியின் கிரிக்கெட்டில் நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பவர் சனா மிர். இவர் தற்போது ஐசிசி வெளியிட்டுள்ள ஒரு நாள் போட்டிகளுக்கான மகளிர் பந்து வீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறார்.

இதுகுறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் சனா குறிப்பிடும்போது, இது அணியின் கூட்டு முயற்சியாகும். பெரிய அணிகளுடன் எனக்கு விளையாட வாய்ப்பளித்த ஐசிசிக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பயிற்சியாளர் மார்க் கோல்ஸுக்கு நன்றி. அவர் எனது வயதைவிட எனது திறமையை அதிகம் பார்த்தார் என்று தெரிவித்துள்ளார்



# டியர் கோலி... நீங்கள் சச்சினைவிட சிறந்த பேட்ஸ்மேனா..?

சச்சினின் காலகட்டம் என்பது பௌலர்கள் கோலோச்சிய, பயம்காட்டிய, பதற்றம்கூட்டிய காலம். மெக்ராத், கில்லெஸ்பி, ஷேன் வார்னே, பிரெட் லீ, வாசிம் அக்ரம், வக்கார் யூனுஸ், சக்லைன் முஸ்தாக், ஆலன் டொனால்டு, ஷான் பொல்லாக், ஆம்புரோஸ், கோர்ட்னி வால்ஷ், சமிந்தா வாஸ், முத்தையா முரளிதரன், ஹீத் ஸ்ட்ரீக், ஹென்ரி ஒலாங்கா, டேரன் காஃப், ஆலன் முல்லாளி, ஆண்ட்ரூ ஃப்ளின்ட்டாஃப், ஷேன் பாண்ட், கிறிஸ் கெய்ன்ஸ் என ஒவ்வொரு டீமிலும் ஸ்ட்ரைக்கிங் பௌலர்கள் இருந்த காலம் அது.

டியர் கோலி... நீங்கள் சச்சினைவிட சிறந்த பேட்ஸ்மேனா..? ஒரு சச்சின் ரசிகனின் கடிதம்!

நான் கோலி வெறுப்பாளன் கிடையாது. கோலியை மிகவும் நேசிக்கும், மதிக்கும், பிரமிக்கும் மனிதன் நான். விராட் கோலி இந்தத் தலைமுறையின் நாயகன். ஆனால், 'சச்சினைவிட கோலி சிறந்த பேட்ஸ்மேன்' என்கிற ஒப்பீடுகளை என்னால் ஒரு போதும், ஒருகாலமும் ஏற்றுக்கொள்ள முடியாது. சச்சின் கிரிக்கெட்டின் பிதாமகன்!

சச்சினின் காலகட்டம் வேறு... விராட் கோலியின் காலகட்டம் என்பது வேறு. 'சிவாஜி ஓவர் ஆக்டிங்' என இந்தத் தலைமுறை சொல்வது எவ்வளவு அபத்தமோ, அதே அளவுக்கு அபத்தமானது சச்சின் - கோலி ஒப்பீடு. கமலை ரஜினியுடன்தான் ஒப்பிடமுடியும். ரஜினியைக் கமலுடன் ஒப்பிட்டுத்தான் பேசமுடியும். கமலை தனுஷோடு ஒப்பிடமுடியுமா, ஒப்பிடுவது சரியா?

கோலி எராவின் மிகச்சிறந்த பௌலர் யார் எனக் கொஞ்சம் யோசிக்காமல் சொல்ல முடியுமா. நிச்சயம் பெயர்கள் மனதில் வராது. ஏனென்றால் இந்தக் காலகட்டத்தில் அப்படி பேட்ஸ்மேன்களை அச்சுறுத்தும் பௌலர்கள் என்று யாரும் கிடையாது. ஆனால், சச்சினின் காலகட்டம் என்பது பௌலர்கள் கோலோச்சிய, பயம்காட்டிய, பதற்றம்கூட்டிய காலம். மெக்ராத், கில்லெஸ்பி, ஷேன் வார்னே, பிரெட் லீ, வாசிம் அக்ரம், வக்கார் யூனுஸ், சக்லைன் முஸ்தாக், ஆலன் டொனால்டு, ஷான் பொல்லாக், ஆம்புரோஸ், கோர்ட்னி வால்ஷ், சமந்தா வாஸ், முத்தையா முரளிதரன், ஹீத் ஸ்ட்ரீக், ஹென்ரி ஒலாங்கா, டேரன் காஃப், ஆலன் முல்லாளி, ஆண்ட்ரூ ஃப்ளின்ட்டாஃப், ஷேன் பாண்ட், கிறிஸ் கெய்ன்ஸ் என ஒவ்வொரு டீமிலும் ஸ்ட்ரைக்கிங் பௌலர்கள் இருந்த காலம் அது.

இன்று இலங்கை, வெஸ்ட் இண்டீஸ், ஜிம்பாப்வே, நியூஸிலாந்து என எல்லா அணிகளுமே பழம்பெருமை பேசும் அணிகளாகிவிட்டன. 90-2000-களில் இவை ஸ்டார் பேட்ஸ்மேன்களும், ஸ்ட்ரைக்கிங் பௌலர்களும் நிரம்பியிருந்த திறமையான அணிகள். அப்போதைய கென்யா அணிகூட பலம்வாய்ந்த அணியாக இருந்தது. ஒட்டியானோ, டிக்கோலோ, ஒடும்பே, மார்ட்டின் சுஜி என கென்யா அணியில்கூட பெயர் சொல்லும் ப்ளேயர்கள் இருந்தார்கள். ஆனால், இன்றோ நிலைமையே தலைகீழ். 90-களில் இந்தியாவைப் புரட்டியெடுத்த இலங்கையின் இன்றைய லைன் அப் என்ன. ஒரு நட்சத்திர வீரராவது அங்கே இருக்கிறாரா?

சச்சின் 10,000 ரன்கள் என்னும் மைல்கல்லைத் தொட்டது ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக. 2001-ம் ஆண்டு இந்தூரில் நடந்தது அந்தப் போட்டி. க்ளென் மெக்ராத், டேமியன் ஃப்ளெம்மிங், ஷேன் வார்னே என உலகின் முக்கிய பௌலர்களுக்கு எதிராக, அவர்களின் பௌலிங்கை துவம்சம் செய்து 139 ரன்கள் குவித்து 10,000 ரன்களைக் கடந்தார் சச்சின் டெண்டுல்கர். அன்று மட்டும் 19 பவுண்டரிகள் சச்சினின் பேட்டில் இருந்து தெறித்தது. ஈஸியாக இந்தோரை பேட்டிங் பிட்ச் என்று சிலர் சொல்லிவிடலாம். ஆனால், அன்று இந்தியாவின் டார்கெட்டான 300 ரன்களுக்கு ஆஸ்திரேலியாவின் பதிலடி 181 ரன்கள் மட்டுமே. கில்கிறிஸ்ட், பான்டிங், மைக்கேல் பெவன், ஸ்டீவ் வாக், ஆண்ட்ரூ சைமண்ட்ஸ், டேரன் லீமேன் என அன்றைய உலகின் பவர்ஃபுல் பேட்டிங் லைன் அப்பைக் கொண்டிருந்த ஆஸ்திரேலியாவாலேயே அங்கு ரன்கள் எடுக்கமுடியவில்லை என்பதே உண்மை.

கோலியை குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், இன்றைய வெஸ்ட் இண்டீஸ் டீமில் பெயர்சொல்லக்கூடிய பௌலர் ஒருவரை சொல்லுங்கள் பார்ப்போம். ஹோல்டர், ரோச், நர்ஸ், பிஷூ எனக் கத்துக்குட்டி பௌலர்களை அடித்து துவைப்பதில் எல்லாம் என்ன பெரிய பெருமை இருக்கிறது. சச்சினைவிட கோலியின் ஸ்ட்ரைக் ரேட் அதிகம், ஆவரேஜ் அதிகம், இன்னிங்ஸ்கள் குறைவு எனத் தயவுசெய்து புள்ளிவிவரங்களை தூக்கிக்கொண்டு வர வேண்டாம். புள்ளிவிவரங்கள் சொல்வது எல்லாமே உண்மையில்லை. காலம்தான் முக்கியம். யாருக்கு எதிராக, எந்த மாதிரியான அணிக்கு எதிராக, எப்படிப்பட்ட பௌலர்களுக்கு எதிராக ஒரு பேட்ஸ்மேன் ரன்கள் அடிக்கிறார் என்பதுதான் இங்கே முக்கியம்.

சச்சினின் ரசிகனாக நான் அடுத்து சொல்லப் போவது கொஞ்சம் ஓவராகக்கூடத் தோன்றலாம். ஆனால், இதில் உண்மை இருக்கிறது. சச்சினுக்கு லைஃப் கிடைக்காது. அதாவது அவரது கேட்சை யாராவது தவறவிட்டிருந்தால் அன்று சச்சின் 100 ரன்கள் அடிக்காமலேயே அவுட் ஆகிவிடுவார். கேட்ச் டிராப் ஆகி சச்சின் சதம் அடித்த இன்னிங்ஸ்கள் எல்லாம் என் நினைவுக்குத் தெரிந்து இல்லை. ஆனால், நேற்றுகூட கோலி 157 ரன்கள் குவித்த இன்னிங்ஸில் அவர் அரை சதம் அடிப்பதற்கு முன்பாகவே கேட்ச் டிராப் ஆனது.

இன்று அம்பயரிங், தொழில்நுட்பத்தாலும், புதிய விதிமுறைகளாலும் முன்னேற்றம் கண்டுவிட்டது. அம்பயர் அவுட் கொடுத்தாலும் அவுட் இல்லை என ரிவ்யூ கேட்கமுடியும். ஆனால், அன்று அப்படியில்லை. எத்தனை முறை 80களிலும், 90 ரன்களிலும் அம்பயர்களின் தவறான முடிவால் சச்சின் அவுட் ஆகியிருக்கிறார் தெரியுமா. நோ பாலிலும், தவறான எல்பிடள்யூ அவுட்களாலும், பந்து பேட்டில் படாமலேயே கீப்பரிடம் கேட்சாகியும் சச்சின் தவறவிட்ட சதங்களின் எண்ணிக்கையே 50-ஐத் தொடும்.

சச்சின் டெண்டுல்கர் தனக்கு இணையான திறமையாளர்களுடன், ஸ்டார்களுடன் விளையாடியவர். சச்சின் சுயநலத்துக்காக தனக்காக மட்டுமே ஆடினார் என்பது காலகாலமாக அவர் மீது வைக்கப்படும் கொடூரமான, உண்மைகள் இல்லாத அறமற்ற விமர்சனம். 1996 உலகக்கோப்பை நினைவிருக்கிறதா, சச்சினை மட்டுமே நம்பி இந்தியா களமிறங்கிய உலகக்கோப்பை தொடர் அது.

சச்சின் அவுட் ஆனால் இந்தியா அவுட். அதுதான் அன்றைய நிலை. ஒட்டுமொத்த பிரஷரையும் தன்மேல் தூக்கிச் சுமந்தவர் சச்சின். கோடிக்கணக்கான மக்களின் கனவுகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அவர்மீது சுமத்தப்பட்டது. 1996 உலகக் கோப்பையின் முதல் போட்டியில் இந்தியா, கென்யாவுடன் ஆடும். கென்யா எப்படிப்பட்ட அணி என்பதே அப்போது யாருக்கும் தெரியாது. கென்யா முதலில் பேட்டிங் செய்து 199 ரன்கள் எடுத்தது. சச்சினும், ஜடேஜாவும்தான் சேஸிங்கைத் தொடங்குவார்கள். மிகவும் நிதானமாக ஆடுவார் சச்சின். ஜடேஜா 53 ரன்னில் அவுட். சித்து 1 ரன்னில், காம்ப்ளி 2 ரன்னில் அவுட் என நடையைக்கட்டுவார்கள். ஆனால், கடைசிவரை களத்தில் நின்று 127 ரன்கள் அடித்து இந்தியாவின் வெற்றிக்கணக்கை சென்சுரியோடு தொடங்கிவைப்பார் சச்சின்.

இரண்டாவது லீக் ஆட்டத்தில் இந்தியா வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்ளும். 50 ஓவர்களில் 173 ரன்களுக்கு ஆல் அவுட் ஆகும் வெஸ்ட் இண்டீஸ். குறைவான டார்கெட்தான். ஆனால், இந்தியா வெற்றிபெறுமா என்பது மிகப்பெரிய கேள்வியாகவே இருந்தது. காரணம் வெஸ்ட் இண்டீஸின் பௌலிங் லைன் அப். வால்ஷ், ஆம்புரோஸ், பிஷப், கிப்சன், ஹூப்பர் என ஸ்ட்ரைக்கிங் பௌலர்களைக் கொண்டிருந்தது வெஸ்ட் இண்டீஸ் அணி. ஓப்பனிங் பேட்ஸ்மேன் ஜடேஜா 1 ரன்னில் அவுட் ஆவார். சித்து 1 ரன்னில் அவுட், அசாருதின் 32 ரன்னில் அவுட் என இந்தியாவின் டாப் ஆர்டர் கழன்றுகொண்டேயிருக்கும். ஆனால், சச்சின் மட்டும் களத்தில் நின்று 70 ரன்கள் அடிப்பார். அப்போதும் அவர் ரன் அவுட்தான். மேற்கு இந்திய வீரர்கள் அவரது விக்கெட்டை வீழ்த்தவில்லை. அணியின் ஸ்கோர் 125 ரன்னில் இருக்கும்போது சச்சின் அவுட் ஆவார். காம்ப்ளி கடைசி நேரத்தில் நின்று அடிக்க இந்தியா வெற்றிபெறும்.



அடுத்த போட்டி ஆஸ்திரேலியாவுடன். மார்க் வாக் சதம் அடிக்க, மார்க் டெய்லர் அரை சதம் அடிக்க, ஆஸ்திரேலியா 50 ஓவர்களில் 258 ரன்கள் அடிக்கும். மெக்ராத், டேரன் ஃப்ளெம்மிங், ஷேன் வார்னே, மைக்கேல் பெவன், மார்க் வாக், ஸ்டீவ் வாக் என ஆஸ்திரேலியா மிகச் சிறப்பான பௌலிங் அட்டாக்கை வைத்திருந்தது. வழக்கம்போல ஓப்பனிங் பேட்ஸ்மேன் ஜடேஜா 1 ரன்னில் அவுட், வினோத் காம்ப்ளி டக் அவுட், கேப்டன் மொகமது அசாருதின் 10 ரன்னில் அவுட் என டாப் ஆர்டர் எகிறும். சஞ்சய் மஞ்ரேக்கருடன் இணைந்து பார்ட்னர்ஷிப் போடுவார் சச்சின். மெக்ராத், ஃப்ளெம்மிங், வார்னே என எல்லோருடைய பந்துகளையும் சிதறடிப்பார் சச்சின். 84 பந்துகளில் 90 ரன்கள். 14 பவுண்டரி 1 சிக்ஸர். கடைசியில் பார்ட் டைம் ஸ்பின்னரான மார்க் வாக்கின் பந்து வீச்சில் ஸ்டம்ப்பிங் ஆகி வெளியேறுவார். இந்தியாவின் வெற்றிக்கனவும் முடிவுக்கு வரும்.

அடுத்ததுதான் மிக முக்கியமான ஆட்டம். இந்தியா இலங்கையைச் சந்திக்கும். சமிந்தா வாஸ், முத்தையா முரளிதரன், குமார தர்மசேனா, ஜெயசூர்யா என வேகப்பந்து, ஸ்பின் என அச்சுறுத்தும் பௌலிங் லைன் அப்போடு களமிறங்கியது இலங்கை. இந்தியாதான் முதலில் பேட்டிங். ஜடேஜாவுக்கு பதில் மனோஜ் பிரபாகர் ஓப்பனிங் பேட்ஸ்மேனாக இறங்குவார். ஆனால், ரிசல்ட்டில் எந்த மாற்றமும் இல்லை. 36 பந்துகள் எதிர்த்து ஆடி வெறும் 7 ரன்கள் எடுத்து அவுட் ஆவார் பிரபாகர். அடுத்து மஞ்ச்ரேக்கர் கொஞ்ச நேரம் நின்று 32 ரன்கள் அடிப்பார். சச்சின் அப்போதைய கேப்டன் அசாருதினுடன் பார்ட்னர்ஷிப் போட்டு இலங்கையின் பௌலிங்கைப் புரட்டியெடுப்பார். 137 பந்துகளில் 137 ரன்கள். 8 பவுண்டரி 5 சிக்ஸர். அணியின் ஸ்கோர் 268 ரன்கள் இருக்கும்போது சச்சின் அவுட் ஆவார். இந்தியாவின் டோட்டல் 271 ரன்கள்.

ஆனால், இந்த ஸ்கோரை இலங்கை ஈஸியாக சேஸ் செய்துவிடும். ஏனென்றால், இந்தியாவின் பௌலிங் லைன் அப் அப்படி. மனோஜ் பிரபாகரின் கேரியரையே அன்றோடு முடிவுக்குக் கொண்டுவந்தார் ஜெயசூர்யா. மனோஜ் பிரபாகரின் 4 ஓவர்களில் மட்டும் 47 ரன்கள். அன்றைய போட்டியில் சச்சின் பௌலிங்கும் போட்டிருப்பார். பௌலர்கள் எல்லாம் எக்கானமி ரேட்டில் அடிவாங்க சச்சின் 10 ஓவர்கள் வீசி 41 ரன்கள்தாம் கொடுத்திருப்பார். ஜெயசூர்யா, ரணதுங்கா, திலகரத்னே என இலங்கை வீரர்கள் எல்லோரும் சேர்ந்து அடிக்க கூட்டுமுயற்சியில் இலங்கை வெற்றிபெறும். சச்சினின் சதம் வீணாகப் போகும். சச்சின் சதம் அடித்தால் இந்தியா தோற்கும் என்கிற அபாண்டமான விமர்சனங்கள் அப்போதிருந்துதான் எழ ஆரம்பித்தன.

1996 உலகக்கோப்பையில் சச்சின் சிங்கிள் டிஜிட்டில் அவுட் ஆன ஒரே போட்டி ஜிம்பாப்வே அணிக்கு எதிரான லீக் போட்டிதான். ஹீத் ஸ்ட்ரீக் பௌலிங்கில் 3 ரன்னில் க்ளீன் போல்டாவார் சச்சின். 1996 உலகக்கோப்பையில் இலங்கைக்கு எதிரான இந்தியாவின் அரை இறுதிப்போட்டியை ரசிகர்கள் யாரும் மறக்கமுடியாது. 252 ரன்கள்தாம் இந்தியாவுக்கு டார்கெட். வழக்கம் போல ஓப்பனிங் பேட்ஸ்மேன்களில் ஒருவரான சித்து சிங்கிள் டிஜிட்டில் அவுட் ஆவார். மஞ்ரேக்கருடன் பார்ட்னர்ஷிப்பில் இறங்கி இந்தியாவின் சேஸிங்கைத் தொடர்வார் சச்சின். 88 பந்துகளில் 66 ரன்கள். 9 பவுண்டரிகள். ஜெயசூர்யாவின் பந்துவீச்சில் சச்சின் ஸ்டம்பிங் செய்யப்படும்போது இந்தியாவின் ஸ்கோர் 98 ரன்கள். அடுத்த 22 ரன்கள் அடிப்பதற்குள் இந்தியாவின் 7 விக்கெட்டுகள் சீட்டுக்கட்டு சரிவதுபோலச் சரிந்துகொண்டேயிருக்கும். சச்சின் அவுட். இந்தியாவும் அவுட்.

2000-ம்களில் கங்குலி, டிராவிட், ஷேவாக், யுவராஜ் சிங், மொகமது கைஃப் என பேட்ஸ்மேன்கள் உருவெடுக்க ஆரம்பித்த பிறகுதான் சச்சினின் மேல் ஏற்றப்பட்டிருந்த பாரம் குறையத் தொடங்கியது. அப்போதும் அது முழுமையாக நீங்கிவிடவில்லை. 1996 உலகக்கோப்பையில் எப்படி அதிக ரன்கள் அடித்தவர் சச்சின் டெண்டுல்கரோ அதேபோல் 2011 உலகக்கோப்பையிலும் அதிக ரன்கள் அடித்தவர் சச்சின்தான்.

2011 உலகக்கோப்பையை இந்தியா வென்றதும் இந்திய அணி வீரர்கள் தங்கள் தோள்களில் சச்சினைத் தூக்கிக்கொண்டு மும்பை வான்கடே மைதானம் முழுக்க வலம்வந்தார்கள். யுவராஜ், ரெய்னா, யூசுஃப் பதான், ஹர்பஜன் சிங் என சச்சினைத் தூக்கிக்கொண்டுவந்த வீரர்கள் பலர் மாறிக்கொண்டேயிருந்தார்கள். ஆனால், ஒருவர் மட்டும் மாறவேயில்லை. அவர் விராட் கோலி. மைதானம் முழுக்க சச்சினைத் தூக்கித் தோளில் சுமந்தார் கோலி. அப்போது ஹர்ஷா போக்ளே கோலியிடம் ஏன் மைதானம் முழுக்க சச்சினைத் தூக்கிக்கொண்டு வந்தீர்கள் எனக் கேட்க, '22 ஆண்டுகள் இந்திய கிரிக்கெட்டை தன் தோள்களில் தூக்கிச் சுமந்தவர் சச்சின். அவரை இப்போது நாங்கள் தூக்கிச் சுமப்பது எங்களுக்கு வாழ்நாள் பெருமை' என்றார் விராட் கோலி. ஆமாம்... கோலிக்குத் தெரியும் சச்சினுக்கு முன்னால் தான் யாரென்று.

ஒரு தலைமுறை என்பது 20 ஆண்டுகள் என்று சொல்கிறார்கள். ஆனால், கிரிக்கெட்டில் கிட்டத்தட்ட 25 ஆண்டுகள், ஒரு தலைமுறைக்கும் மேலே கோலோச்சியவர் சச்சின். ரன்கள் அடிப்பதற்கு சவாலான பிட்ச்களில் சதங்கள் அடித்திருக்கிறார். வேகத்தாலும், சுழலாலும் மிரட்டிய பௌலர்களை சிக்ஸர்களாலும், பவுண்டரிகளாலும் மிரளவைத்திருக்கிறார். அவர் சதம் அடிக்காத நாடுகளே கிடையாது என்னும் அளவுக்கு அவரது பேட்டிங் உச்சத்தில் இருந்தது. பேட்டிங் மட்டுமல்ல இந்தியாவின் எழுச்சிக்கு பௌலிங்கிலும் துணை நின்றவர் சச்சின்.

சச்சினின் யுகமே வேறு. அங்க அவருக்கு நிகர் யாருமே இல்லை என்பதே வரலாறு. சச்சினுக்கு முன்மாதிரிகளும் கிடையாது. பின் மாதிரிகளும் கிடையாது. ஒரு மைதானம் முழுக்க... 50 ஆயிரம் பேர்... ஒற்றைப் பெயரை மட்டுமே மந்திரம் போல உச்சரித்துக்கேட்டது உண்டா?

இன்றுவரை காதுகளில் சச்சின்... சச்சின்.. சச்சின்.... ஒலித்துக்கொண்டேயிருக்கிறது!

**சார்லஸ்**

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 28.10.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# புல்லுமலை குடிநீர்த் தொழிற்சாலை முற்றாக கைவிடப்பட்டது






**வாழையூர் ந.குகதர்சன்**

மட்டக்களப்பு பெரிய புல்லுமலையில் அமைக்கப்பட்டுவந்த போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்த் தொழிற்சாலை நிறுவும் பணியினை முற்றாக கைவிடுவதற்கு தீரமானித்துள்ளதாக ரொமன்சியா லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த பிரதேச மக்களின் தொழிற்சாலை அமைப்பதற்கு பல வகையில் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் அது போன்று தமிழ் உணர்வாளர்கள் அமைப்பினர் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர் இந்தநிலையில் எமது நிறுவனம் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் தொழிற்சாலை அமைப்பதில்லலை என தீர்மானித்துள்ளது என இந்நிறுவனத்தின் நிருவாகிகளின் ஒருவரான முகம்மட் அப்துல் ஜெஷீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பெரிய புல்லு மலையில் அமைக்கப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் தொழிற்சாலையினை நிறுத்துவது தொடர்பாக அறிவிக்கும் கூட்டம் செங்கலடி செல்லம் பிறிமியர் அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ரொமன்சியா லங்கா நிறுவனத்தின் உரிமையாளரான முகம்மட் மும்தாஜ் மௌலவியின் சகோதரரும் நிறுவனத்தின் நிருவாகிகளின் ஒருவரான முகம்மட் அப்துல் ஜெஷீம், முகம்மட் அமீர், தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன், அமைப்பின் உறுப்பினர்கள் பிரதேசத்தைச் சேர்ந்த மத தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அவர் கருத்து தெரிவிக்கையில் - குறித்த தொழிற்சாலைக்கும் காத்தான்குடி நகரசபைத் தவிசாளருக்கோ அல்லது இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவிற்கோ சம்மந்தம் கிடையாது. இந்த தொழிற்சாலையினை அரசியல்மயப்படுத்த வேண்டாம். இதைவைத்து சிலர் அரசியல் செய்கிறார்கள்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எப்போதும் ஒற்றுமையாக வாழ வேண்டும். இந்த தொழிற்சாலையினை வைத்து இனங்களிடையே முறுகல் நிலையினை ஏற்படுத்தும் அரசியல் கைங்கரியங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாங்கள் இந்த பிரச்சினைகளை சமாதானமாக பேசி தீர்ப்பதற்காகவே வந்துள்ளோம்.

எமது நிறுவனம் தமிழ் உணர்வாளர் அமைப்பின் ஊடாக அந்த பகுதி மக்களுக்கான அபிவிருத்திகளை வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம் என்றார்.

இங்கு தமிழ் உணர்வாளர்கள் கருத்து தெரிவிக்கையில் - குறித்த தொழிற்சாலையினை நிறுத்திக் கொள்கிறோம் என வெறுமனே கூறிக்கொள்ளாமல் அந்த நிறுவனத்தின் உரிமையாளர் குறித்த விடயம் தொடர்பாக எதிர்காலத்தில் எந்த வித சட்ட விவாதங்களுக்கும் செல்லாத வகையில் கடிதம் எழுதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்ப வேண்டும் என்றனர்.




# ‘ஔவையின் அமுத மொழிகள்’ நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது

**க.விஜயரெத்தினம்**

கல்லடி பூநொச்சிமுனையைச் சேர்ந்தவரும்,பிரபல சமூகசேவையாளருமான வேலுப்பிள்ளை-சிவபாதசுந்தரம் அவர்களினால் தொகுப்பட்ட ‘ஔவையின் அமுதமொழிகள்’ நூல் வெளியீட்டுவிழா கல்லடி உப்போடை துளசி மண்டபத்தில் கல்லடி இராமகிருஸ்ணமிஷன் சுவாமி ஸ்ரீமத் தக்ஷானந்தாஜீ மகராஜ் அவர்களின் ஆசியுரையுடன் அதிபர் திலகம் திருமதி. திலகவதி ஹரிதாஸ் தலைமையில் நடைபெற்றது.





இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை-பாஸ்கரன்,கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் நவரெட்ணம்-வாசுதேவன் ஆகியோர்களும்,கௌரவ அதிதிகளாக கல்வி அபிவிருத்தி சமூக மேம்பாட்டு ஒன்றியத்தின் தலைவர் சி.தேவசிங்கன்,கல்லடி உப்போடை பேச்சியம்மன் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபைத்தலைவர் ச.சந்திரகுமார்,சிரேஸ்ட ஊடகவியலாளரும்,அரங்கம் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான பூபாலரெத்தினம் சீவகன் ஆகியோர்களும், சிறப்பு அதிதிகளாக ஓய்வுநிலை கல்வி அதிகாரி சோ.சிவலிங்கம், ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் க.பாஸ்கரன், மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் தி.சிறிஸ்கந்தராசா, மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் உட்பட பொதுமக்கள்,நலன்விரும்பிகள், பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

முதலில் அதிதிகளை மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

மங்கல விளக்கேற்றல்,இறைவணக்கம், தமிழ்மொழி வாழ்த்து, ஆசியுரை, தலைமையுரை, நூல் அறிமுக உரை,அதிதிகள் உரை, சுவாமி விபுலானந்தரின் ஆவணப் படம் திரையிடல், நூல் பிரதிகள் வழங்குதல், நன்றியுரை என்பன இடம்பெற்றன.

இதன்போது மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 39 பாடசாலைகளுக்கும்,மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 30பாடசாலைகளுக்கும் ஔவையின் அமுதமொழிகள் நூல்(ஆங்கில மொழி பெயர்ப்புடன்) சமூக சேவையாளர் வேலுப்பிள்ளை-சிவபாதசுந்தரத்தினால் (கனடா) இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

# புலமைப் பரீட்சையில் சித்தி

**சேனையூர் நிருபர்**



இம்முறை நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. கிறிஸ்டி ஜெனிக்க்ஷயா 170 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் திருகோணமலை பாலையூற்றைச் சேர்ந்த கிறிஸ்டி- பிறிஜட் மேரி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியாவார்.

# மட்டு.கலைஞர்களின் குறுந்திரைப்படத்திற்கு விருது

**வாழையூர் ந.குகதர்சன்**

The green country A Clean environment என்ற தொனியில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்களின் தலைமையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் இடம் பெற்ற தேசிய மட்டத்திலான குறுந்திரைப்பட soba chalana sithuwam போட்டியில் சிறந்த நான்கு merit award குறுந்திரைப்படங்களுள் மூன்று சிங்கள குறுந்திரைப்படங்களோடு மட்டக்களப்பு கலைஞர்களின் O2 zone என்ற தமிழ் குறுந்திரைப் படம் தெரிவாகியுள்ளது.



மட்டு நகருக்கு பெருமை சேர்க்கும் வகையில் தேசிய ரீதியாக 48 போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் இக் குறுந் திரைப்படம் O2 zone தெரிவாகி இருந்தது குறிப்பிடதக்கது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரதி அமைச்சர் மன்னப்பெரும, அமைச்சின் செயலாளர் அனுர டிசாநாயக்க இவர்களோடு இலங்கை கலைஞர்களான ஆரிய ரத்ன அத்துகல, மாலக தேவபிரிய சிறில் உபுல் குமார, கிறிஷ்டி செல்டன் பெனார்ண்டோ ஆகியோர் மத்தியில் இவ் விருதினை இக் கலைஞர்கள் பெற்றிருந்தனர்.

# கடந்த ஆட்சிக்காலத்தில் மக்களிடையே பிரிவினைகள் ஏற்படுத்தப்பட்டதை தவிர அபிவிருத்திகள் எவையும் செய்யப்படவில்லை; இனி செய்யப்போவதுமில்லை!

## கே.டி.லால்காந்த

கடந்த ஆட்சிக்காலத்தில் இனவாதத்தை வளர்த்து மக்களிடையே பிரிவினைகளை உருவாக்கினார்களே தவிர வேறு விடயங்களை செய்ததுமில்லை, இனிவரும் காலங்களில் செய்யப்போவதுமில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பீட உறுப்பினரும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலைய தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

நாட்டை பாதுகாக்கும் நாட்டை கட்டியெழுப்பும் மக்கள் நேயமிகு ஆட்சி என்னும் பகிரங்க அரசியல் கருத்தரங்கு அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் பிரபு தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் கிழக்கு மாகாண அமைப்பாளர் அருண், கல்குடா அமைப்பாளர் திலீப் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சமகால அரசியல் நிலைப்பாடு எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய கே.டி.லால்காந்த,

கடந்தகால அரசியல் நிலைமைகளை கருதுகின்றபோது அரசியல்வாதிகள் எனப்படுவோர் ஊழல் மோசடிகளில் தொடர்புடையவர்கள் எனவும் பிரச்சினைக்குரியவர்கள் எனவும் மக்கள் மத்தியில் கருத்துகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக புத்திஜீவிகள் என சொல்லப்படுவோர் அரசியலிலிருந்து நாங்கள் விலகி நிற்க வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளனர்.

அரசியல்வாதிகள் தங்களுடைய சுயஇலாபத்தை கருதியே செயற்படுவதாக இதுவரைகாலமும் மக்கள் கருதுகின்றனர். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியலை நாங்கள் பார்த்தோமானால் விற்பனையும் ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்டதுமான அரசியலாகவே இருக்கின்றது. ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் பிரச்சினைகள் முடிந்தபாடில்லை. மக்கள் மத்தியில் வெறுப்புதான் ஏற்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ச அவர்களின் அரசியல் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் விரக்திதான் ஏற்பட்டிருக்கின்றது.

பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புலம்பெயர் புத்திஜீவிகள் போன்றோருடன் பேசி இந்த நாட்டிற்கு சரியானதொரு செயற்திட்டம் ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் நாங்கள் கடந்த ஜூலை மாதம் பதினான்காம் திகதி ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தோம். நாட்டிற்கு பொருத்தமான தேசிய கொள்கை வகுப்பொன்றை நாங்கள் உருவாக்கிக்கொண்டிருக்கின்றோம். பொதுவாக நாட்டிற்கு பொருத்தமானதொரு வெளிநாட்டுக் கொள்கையொன்று தேவைப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ச அவர்களின் ஆட்சியில் அவர்கள் ஒரு சாராருடன் பகையுடனும் மற்றைய சாராருடன் நெருங்கியும் இருந்துள்ளனர். 1978ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் மோசமானதொரு கொள்கையையே கொண்டிருந்தனர். ஒரு நாட்டினை முன்னேற்ற வேண்டுமானால் முக்கியமாக சிறந்ததொரு வெளிநாட்டுக் கொள்கை அவசியமாகும். அதுமட்டுமல்லாது நாட்டின் கல்வி, சுகாதாரம், இனவாத செயற்பாடுகள் என்பன மிகவும் சிக்கலானதொரு நிலையையே அடைந்துகொண்டிருக்கின்றன. ஆகவே சரியானதொரு கொள்கையை உருவாக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

புத்திஜீவிகளை முன்னேற்றிக் கொண்டு மக்கள் விடுதலை முன்னணியையும் இணைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ ஐக்கிய தேசியக் கட்சியோ அதிலிருக்கின்ற நல்லவர்களையும் இணைத்துக்கொண்டு அரசியல் தலைமை ஒன்றினை உருவாக்குகின்ற நோக்கம் எங்களுக்கு இருக்கின்றது.

தேசிய ஒற்றுமை தொடர்பாக முக்கியமாக நாங்கள் பார்க்க வேண்டியுள்ளது. இதுவரை காலமும் இருந்த ஆட்சியாளர்கள் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பிரிவினைகளை வைத்துக்கொண்டு தங்களுடைய அரசியல் இலாபத்தையே பார்த்தார்களே தவிர நாட்டிற்கு நல்ல விடயங்கள் எதனையும் செய்யவில்லை. தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்குப் பதிலாக இனவாதத்தையே வளர்த்து வந்தனர். 1983ஆம்ஆண்டு கலவரம், யுத்தம் என்பன ஆட்சியாளர்கள் இனவாதத்தை தங்களுக்கு சார்பாக பயன்படுத்தியதன் விளைவாகவே காணப்படுகின்றன. ஆகவே சரியானதொரு தேசிய ஒற்றுமை தொடர்பான கொள்கைளை கட்டியெழுப்ப வேண்டும். பொருளாதார நெருக்கடி, சுகாதாரம் ,கல்வி உட்பட இன்றிருக்கின்ற பாரிய நெருக்கடிகளுடன் நாட்டிலிருக்கின்ற முக்கிய பிரச்சினையாக இருப்பது இனவாதமாகும். ஆகையால் இனவாதத்தை தோற்கடிக்கக்கூடிய அரசியற் கொள்கை ஒன்றை கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயத்தேவை இன்று இருக்கின்றது.




எங்களுடைய நாட்டில் ஏராளமான வயல்களும் கடல் வளமும் இருந்தும் உற்பத்திகள் சரியான முறையில் சந்தைப் படுத்தப்படுவதில்லை. மீனவர்களுக்கோ விவசாயிகளுக்கோ தங்களுடைய உற்பத்திகளின் விலையை தீர்மானிக்க முடிவதில்லை. வியாபாரிகளே விலையை தீர்மானிக்கின்ற நிலை இந்த நாட்டில் இருக்கின்றது. இதற்கான சரியான பொருளாதார கட்டமைப்பொன்று எமக்கு தேவைப்படுகின்றது.

இங்கிருக்கின்ற பொருளாதாரக் கொள்கைகளில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அரச துறையில் வேலை புரிபவர்களுக்கு தகுந்த ஊதியங்கள் வழங்கப்படுவதில்லை. தனியார் துறையில் போதிய ஊதியம் வழங்கப்பட்டாலும் அது எந்த விதத்தில் என்ற கேள்விகள் உள்ளன. இதனால் பாரிய பொருளாதார நெருக்கடி சமூகத்தில் ஏற்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியை நாங்கள் சமாளிக்க வேண்டுமானால் இந்த வேறுபாடுகளுக்கு தீர்வொன்றை காண வேண்டும். இனவாத்தை அழிப்பதுடன் நியாயமான சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவது தொடர்பிலும் சிந்திக்கவேண்டியுள்ளது. நீதியான சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதாயின் இந்த நாட்டில் சட்டம் சரியான முறையில் அமுல்படுத்தப்படவேண்டும். ஜனாதிபதி, பிரதமர், பொதுமக்கள் ,கோட்டபாய என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சட்டம் இந்த நாட்டில் காணப்படுகின்றது. சட்டம் எல்லோருக்கும் பொதுவாக அமுல்படுத்தப்படவேண்டும்.

ஜனநாயகம் என்பது வெறுமனே பொருளாதாரக் கட்டமைப்புடன் மாத்திரம் நிற்கக்கூடாது. உலகில் பல்வேறுபட்ட ஆட்சி முறைகள் உள்ளன. இலங்கையை எடுத்துக்கொண்டால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மூலமாக ஜனநாயகம் என்பது கேள்விக்குரியாகியுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட பாராளுமன்ற முறை மூலமாக மக்களுக்கான ஜனநாயகத்தை ஒழுங்கான முறையில் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

உலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக முறைமையில் நிறைவேற்று அதிகாரம் என்ற விடயம் உள்ளது, சட்டம் ஒழுங்குகள் உருவாக்கப்படுகின்ற இடமாக பாராளுமன்றத்தை பார்க்கின்றோம், சட்டம் ஒழுங்குகள் நிறைவேற்றப்படும் இடங்களாக நீதிமன்றங்களை பார்க்கின்றோம். இந்த மூன்று விடயங்களும் ஜனநாயக முறைக்குள் அடங்கியிருக்கின்றது. இன்று ஊடகம் என்ற விடயமும் அதனுள் அடக்கப்பட்டிருக்கின்றது.

ஜனநாயக ஆட்சி முறையானது முற்று முழுதாக இன்று உடைந்திருக்கின்றது. பாராளுமன்ற விடயங்களில் ஜனாதிபதி தலையிடுவதால் அங்கு ஜனநாயகம் இல்லாதுபோகின்றது. பாடசாலை மாணவர்கள்கூட சென்று பார்க்க முடியாதளவிற்கு பிரயோசனமற்ற ஒழுக்கமற்ற இடமாக பாராளுமன்றம் உள்ளது. நாட்டிற்குத் தேவையான எந்தவொரு விவாதங்களும் அங்கு நிகழ்வதில்லை. ஜனாதிபதியின் தலையீடு அங்கு உள்ளது. அமைச்சரவையிலும் ஜனாதிபதியின் நேரடித் தலையீடு காரணமாக பிரச்சினைகள் இருக்கின்றன. சட்டத்திலும் இவ்வாறான தலையீடுகள் காரணமாக சட்டமும் ஒழுங்குகளும் இல்லாதுபோயுள்ளன. ஊடகங்கள் தங்களுக்குத் தேவையானவர்களை வெல்லவைப்பதற்கும் தேவையற்றவர்களை தோற்கடிப்பதற்குமான செயற்பாடுகளையே செய்துவருகின்றன.

இலங்கையானது அரசியலாலும் அரசியல்வாதிகளாலும் அழிக்கப்பட்ட நாடாகவே காணப்படுகின்றது. ஜனநாயகத்திற்கு தேவையான நான்கு தூண்களும் இங்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

சமுதாயத்தில் அரசியல் சம்பந்தமாக வெறுப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. அரசியல் என்பது எமக்குத் தேவையில்லை நாம் எங்களுடைய வேலைகளை செய்துகொள்வோம் என மக்கள் நினைக்கின்றனர். அவ்வாறல்ல. அரசியல் என்பது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான விடயமாகும். அநீதி, அசம்பாவிதங்களுக்கு எதிரான நீதியான சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டுமானால் நிச்சயமாக நாங்கள் இந்த வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும். அதை செயற்படுத்துவதற்கான முன்னணி ஒன்றினை உருவாக்கி முற்போக்குவாதிகளின் ஆலோசனைகளையும் ஆதரவையும் பெற்றுக்கொண்டு அனைவரது ஆதரவையும் பெற்று செயற்பாட்டு ரீதியாக ஒரு மாற்றத்தை இந்த நாட்டில் உருவாக்குவோம்.

கடந்த ஆட்சியில் நாமல்ராஜபக்ச, பசில்ராஜபக்ச, கோட்டாபயராஜபக்ச, சிரந்தி ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச போன்றோர் இருந்தனர்.1994ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிதான் இருந்துவருகின்றது. இன்று கிராமங்கள், நகரங்களில் உள்ளுராட்சி கட்டமைப்புகளில் பாரிய ஆட்சி இவர்களின் கைகளில்தான் இருக்கின்றது. கடந்த காலங்களில் இவர்கள் ஆட்சியில் இருந்தாலும் மக்களின் பிரச்சினைகளை இவர்கள் தீர்க்கவில்லை. இத்தனை காலமும் தீர்க்காதவர்கள் இனியும் பிரச்சினைகளை தீர்க்கப்போவதில்லை. ஊழல்மோசடி, வெள்ளைவேன் கலாசாரம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் இவர்களால் இந்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. இவர்கள் இனவாதத்தை வளர்த்து மக்களிடையே பிரிவினைகளை உருவாக்கினார்களே தவிர வேறு விடயங்களை செய்ததுமில்லை, இனிவரும் காலங்களில் செய்யப்போவதுமில்லை.

எந்தவித நிபந்தனைகளுமின்றி அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் நாங்கள் இருக்கின்றோம். குற்றவாளிகள் நிச்சயம் தண்டிய்யப்படவேண்டும். குற்றம் சுமத்தப்படாதவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். குற்றங்கள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டிருக்கின்ற அரசியற் கைதிகளை விடுதலை செய்வோம் என்ற வாக்குறுதியுடன்தான் இந்த அரசாங்கமும் ஆட்சிக்கு வந்தது. இவர்கள் மற்றைய வாக்குறுதிகளையும் மீறியதுபோல இந்த வாக்குறுதியையும் மீறியுள்ளனர். குற்றம் செய்தவர்களுக்கு நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய தண்டனை வழங்கப்படவேண்டும். காரணம் எதுவுமின்றி தடுத்துவைத்திருப்பதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. அவர்களின் விடுதலையை நாங்கள் நிச்சயம் வலியுறுத்துவோம்.




# திருகோணமலையில் விசர்நாய்க்கடி நோய்க்கெதிரான விழிப்புணர்வு

**சேனையூர் நிருபர்**

விசர்நாய்க்கடி நோய்க்கெதிரான விழிப்புணர்வு வாரம் கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் 29-10-2018 தொடக்கம் 02-11-2018 வரையான காலப்பகுதியில் திருகோணமலையில் இடம் பெறவுள்ளது.

இந்த விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக்கு விசர் நாய்க்கடி நோய்க்கெதிரான விழிப்புணர்வு பற்றி 26 -10-2018 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு திருகோணமலை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

விசர் நாய்க்கடி நோய்க்கெதிரான விழிப்புணர்வு நடைபவனி 29-10-2018 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரம் சந்தி வரையும் நடைபெறும், அன்றய தினம் மு.ப 11.00 மணிதொடக்கம் பி.ப 1.00 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

30-10-2018 செவ்வாய்க்கிழமை நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல், கருத்தடை சத்திர சிகிச்சை என்பன முக்கிய நிகழ்வுகளாக இடம் பெறவுள்ளது என கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் டாக்டர். எம்.ஏ.எம்.பாஸி தெரிவித்தார்.



**இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே இடம்பெறும் கும்பவிழா கடந்த வாரம் திருகோணமலையில் உள்ள ஆலயங்களிலும் கட்டைப்பறிச்சான், சேனையூர், தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களிலும் சிறப்பாக இடம்பெற்றது.**

**படம்: சேனையூர் நிருபர்**

# வடகிழக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால் வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவளிக்கக் கூடாது!

**கல்லடி நிருபர்**

மலையக மக்களின் சம்பள பிரச்சினையை தீர்க்காவிட்டால் வரவுசெலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி எடுத்த தீர்மானம்போன்று வடகிழக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால் ஆதரவளிக்கமுடியாது என தமிழ் தலைமைகள் தீர்மானிக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட பல்வேறு பிரச்சினைகளினை தீர்க்கும் வகையிலான எழுத்துமூலமான உறுதிமொழியை வழங்கும் பட்சத்திலேயே வரவுசெலவு திட்டம் தொடர்பான ஆதரவினை வழங்குவது தொடர்பில் சிந்திக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட திராய்மடு ஸ்ரீகிருஸ்ணா விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகருமமொழிகள் அமைச்சின் 24 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த மைதான புனரமைப்பு பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் அமைச்சர் மனோகணேசனிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த நிதியொதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் ஐ.சிறிதரன்,மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் ஈஸ்பரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்,

மட்டக்களப்பு மாநகரசபைக் குட்பட்ட புறநகர் பிரதேசங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.வேறு எங்கும் இல்லாத பிரச்சினைகள் இங்கு காணப்படுகின்றன.மலசலகூடம் இல்லாத நிலையில்கூட வீடுகள் உள்ளன.இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றேன்.

கடந்த மூன்று வரவுசெலவு திட்டத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவாக கையை உயர்த்தியுள்ளது.இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வினை தரவேண்டும் என்பதற்காகவே அந்த ஆதரவினை வழங்கியது.

கடந்த எழுபது வருடமாக .இந்த நாட்டினை ஆட்சி செய்த அரச தலைவர்கள் தமிழ் தலைமைகளை ஏமாற்றி வந்ததே வரலாறாக இருக்கின்றது.இந்த நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து ஆட்சியமைத்துள்ள இந்த ஆட்சிக்காலத்திலாவது அந்த ஏமாற்றத்தினை தரமாட்டார்கள் என்று நாங்கள் நம்பியது உண்மை.ஆனால் அந்த தலைவர்கள் செய்த சாதனையினை இவர்களும் செய்துவிடுவார்களே என்ற சந்தேகம் இருக்கின்றது.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வினை தரும் என்று நான் கூறவில்லை.யாரும் நம்பலாம்.ஆனால் என்னைப்பொறுத்தவரையில் அந்த நம்பிக்கையில்லை.இந்த அரசாங்கத்திடம் முழுமையான தீர்வினை எதிர்பார்ப்பது எட்டாக்கனிக்கு கொட்டாவிவிட்ட கதையாக மாறிவிடுமோ என்று நினைக்கின்றேன். எவ்வாறாயினும் ஒரு நம்பிக்கையுடன் பயணித்துவருகின்றோம்.

இந்தஆண்டு முடிவதற்குள் காணிகள் விடுவிப்பு தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும்.அதற்கான அழுத்தங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்து வழங்கிவரும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அதேபோன்று தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் இந்த அரசாங்கம் உடனடியாக தீர்வொன்றினை வழங்கவேண்டும்.வரவுசெலவு திட்டத்திற்கு வாக்களிக்கும்போது ஒரு நிரந்தர தீர்வினை நோக்கியதாக தமது ஆதரவினை வழங்கவேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை,காணி விடுவிப்பு போன்ற விடயங்களை காலதாமதம் இல்லாமல் எழுத்துமூலம் தரவேண்டும் என்ற அடிப்படையில்



வாக்களிக்கும் நிலமையினை உருவாக்கவேண்டும்.அப்போதுதான் தமிழ் மக்களின் உனடியாக தீர்க்ககூடிய பிரச்சினைகளில் வெற்றிகாணமுடியும். இல்லாதுபோனால் இந்த அரசாங்கத்தின் நம்பிநம்பி ஏமாந்தவர்களாக போய்விடுவோம்.

யார் எதனைக்கூறினாலும் எதிர் வரும் வரவுசெலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு முன்பாக எங்களுக்குரிய தேவையான விடயங்களை எழுத்துமூலம் கேட்டுப்பெறவேண்டிய நிலையில் இருக்கின்றோம்.கேட்கும் போதுதான் சில வேளைத்திட்டங்கள் நடைபெறுகின்றது.நாங்கள் அழுத்தங்களை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்.

இந்த நாட்டின் ஏற்றுமதியின் முதுகெலும்பாக இருக்கின்ற தோட்டத்தொழிலாளர்கள் 1000ரூபாவுக்காக போராடும் நிலையுள்ளது.1000ரூபா சம்பள அதிகரிப்பினை அதிகாரிக்காவிட்டால் இந்த வரவுசெலவு திட்டத்திற்கு ஆதரவளிப்பதில்லையென மலையக கட்சிகள் தீர்மானித்திருக்கின்றது. அதுபோன்ற திடமான முடிவுகளை எங்களது அரசியல் தலைமைகளும் எடுக்கவேண்டும். குடும்பத்தினை தலைமை தாங்குபவர்களுக்கான விசேட திட்டங்கள்,போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட திட்டங்கள்,காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, தமிழர்களின் வேலைவாய்ப்பு விடயங்களில் சரியான திட்டங்களை எழுத்துமூலம் பெற்றுக்கொள்ளவேண்டும்.அவ்வாறு இருந்தால்தான் இவர்களிடம் இருந்து பெறக்கூடியதை பெறமுடியும் என்றார்.

# திருக்கோவில் பிரதேச நிலப்பரப்பளவு 0.5 கி.மீற்றராக குறைந்துள்ளது



**திருக்கோவில் நிருபர்**

அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையின் எட்டாவது கூட்டத் தொடர் உப தவிசாளர் சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் தலைமையில் அண்மையில் கூட்டப்பட்டது.

இக் கூட்டத்தில் 15 உறுப்பினர்களுடன் சபையின் செயலாளரும் கலந்து கொண்டு இருந்ததுடன் திருக்கோவில் பிரதேசத்தில் சேதமடைந்துள்ள வீதிகள் மற்றும் குடிநீர் விநியோகம் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டது.

இதன் ஒரு முக்கிய விடயமாக திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடல் அரிப்பு காரணமாக சுமார் 0.5 கி.மீற்றர் தூரம் நிலப்பரப்பு குறைவடைந்து சென்றுள்ளதாகவும் இதனைக் கருத்தில் கொண்டு தற்போது இருக்கும் நிலப்பரப்பினை அரச வர்த்தமானியில் வெளியீட இச் சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளுடிடட்சி அமைச்சின் ஊடாக ஜனாதிபதிக்கு மசோதா ஒன்றினை அனுப்பி வைக்க வேண்டும் என திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், தற்போதய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினருமான விவேகானந்தராஜா புவிதராஜன் சபையில் முன்வைத்திருந்தார்.

இதேவேளை அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் திருக்கோவில் பிரதேச கடலரிப்பு தொடர்பாக ஊடகங்களில் அறிக்கைகள் மாத்திரமே வெளிவந்து கொண்டு இருக்கின்றதே தவிர கடலரிப்பை தடுப்பதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதாக இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு திருக்கோவில் பிரதேச சபை எல்லை முன்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலப்பரப்பில் இருந்து சுமார் 0.5. கி.மீற்றர் தூரம் குறைவடைந்தள்ளது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு நிலப்பினை எல்லைப்படுத்தி அரசு வர்த்தமானியில் வெளியீட வேண்டும் என்ற கோரிக்கையை சபையின் தீர்மானத்தின் படி உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக ஜனாதிபதிக்கு மசோதா ஒன்றை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

திருக்கோவில் பிரதேச சபையின் 8வது கூட்டத்தொடருக்கு தவிசாளர் இ.வி.கமலராஜன் அவர்கள் சுகவீனம் காரணமாக சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை என்பதுடன் உபதவிசாளர் சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் தலைமையில் சபை கூடியதுடன் 15 பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.



**2018 ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தி/கிண்ணியா அல் அக்ஸா ஆரம்பப் பாடசாலையிலிருந்து மூன்று மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாக அதிபர் ஏ.எம்.ஜாபீர் தெரிவித்தார். எப்.எம்.ஹனிப்-177,எம்.ஏ.அப்துல் ஹாபில்-171,ஆர்.எம்.ஹம்தி -167 ஆகிய மாணவர்ளே சித்தி பெற்ற மாணவர்களாவார். இப் பரீட்சையில் சித்தி பெற வழிகாட்டிய அதிபர் மற்றும் ஆசிரியர்களாக ஏ.எம்.ஜாபீர்,ஐ.நஜிமுதீன், ஏ.நிஸ்ரியா,ஏ.எச்.நசிமா ஆகியோர் இருப்பதையும் படத்தில் காணலாம்.**

**படம்: சேனையூர் நிருபர்**

## பெரியகல்லாற்றில் புகைத்தல் எதிர்ப்பு விழிப்பூட்டல் நிகழ்வு

**துறைவேந்தியமேடு நிருபர்**

புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு பெரிய கல்லாறு 1கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்இரா.பிறேமராஜா தலைமையில் புகைப்பதனால் ஏற்படக் கூடிய பாதக விளைவுகள் தொடர்பாக மக்களை விழிப்பூட்டும் நிகழ்வு அண்மையில் பெரியகல்லாறு கிராமத்தில் நடைபெற்றது.

புகைத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் கல்லாறு சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவரான ஜெயானந்திடிலான் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இரா.பிறேமராஜா மற்றும் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து வீடு வீடாகச் சென்று புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரம் தொடர்பான விளக்கங்கள் மற்றும் புகைப்பதனால் ஏற்படக் கூடிய நோய்கள் தொடர்பான விளக்கங்கள் மற்றும் புகைப் பழக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கங்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## ஆலையடிவேம்பு மக்கள் வங்கியில் வாணிவிழா




ஆலையடிவேம்பு மக்கள் வங்கி கிளை முகாமையாளரின் ஏற்பாட்டில் வாணிவிழா அண்மையில் அக்கரைப்பற்று மக்கள் வங்கியின் முகாமையாளர் எம்.பி.எம்.அன்வர் தலைமையில் இடம் பெற்றபோது கலன்ந்து கொண்ட சிறப்பு அதிதி பிராந்திய முகாமையாளர் கபில திஷா நாயக்க உதவி பிராத்திய முகாமையாளர்களான ஜனாப்.ஏ .சம்சுடீன், எச் எம்.எம்.சுபைர்ஆகியோருடன் வாடிக்கையாளர்களும் வாங்கி ஊழியர்களும் கலந்து கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

## அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு அரசியல் ரீதியான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்

**துறைவேந்திய மேடு நிருபர்**

தாம் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசிக்கின்ற அரசியல் தலைமைகள் உருவாக வேண்டும். அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு அரசியல் ரீதியாக முன்னெடுப்புக்களை மேற்கொள்ளப் படுகின்ற போது மாத்திரமே பட்டிருப்பு தொகுதியிலுள்ள தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த முடியும். இவ்வாறு பெரிய கல்லாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் கட்சி ஆதரவாளர்களுடனான கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவிக்கும் போதே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மட்டு மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் கங்காதரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிக்கையில் உரிமை என்பது ஒரு இனத்தின் விடுதலைக்கு அவசியமானது இதனை நான் மறுக்க வில்லை அதற்காக அபிவிருத்தியினை இழக்க முடியாது.சுமார் அறுபது வருடகாலமாக பல போராட்டங்களை நடத்தியிருந்தும் கிடைத்தது ஒன்றுமே இல்லை மாறாக பல்லாயிரக் கணக்கான உயிர் இழப்புக்கள் மாத்திரமல்லாது உடமைகளையும் இழந்திருக்கின்றோம். ஒருவரை பிழை கூறுவதனால் பகைமையினை மாத்திரமே பெற முடியும். அவற்றினை மறந்து புதிய அரசியல் சூழலை ஏற்படுத்தும் வகையில் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய தற்போதைய நிலையில் பட்டிருப்புத் தொகுதி தமிழ் மக்கள் பிரதேசத்தின் அபிவிருத்தியினை நேசிப்பவர்களாக மாற வேண்டும்.அப்போதுதான் பிரதேசம் சகல வழிகளிலும் அபிவிருத்தியினை துரித கதியில் அடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

ஒன்று பட்டு அபிவிருத்திக்கு பாடுபடுவதற்கு மக்கள் விழிப்படைய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.



**வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரத ஆரம்ப நாள் நிகழ்வுகள் கிரியைகளுடன் ஆரம்பமானது. விஷேட பூஜை நிகழ்வுகள் இடம் பெறுவதையும், பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.**

**படம்: சேனையூர் நிருபர்**

# திருமலை பொது வைத்தியசாலைக்கு இருபத்தைந்து தாதிமார்கள் நியமனம்

திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு 25 தாதியர்களை நியமிப்ப தற்கு சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசிம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதி அமைச்சர் அண்மையில் அந்த வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டபோது அங்கு காணப்படு கின்ற குறைபாடுகள் பற்றி அந்த வைத் தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் அனுஷ்யா ராஜ்மோகனிடம் கேட்டறிந் துகொண்டார்.அந்தக் குறைபாடுகளுல் தாதிமார்களின் தட்டுப்பாடு முக்கியமா னதாகக் காணப்பட்டது.

தினமும் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அந்த வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் செல்வதாலும் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதாலும் தாதி மார்கள் அதிகம் தேவைப்படுகின்றனர் என்றும் தற்போது இருக்கின்ற குறைந்த எண்ணிக்கையிலான தாதிமார்களைக் கொண்டு சேவையை வழங்குவது சி ரமாக இருக்கின்றது என்றும் பணிப் பாளர் பிரதி அமைச்சரிடம் தெரிவித் தார்.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதாக அப்போது உறுதியளித்த பிரதி அமைச்சர் அதற்கான நடவடிக் கையை இப்போது எடுத்துள்ளார். அதன்படி,புதிய ஆட்சேர்ப்பு நடவ டிக்கையின்போது 25 தாதிமார்களை திருமலை பொது வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பைசல் காசிம் சுகாதார அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.




# சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு மின் விளக்குகள் அன்பளிப்பு

**கல்முனை நிருபர்**

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வளாகத்தினையும் கட்டிடங்ளையும் வெளிச்ச மூட்டும் முகமாக வைத்தியசாலை அபிவிருத் திச் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஏ.வி.எஸ்ஸ்மார்ட் மார்க்கட்டிங் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ஏ.அஷ்ரப் அலி ஒரு தொகுதி நவீன மின்விளக்குகளை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு நடைபெற் றது.

சாய்ந்தமருது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்தியர் சனுஸ் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க ஆலோசனை சபை உறுப்பினர்களான சாய்ந் தமருது - மாளிகைக்காடு உலமா சபைத் தலைவர் தலைவர் அஷ்-ஷெய்ஹ். எம்.ஐ. சலீம் (ஷர்க்கி) மற்றும் கல்முனை மாநகர ச பை உறுப்பினர் ஏ.ஆர்.எம். அஸீம் அத்து டன் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டு கோளை ஏற்று மேற்படி மின்விளக்குகளை அன்பளிப்புச் செய்தமைக்காக ஏ.ஏ.அஷ்ரப் அலி அவர்களுக்கு வைத்தியசாலை நிருவா கம் மற்றும் அபிவிருத்திச் சங்கம் என்பன நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

# ஆசிரிய டிப்ளோமாப் பயிற்சியை நிறைவு செய்த 1074 ஆசிரியர்களுக்கு பட்டமளிப்பு

**பைஷல் இஸ்மாயில்**

அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு போன்ற கல்விக் கல்லூரிகளில் தமது ஆசிரிய டிப்ளோமா பயிற்சிகளை நிறைவு செய்த 1074 ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழா அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி பீடாதிபதி எம்.ஐ.எம்.நவாஸ் தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாய கம் கலாநிதி. திருமதி.ஜயந்தி குணசேகர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, ஆசிரியர்களுக்குப் பட்டங்களை வழங்கி வைத்தார்.

அட்டாளைச்சேனை கல்விக் கல் லூரியில் பயிற்சி பெற்ற 541 ஆசிரி யர்களுக்கும், மட்டக்களப்புக் கல்விக் கல்லூரியில் பயிற்சி பெற்ற 533 ஆசிரி யர்களுக்கும் மொத்தம் 1074 ஆசிரியர் களுக்கான டிப்ளோமாச் சான்றிதழ்கள் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியில் ஒரே கூரையின் கீழ் முதல் தடவையாக இடம்பெற்றமை தேசிய நல்லிணக் கத்தை வளர்க்கும் ஒரு சிறப்பம்சமென கல்வியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின் றனர்.

திறந்த பல்கலைக்கழக கல்விப் பேராசிரியர் பீ.சி.பக்கீர் ஜஃபர், கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் கலா நிதி கே.ஈ.கருனாகரன், மட்டக்களப்புக் கல்விக் கல்லூரி பீடாதிபதி எஸ்.ராஜேந் திரன், ஆசிரிய கல்விப் பிரதம ஆணை யாளர் கே.எம்.எச்.பண்டார ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம் போன்றவற்றின் உயரதிகாரிகள், கல்விக் கல்லூரிகளின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

திறந்த பல்கலைக்கழக கல்விப் பேரா சிரியர் பீ.சி.பக்கீர் ஜஃபர் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்:



இன்று பயிற்சியை முடித்துக் கொண் டு, பணியாற்றச் செல்லும் ஆசிரியர்கள் என்றும் மாணவர்களுக்கு முன்மாதிரியா கச் செயற்படுவதோடு, தமக்குப் பயிற்சி யளித்த ஆசான்களையும் என்றும் நினை விற் கொண்டு செயற்பட வேண்டும் ஆசிரியர்கள் அனைவரும் நாட்டுக்குத் தேவையான நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும். அதுவே இன்றைய தேவை எனக் கேட்டுக் கொண்டார்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



**கந்தளாய் நிருபர்**

2018 ஆம் ஆண்டில் நடை பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட தி- கிண்ணியா அல்- புர்கான் வித்தி யாலய மாணவர் முஹம்மது பிர்தௌஸ்- முஹம்மது பனீஸ் ஷஹீன் 173 புள்ளிக ளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் முஹம்மது பிர்தௌஸ் ஷாபிரா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வருமாவர்.

இவ் வித்தியாலயத்தில் தோற்றிய மாணவர்களில் இவர் மட்டுமே சித்திய டைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு



**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை, கிண்ணியா கல்வி வலயத்தில், தி/கிண்ணியா/குறிஞ்சாக் கேணி மகளிர் மகா வித்தியாலயத்திலிருந்து இம்முறை வெளியாகியுள்ள ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மூன்று மாணவிகளையும், கற்பித்த ஆசிரியையும் கௌரவிக்கும் நிகழ்வு அண் மையில் ஆரதணைீயில் இடம் பெற்றது.

இதன் போது சித்தியடை மாணவி களான ஜுஹார்தீன் அம்னத் ஹமா -180 புள்ளிகளையும், முகம்மது சனூஸ் பாத் திமா சனாஃ - 165 புள்ளிகளையும், சவுர்த் தீன் ஷைமா சனா -164 புள்ளிகளையும் பெற்று இதில் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களோடு, கற்பித்த ஆசிரியை எஸ்.நளீரா , பாடசாலை அதிபர் எஸ்.ரீ. நஜீம், பிரதி அதிபர் ஏ.எஸ்.மாஹில் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# நெற்செய்கையில் ஆர்வம் காட்டும் அம்பாறை மாவட்ட விவசாயிகள்

**எம்.என்.எம்.அப்ராஸ்**



அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற்பயிர் செய்கை யில் அதிகளவான விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்ற னர்.

குறிப்பாக அண்மையில் பெய்த மழையை அடுத்து நாவி தன்வெளி, சவளக்கடை செ ாறிகல்முனை,6 ஆம் கொலணீட, நிந்தவூர், ஒலுவில், ஆகிய பிரதேங்களில் உள்ள நெற் காணிகளை துப்பரவு செய்து உழுது வருகின்ற னர். இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 83 ஆயிரம் ஹெக்டயர் காணிகளில் நெற் செய்கை இடம்பெற்ற உள்ளதுடன் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை விவசாய திணைக்களம் ஏற்படுத்தி கொடுத் துள்ளது.

# பள்ளிவாசல்களின் புனரமைப்புக்கு 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு



**பெரியநீலாவணை நிருபர்**

'கம்பெரலிய' தேசிய வேலைத்திட் டத்தின் ஊடாக வணக்கஸ்தலங்களை புணரமைப்பு செய்யும் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைய மருதமுனையிலுள்ள பள்ளிவா சல்களுக்கு 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பாரா ளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து பிரதி அமைச்சர் ஹரீஸினால் மருதமுனை பிரதேசத்திலுள்ள 12 பள்ளிவாசல்களின் புனரமைப்பு பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஆவணங்களை கையளிக்கும் நிகழ்வு கல்முனை மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் மருதமுனை சமூகவள மத்திய நிலையத் தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதி தியாக கலந்து கொண்டு பள்ளிவாசல்களுக் கான கடிதங்களை நிருவாக சபையினரிடம் வழங்கிவைத்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் ஆரம் பிக்கப்பட்டுள்ள 'கம்பெரலிய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள இருபது(20) பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பல்வேறு வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. கல்முனை பிரதேச செயலகத்தினூடாக நடைமு றைப்படுத்தப்படும் பள்ளிவாசல்களை அபிவிருத்தி செய்யும் இந்த வேலைத்திட் டங்களை எதிர்வரும் டிசம்பர் மதத்திற்கு முன்னர் முடிக்க வேண்டும் என இங்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ். உமர் அலி, எம்.எஸ்.எம். நவாஸ், மாநகர சபை முன் னாள் உறுப்பினர் எம். முஸ்தபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் சட்டத்தரணி அன்சார் மௌலானா, பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ. பாவா மற்றும் மருதமுனை பிரதேச பள்ளிவாசல்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்ட னர்.



**காத்தான்குடி பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வு அதன் தலைவர் ஊடகவியலாளர் அஃ.டீன் பைரூஸ் தலைமையில் காத்தான் குடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. முன்பள்ளி மாண வர்களின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிகழ்வுக்கு விஷேட அதி தியாக பிரதேச கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ்.பதூர்த்தீன் அவர்கள் கலந்து கொண்டதுடன் காத்தான்குடி நகர சபை உறுப்பினர்கள், கல்வி யாளர்கள், ஊடகவியலாளர்கள், உலமாக்கள், சமூக ஆர்வலர்கள் என பல துறை சார்ந்தவர்களும் கலந்துகொண்டனர்.**

**படம்: எம்.பஹ்த் ஜுனைட்**







**பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடியில் இடம்பெற்ற வாணி விழாவின் போது மாணவர்களால் அரங்கேற்றப்பட்ட நிகழ்வுகளையும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படுவதனையும் படங்களில் காணலாம்.**

**படம்: எம்.ஐ.எம்.அஸ்ஹர்**




# கிண்ணியாவில் பல மணி நேரங்கள் அடிக்கடி மின் துண்டிப்பு!

**கிண்ணியா நிருபர்**

கிண்ணியாவின் சில இடங்களில் அடிக்கடி முன்னறிவித்தலின்றி மின் துண்டிப்பு செய்யப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றனவற்றில் உள்ள அன்றாட நடவடிக்கைகளும் மின் துண்டிப்பால் பாதிப்படைகின்றன.

இது பல மணிக் கணக்கில் துண்டிப்பு செய்யப்படுகின்றது. இவ் விடயம் தொடர்பில் பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகாளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை குறித்து மக்கள் கவலையடைகின்றனர்.

இலங்கை மின்சார சபை கிண்ணியா அலுவலகம் இவ்விடயத்தில் அசமந்தப் போக்குகளையே தொடர்ந்தும் காட்டி வருகின்றனர்கள்.

மேலும் இது தொடர்பாக கிண்ணியா பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலாவது இவ் மின் துண்டிப்பு தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிக அக்கரை செலுத்துவார்களா?

உடனுக்குடன் சில விடயங்களுக்கு ஊடக அறிக்கையிடும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்விடயத்திலும் கரிசனை காட்டுவதுடன் மின்சார துண்டிப்புக்களை வரையறையோடும் முன்னறிவிப்பு செய்தும் துண்டிக்க நடவடிக்கை எடுக்கவும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்கள்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அடுத்த வருடம் ஜனவரியில் நிதி ஒதுக்கப்படும்

## சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசிம் உறுதி



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கட்டட வேலைகளை பூரணப்படுத்துவதற்கும் ஏனைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் அடுத்த வருடம் ஜனவரியில் நிதி ஒதுக்கப்படும் என்று சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

அவ்வைத்தியசாலைக்கு மைக்கேல் என்ற தனவந்தர் வழங்கிய வைத்திய உபகரணத்தை வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கி வைத்தபின் வைத்தியசாலையின் குறை, நிறைகள் பற்றி நிர்வாகத்துடன் கலந்துரையாடியபோது பிரதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;

எனது அமைச்சின் கீழ் இருக்கும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதையிட்டு நான் கவலையடைகின்றேன். இந்த வைத்தியசாலையின் கட்டட நிர்மாணம் உள்ளிட்ட அனைத்து வேலைத் திட்டங்களையும் முன்னெடுப்பதற்குத் தேவையான நிதி அடுத்த வருடம் ஜனவரியில் ஒதுக்குவேன்.

நான் சுகாதார பிரதி அமைச்சராக ஆன உடனேயே இந்த வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளை என்னிடம் கொண்டு வந்திருந்தால் உடனே நான் தீர்த்து வைத்திருப்பேன். இந்த வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் ஒரே ஒரு தடவைதான் என்னை வந்து சந்தித்து இருக்கின்றார். அதுகூட, இந்த வைத்தியசாலையில் உள்ள குறைகளைப்பற்றி பேசுவதற்கு அல்ல. வேறு விடயம் பற்றிப் பேசுவதற்கே சந்தித்தார். இருந்தும், முழுமை பெறாமல் நிற்கும் கட்டடத்தை கட்டி முடிப்பதற்கும் ஏனைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் நான் உடனடி நடவடிக்கைளை எடுப்பேன். இந்த வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பில் மாதாந்தம் நாம் சந்தித்துப் பேசுவதே நல்லது. அதற்கான ஏற்பாடுகளை வைத்தியசாலை நிர்வாகம் செய்ய வேண்டும். அப்போதுதான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள முடியும்.கிழக்கு மாகாணத்தில் மூன்று வருடங்களுக்குள் மத்திய அரசுக்குக் கீழ் வருகின்ற வைத்திய சாலைகளைத் தவிர்த்து அனைத்து மாகாண வைத்தியசாலைகளுக்கும் 1500 மில்லியன் ரூபா வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# கந்தளாய் வான்எல ஆற்றினை பத்து மிலியன் ரூபாய் செலவில் விஸ்தரித்து புனரமைக்கும் பணிகள் மும்முரம்



**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வான் எல ஆற்றினை பத்து மிலியன் ரூபாய் செலவில் விஸ்தரிச்சி புனரமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதியொதுக்கீடுகள் மூலமாக ஐந்து கிலோ மீற்றருக்கு ஆற்றினை விசாலமாக்கி சற்று ஆழப்படுத்தி புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பெரும் போக நெற்செய்கைக்காக வேண்டி விவசாயிகள் தயாராகி வரும் நிலையில் வான்எல ஆற்றினை புனரமைப்பதன் மூலம் விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர் என கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் எச்எம்.பெரேரா தெரிவித்தார்.

கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவில் இனங்காணப்பட்ட பேராறு, மற்றும் வென்ராசன்புர சிறு ஆறுகளையும் விசாலமாக்கி புனரமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐந்து வருடங்களின் பின்னர் சாதனை

**க.விஜயரெத்தினம்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கஸ்டப்பிரதேசமான நாற்பதாம் கிராமத்தில் அமைந்துள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 5 வருடத்தின் பின்னர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரு மாணவி சித்தியடைந்துள்ளதாக அப்பாடசாலையின் அதிபர் க.சந்திரகுமார் தெரிவித்தார்.

அப்பரீட்சையில் 166 புள்ளிகளைப் பெற்று தங்கவேல்-திவாணுஜா என்ற மாணவியே சித்தி பெற்றுள்ளார். இந்நிலையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 70 புள்ளிக்கு மேல் 52 வீதமான மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்களையும் அதிபர் க.சந்திரகுமார் பிரதிஅதிபர் சி.பேரின்பமூர்த்தி கற்பித்த ஆசிரியர்களான த.சத்தியசீலன் மற்றும்.திருமதி. நி.நித்தியேஸ்வரனுக்கும் கல்விச் சமூகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.










**ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலயத்தின் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு பாடசாலை மாணவர்களின் ஏற்பாட்டில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் அதிபர் அஷ்ஷேஹ் அப்துர் றஹீம் (நழிமி) அவர்களின் தலைமையில் மிக விமரிசையாக நடை பெற்றது. இதில் பிரதம அதிதிகளான ஆசிரியர்களுடன் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் இஸட்.ஏ.றஹ்மான் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர்,பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர், மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். இந் நிகழ்வில் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.**

**படம்: ஒலுவில் இஸட்.ஏ.றஹ்மான்**















**திருகோணமலை மூதூர் கட்டைபறிச்சான் விபுலானந்தர் வித்தியாலயத்தில் வித்தியாலய முதல்வர் பு.பிரபாகரன் தலமையில் ஆங்கில தின விழா வெகு விமர்சையாகவும் பிரமாண்டமாகவும் கொண்டாடப்பட்டது. இவ் நிகழ்விற்கு கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மனோகரன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதிகளாக திருமதி.ஜமூனா சிவசங்கரன் அவர்களும், பொறியியளாலர் சு.ராஜ்மோகன் அவர்களுடன்திருமதி ஜீவசாந்தி திருச்செல்வம் அவர்களும் கலந்து கொண்டனர்.**

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் மாணவன் சித்தி

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் முஹம்மத் பலீல் முஹம்மத் முஹம்மத் ஜெஸ்றி, இம்முறை நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றுள்ளார். இவர், மாளிகைக்காடு - கிழக்கு யூ.கே.எம். பலீல் மற்றும் யூ.எல். ஹுஸைமா தம்பதிகளின் புதல்வராவார்.

இம்மாணவனை வாழ்த்துவதுடன் இதற்காக உழைத்த பாடசாலையின் அதிபர் ஜனாப். எம்.ஐ.எம்.இல்யாஸ், வகுப்பாசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், வழிகாட்டல் செய்த ஆசிரிய ஆலோசகர் ஏ. சகறூன் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகத்தினர் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.




# விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

**பாலமுனை நிருபர்**

பாலமுனை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஏற்பாட்டில் பாலமுனைப் பிரதேசத்திலுள்ள நூறு விவசாய குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு பாலமுனை யில் இடம்பெற்றது.

கட்சியின் பாலமுனை அமைப்பாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ.எல்.அலியார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாலமுனை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் நூறு விவாயக் குடும்பங்களுக்கான விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.







**காரைதீவு ஆனந்தா முன்பள்ளியில் கடந்த வெள்ளிக்கிழமை வாணி விழா கொண்டாடப்பட்டபோது மாணவச் செல்வங்கள் ஆசிரியர்களுடன்செயற்பாடுகளில் ஈடுபடுவதை காணலாம்.**

**படம்: கல்முனை நிருபர்**

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்

முல்லைத்தீவு மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான அபிவிருத்திகளுக்கு 11 அமைச்சுக்களினூடாக இரண்டாயிரத்து 684 திட்டங்களுக்கு 937.98 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசஅதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அறிமுக உரையாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர்அவர்கள் முல்லைததீவு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திகளுக்காக இந்த ஆண்டில் பதினொரு அமைச்சுக்களினூடாக 2684 அபிவிருத்தி திட்டங்களுக்கு 937.98 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்று அதன் வேலைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இதில் ஒரு சில வேலைத்திட் டங்கள்தற்போதைய காலத்தில் கிடைத்ததனால் அது தொடர்பான அபிவிருத்தியை முன்னெடுப்பதில் காலதாமதங்கள் காணப்படுகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

போரினாலும் ஆழிப்பேரலையினாலும் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு கடந்த 2009ம் ஆண்டு இறுதிக்காலத்திலிருந்து இன்று வரை பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பல நிதியீட்டங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்ற போது அதிக தேவைகள் காணப்படுகின்ற ஒரு மாவட்டமாக முலலைத்தீவு காணப்படுகின்றமை குறிபபிடத்தக்கது.




# உரிய போக்குவரத்து வசதியின்மையால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்

முல்லைத்தீவு ஒலுமடு அம்பகாமம் பிரதேசத்திற்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படுவதில்லை இதனால் பாடசாலை மாணவர்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்வதாக ஒட்டுசுட்டான் உதவிப்பிரதேச செயலர் ரமேஸ் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்ட ஒலுமடு, அம்பகாமம் கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் இந்தப் பிரதேசத்தில் உள்ள 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளுக்குசசெல்வதில் சொல்லணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தப்பிரதேசத்திலிருந்து பாடசாலை மாணவர்களுக்கான பேருந்து சேவையினை முன்னெடுக்குமாறு கிராம மட்ட அமைப்புக்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் சம்பந்தப்பட்ட தரப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டபோதும் இது வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள் தற்போது 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப்பகுதியிலிருந்து பல்வேறு சிரங்களுக்கு மத்தியில் தமது கல்வியை தொடர வேணடிய நிலையே காணப்படுகின்றது.

இதனைவிட, இந்தப்பிரதேசத்தில் போக்குவரத்து வசதியின்மை போன்ற பல்வேறு காரணங்களால் கூடுதலான சிறார்கள் பாடசாலைக் கல்வியை விட்டுஇடைவிலகியுள்ள நிலமை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேசசெயலர் அவர்கள், இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த போது,

இந்தபிரதேசத்திற்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பில் பிரதேச மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இதுவரை எந்தவித போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக கிளிநொச்சியில் மக்கள் ஆர்ப்பாட்டம்




கிளிநொச்சியில் மலையகத்தோட்டத்தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக கவனயீர்ப்புப்போரட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா ஆக இருக்க வேண்டும் என கோரி தமது போராட்டத்தை முன்னெடுத்து இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# தென்கொரியாவில் கஜேந்திரகுமார்

**வவுனியா நிருபர்**

இராணுவமயமாக்கலிற்கு எதிரான சர்வதேச மனித உரிமையாளர்கள் மக்கள் செயல்பாட்டாளர்கள் மற்றும் கல்வியலாளர்கள் பங்குபற்றிய கருத்தரங்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர்ஹூ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டார்.

இதில் பலஸ்தீனம், காஷ்மீர், மியன்மார், இந்தோனேசியா, தென் கொரியா, துருக்கி, தாய்லாந்து, ஜோர்டான், பசுபிக் தீவுகள், மேற்கு பப்புவா நியுகினி போன்ற நாடுகளின் மக்கள் செயல்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

# கலந்துரையாடல்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் மகாவலி அபிவிருத்தித் திட்டமும் முல்லைத்தீவு நில ஆக்கிரமிப்பும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் 28.10.2018 ஞாயிற்றுக் கிழமை அன்று பி.ப 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

திரு த. ஸ்ரீப்பிரகாஷ் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதான உரையினை மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர் வி. நவநீதன் அவர்கள் ஆற்றவுள்ளார். அவரின் உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைத்துநிற்கின்றனர்.

# கொழும்பின் குப்பைகளைக் கொட்டுவதால் புத்தளம் மக்களின் எதிர்காலம் பாழடையும்

**சி.கா.செந்திவேல் தெரிவிப்பு**

கொழும்பில் சேரும் குப்பைகளை, 175 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள புத்தளம் அறுவக்காடு பிரதேசத்தில் கொட்டுவதற்கு, அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, அப்பிரதேச மக்களின் அன்றாட வாழ்வையும் எதிர்காலத்தையும் பாழடையச் செய்யும் அபாயகரமான செயற்பாடாகும். இக் குப்பைக் குவியலால் அப்பிரதேசத்தில் நிலம் நீர் காற்று என்பன மாசடைந்து மனிதர்களுக்கும் ஏனைய நிலவாழ், நீர்வாழ் உயிரினங்களுக்கும் கடும் பாதிப்புகள் ஏற்படும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. இதற்கு எதிராக புத்தளம் பிரதேச மக்களுடன் இணைந்து சூழலியலாளர்கள், மக்கள் அமைப்புகள், முற்போக்காளர்கள், மக்கள் சார்பு அரசியலாளர்கள் கொழும்பின் குப்பைகள் எமக்கு வேண்டாம் என நடத்தி வரும் எதிர்ப்பு இயக்கம் முக்கியமானதாகும். புத்தளத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் மக்களின் சுழற்சி முறையிலான தொடர் சத்தியாக்கிரகம், மக்கள் எதிர்ப்பை ஒருமுகப்படுத்தி முன்னெடுக்கப்படும் வெகுஜன நடவடிக்கையேயாகும். இதனை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆதரித்து, மக்கள் போராட்டத்தில் இணைந்து கொள்கிறது என கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா செந்திவேல் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், புத்தளம் பிரதேசமானது தனக்கே உரிய பல்வேறு வளங்களையும் மக்களது வாழ்வாதாரத்திற்கான விவசாயம், மீன்பிடி, இறால் வளர்ப்பு, உப்பளம் போன்ற தொழில் வாய்ப்புகளையும் கொண்டு அமைந்திருக்கிறது. எனவே, அங்கு பெருமெடுப்பில் கொட்டப் படப்போகும் கொழும்பின் குப்பையானது மிகப் பெரும் பாதிப்புகளை கொண்டு வந்து சேர்க்கும். இந்தக் குப்பையால் வரக்கூடிய ஆபத்துகளின் பட்டியல், நிலத்தடி நீர் மாசடைதல், களப்பு நீர் மாசடைதல், மாசுகள் காற்றில் பரவுதல் என நீண்டு செல்கிறது. இங்கு கொட்டப்படும் குப்பையிலிருந்து வெளியேறும் மீதேன் போன்ற வாயுக்களும் பார உலோகங்களுடன் கூடிய இரசாயக் கழிவுகளும் ஆபத்தை உருவாக்கும் எனவும் கூறப்படுகிறது. இவை மக்களுக்கு எதிர்காலத்தில் பேராபத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஏற்கனவே, புத்தளத்தில் அமைக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையத்தினால் வரக்கூடிய பாதிப்புகள் பற்றி முன்கூட்டியே கடும் எதிர்ப்பு இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அவற்றை கவனத்தில் கொள்ளாது சுற்றுச்சூழலை பாதிக்கக்கூடிய அனல்மின் நிலையம் அங்கு உருவாக்கப்பட்டது. அதனால் வளிமண்டலமும், நிலத்தடி நீரும் விவசாயமும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. தூசு காற்றில் பரவி வருகின்றது. இவையெல்லாம் மக்களாலும் சூழலியலாளர்களாலும் முன்னரே சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் ஆகும். எனவே, அது போன்றதொரு அவலநிலை மீளவும் உருவாகாமல் தடுப்பது மனச்சாட்சியுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஆகவே, மக்களுக்கு எதிரான இத் திட்டத்தை எதிர்க்கும் போராட்டங்களை, அனைத்து மக்களும், அரசியல் சமூக அக்கறையாளர்களும் ஆதரிப்பது அவசியமாகும். மக்களைத் திரட்டிப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் 'தூய புத்தளம்' போன்ற மக்கள் அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கி அவ் வெகுஜனப் போராட்டத்தை பலப்படுதுவதன் மூலமே அரசாங்கத்தின் திட்டத்தை தடுத்து நிறுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.







இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் வவுனியா கிளையினால் நடத்தப்பட்ட ஆங்கிலம், மனிதவளமுகாமைத்துவம் உள்ளிட்ட குறுகிய கால சான்றிதழ் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த 82 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின், வவுனியா கற்கை நிலைய உதவிப் பணிப்பாளர் வ.திவாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

படம்: வவுனியா நிருபர்

# கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்ற நல்லொழுக்க தினம்





சர்வதேச நல்லொழுக்க தினம் கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தையும் சர்வதேச நல்லொழுக்க தினத்தையும் ஒட்டி பூநகரிப்பிரதேச செயலகம் மற்றும் ரகமா நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பல்லவராயன்கட்டுப் பகுதியில் ஆயிரம் சிறுவர்கள் இணைந்து மூவாயிரம் பனை விதைகளை நாட்டி வைத்தனர்.

தொடர்ந்து முழங்காவில்தேசிய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வும் சிறுவர்களின் ஆக்கங்களைத்தாங்கிய மலரும் மொட்டுக்கள் எனும் சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த சர்தேச சிறுவர் தினம் மற்றும்





கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் முதியோர்களுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட கூட்டுறவாளர் மண்டப வளாகத்தில் நடைபெறது. மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெற்றன.




# பிரதேச சபை உறுப்பினரால் உதவிகள் வழங்கிவைப்பு



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினருமான திருமதி கோகிலகுமார் அஞ்சலாவினால் ஆலயங்கள், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் கிராம அபிவிருத்திச்சங்கம், என்பனவற்றின் தேவைகளுக்காக நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் கம்பெரலிய வேலைத்திட்டம் 2018 நிதி ஒதுக்கீட்டில் பிரதேச சபை உறுப்பினர் திருமதி கோகிலகுமார் அஞ்சலாவிற்கு ஒதுக்கப்பட்ட 32 இலட்சம் ரூபாவில் இவ் உதவித்திட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

கோவில்குஞ்சுக்குளம் அரசினர் தமிழக்கலவன் பாடசாலைக்கு விளையாட்டு மைதானப்புனரமைப்பிற்காக இரண்டு இலட்சம் ரூபாவும், நவ்வி ஸ்ரீவாணி வித்தியாலய பாடசாலையின் தேவைக்காக ஒரு இலட்சம் ரூபா, மாதர் பனிக்கர் மகிழங்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திற்கும் விளையாட்டு மைதானத்திற்கும் நான்கு இலட்சம் ரூபா, ஓமந்தை மத்திய கல்லூரியின் பாடசாலைத் தேவைக்கென இரண்டு இலட்சம் ரூபா, நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திற்கு இரண்டு இலட்சம் ரூபா, புதிய சின்னக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா, பாலமோட்டை, கிழவிகுளம் பிள்ளையார் ஆலயத்தேவைக்காக ஐந்து இலட்சம் ரூபா, காயான்குளம், மருதங்குளம், ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத் தேவைக்காக ஐந்து இலட்சம் ரூபா, பனிக்கநீராவியடி பெரியமடு ஒரு கிலோ மீற்றர் வீதி புனரமைப்பிற்காக கிராம அபிவிருத்திச்சங்கத்திடம் ஐந்து இலட்சம் ரூபா, ஓமந்தை அரசமுறிப்பு ஒரு கிலோ மீற்றர் வீதி புரமைப்பிற்காக கிராம அபிவிருத்திச்சங்கத்திடம் ஐந்து இலட்சம் ரூபாவும் 10 குடும்பங்களின் வீடுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்காக மூன்று இலட்சம் ரூபாவும் வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினரால் முதற்கட்டமாக வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

# அரசியல் கைதிகளின் விடுதலை உறுதிசெய்யப்படவேண்டும்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை

நீண்ட காலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு இம்முறை தீர்வு காணப்படவேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக் கொள்கின்றது. என அவ் அமைப்பின் தலைவர் க.ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச. தனுஜன், அ.சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், அரசியல் கைதிகளும், அவர்களுடைய உறவினரும், பொதுமக்களும் தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டங்களின் காரணமாக இன்று அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பேசுவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது. இப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க குறுகிய தேர்தல் அரசியல் நோக்கங்களைத் தாண்டி மனிதநேயமுள்ள அனைவரும் பாடுபடவேண்டும்.

தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்களின் காரணமாக, உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை கிடைத்தாலும் ஆரோக்கியமாக வாளமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதற்கு முன்னர் காப்பாற்றப் படவேண்டும். அவ் அபாயம் தவிர்க்கப்படுவதற்கு, அவர்கள் இன்னொரு தடவை உண்ணாவிரதம் இருக்கும் நிலை ஏற்படாது இருக்க அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

எனவே, அரசியல் கைதிகளின் விடயமானது சட்ட ரீதியானதாக அன்றி, அரசியல் விவகாரமாக நோக்கப்பட்டு, கடந்த காலங்களில் இடம்பெற்றது போல், அரசியல் தீர்மானத்தின் மூலம் விரைந்து தீர்வு காணப்படவேண்டும். அனைவரும் நிபந்தனை அற்ற வகையில் விடுதலை செய்யப்படவேண்டும்.

ஆகவே, அரசியல் கைதிகளின் விடுதலைக்காய் அனைவரும் அணிதிரள்வோம். இறுதியான தீர்வொன்றுக்காய் குரல்கொடுப்போம் என சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அறைகூவல் விடுக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம்



முல்லைத்தீவு விசுமவடு மத்தி சனசமுக நிலையத்திற்கான மூன்று மாடிகளைக்கொண்ட புதிய கட்டடம் முற்பது மில்லியன்ரூபாசெலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தி;ல் தற்போது சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களையும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களையும் தன்னகத்தே கொண்ட விசுவமடு மல்லி சனசமுக நிலையம் நீண்ட நாட்களாக தற்காலிக கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

இச் நிலையத்திற்கான மூன்று மாடிகளைக்கொண்ட புதிய கட்டடம் முற்பது மில்லியன்ரூபாசெலவில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத் தக்கது.

# வவுனியாவில் தற்கொலைகளை தடுப்பது தொடர்பான கருத்தரங்கு





**வவுனியா நிருபர்**

உலக உளநல தினதிதை முன்னிட்டு தற்கொலைகளை தடுப்பது தொடர்பான கருத்தரஙகு ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகம் மற்றும் இறம்பைக் குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபை இணைந்து ஏற்பாடு செய்த இந்த கருத்தரங்கு நகரசபை கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயாளர் கா.உதயராசா, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.எஸ்.எம்.என்.தென்னக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் பிரதான பிஷப் பி.என்.இராஜசிங்கம், வவுனியா வைத்தியசாலையின் உள நலப்பிரிவு வைத்தியர், வவுனியா வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநலப்பிரிவு வைத்தியர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத்தலைர், வவுனியா வடக்கு பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் முதற் தடவையான ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் பாடசாலைகள், கிராமங்கள் என தொடர்ந்து இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. உளநல வைத்தியர்களின் ஆலோசனைகள், சிறப்புக் கருத்தரங்கு இடம்பெற்றதுடன் தற்கொலை தொடர்பான விழிப்புணர்வுகள், ஆலோசனைகளும் வழங்கப் பட்டவுள்ளன.

# ஆசிய விளையாட்டில் தங்கப்பதக்கம் வென்ற வவுனியா வீரனுக்கு கௌரவிப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா கலாபொகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த சரித்த நிர்மல புத்திக்க இந்திரபால ஆசியா 2018 பரா விளையாட்டில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

குறித்த விளையாட்டு வீரனை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் தர்மபாலா செனவித்தின அவர்களின் மூன்றுமுறிப்பு அலுவலகத்திலிருந்து கலா போகஸ்வெவ பகுதிக்கு வாகனப்பேரணியாக குறித்த விளையாட்டு வீரர் அழைத்துச் செல்லப் பட்டார். இதன்போது கிராம மக்கள் ஒன்று திரண்டு இச் சாதனை வீரனை வரவேற்றனர்.

இந்தோனேசியா, ஜகார்த்தாவில் இடம்பெற்ற ஆசியா 2018 பரா விளையாட்டில் ஆசியாவில் நீளம் பாய்தலில் தங்கப்பதக்கம், மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றதுடன், உயரம் பாய்தலில் 5 ஆவது இடத்தினையும் பெற்று நாட்டிற்கு பெருமை சேர்ந்துள்ளார்.



இந்நிகழ்வில் விளையாட்டு வீரர்கள், ஊர்மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, குறித்த இளைஞர் கடந்த 2016ஆம் ஆண்டு டுபாய் நாட்டில் நடைபெற்ற ஆசிய விளையாட்டில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தலில் பங்கு பற்றி பதக்கங்களை வென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் கணனிக்கூடம் மாணவர் பாவனைக்கு





கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் கணனிக்கூடம் மாணவர் பாவணைக்கு திறந்து வைக்கப்பட்டது.குறித்த நிகழ்வு பாடசாலை முதல்வர் பெருமாள் கணேசன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக தென்னிந்திய திரையுலக தயாரிப்பாளர்களான பாரதிராஜா, தயாரிப்பாளரும் நடிகருமான பாக்கியராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். லண்டனில் உள்ள சித்திவிநாயகர் ஆலயத்தின் 1.5 மில்லியன் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குறித்த கணனிக்கூடம் மாணவர் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. குறித்த கட்டடத்தினை தென்னிந்திய திரையுலகினர் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய நடிகரும், இயக்குனருமான பாக்கியராஜ் குறிப்பிடுகையில்,

பாடசாலை கல்வி என்பது மிகவும் முக்கியமானது. நான் பாடசாலை கல்வியை முழுமையாக தொடரவில்லை. கல்வியை இடையில் நிறுத்திவிட்டு சினிமா துறைக்குள் சென்றுவிட்டேன். இன்று கல்வியின் பெறுமதியை நன்கு உணர்கின்றேன். கல்வி என்பது மிக மிக முக்கியமானது. அந்த கல்வியை இடையில் விட்டுவிடாதீர்கள். நான் பாடசாலை கல்வியை இடையில் விட்டமையையிட்டு மிகவும் வருந்துகின்றேன். இன்று மிகவும் கவலை அடைகின்றேன். கல்வியின் முக்கியத்தினை வெளிநாடுகளிற்கு செல்லும்போதுதான் உணர முடிகின்றது. இங்கு ஆங்கிலத்தில் பலரும் பேசும்புாது ஆங்கிலம் தெரியாமல் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றேன். அருகில் இருப்பவர்களிடம் என்ன பேசுகின்றனர் என்று கேட்கவேண்டி உள்ளது. எனவே பாடசாலை கல்வி என்பது மிகவும் முக்கியம். பிள்ளை பருவத்தில் சிறந்த வகையில் பாடசாலை கல்வியை தொடருங்கள் என அவர் குறிப்பிட்டார்.

# வவுனியா நகரசபை தவிசாளருக்கு எதிராக நடைபாதை வியாபாரிகள் ஆர்பாட்டம்

**வவுனியா நிருபர்**

வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் அவர்களுக்கு எதிராக நடைபாதை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா, இலுப்பையடி சந்தியில் ஆரம்பித்த ஆர்பாட்டக்காரரின் ஊர்வலமானது ஹொரவப்பொத்தனை வீதியூடாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து நகரசபை முன்றலுக்கு சென்றது.

வவுனியா நகரசபை வாயிலை மறித்த நடைபாதை வியாபாரிகள் நகரசபைத் தலைவருக்கு எதிராக கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நகரசபைத் தவிசாளர் நடைபாதை வியாபாரிகளை தகாத வார்த்தையால் பேசியமைக்கு மன்னிப்பு கேட்க வேண்டும், நடைபாதை வியாபாரத்திற்கு அனுமதி வழங்கு உள்ளிட்ட பல்வேறு கோசங்களை இதன்போது எழுப்பியிருந்தனர்.

சுமார் இரண்டு மணிநேரத்திற்கு மேலாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற நிலையில், அங்கு வந்த முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், நகரசபை உறுப்பினர் பாலபிரசன்னா ஆகியோர் சமரசம் செய்ய முயன்ற போதும் அது பலனளிக்கவில்லை. நகரசபைத் தவிசாளரை ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருமாறு நடைபாதை வியாபாரிகள் கோரியிருந்தனர். இருப்பினும் இவர்களது சமரச முயற்சியால் நகரசபை தவிசாளரை ஆர்ப்பாட்டப்காரர்களில் ஐவர் சென்று சந்திப்பதற்கு இணக்கம் காணப்பட்டு சந்திப்பு நடைபெற்றது. இதன்போது எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு தீபாவளி பண்டிகை வரை நடைபாதை வியாபாரத்திற்கு அனுமதி வழங்குவதாகவும், அதன்பின் சபையின் அனுமதி பெற்று குறித்த இடத்தில் மட்டும் வியாபாரம் செய்ய இடம் ஒதுக்கப்படும் எனவும் தவிசாளர் தெரிவித்ததுடன், நடைபாதையில் வியாபாரம் செய்ய சபை அனுமதிக்காது எனவும் தெரிவித்திருந்தார். இதனை ஆர்ப்பாட்டக்காரர்களும் ஏற்றுப் கொண்டமையையடுத்து ஆர்பாட்டம் கைவிடப்பட்டிருந்தது.









முல்லைத்தீவு மாவட்டத்தின் வறுமைக்கோட்டுக்கு உட்ப்பட்ட நூறு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. முன்னாள் வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன் அவர்களுடைய 2018 ம் ஆண்டு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நூறு துவிச்சக்கர வண்டிகளே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டது.

# இது இன்னொரு வாழ்க்கை!

பகல் நேர பேருந்து பயணம், இம்சையாய் இருந்தது, கலியமூர்த்திக்கு! மனதின் கொதிப்பை விட, புறவெளியின் கொதிப்பு வெறுப்பாய், எரிச்சலூட்டுவதாய் இருந்தது. பஸ் புறப்பட சில நிமிடங்களே இருந்தன. பஸ்சில் ஏறிய இளம் பெண் ஒருத்தி, தான் முன்பதிவு செய்திருந்த இருக்கைக்கு பக்கத்தில் கலியமூர்த்தி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, நடத்துனரிடம் சொல்ல, அவர், பக்கவாட்டு இருக்கையில் அமர்ந்திருந்த தம்பதியைப் பிரித்து, இவர் அருகில் உட்கார வைத்து, அந்தப் பெண்ணை மறுபுறமாய் அமர வைத்தார்.

பக்கத்தில் வந்து அமர்ந்த அந்த நபர், கொஞ்சம், பருமனாக இருந்தார். கூடவே, அவருடைய பத்து வயது மகனை, மடி மீது உட்கார வைத்ததும், கலியமூர்த்திக்கு, 'சுள்' என்று வந்தது.

துறுதுறுவென்றிருந்த அந்த பயலோ, நெளியவும், மடங்கவும் என்று, தன் பாதி உடம்பை, கலியமூர்த்தியின் மீது கிடத்தியும், அவர் கால் வைக்கும் இடத்தில் நின்று, ஜன்னல் வழியே வேடிக்கை பார்ப்பதுமாக இருந்தான்.

'பஸ் பயணம்ன்னாலே இம்சை தான்...'என்று முணுமுணுத்து, கண்களை மூடி இருக்கையில் சரிந்தார். மனம் இனம் புரியாத தவிப்பில், இலக்கில்லாத இந்த பயணத்தின் மீது எரிச்சல் வந்தது. நேற்றைய நிகழ்வுகள், கண் முன் படமாய் விரிந்தன...

வீடியோ காலிங்கில் தெரிந்த, அமெரிக்காவில் உள்ள மகனுடைய வீடும், நவீன சோபாவும், அவனுடைய பொருளாதார வளர்ச்சியை காட்டியது.

'சந்துரு... உன்னையும், புள்ளைகளையும் பாக்க உங்கம்மா ரொம்ப ஆசையா இருக்கா... இப்பவும், நீ வர நேரமில்லன்னு சொல்றியேப்பா... இந்த தனிமை எங்கள ரெம்பவும் வாட்டுது..'என்றார் வருத்தமாக!

'ரெண்டு பேர் இருக்கிறது எப்படிப்பா தனிமை ஆகும்... கஷ்டப்பட்டு டாலரா அனுப்புறோம். சகல வசதியோட வீடு, வாசல் இருக்கு. முதுமைய, 'என்ஜாய்' செய்ய வேண்டியது தானே...' என்றான் அலட்சியமாக!

'முதுமை, 'என்ஜாய்' செய்றது இல்ல சந்துரு... வாழ்க்கைக்கான மிச்சத் தேடல். என் குழந்தை, பேரப்பிள்ளைன்னு வாழணும்ங்கிற இறுதி நாட்களுடைய ஏக்கம்...'

'எதுவுமே இறுதி இல்லப்பா; முடிஞ்சு போறது, இன்னொரு துவக்கத்துக்கான ஆரம்பம்...'

'அது எல்லாத்துக்கும் பொருந்தும். மரணத்திற்கு பொருந்தாது...'

அமைதியாக இருந்தான் சந்துரு. பேரப் பிள்ளைகள், கேமரா முன் நின்று, ஹாய் சொல்லின; மருமகள், குனிந்து நமஸ்கரித்து போனாள்.

இவருடைய மவுனமும், அமைதியான முகமும், அவனிடம் மிச்சமிருந்த பந்த பாசத்தை தூண்டி விட்டதோ என்னவோ, குழைவாய் கேட்டான்...


'வருத்தப்படுறீங்களாப்பா, யோசிச்சு பாருங்க... நான் களிமண் மாதிரி பிறந்தேன். என்னை கனவுகளோடு உருவாக்கினது நீங்க. உயரம் தான் உலகத்துடைய பிரதானம்ன்னு கத்து குடுத்த நீங்க, இப்ப, நான் உயரத்தை எட்டும்போது சஞ்சலப்படலாமா...'

'சந்துரு... ஒரு தகப்பனுக்கு, தன் மகனுடைய உயரம், சஞ்சலமா இருக்கும்ன்னா நினைக்கிற... இல்லப்பா... நீங்க உயர உயர எங்க கண்ணை விட்டு வெகுதூரம் போயிடுறீங்க. ஒரு கட்டத்துக்கு பின், அந்த பிரிவை தாங்க முடியல. அதீதமான சவுகரியங்கள் கூட, கொஞ்ச நாள்ல அலுத்து போயிடுது. அந்த ஏக்கத்துல தான், உன்கிட்ட கேட்டேன்... உங்கம்மாவோ, இதெல்லாம் உனக்கு எடுத்து சொல்லத் தெரியாம, கோவிலே கதின்னு கிடக்குறா... இதெல்லாம் உனக்குப் புரியாது..'

'எனக்கான பொறுப்புகளும், கடமையும் புரியுது. ஆனா, நான் கடமைக்காக மட்டும் தான் படைக்கப்பட்டு இருக்கேனா... என் வாழ்க்கைய முழுமை செய்துக்க, இயங்கிட்டு இருக்கேன். ஆனா, நீங்களும், அம்மாவும் உங்களுக்கு மகனா இருக்கிறது மட்டும் தான் என் வேலைன்னு சொல்றீங்க...'

சுரீரென நிமிர்ந்தார்; கண்கள் கலங்கியது. நல்ல வேளை, இந்த வார்த்தையை கேட்க, மனைவி அருகில் இல்லை. 'லேப் - டாப்'பை அணைத்து, வெளியே வந்தார்.

'மார்பிலும், தோளிலும் தூக்கி வளர்த்த பிள்ளையே, 'உங்களுக்கு பிள்ளையாக இருப்பது என் வேலை இல்லை...'என்று சொன்ன பின், வாழ்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது... ஒரு முறை, ஊருக்குப் போய் உறவுகளை எல்லாம் பார்த்து வந்து, ஒரேடியாக போய் சேர்ந்து விட வேண்டியது தான்...' என்ற முடிவுடன் தான், ஊருக்கு கிளம்பி



இருந்தார்.

''தாத்தா தூங்குறாங்க... சும்மா அவுகள இடிச்சுட்டு இருக்கக் கூடாது...'' என்ற பக்கத்து சீட் ஆசாமியின் கட்டையான குரல் கேட்டு கண் விழித்தார்.

''சார் தப்பா நினைக்காதீங்க... பையன் ரெட்டை சுழிக்காரன். பத்து நிமிஷம் ஒரு இடத்துல உட்கார வைக்க முடியாது... உங்கள ரொம்ப தொந்தரவு செய்றான்னு நினைக்கிறேன்...''

பதில் பேசாமல் சிரித்தார், கலியமூர்த்தி. அந்த சிரிப்பை, நட்புக்கான அச்சாரமாக எடுத்துக் கொண்டான்.

''நமக்கு விவசாயம் தான் தொழிலு; தென்னந்தோப்பும் இருக்கு. பெருசா விளைச்சல் இல்லாட்டியும், வீம்புக்காக விவசாயத்தை பிடிச்சுக்கிட்டு, காலத்தை ஓட்டுறோம்...'' என்றவன், ''சாருக்கு எங்க,'' என்றான்.

''அக்கா, தம்பி எல்லாரும் அங்க தான் இருக்காங்க. படிச்சு, நான் வெளியில வந்துட்டேன். பேங்க் மேனேஜர் உத்யோகம்! 32 வருஷம் ஓடிப் போச்சு... ஒரே பையன். அமெரிக்காவுல இருக்கான்...'' என்றார். உடனே, தன் பையனிடம், ''பாரு... சாரோட பையன் படிச்சு, பெரிய உத்யோகத்துல, வெளிநாட்டுல இருக்காரு. நீயெல்லாம் அங்க போக வேணாமா...''என்று, மகனின் தலையை அன்பாய் நீவி சொன்ன போது, கலியமூர்த்திக்கு கோபம் வந்தது.

தன்னை மறந்து, ''இப்படித் தான் நானும் சொல்லி வளத்தேன். கடைசியில, 'உங்களுக்கு புள்ளையா இருக்கறது மட்டும் தான், என்னோட வேலையா'ன்னு கேட்டுட்டான். மனசு ஆற மாட்டேங்குது. இதுகள தூக்கி வளர்க்க கூடாது. அது தான் நாம செய்யுற தப்பு...''என்றவர், சட்டென்று, தன் தவறை உணர்ந்து, நாக்கை கடித்தார்.

அவரையே சிறிது நேரம் உற்றுப் பார்த்த பக்கத்து சீட்டுக்காரன், அவர் கண்களில் தெரிந்த விரக்தி, வெறுமையை கண்டு, 'வருத்தப்படாதீங்கய்யா... எல்லா கஷ்டமும் ஒருநாள் நம்மை கடந்து போயிடும்...'' என்றான், வேதாந்தி போலே!

பரிச்சயம் இல்லாதவன் தான். ஆனால், ஏதோ பந்தமிருப்பவனை போல், ஆறுதலாக பேசியது, இந்த சூழலுக்கு தேவையானதாய் இருந்தது.

''உங்களுக்கு புரியாது தம்பி... ஏன்னா, நீங்க இன்னும் அந்த வயச எட்டல. இதேமாதிரி தான் நானும், என் மகனை மடியிலயும், தோள்லயும் தூக்கி வளர்த்தேன். நாம வளர்க்கிற புள்ள, நாளைக்கு நம்மளவே தூரப்படுத்தி பேசினா, நம்ம வாழ்க்கைக்கு என்ன பாதுகாப்பு இருக்கு சொல்லுங்க...'' என்றார்.

''சார்... நீங்க நிறைய படிச்சவங்க. உங்களுக்கு நான் என்ன சொல்றது... இருந்தாலும், என்னைப் பொறுத்தவர, பிள்ளைங்க மீது எதிர்பார்ப்பை வளர்த்துக்கிறது தப்புன்னு தான் சொல்வேன். அதுக்காக, உலகத்துல இருக்குற எல்லா மகனுகளும் சுயநலவாதிக. பெத்தவங்கள பாத்துக்கிறது இல்லன்னு சொல்ல வரல. நாம தான், நம்ம புள்ளைங்கள சுத்தி, நாம பின்னியிருக்கிற பாச வலையில இருந்து நம்மை விடுவிச்சுக்கணும். நாம வளர்ந்ததும், நம்ம அப்பா, அம்மாவை விட்டு, நம்மள விடுவிச்சுக்கும் போது, இதையெல்லாம் யோசிச்சமா என்ன!

''தன் குஞ்சுகள சிறகுகளுக்குள்ள வச்சு காப்பாத்துற பறவைங்க தான், குஞ்சுக்கு றெக்க முளைச்சதும், அதுங்கள கூட்டைவிட்டு துரத்துதுங்க... அதுக்காக, அதுகளுக்கு பாசம் இல்லன்னு அர்த்தமா என்ன... வாழ்க்கையில், ஒவ்வொரு கட்டத்துலயும் நமக்கு ஏதாவது ஒரு பிடிமானம் தேவைப்படுது. அந்த பிடிமானத்தை பிடிச்சு, அடுத்த கட்டத்துக்கு போன பின்பும், அந்த பிடிமானத்து மேல அபிமானம் வைக்கிறது தப்பிலீங்களா...''என்றான்.

'சொளேர்' என்று நிமிர்ந்து பார்த்தார். அவன் வார்த்தைகளில் இருந்த விஷய ஞானம், அவன் தோற்றத்திற்கு சம்பந்தமில்லாததாய் இருந்தது.

''குழந்தைங்க நம்ம மூலமா வந்தவங்க. நமக்காக வந்தவங்க இல்ல. புள்ளைங்க மேல நம்பிக்கை வைக்கலாம். ஆனா, அவங்கள நம்பியே இருக்கக்கூடாது...''

கண்களை விரித்து, 'என்ன சொல்ல வர்றே..' என்பது போல் பார்த்தார், கலியமூர்த்தி.

''சார்... நமக்கு நடுவே, ஒரு பத்து மணி நேர பயணம் தான்... ஆனா, ஏதோ நம்பளை கட்டி வைக்கிறதா நீங்க நினைக்கிறீங்களான்னு எனக்குத் தெரியாது. ஆனா, நான் நினைக்கிறேன். அந்த நினைப்புல சொல்றேன்... பிள்ளைங்களும், நம்மோட வாழ்க்கையில பயணம் செய்ற பயணிங்க தான். மத்தவங்களுக்கும், அவங்களுக்கும் உள்ள வித்தியாசம், அவங்க நம்ம சொந்த ரத்தம்... அவ்வளவு தான்.

''அவங்கள மட்டுமே நம்மோட உலகம்ன்னு நம்பிட்டு இருக்கிறத விட்டுட்டு, நமக்கான உலகத்துல, மத்தவங்களுக்கும் இடம் கொடுத்து பாருங்க... எந்த ஏமாற்றமும் இருக்காது. யாரையும் இழுத்து பிடிச்சு வச்சுக்கிறத விட்டுட்டு, நாம, நம்ம வேலைய பாத்தா, எல்லாம் தன்னால தேடி வரும்..'' என்று சொல்லி சிரித்தான். சிலிர்ப்பாய் இருந்தது கலியமூர்த்திக்கு!

அப்படியே, கண்களை மூடி இருக்கையில் சரிந்தவர், உறங்கி போனார்.

கணவருடைய போக்கில் தென்பட்ட மாற்றத்தை அதிசயமாக பார்த்தாள், கலியமூர்த்தியின் மனைவி.

'இது வயதான பறவைகளின் சரணாலயம்' என்று வாசலில், 'போர்டு' மாட்டினார். ஹாலில் டேபிள் போட்டு, நோட்டீஸ் மற்றும் வவுச்சருடன் அமர்ந்தார். தினமும் பலர் வந்து போக ஆரம்பித்தனர்.

''என்ன தான் செய்றீங்க... ஒண்ணும் புரியல...''என்ற மனைவியை, புன்னகையுடன் பார்த்து, ''மாடி போர்ஷனை காலி செய்து, 'ஓல்டு ஏஜ் ஹோம்' ஆரம்பிக்க போறேன். பிள்ளைகளால் ஒதுக்கப்பட்ட பெரியவங்க எல்லாரும் இங்க வந்து சேரலாம். மாசம் ஐயாயிரம் ரூபாய் முதல் அவங்க விருப்பப்பட்ட தொகைய தரலாம். அந்த தொகைய கொண்டு, ஏழை முதியவங்கள இலவசமா கவனிச்சுக்கலாம்.

''அது மட்டுமல்ல, வருஷத்துக்கு, ஏதாவது கோவில் இருக்குற ஊருக்கு, டூர் கூட்டிட்டு போற, 'ஸ்கீம்' கூட இருக்கு. விளையாட்டா தான் பேப்பர்ல விளம்பரம் குடுத்தேன். இதோட, நாலு பேர் போன் செய்துட்டாங்க. ஏதோ புதுசா வேலை செய்யப் போற நம்பிக்கை பிறந்திருக்கு...''

''ஐயாவோட புது அவதாரம் நல்லாத்தான் இருக்கு. ஆனா, இந்த ஐயாயிரம் தந்தாத்தான் சேர்த்துப்பேன்னு சொல்றது மட்டும், கொஞ்சம் இடிக்குது...'' என்றாள் கேலியாக!

''அப்படியில்ல... பத்து பேர் சேர்ந்தாலும் சமைக்க ஆள் போடணும். அவங்களுக்கு தேவையானதையெல்லாம் செய்யணும். அதுக்கெல்லாம் நம்மகிட்ட பொருளாதாரம் பத்தாது. நான், லாபம் சம்பாதிக்க, இந்த வேலைய செய்யல... நம்மளைப் போல வயசானவங்களும் இந்த உலகத்துல வாழறதுக்கு அர்த்தம் இருக்குன்னு காட்டத்தான், இந்த முயற்சிய செய்றேன்,'' என்றார்.

''நம்மால் முடியுமாங்க...''

''முடியும்ன்னு நம்புறேன். ஒருவேளை, என்னால முடியாமப் போனா, இங்க வர்றவங்க யாராவது அதை எடுத்து நடத்துவாங்க...''

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள், மாதங்களாக உருண்டோடின.

அப்பாவிடம் இருந்து போன் காலே இல்லை. 'தன் வார்த்தை அவரை இத்தனை விரக்தியடைய வைத்து விட்டதா...' என்ற குற்ற உணர்ச்சி உண்டானது, சந்துருவுக்கு!

வீடியோ காலீங் செய்தான். தாமதிக்காமல் எடுத்தார், கலியமூர்த்தி. வீட்டில் கேட்ட பேச்சுக்குரலும், நடமாட்டங்களையும் உணர்ந்து, ''என்னாச்சுப்பா... வீட்டில் நிறைய பேச்சுக் குரல் கேட்குது. நம்ம சொந்தக்காரங்க எல்லாம் வந்திருக்காங்களா?'' என்று கேட்டான்.

''அப்படிக்கூட வச்சுக்கலாம்... இவங்களும் நமக்கு சொந்தங்கள் தான். அடுத்த நொடி வாழ்க்கைக்கு பாதுகாப்பையும், நம்பிக்கையும் யார் ஏற்படுத்தி தராங்களோ, அவங்க தான் நமக்கு உறவுன்னு நீ தான் எனக்கு கத்துக்குடுத்ததே... அதனால தான் அடுத்த வேளை வாழ்க்கைக்கு நம்பிக்கையை ஏற்படுத்திக்க, வீட்டில், 'ஓல்டு ஏஜ் ஹோம்' ஆரம்பிச்சுட்டேன்,'' என்றார், சிரித்தபடி!

மறுமுனையில் பதறிப் போனான் சந்துரு.

''என்னப்பா உளறல் இது... சொந்த வீடுப்பா அது... இன்னைக்கு தேதிக்கு, ரெண்டு கோடி ரூபாய் பெருமானமுள்ள வீடு. நீங்க பாட்டுக்கு டிரஸ்ட், அது, இதுன்னு எழுதி வச்சுட்டு, பின்னாடி கஷ்டப்படுத்தாதீங்க. முதல்ல, அம்மாவ கூப்பிடுங்க, நான் பேசணும்...''

''சாரி சந்துரு... ஹோம்ல இருக்குற பிரண்ட்ஸ் கூட சேர்ந்து, தாயம் விளையாடிட்டு இருக்கா, உங்கம்மா. இப்ப, எங்களுக்கும் உனக்கு அப்பா, அம்மாவா இருந்துட்டு, உன்னை எதிர்பார்த்து காத்திட்டு இருக்கிறது மட்டும் வேலை இல்ல. உன்னை கஷ்டப்படுத்த இந்த வார்த்தைய சொல்லல... ஆனா, நீ தான், வாழ்க்கையில எனக்கு கடினமான விஷயத்தை, லேசா புரிய வச்ச... அதுக்கு, உனக்கு நன்றி சொல்லணும்...'' என்ற அப்பாவை, அன்பு மேவ பார்த்தான், சந்துரு. அந்த பார்வை, அவர்களுக்குள் இருந்த இடைவெளியை தகர்த்தது.

**- எஸ்.ஜாஸ்மின்**

# நிறைவேறா ஆசை!

தனது கடின உழைப்பில் சேகரிக்கப்பட்ட பணத்தினால் வாங்கப்பட்ட காணியில் வருடத்துக்கு மூன்று பருவம் விளைச்சல் செய்யப்பட்டு நல்ல வருவாயைக் கொடுத்த நெற்காணி கடந்த வருடம் விளைச்சல் போதியளவு கிடைக்காததால் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் ஆதம்காக்க.

விளைச்சலுக்காக வேண்டி பட்ட கடனைக் கூட அடைக்க முடியாத நிலையில் இருந்தும் தொடர்ந்து செய்வதா? இல்லையா? என்ற இருமனதோடு செய்வதறியாது கடுமையான யோசனை.

நஷ்டஈடு கிடைப்பதற்கும் காலம் பிந்தும் என்ற செய்தி மேலும் அவரைப் பலவீனம் அடையச் செய்தது.

கடந்த காலங்களில் தனது உறவுக்கார முதலாளி கொடுத்த உதவியைக் கொண்டு விளைச்சல் செய்து மீண்டும் பணத்தைக் கொடுத்தாலும் அதற்கென்று வட்டி குட்டி என்றெல்லாம் வாங்காமல் உதவியவர்தான் முஸ்தபா முதலாளி. அவர் பெரிய மனசுக்காரர்.

ஆதம் என்ன இந்தமுறை விளைச்சலுக்கு ஆயத்தம் செய்து விட்டாயா எல்லோரும் வேலையை ஆரம்பிச்சுப் போட்டாங்களாம்.

முதலாளி, போன வருசத்தில ஏற்பட்ட நஷ்டத்தை இன்னும் அடைக்க ஏலாம இருக்கன். இந்தமுறை யாருக்காவது வயலைக் கொடுக்கப் போறன்.

பயப்படாதே வேலையைத் தொடங்கு. புள்ள குடிகள பட்டினி போடலாமா? எல்லாம் நல்ல படியா நடக்கும். வேலையத் தொடங்கு என்ற செய்தி ஆதமுக்கு தெம்பைக் கொடுத்தது.

முதலாளியின் உத்தரவுக்கு இணங்க வயல் வேலைகளை ஆரம்பிக்க அவசர அவசரமாக களம் இறங்கினான். முஸ்தபா முதலாளியின் அன்பான செய்தியை மனைவி மக்களிடத்தில் சொன்னபோது இரட்டிப்புச் சந்தோசம் ஏற்பட்டது.

வாங்கிய பணத்துக்கு வேலை வெட்டிகள் நடக்கிறதா என்று அறிய ஆதமின் வீட்டுக்குச் செல்லாமலே செய்திகளை தரகு மூலம் அறிந்து கொண்டார்.

விளைச்சல் முன்பு இருந்ததை விட நன்றாக இருக்கிறதாக கேள்விப்பட்டு சந்தோசம் அடைந்தார் முதலாளி.

ஏழைகளுக்கு உதவுவதில் அவருக்கு நிகர் அவரேதான். கன்னாபின்னா என்று பேசி ஏமாற்றுவது மட்டும் பிடிக்காது. அப்பட்டிப்பட்டவர்களை கண்ணிலும் காட்டக்கூடாது. அவ்வளவுக்கு நேர்மையானவர்.

வயலில் கிடைக்கும் ஆதாயத்தைக் கொண்டு வீடு கட்டினாலும் அது கொத்தும் குறையுமாகக் கிடந்தது. வீட்டை எப்படியாவது முடித்துவிட வேண்டுமென்று நினைத்தவருக்கு விளைச்சலும் அதிகமாகக் கிடைத்ததால் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினான்.

முதலாளிக்கென்று வேறாக எடுத்து வைக்கப்பட்டிருந்த நெல்லை தன் மகனிடமே கொடுத்து முதலாளியின் வீட்டில் கொடுத்து வரச் சொன்னபோது தயக்கம் காட்டாமல் மகன் எடுத்துச் சென்றான். அப்போதுதான் முதலாளிக்குத் தெரியவந்தது ஆதமுக்கு வாட்டசாட்டமான படித்த மகன் இருப்பது.

கொடுக்கப்பட்ட நெல்மூடையை திருப்பியனுப்பி விட்டார் முதலாளி.

ஆதமோ, பதறிப்பலவிதமாகவும் சிந்தித்தான். நீண்டகால உறவை வளர்ந்துக் கொண்டும் ஏன் இப்படிச் செய்தார் என்று பல கோணங்களிலும் சிந்தித்தும் விடைகிடைக்கவில்லை.

மறுநாள் முதலாளியின் வீட்டை நோக்கிச் சென்றார். வீட்டில் முதலாளியும் அவருடைய மனைவியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவரைக் கண்டவுடன், ஆதம், வா நல்ல நேரத்தில்தான் வந்திருக்காய். நல்ல விளைச்சல் என்று கேள்விப்பட்டேன். கடன்களையெல்லாம் அடைச்சுப்பேடலாமா எல்லோரும் வீட்டுக்கு படையெடுப்பார்களே என்று கேட்டார் முதலாளி.

முதலாளி, இனிமேல் விளைச்சலில் ஈடுபடுவதில்லை என்று முடிவு கட்டிப்போட்டன். என்று சொன்னவுடன் அவரின் முகம் எதையோ நினைத்தது. ஆதம் நீ திடீரென்று ஏன் இந்த முடிவுக்கு வந்தாய்?

வயது வந்த பிள்ளைகள், மகனின் படிப்பு இதையெல்லாம் நெனைச்ச இருக்கிற காணியை வித்தாலும் போதாது போல் இருக்கு.

அது சரி உனக்கு ஒருமகன் இருக்கிறத சொல்லாமல்தானே இருந்து விட்டாய்.

படிக்க வேணாம் என்று சொன்னாலும் படிக்கத்தான் வேணும் என்று ஒத்தக்காலில் நின்றான். அவனுக்கு சார்பாக மனைவியும் சேர்ந்து படிக்கத்தான் வேணும் என்று சொன்னார். என்னவோ எதுவும் செய்ய ஏலாமல் போய்விட்டது. எல்லாமே விதியின் செயல்.

ஆதமுடைய பேச்சைக் கேட்டதும் முதலாளியின் மனம் வேதனைப்பட்டது. தன்னுடைய மகன் தேவை இல்லாத நண்பர்களோடு சேர்ந்து காலத்தை வீணாக்கி விட்டானே என்று கண்கலங்கினார்.

முதலாளி கண்கலங்க வேணாம். ஒவ்வொருவருடைய தலையில் என்ன எழுதி இருக்கோ அதுதான் நடக்கும். நம்மட கையில எதுவுமே இல்லையே.

ஆதம் கூறிய வார்த்தை ஆறுதல் அளித்தது. வருந்துவதால் பயன்எதுவும் இல்லை என்பதை நன்கு புரிந்து கொண்டவர் மேற்கொண்டு எதையுமே பேசாமல் வந்த விடயத்தை விபரமாகக் கேட்டார்.

முதலாளி என்னுடைய கஷ்டநஷ்டங்களைச் சொல்லிப்போட்டன். அதனாலதான் காணியை விக்கிற முடிவுக்கு வந்திட்டன். எடுத்திட்டு நியாயமா பணம் தாருங்க. அவசரப்பட்டு தேவையில்லாத முடிவுக்கு வராதே. கஷ்டம் உனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்தான்.

வயசுக்கு வந்த மகளை வெச்சு என்ன செய்யலாம். காலா காலத்தில ஒருத்தருடைய கையில் பிடிச்சுக் கொடுத்தால்தான் நிம்மதி. இந்தக் காணியை இன்னும் இன்னும் வெச்சி வேடிக்கை பார்க்க ஏலாது. ஒருகாலத்தில ஓடிஓஐ உழைச்சி சேர்ந்த பணத்தில வாங்கின காணிதான். எப்படியாவது குமர் காரியம் முடிய வேணும். அதுதான் இப்ப இருக்கிற முக்கிய வேலை. காணியை நீங்களே எடுத்துக்கிட்டு பெறுமதியைத் தாருங்க. வேற ஆக்களுக்கு கொடுக்க மனம் இடம்கொடுக்குது இல்ல. நீங்கதான் சரியாகச் செய்வீங்க.

தன்னுடைய காணியை வாங்க மறுப்பதற்கான காரணத்தை அறியமுற்பட்டு வினயமாக விளக்கம் கேட்டான் ஆதம். எந்த உறவுமுறைகளும் இருவருக்கிடையில் இல்லை. காசுபணம் கொடுத்து உதவுவதைத்தவிர முஸ்தபா முதலாளி வேறு எதையுமே செய்யவில்லை என்பது ஆதமுக்குத் தெரியும்.

மறைமுகமாக பேசுவதை விட்டு நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளவே ஆதமை அழைத்திருந்தார். அதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் அவனும் வந்திருந்தான் முதலாளியின் வீட்டிற்கு.

ஆதம் உன்னுடைய மகனை என்னுடைய மகளுக்கு மாப்பிள்ளையாகத் தர வேண்டித்தான் அழைத்தேன்.

முதலாளி கல்யாண விடயம் மகனிடமும் ஒரு வார்த்தை கேட்கவேணும் தானே. அவர் விரும்பினால் எனக்கும் விருப்பம்தான்.

உன்னுடைய சகல வேலைகளையும் நான் முடித்துத் தருகிறேன். இதைவிட வேறு என்ன செய்ய வேணும் சொல்லிப்போடு.

ஆதம் மகனிடம் எல்லாவற்றையும் எடுத்து விளக்கினார். அப்போது தகப்பனிடம் மகன் சில கேள்விகளைக் கேட்டான்.

மகன் சொன்ன விடயத்தை நன்றாகப் புரிந்து கொண்ட ஆதம், முதலாளியிடம் அன்பாகப் பேசினான். முதலாளி, மகனுடைய சம்மதத்தைக் கேட்ட மாதிரி உங்க மளுடைய விருப்பத்தையும் கேட்டுப் பாருங்களேன் என்று சொன்னதும் முதலாளிக்கு பட்டென்று கோபம் வந்து, என் மகள் வேறு யாரையாவது விரும்பி இருக்கிறாள் என்று சொல்கிறாயா என்று கேட்டார்.

மகளுக்கு எப்படியாவது படிச்ச ஒருவரைப் பார்த்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசைப்பட்டிருந்தார். பணம் இருந்தும் நல்ல வேலையைச் செய்து விட்டால்தான் நிம்மதியாய் இருக்கும் என்று அவர் பாடுபட்டார். ஆதம் சொன்ன வார்த்தை சிந்திக்க வைத்தது.

மகளை மிகவும் அன்போடு அழைத்தார். நேரடியாக கேட்டுவிட்டால் எல்லா விடயங்களும் தெரிந்துவிடும் என்று பேச்சை ஆரம்பித்தார்.

மகள் உனக்கு திருமணம் செய்துபார்க்க எண்ணி மாப்பிள்ளையை விசாரித்தேன். இருந்தும் உன்னிடத்திலும் கேட்டுப்பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

மகள் சொன்ன வார்த்தையில் கொஞ்ச நேரம் நிலைகுலைந்து போனார். தான் எண்ணியதெல்லாம் சுக்குநூறாகிப் போய்விட்டதே என்று வருந்தினார்.

முதலாளி தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டு இனிமேல் யாரிடத்தில் இருந்தும் காணி வாங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். ஆதமின் காணியை வேறு யாருக்காவது விற்றுக் கொடுக்க இணக்கம் தெரிவித்தார்.

முதலாளியின் மகளின் திருமணத்தைத் தானும் முன்னின்று நடாத்தி முடித்துக் கொடுக்க முன்வந்த செயலுக்கு அன்புகாட்டி நடந்ததையெல்லாம் மறந்து நிறைவேறாத ஆசையை கைவிட்டு நின்றார்.

**கலாபூஷணம் மருதமுனை ஏ.எம்.எம்.பாறூக்**





# ‘ராட்சசனை’ கைப்பற்றியது சன டிவி



# காத்திருக்கும் தனுஷ் ரசிகர்கள்

தனுஷ் நடித்துள்ள ‘எனை நோக்கி பாயும் தோட்டா’ படம் எப்போது ரிலீஸாகும் என அவருடைய ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

கௌதம் மேனன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள படம் ‘எனை நோக்கி பாயும் தோட்டா’. தனுஷ் ஜோடியாக மேகா ஆகாஷ் நடித்துள்ளார். முக்கியக் கதாபாத்திரங்களில் சசிகுமார், சுனைனா நடித்துள்ளனர். தாமரை பாடல்கள் எழுத, தர்புகா ஷிவா இசையமைத்துள்ளார்.

கௌதம் மேனனின் ஒன்றாக என்டெர்டெயின்மென்ட் மற்றும் எஸ்கேப் ஆர்ட்டிஸ்ட்ஸ் மோஷன் பிக்சர்ஸ் பி.மதன் இணைந்து இந்தப் படத்தைத் தயாரித்தனர். இவர்களுடன், ‘பாகுபலி’ படத்தைத் தயாரித்த கே புரொடக்‌ஷன்ஸ் நிறுவனமும் இணைந்துள்ளது.

2016-ம் ஆண்டு தொடங்கிய இதன் ஷூட்டிங், இடையில் பல மாதங்கள் நடைபெறாமல் இருந்தது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக இறுதிக்கட்ட படப்பிடிப்பு மும்பையில் நடைபெற்றது. இந்நிலையில், கடந்த செப்டம்பர் 4-ம் தேதியுடன் படப்பிடிப்பு முடிந்துவிட்டதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்தது.

ஷூட்டிங் ஸ்பாட்டில் கௌதம் மேனன், சசிகுமார், மேகா ஆகாஷ், பி.மதன் உள்ளிட்ட படக்குழுவினர் கேக் வெட்டிக் கொண்டாடும் புகைப்படங்களை ட்விட்டரில் வெளியிட்டார் கௌதம் மேனன். அந்த கேக்கில், ‘ஹேப்பி தீபாவளி 2018’ என எழுதப்பட்டிருந்தது.

எனவே, போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகளை முடித்து, தீபாவளிக்குப் படத்தை ரிலீஸ் செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்று கூறப்பட்டது. ஆனால், அதுகுறித்த எந்த அதிகாரபூர்வ அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை. தீபாவளிக்கு இன்னும் 10 நாட்களே இருக்கும் நிலையில், படத்தின் அதிகாரபூர்வ ரிலீஸ் தேதிக்காக தனுஷ் ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

விஷ்ணு விஷால் நடிப்பில் சமீபத்தில் ரிலீஸான படம் ‘ராட்சசன்’. ‘முண்டாசுப்பட்டி’ படத்தை இயக்கிய ராம்குமார் இந்தப் படத்தை இயக்கினார். அமலா பால் ஹீரோயினாக நடிக்க, முனீஸ்காந்த், ராதாரவி, சங்கிலி முருகன், நிழல்கள் ரவி, காளி வெங்கட், வினோதினி ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்தனர்.

சைக்காலஜிக்கல் த்ரில்லர் படமான இதற்கு, ஜிப்ரான் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தைப் பார்த்த அனைவருமே படத்தைக் கொண்டாடி வருகின்றனர். இப்படி ஒரு த்ரில்லர் படம் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டது என சமூக வலைதளங்களில் பெரும்பாலானோர் பதிவிட்டுள்ளனர்.

மூன்று வாரங்களைக் கடந்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது இந்தப் படம். இதன் இந்தி ரீமேக் உரிமையை படத்தின் நாயகனான விஷ்ணு விஷாலே வாங்கி வைத்திருக்கிறார். ரஜினியும் இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு சமீபத்தில் படக்குழுவினரைப் பாராட்டினார். இந்நிலையில், இந்தப் படத்தின் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை சன் டிவி கைப்பற்றியுள்ளது. அதேபோல், டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமையை சன் நெக்ஸ்ட் பெற்றுள்ளது.

கியாக நடித்தவர்.
முக்கிய கேரக்டரில்
கேயர் நடிக்கிறார். இவ
குப் பின் தெலுங்கு நடி
கோபி ஜெகதீஸ்வர
இசையமைக்கிறார். லி
இயக்கத்தை கவனிக்கி
குகிறார் ஜான்சன். இவ
இந்தப் படத்தின் மூலம்
தற்போது ‘புரொடக்
தொடங்கியிருக்கிறது.
என்று எதிர்பார்க்கப்படு
சந்தானம் நடிப்பி
விருக்கும் நிலை
உள்ளது.

‘அமைதிப்படை 2’, ‘கங்காரு’ ஆகிய படங்களின் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி, ‘மிக மிக அவசரம்’ என்ற படத்தை இயக்கியுள்ளார். ஸ்ரீபிரியங்கா, சீமான், ஈ.ராமதாஸ் நடித்துள்ளனர். பணியிலுள்ள பெண் காவலர்களின் அவலங்களை சொல்லும் படமாக உருவாகியுள்ள இதை, கடந்த காவலர் தினம் அன்று 200 பெண் காவலர்கள் பார்த்தனர். இதுகுறித்து சுரேஷ் காமாட்சி கூறும்போது, ‘பெண் போலீசார் மட்டுமே சந்திக்கும் பிரச்னைகளை சொல்லும் படம் அல்ல. அனைத்து துறையிலும் பெண்கள் சந்திக்கும் பிரச்னைகளை படம் சொல்கிறது’ என்றார்.

மலையா
டன் இணைந்
அவர் தற்போ
றார். அவருட
**தமிழில் நடி**
மலையாள
தமிழ் படத்தி
கண்டி’ படத்தி
போது, ரொம்
**அந்த கேரக்**
அப்பா, அ
பெண்தான் நா
சிக்கும்நான் எ
யில் சிக்கியது
வலம்வரும்.
உதவுவார். அ

## மன
## த
## ம

ஜெய்யுடன்

# சூர்யாவின் ‘மான்ஸ்டர்’



இது என்னடா லீடர் நடிகருக்கு இப்படி ஒரு சோதனை ஏற்பட்டுள்ளது. பெரும் பட்ஜெட்டில் லீடர் நடிகர் நடித்துள்ள படம் ரிலீஸுக்கு தயாராகியுள்ளது. இந்நிலையில் அந்த படத்தின் கதை தன்னுடையது என்று உதவி இயக்குனர் ஒருவர் தெரிவித்தார். லீடரும், இயக்குனரும் சேர்ந்த முந்தைய படத்திற்கும் இதே புகார் எழுந்து அடங்கியது.

லீடர் பெரிய நடிகர் என்பதால் இப்படித் தான் யாராவது வருவார்கள் என்று கதை திருட்டு புகாரை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இந்நிலையில் தான் அந்த உதவி இயக்குனர் லீடரின் படக் கதை தன்னுடையது என்பதை நிரூபித்துள்ளார். அவரின் கதையில் 95 சதவீதத்தை திருடி படம் எடுத்துள்ளார் லீடரின் இயக்குனர். ஒரு பெரிய நடிகரை வைத்து படம் எடுக்கும் இயக்குனர் இப்படியா கதையை திருடுவது என்று விமர்சனம் எழுந்துள்ளது. இந்த விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. இம்முறை கதை திருட்டு விவகாரத்தில் தப்பிக்க முடியாத அளவுக்கு இயக்குனர் சிக்கியுள்ளதால் படத்திற்கு பிரச்சனை வந்துவிடுமோ என்று லீடரின் ரசிகர்கள் கவலை அடைந்துள்ளனர். அரசியல் சார்ந்த படம் வெளியான பிறகு லீடர் நடிகர் இளம் இயக்குனரின் படத்தில் நடிக்க உள்ளார். அந்த இளம் இயக்குனர் பல படங்களில் இருந்து கதையை சுட்டு ஒரு கலக்கு கலக்கி தன் கதை என்று சொல்லி படம் எடுப்பதற்கு பெயர் போனவர். கதையை சுட்டு படம் எடுக்கும் பார்ட்டிகளிடமாக மாட்டிக் கொண்டுள்ளார் லீடர்.

படங்களை தேர்வு செய்யும்போது சொந்தமாக கதை எழுதும் இயக்குனர்களை லீடர் நடிகர் தேர்வு செய்தால் நல்லது. தொடர்ந்து திருட்டுக் கதைகளிலாக நடித்துக் கொண்டிருக்கிறார் பாவம்.

ஆர்மி ஆரம்பிக்கும் அளவிற்கு பிரபலமான நடிகை, மூன்றெழுத்து நடிகர் ஒருவருடன் படப்பிடிப்பு தளத்தில் கேரவனுக்குள் குடித்து விட்டு கும்மாளம் அடித்துள்ளார்.

பத்து படங்களில் நடித்தும் கிடைக்காத அங்கீகாரத்தையும், ஆதரவையும் ஒரே நிகழ்ச்சி மூலம் மக்களிடம் இருந்து பெற்ற அழகான நடிகை அவர். இரண்டாம் முறை கிடைத்த வாய்ப்பை எப்படியும் தக்க வைத்துக் கொள்வார் எனப் பார்த்தால், இதுவரை அவருடைய ஒரு படமும் ரிலீசாகவில்லை.

இந்நிலையில், தனது அறிமுகப் படத்தின் இரண்டாம் பாகத்தில் தற்போது நடித்து முடித்துள்ளார் நடிகை. நாயகனும் அவரே என்பதால், ஷூட்டிங்கில் கச்சேரி களைகட்டியதாம். நாயகன், நாயகி இருவரும் தங்கள் காட்சிகளை முடித்துக் கொடுத்தவுடன் கேரவனுக்குள் புகுந்து கொண்டார்களாம். பிறகென்ன குடியும், குடித்தனமுமாக அவர்களது பொழுது போனதாம். இவர்களது இந்த நடவடிக்கையால் படப்பிடிப்பிற்கு எந்த பாதகமும் ஏற்படவில்லை. இதனால் முகம் சுளித்தாலும் கண்டுக்காமல் சென்று விட்டதாம் படக்குழு. முதல் படத்திலேயே இருவரையும் வைத்து கிசுகிசுக்கள் கிளம்பின. இதனால் சில காலம் பிரிந்திருந்த இந்த ஜோடி, தற்போது மீண்டும் இணைந்து விட்டனர் என்கின்றனர்.

விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பைப் பெற்ற ‘ஒரு நாள் கூத்து’ படத்தை இயக்கியவர் நெல்சன் வெங்கடேசன். அப்படத்தைத் தொடர்ந்து எஸ்.ஜே.சூர்யா நடிக்கும் படத்தை இயக்கியுள்ளார். இந்தப் படத்துக்கு ‘மான்ஸ்டர்’ எனத் தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

‘மாயா’, ‘மாநகரம்’ படங்களைத் தயாரித்த பொட்டன்ஷியல் ஸ்டுடியோஸ் நிறுவனம், இப்படத்தைத் தயாரித்துள்ளது.

எஸ்.ஜே.சூர்யா ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடித்துள்ளார். படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் படத்தில், முக்கியக் கதாபாத்திரத்தில் எலி ஒன்று நடித்துள்ளது. அது சம்பந்தப்பட்டக் காட்சிகளை கிராபிக்ஸில் உருவாக்கியுள்ளனர்.

கோகுல் பினோய் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு, ஜஸ்டின் பிரபாகரன் இசையமைத்துள்ளார்.

இந்நிலையில், இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியிடப்பட்டுள்ளது.

அதில், எஸ்.ஜே.சூர்யா எலியைத் தன் கண்களை உருட்டி பயங்கரமாகப் பார்ப்பது போன்ற புகைப்படம் இடம் பெற்றுள்ளது.





‘சர்கார்’ படத்தின் ரிலீஸ் தேதியை சன் பிக்சர்ஸ் நிறுவனம் உறுதி செய்துள்ளது.

விஜய் நடிப்பில் உருவாகிவரும் படம் ‘சர்கார்’. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கியுள்ள இந்தப் படத்தை, சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. படப்பிடிப்பு முடிந்து போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் படம், வருகிற தீபாவளி விடுமுறைக்கு ரிலீஸாக இருக்கிறது.

கீர்த்தி சுரேஷ் ஹீரோயினாக நடித்துள்ள இந்தப் படத்தில், வரலட்சுமி சரத்குமார், ராதாரவி, பழ.கருப்பையா, யோகி பாபு ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்க, அனைத்துப் பாடல்களையும் விவேக் நியுள்ளார்.

தீபாவளி விடுமுறைக்குப் படம் ரிலீஸாகும் என்று அறிவித்தார்களே தவிர, இதுவரை ரிலீஸ் தேதியை அதிகாரபூர்வமாக அறிவிக்காமல் இருந்தனர். விடுமுறை நாட்கள் நிறைய இருப்பதால் நவம்பர் 2-ம் தேதியே (வெள்ளிக்கிழமை) படம் ரிலீஸாகும் என்று கூட சமூக வலைதளங்களில் தகவல் பரவியது.

இந்நிலையில், நவம்பர் 6-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) படம் ரிலீஸ் என்பதை சன் பிக்சர்ஸ் நிறுவனம் உறுதி செய்துள்ளது. படத்தின் ரிலீஸ் தேதி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், விஜய் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர். படத்தைப் பார்த்த சென்சார் போர்டு அதிகாரிகள், படத்துக்கு ‘யு/ஏ’ சான்றிதழ் அளித்துள்ளனர். விஜய் நடிப்பில் கடந்த தீபாவளியன்று ‘மெர்சல்’ படம் ரிலீஸானது. ‘சர்கார்’ படமும் தீபாவளியன்றே ரிலீஸாவதால், ரசிகர்களின் உற்சாகம் பெருகியிருக்கிறது.

# அதிரடி சரவெடி!



**ந**டிகர் சந்தானம், அறிமுக இயக்குநர் ஜான்சன் என்பவர் இயக்கவிருக்கும் புதிய படத்தில் கதையின் நாயகனாக நடிக்கிறார்
சர்க்கிள் பாக்ஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் எஸ் ராஜ் நாராயணன் தயாரிக்கும் இன்னும் பெயரிடப்படாத புதிய படத்தில் சந்தானம் நாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக தாரா அலிசா பெர்ரி என்னும் பாலிவுட் நடிகை நடிக்கிறார். இவர் இந்தியில் வெளியான 'மாஸ்ட்ரம்' , 'த பர்ஃபெக்ட் கேர்ள்' , 'லவ் கேம்ஸ்' என ஐந்திற்கும் மேற்பட்ட படங்களில் கதாநாய

'பாஜிராவ் மஸ்தானி' என்ற இந்திப் படத்தில் நடித்த நடிகர் யதீன் கார்
ர்களுடன் மொட்டை ராஜேந்திரன் நடிக்கிறார். சிறிய இடைவெளிக்
கர் சாய்குமார் ஒரு முக்கியமான கேரக்டரில் நடிக்கிறார்.
ன் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்துக்கு சந்தோஷ் நாராயணன்
யோ ஜான் பால் படத்தொகுப்பாளராகப் பணியாற்ற, ராஜா கலை
றார். இந்தப் படத்துக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்
ர் நாளைய இயக்குநர் சீஸன்-4 ல் வெற்றி பெற்றவர் என்பதும்,
இயக்குநராக அறிமுகமாகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
சன் நம்பர் 1' என்ற பெயரில் இந்தப் படத்திற்கான பணிகள்
விரைவில் டைட்டிலும், ஃபர்ஸ்ட் லுக்கும் வெளியாகும்
கிறது.
ல் தயாராகும் 'தில்லுக்கு துட்டு-2 'படம் வெளிவர
பில், அதைத் தொடர்ந்து புதிய படம் உருவாக



## கார்த்தியின் 'தேவ்' முதல்பார்வை வெளியீடு!


**'தே**வ்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியானது. சூர்யா தன் ட்விட்டர் பக்கத்தில் இதனை வெளியிட்டார்.

அறிமுக இயக்குநர் ரஜத் ரவிஷங்கர் இயக்கத்தில் கார்த்தி நடிப்பில் உருவாகி வரும் படம் 'தேவ்'. இதில் கார்த்திக்கு ஜோடியாக ரகுல் ப்ரீத்சிங் நடிக்கிறார். 'தீரன் அதிகாரம் ஒன்று' படத்தைத் தொடர்ந்து இருவரும் இரண்டாவது முறையாக இணைந்துள்ளனர்.

கார்த்திக், ரம்யா கிருஷ்ணன், பிரகாஷ் ராஜ், ரேணுகா, அம்ருதா, ஆர்.ஜே. விக்னேஷ்காந்த் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். பிரின்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ரிலையன்ஸ் என்டெர்டெயின்மென்ட் இணைந்து இந்தப் படத்தைத் தயாரிக்கின்றன. ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்க, வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்து வருகிறார். பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் பெரும் பொருட்செலவில் இப்படத்தைத் தயாரித்து வருகிறது.

உக்ரைன் படப்பிடிப்பைத் தொடர்ந்து, சென்னை மற்றும் ஹைதராபாத், குலுமணாலியில் சில முக்கிய காட்சிகளைப் படமாக்கவுள்ளனர். படப்பிடிப்பு, இறுதிக்கட்டப் பணிகள் உள்ளிட்டவை முடிக்கப்பட்டு டிசம்பர் 21-ல் படத்தை வெளியிடத் திட்டமிட்டு இருக்கிறது படக்குழு.

கார்த்தி படங்கள் தெலுங்கிலும் வெளியாகும் என்பதால், அங்கும் இதே பெயரை வைக்கத் தயாரிப்பாளர்கள் முடிவு செய்துள்ளனர்.



**யு**வன் சங்கர் ராஜா, இர்பான் மாலிக் ஆகியோர் இணைந்து, பியார் பிரேமா காதல் படத்தை தயாரித்தனர். இதையடுத்து விஜய் சேதுபதி, அஞ்சலி நடிக்கும் படத்தை தயாரிக்கின்றனர். முதற்கட்டப் படப்பிடிப்பு தென்காசி, குற்றாலம் ஆகிய பகுதிகளில் நடந்தது. தற்போது தாய்லாந்தில் படப்பிடிப்பு நடந்து வருகிறது. சேதுபதி படத்துக்கு பிறகு விஜய் சேதுபதி, இயக்குனர் அருண்குமார் இணைந்துள்ளனர். ஒளிப்பதிவு, விஜய் கார்த்திக். இசை, யுவன் சங்கர் ராஜா.



**'ஜீ**னியஸ்', 'ஏஞ்சலினா', 'சாம்பியன்' ஆகிய படங்களை இயக்குவதுடன், 'சுட்டுப் பிடிக்க உத்தரவு' படத்திலும் நடித்து வரும் சுசீந்திரன், அடுத்து சசிகுமார், பாரதிராஜா, சூரி, முனீஸ்காந்த், மீனாட்சி, காயத்ரி நடிக்கும் 'கென்னடி கிளப்' படத்தை இயக்குகிறார். பெண்கள் கபடியை மையமாக வைத்து படம் உருவாகிறது. நிஜ பெண் கபடி வீராங்கனைகள் நடிக்கின்றனர். ஒளிப்பதிவு, ஆர்.பி.குரு தேவ். இசை, டி.இமான்.

**இ**யக்குநர் ராம்பாலின் குழந்தைகளின் கல்விக்காக நடிகர் சூர்யா நிதியுதவி வழங்கியுள்ளார். அகரம் அறக்கட்டளை மூலம் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி அளித்து வரும் சூர்யா, சமீபத்தில் இயக்குநர் ராம்பால் என்பவரின் இரண்டு குழந்தைகளின் கல்வி செலவையும் ஏற்றுக் கொண்டுள்ளார். இது குறித்து ஜி.வி.பிரகாஷ் நடித்து வரும் 'அடங்காதே' பட இயக்குநர் சண்முகம் முத்துசாமி தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். நண்பர் இயக்குநர் ராம்பால் அவர்களின் இரு குழந்தைகளின் பள்ளி செலவை முழுவதுமாக ஏற்றுக் கொண்டு கல்வி கண் திறக்க உதவிய பெரும் மரியாதைக்குரிய நடிகர் சூர்யா அவர்கள் மென்மேலும் நலமுடனும் வளமுடனும் வாழ நம் கடவுள் முருகன் துணையிருப்பான்..நன்றி என ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.



## லையாளம் போலவே மிழிலும் கிழ்வான தொடக்கம்!

ளத்தில் அறிமுகமான முதல் படத்திலேயே நிவின் பாலியு
து நடித்து, வரவேற்பை பெற்றவர் ரெபா மோனிகா ஜான்.
து 'ஜருகண்டி' திரைப்படம் மூலம் தமிழில் கால் பதிக்கி
ன் ஒரு நேர்காணல்...

**த்த அனுபவம் குறித்து...**

த்தில் 2 படங்களில் நடித்திருந்தாலும், முதன்முதலாக
ல் நடிக்கும்போது டென்ஷன் இருக்கத்தான் செய்தது. 'ஜரு
ின் கதையையும், அதில் என் கேரக்டரையும் பற்றிக் கேட்ட
ப ஈர்க்கப்பட்டு ஒப்புக்கொண்ட படம் அது.

**டர் பற்றி...**

ம்மா, உறவினர்கள் எனயாருமே இல்லாத கீர்த்தி என்ற
ன். எனக்கு ஒரு பெஸ்ட் ஃபிரெண்ட். ஒரு பிரச்சினையில்
ப்படி மீண்டு வருகிறேன் என்பது கதை. நான் பிரச்சினை
ம், படத்தில் உள்ள மற்ற கேரக்டர்களும் என்னைச் சுற்றியே
எனக்கு உதவி செய்வதைவிரும்பாத ஹீரோ, மறைமுகமாக
து நல்ல வலுவான கதாபாத்திரம்.

கேரக்டரே கிடைத்திருக்கிறது. நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. என்னைப் போல பல நடிகைகளுக்கு அவர்தான் முன்மாதிரி.

குறிப்பாக, கேரளாவில் இருந்து வரும் நடிகைகளுக்கு தன்னம்பிக்கைஅவரிடம் இருந்துதான் கிடைக்கிறது. எந்த பின்புலமும் இல்லாமல், இத்தனை ஆண்டுகளாக ஹீரோயினாக நடிப்பது சாதாரண விஷயம் அல்ல. நடிகையாக மட்டுமின்றி, நல்ல மனுஷியாகவும் அவரைப் பிடிக்கும். 'நயன்தாராவின் ரசிகை' என்பதில் பெருமைப்படுகிறேன்.

**நடித்த அனுபவம்?**



நல்ல நடிகராக ஜெய்யை ஏற்கெனவே எனக்கு பிடிக்கும். அவரது 'ராஜா ராணி', என் ஃபேவரிட் படம். அனுபவம் உள்ள நடிகர், 2 படங்கள் மட்டுமே நடித்த என்னிடம் எப்படி நடந்துகொள்வார்? மொழி வேறு தெரியாது. இதனால் ரொம்ப பயந்தேன். அவரோ, நட்புடன் பழகினார். தவிர, வெங்கட் பிரபு கூட்டாளி ஆச்சே, படப்பிடிப்பு தளம் கலகலவென இருக்கும். அந்த சூழலைப் பார்த்ததுமே பயம் போய்விட்டது.

**எதன் அடிப்படையில் படம் ஒப்புக்கொள்கிறீர்கள்?**

உடல் அழகைக் காட்டி நடிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. அது எனக்கு சரிப்பட்டு வராது என முன்கூட்டியே சொல்லிவிடுவேன். மற்றபடி, பெரிய ஹீரோவுடன் நடிக்கிறோம் என்பதை தாண்டி, கதை மற்றும் என் கதாபாத்திரத்துக்கான முக்கியத்துவத்தை பார்த்து ஓ.கே சொல்வேன். 'ஜருகண்டி' படத்தில் ஹீரோ, கதை, என் கேரக்டர் என மூன்றுமே சரியாக அமைந்தது. நான் சினிமாவில் அறிமுகமான 'ஜேக்க பிண்டே ஸ்வர்கராஜ்யம்' திரைப்படம், எனக்கு எல்லா வகையிலும் பிளஸ்ஸாக அமைந்ததுபோல, முதல் தமிழ் படமும் நன்றாக அமைந்திருக்கிறது.

**'நானும் ரவுடிதான்' கன்னட ரீமேக்கில் நயன்தாரா கதாபாத்திரத்தில் நீங்கள் நடிப்பது குறித்து...**

கொஞ்சம் ரிஸ்க்தான். நயன்தாராவோடு எல்லோரும் ஒப்பிட்டு பேசுவார்கள். விமர்சிப்பார்கள். அதுவும் ஒரு வகையில் நல்லதே. அது தான் சவாலாகவும் இருக்கும். அதில் நயன்தாராவின் காதம்பரி பாத்திரம் எனக்கு ரொம்ப பிடிக்கும். அவரது ஏதாவது ஒரு கேரக்டரில் நடித்தாலே போதும் என்று நினைத்த எனக்கு, எனது ஃபேவரிட்டான காதம்பரி

**நீங்கள்?**

ரொம்ப ஜாலி பெண். எப்போதும் பேசிட்டே இருப்பேன். நட்பாக பழகுவேன். சில நேரங்களில் தனிமை விரும்பி. பெரும்பாலும் கோபம் வராது. வந்தா, அதகளம்தான்!

**நடிப்பு தவிர, வேறு எதில் ஆர்வம்?**

சிறுவயதில் டான்ஸ், பாட்டு கற்றுக்கொண்டேன். பள்ளி, கல்லூரி கலை நிகழ்ச்சிகளில் நான்தான் ஆல் ரவுண்டர்.

சிறந்த மாணவிக்கான விருதும் வாங்கியிருக்கேன். ஆனால், நடிப்பு என்பதை நினைத்துக்கூட பார்த்தது இல்லை. பள்ளி நாடகத்தில்கூட நடித்தது இல்லை. மாடலிங், மலையாள சேனலில் ரியாலிட்டி ஷோ என்று முகம்காட்ட ஆரம்பித்த பிறகு, நடிக்க வாய்ப்புகள் வந்தன. விருப்பம் இல்லாததால், நடிக்கலாமா, வேண்டாமா என்ற குழப்பத்தில் இருந்தேன். ஆனால், நடிக்கத் தொடங்கிய பிறகு முழுமூச்சாக இறங்கிவிட்டேன். சினிமா என்பதும் ஒரு கலை வடிவம்தான் என்று இப்போது புரிந்திருக்கிறது. தொழில்நுட்பக் கலைஞர்களின் பணியை கூர்ந்து கவனிக்கிறேன். நடிகையாக மட்டுமின்றி, தொழில் நுட்ப ரீதியாகவும் சினிமாவை பிடித்திருக்கிறது.



**ந**டிகர் அர்ஜூன் தன்னை பாலியல் துன்புறுத்தல் செய்ததாக நடிகை ஸ்ருதி ஹரிஹரன் சில தினங்களுக்கு முன் புகார் கூறினார். அதை அர்ஜூன் மறுத்திருப்பதுடன் அவர் மீது வழக்கு தொடர உள்ளதாக அறிவித்திருக்கிறார். இந்நிலையில் ஸ்ருதிக்கு ஆதரவாக நடிகர் பிரகாஷ்ராஜ் குரல் கொடுத்தார். அர்ஜூன் மீது நடிகை கூறிய

## எனக்குப் பின்னால் யாருமில்லை!

புகார்பற்றி விசாரிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். இதையடுத்து ஸ்ருதிக்கு பின்னாலிருந்து அவரை இயக்குவது பிரகாஷ்ராஜ் உள்ளிட்ட சிலர்தான் என இணைய தளத்தில் கமென்ட் பகிரப்பட்டு வருகிறது.

மேலும் ஸ்ருதி மீதும் பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து ஸ்ருதி ஹரிஹரன் கூறும்போது,'பிரகாஷ் ராஜோ மற்ற யாருமோ என்னை பின்னாலிருந்து இயக்கவில்லை. அவர்கள் எனக்கு ஆதரவாக பேசி இருக்கிறார்கள். அதற்காக நன்றி. அர்ஜூன் பற்றி நான் தெளிவாக எனது புகாரை தெரிவித்திருக்கிறேன். அதற்காக என் மீது அவர் வழக்கு தொடர்ந்தால் அதை கோர்ட்டில் சந்திப்பேன்.

என்னைப்பற்றி வரும் விமர்சனங்கள் குறித்து கேட்கிறார்கள். உண்மை என்ன என்பது எனக்கு தெரியும் மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன குற்றம் சொல்கிறார்கள் என்பது பற்றி கவலை இல்லை என்றார்.

இதற்கிடையில் அர்ஜூனுக்கு ஆதரவாக நடிகை சோனி செரிஸ்டா குரல் கொடுத்திருக்கிறார். இவர், 'இருவர் ஒப்பந்தம்' மற்றும் தெலுங்கு, கன்னட படங்களில் நடித்து வருகிறார்.

சோனி கூறும்போது,'அர்ஜூன் தென்னிந்தியாவின் முக்கிய நடிகர். நிஜமாகவே ஒரு ஜென்டில்மேன். மக்கள் மத்தியில் நிரந்தரமாக இடம் பிடித்திருக்கிறார். நான் நடித்து வரும் படத்தில் என்னிடம் நாகரீகமாகவும், ஒரு வழி காட்டியாகவும் இருக்கிறார். எந்த அமைப்பாக இருந்தாலும் அதை தவறாக பயன்படுத்தக்கூடாது என்பது என் கருத்து. அவர் மீது தவறான கருத்தை கூறுவது வருந்தத்தக்கது' என்றார்.



**'வி**ஸ்வாசம்' படத்துக்கு அஜித் டப்பிங் பேசி முடித்துவிட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அஜித் நடிப்பில், சிவா இயக்கியுள்ள 'விஸ்வாசம்'. நயன்தாரா ஹீரோயினாக நடித்துள்ள இந்தப் படத்தில் விவேக், தம்பி ராமையா, ரோபோ சங்கர், யோகி பாபு, போஸ் வெங்கட், ரமேஷ் திலக் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

சத்யஜோதி ஃபிலிம்ஸ் தயாரித்து வரும் 'விஸ்வாசம்' படத்துக்கு, டி.இமான் இசையமைக்கிறார். மதுரை மற்றும் தேனியைப் பின்னணியாகக் கொண்டு உருவாகி வரும் இந்தப் படத்தின் ஷூட்டிங், ஹைதராபாத்தில் உள்ள ராமோஜிராவ் ஃபிலிம் சிட்டி மற்றும் ராஜமுந்திரியில் நடைபெற்றது.

இந்தப் படத்தில், தெலுங்கு வில்லன் நடிகரான ரவி அவானா வில்லனாக நடிக்கிறார். இந்தப் படத்தில் அஜித் 'தூக்கு' துரை என்ற கேரக்டரில் நடிப்பதாகக் கூறப்படுகிறது. அடுத்த ஆண்டு பொங்கல் விடுமுறையில் இந்தப் படம் ரிலீஸாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படத்தின் டாக்கி போர்ஷன் முடிந்த நிலையில், தன்னுடைய போர்ஷனுக்கான டப்பிங்கை அஜித் பேசி முடித்துவிட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தற்போது மும்பையில் பாடல் காட்சிகளைப் படமாக்கி வருகின்றனர். விரைவில் ஒட்டுமொத்த படப்பிடிப்பும் நிறைவடைய இருக்கிறது.

# மூக்கடைப்பிலிருந்து நிவாரணம் பெற



அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கின்றதா? நீங்கள் கீழ்கண்டவைகளை முறையாய் செய்கின்றீர்களா என்று நீங்களே உங்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

சாப்பிடும் முன் கை கழுவும் பழக்கம் இன்று எல்லோரிடமும் இருக்கின்றது. ஆனால் அதனை முறையாய் செய்கின்றோமா என்றுதான் கவனிக்க வேண்டும். வலது கையை குழாயின் கீழ் நீட்டி ஒரு நொடியில் 'நானும் கை சுத்தம் செய்து விட்டேன்' என்று வருவது கை கழுவாது உண்பதற்கும் சமம். இரு கைகளையும் நீரில் நனைத்து சோப் கொண்டு 20 நொடிகளாவது நன்கு கை, நகங்களை தேய்த்து கழுவுதே கிருமிகளை நீக்கும் முறையாகும்.

இல்லையெனில் கிருமிகள் பாதிப்பு உடனே ஓடி வந்து விடும். இளம் வயதினருக்கு இன்று ஒரு பழக்கம் உள்ளது. செல்போனை தன் தலையணை அருகேயே வைத்திருப்பார்கள். தூக்கத்தில் அவ்வப்போது எழுந்து தன் செல்போனில் வாட்ஸ்அப் செய்திகளை படித்துக் கொண்டும், செய்தி அனுப்பிக் கொண்டும் இருப்பார்கள். இப்படி தூக்கம் கெடுவது அதிக தீய பாதிப்புகளை உடலுக்கு ஏற்படுத்துகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. நோய் எதிர்ப்பு சக்தி குறைகின்றது. வெள்ளை அணுக்கள் ரத்தத்தில் குறைகின்றன. அதனால் இவர்கள் எளிதில் வைரஸ் மற்றும் கிருமிகளால் பாதிக்கப்படுகின்றீர்களாம்.

★ அதிக மனஉளைச்சல் உங்களை ஆட்கொள்ளாது தவிருங்கள். இவைகளை கவனத்துடன் செய்தாலே வைரஸ், கிருமிகள் தாக்குதலில் இருந்து நம்மை காத்துக் கொள்ள முடியும். கூடவே பொது கைப்பிடிகளில் டிஷ்யூ பேப்பரை கொண்டு உபயோகிப்பதும், கடன் வாங்காததும், கொடுக்காததும் உங்கள் பேனாவினை பயன்படுத்துவதும் கூடுதல் நம்மை பயக்கும்.

★ கை குலுக்குவதனைக் காட்டிலும் வணக்கம் சொல்வது சுகாதார வெளிப்பாடும் கூட.

★ வேலை செய்யும் டேபிளிலேயே உணவையும் வைத்து சாப்பிடாதீர்கள்.

★ அன்றாட காலை இளம் வெய்யில் உடலுக்கு அவசியம்.

★ யோகா பழகுங்கள்.

★ மூச்சுப் பயிற்சி செய்யுங்கள்.

★ காலை உணவை கண்டிப்பாய் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆக மேற்கூறியவற்றில் முறையான கவனம் கொடுக்கும் பொழுது ஜலதோஷ பாதிப்பு வெகுவாய் குறையும்.

தலைவலி சில சமயங்களில் ஆபத்தானதாகக் கூட இருக்கலாம்.

★ மூளைக்கும் அதனை படர்ந்து இருக்கும் மெல்லிய ஜவ்வு படலத்திற்கும் இடையே சில சமயங்களில் ரத்த கசிவு ஏற்படலாம். இதனால் ஏற்படும் தலைவலி ஆபத்தானது.

★ உயர் ரத்த அழுத்தத்தினால் ஏற்படும் தலைவலி உடனே கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

★ மூளையில் கட்டி.

★ மூளையில் கிருமி தாக்குதல் இதனால் ஏற்படும் தலைவலி உடனடி மருத்துவ சிகிச்சை தேவைப்படுவது அவசியம்.

★ மண்டைக்குள் நீர் சேர்ந்து மூளை வீக்கம் ஏற்படுதல்.

★ விஷவாயு தாக்குதல்.

★ மூளையில் ரத்தக் குழாய் உடைந்து ரத்தப் போக்கு ஏற்படுதல்.

இவற்றினால் ஏற்படும் தலைவலியினை உடனடி மிக அவசர சிகிச்சையாக கவனிக்க வேண்டும். இதற்கான அறிகுறிகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

★ திடீரென ஏற்படும் தாங்க முடியாத தலைவலி.

★ எப்பொழுதும் வரும் தலைவலியினைக் காட்டிலும் வித்தியாசமான கடும் தலைவலி.

★ தலைவலியுடன் குழறிய பேச்சு, பார்வை மங்குதல், கை, கால் அசைப்பதில் கடினம், மறதி ஏற்படுதல்.

★ தலையில் அடிப்பட்டு ஏற்படும் தலைவலி.

★ 50 வயதிற்கு மேல் இருந்து ஏற்படும் தலைவலி.

★ கண் வலி, கண் சிகப்பு ஒரு கண்ணில் இருந்து ஏற்படும் தலைவலி இப்படிப்பட்ட அறிகுறிகள் இருக்கும் பொழுது உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

மருத்துவ தந்தை என்று அழைக்கப்படும் 'ஹிப்போக்ரேட்ஸ்' பல காலங்களுக்கு முன்னாள் கூறியுள்ள ஒரு மருத்துவ செய்தினை நினைவு கூர்ந்து பார்ப்போம். 'எல்லா நோய்களும் உணவுப் பாதையிலே ஆரம்பிக்கின்றது' என்பதுதான். மருத்துவ உலகில் எண் சான் உடம்பிற்கு உணவு பாதையும், ஜீரண உறுப்புகளுமே பிரதானம்' எனலாம்.

குடலின் உள் சுவரில் மெல்லிய படலம் உள்ளது. இந்த படலம் நல்ல சத்துக்களை உடலுக்குள் செலுத்தி தீய, நச்சுகளை வெளியேற்றி விடுகின்றது. இப்படலத்தில் மிக நுண் துளைகள் ஏற்படும் பொழுது நச்சுகளும் ரத்தத்தில் கலந்து விடுகின்றது. இதனால் உடல் ஆரோக்கியம் பல விதத்தில் பாதிக்கப்படுகின்றது என்பதனை சிலர் நீண்ட ஆய்வுகளின் முடிவாகக் கூறுகின்றனர். சரி இந்த பாதிப்பு ஏன் ஏற்படுவதாகக் கூறப்பட்டுள்ளது?

★ பரம்பரை காரணமாக இந்த பாதிப்பு ஏற்படலாம்.

★ முறையில்லாத உணவுகள் குடலை பாதிக்கின்றன. நல்ல பாக்டீரியாக்களை அழிக்கின்றன. கெட்ட பாக்டீரியாக்களை பெருக்குகின்றன. குடல் வீக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

★ உணவில் சேர்க்கப்படும் செயற்கை நிறங்கள், குடலுக்கு தீங்கு விளைவிக்கும்.

★ மிக அதிக மனஉளைச்சல் ஜீரண மண்டலத்தினையே அதிகம் பாதிக்கின்றது.




★ சுத்தமில்லா நீர் காரணமாக இருக்கலாம்.

பொதுவில்

★ குடலில் புண் ஏற்பட்டாலோ

★ கிருமிகள் தாக்குதலால் வயிற்றுப் போக்கு ஏற்பட்டாலோ

★ உடலில் சத்து குறைபாடு இருந்தாலோ

★ குடல் வீக்கம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட்டாலோ

★ நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தாலோ

★ எடை கூடுதல், நீரிழிவு நோய் 2-ம் பிரிவு என தாக்குத்ல ஏற்பட்டாலோ

முதலில் உங்கள் உணவுப் பாதை, கல்லீரல், பித்தப்பை என உணவு மண்டலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். இதற்கு உங்கள் மருத்துவர் உதவியினை உடனடி பெறுவது பல்வேறு நோய்களில் இருந்து உங்களைக் காக்கும்.

# தலைவலியை குணமாக்கும் இயற்கை வழிகள்!



உலகம் முழுக்க, இன்றைக்குத் தவிர்க்க முடியாத வலிகளில் பிரதான இடம் பிடித்திருப்பது தலைவலிதான். அதீத இரைச்சல், செரிமானக் கோளாறு, கணினித்திரை ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துவதால், கண் நரம்புகளுக்கு ஏற்படும் அழுத்தம்... எனப் பல பிரச்சனைகள் காரணமாக, நரம்புகள் வீக்கம் அடைந்து தலைவலி ஏற்படுகிறது. தலைவலிக்கு வலி நிவாரண மாத்திரைகள், ஜெல்களைப் பயன்படுத்துவதைவிட, இயற்கையான உணவு முறை, ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள் மூலமாகவே தலைவலியைப் போக்க முடியும். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போமா ?

மூளை நரம்புகள் சுருங்கி விரியும் தன்மைகொண்டவை. இது அதீதமாகச் செயல்படும்போது தலைவலி ஏற்படும். இதற்கு இஞ்சி மிகச் சிறந்த மருந்து. இஞ்சியில் தலைவலியைப் போக்கும் ஜிஞ்சரால் ரசாயனம் உள்ளது. காலை வெறும் வயிற்றில் இஞ்சிச் சாறு (2 டீஸ்பூன்) குடித்தால், நாள் முழுக்கத் தலைவலி வராமல் தடுக்கலாம்.

செர்ரிப் பழத்தில் 'ஆந்தோசயானின்' (Anthocyanin) என்னும் நிறமி உள்ளது. இது நரம்பு வீக்கத்துக்கு எதிராகச் செயல்படும் தன்மைகொண்டது. தினமும் காலையில் செர்ரிப் பழத்தைச் சாப்பிடுவதால், மூளை நரம்புகள் புத்துணர்ச்சி பெறும். இதனால், காலை அலுவலகத்துக்குச் செல்லும்போது ஏற்படும் அதீத சத்தம், இரைச்சல் மூலம் ஏற்படும் தலைவலியில் இருந்து தப்பிக்கலாம். இது நாளை இனிமையாகத் தொடங்க உதவும்.

மாங்கனீஸ், கால்சியம், இரும்புச் சத்து, நார்ச்சத்து நிறைந்தது பட்டை. தினமும் மாலை வேளையில் பட்டை சேர்த்த பிளாக் டீ அருந்திவந்தால் சைனஸால் உண்டாகும் தலைவலி நீங்கும்.

நாள் முழுவதும் வெயிலில் அலைந்து வேலைசெய்பவர்கள், சில வகை உணவுகளைத் தவிர்த்துவிட்டாலே இந்தப் பிரச்சனையில் இருந்து தப்பித்துவிடலாம். சிப்ஸ், ஜாம், கார்ன்ஃப்ளேக்ஸ் போன்ற நைட்ரேட், எம்எஸ்ஜி சேர்க்கப்பட்ட உணவுகளைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். புகை, மதுப் பழக்கத்தைக் கைவிடவேண்டியது அவசியம். ஆல்கஹால், நிகோட்டின், கஃபைன் உள்ளிட்டவை வலியை அதிகரிக்கும்.

எலுமிச்சைச் சாற்றில் சிட்ரிக் அமிலம் அதிகமாக இருக்கிறது. இது நாக்கு வறண்டு போவதை தடுக்கும்; மூளை நரம்புகளைப் புத்துணர்ச்சியோடு வைத்திருக்கும்.

செரிமானக் கோளாறுகளாலும் தலை நரம்புகளில் வலி, வாந்தி வரும் உணர்வு உள்ளிட்டவை ஏற்படும். இதற்குச் சீரகம், இஞ்சி, ஓமம் ஆகியவை சிறந்த மருந்துகள். இவற்றில் தயாரிக்கப்பட்ட கஷாயத்தைக் குடித்தால் வலி நீங்கி உடல் புத்துணர்வு பெறும். கிரீன் டீ அருந்துவதும் தலைவலி போக்க நல்ல வழிமுறை.

50 கிராம் சீரகத்தை அரைத்துப் பொடியாக்கி, 50 கிராம் தேனில் கலக்கவும். இந்தக் கலவையை, எலுமிச்சைச் சாற்றில் கலந்து, ஏழு நாட்கள் வெயிலில் உலர வைக்கவும். இதைத் தினமும் காலையில் வெறும் வயிற்றில் ஐந்து மில்லி கிராம் அளவுக்கு சாப்பிட்டுவந்தால், நாள்பட்ட தலைவலி குணமாகும்.

# கருஞ்சீரகத்தின் மகிமை

நாம் தினமும் உணவில் சேர்த்து பயன்படுத்துகிற சீரகம், பெருஞ்சீரகம் (சோம்பு) போன்றவற்றை தினசரி எடுத்துக் கொள்ளலாம். ஆனால், மருந்தாக பயன்படுகிற கருஞ்சீரகம், காட்டுச்சீரகம் போன்றவற்றை மருத்துவரின் ஆலோசனையின்றி நாமாகவே தினசரி எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

மருந்து என்பது அதன் சேர்மானப் பொருட்களை சரியான அளவில் எடுத்து, குறிப்பிட்ட மருத்துவ முறையில் தயார் செய்து, குறிப்பிட்ட நோய்களுக்கு, சரியான அளவுகளில் பரிந்துரைக்கப்படுவது என்பதால் அதுபோன்ற மருத்துவ குணமுடைய பொருட்களை மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்துக்கொள்வதே நல்லது.

கருஞ்சீரகத்தின் பெருமைகள்

★ கருஞ்சீரகப் பொடியினை காடியுடன் கலந்து உட்கொள்ள குடலிலுள்ள புழுக்கள் வெளியேறும். இதனையே 3 முதல் 7 நாட்கள் வரையில் காலை 1/2 கிராம், மாலையில் 4 கிராம் வீதம் கீச்ஞடினுண் என்கிற வெறிநாய்க்கடி மற்றும் இதர நச்சுக்கடிகளின் நஞ்சை நீக்குவதற்கும் கொடுக்கலாம்.

★ கருஞ்சீரகத்தோடு ஆற்று தும்மட்டிச் சாறு விட்டரைத்து இருபக்க விலாப் பகுதிகளிலும் பூச குடலிலுள்ள புழுக்கள் நீங்கும்.

★ நொச்சி குடிநீருடன் கருஞ்சீரகப் பொடியை சேர்த்துக் கொடுக்க மேகப் பிடிப்பு, சுரம், விட்டுவிட்டு வருகிற சுரம் தணியும்.

★ கருஞ்சீரகத்தோடு வெந்நீர் விட்டு அரைத்து மேற்பூச்சாக பூச தலைவலி, கீல் வீக்கம், உடல் வீக்கம் போன்றவை குணமடையும். இதோடு காடி விட்டரைத்து படைகளுக்கும் பூசலாம். இதனுடன் தேன் விட்டரைத்து பிள்ளை பெற்றபின் வருகிற வலிக்குப் பூச குணமடையும்.

★ கருஞ்சீரகத்தை அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி கரப்பான், சிரங்கு போன்றவற்றில் பூசினால் நல்ல பலன் கிடைக்கும்.

★ கருஞ்சீரகப் பொடியை தேன் அல்லது நீரில் கலந்து கொடுக்க மூச்சுத்திணறல் நீங்கும். தொடர்ந்து வருகிற விக்கல் நிற்கும். சூதகக்கட்டு, சூதகச்சூலை போன்றவற்றுக்கு 1 கிராம் அல்லது 3 கிராம் அளவில் கொடுக்கலாம்.

★ கருஞ்சீரகத்தின் தீநீர் அல்லது தைலத்தை முகர்ந்தாலும், பூசினாலும் பயத்தால் உண்டாகும் தலைநோய், மூக்குநீர் வடிதல், நரம்பைப் பற்றியுள்ள வலி, இடுப்புவலி போன்றவை தீரும்.

★ கருஞ்சீரகத்தின் தைலத்தை வெற்றிலையில் பூசித் தின்றால் ஆண்மை பெருகும்.

★ சிறிதளவு கருஞ்சீரகத்தை பசும்பால் விட்டரைத்து முகத்தில் பூசி, ஊறிய பின் கழுவிவர முகப்பரு மறையும்.

★ இதை வறுத்து தூளாக்கி எண்ணெயில் ஊறவைத்து, அதை மூக்கில் விட கடுமையான தலைவலியையும், சளியையும் போக்கும். கருஞ்சீரகம் குளிர்ச்சியால் ஏற்படும் நோய்களுக்கு நல்ல நிவாரணியாக உள்ளது.



# தொப்பையை குறைக்கும் எளிய உடற்பயிற்சிகள்



கொழுப்பைக் கரைக்க ஓடுதல் அல்லது நடத்தல் சிறந்த உடற்பயிற்சியாகும். உடற்பயிற்சியால் வயிற்று தொப்பை குறைவது மட்டுமல்ல, பிற இடங்களில் உள்ள கொழுப்பும் கரைந்துவிடுகின்றன.

உடற்பயிற்சி செய்யும் போது, கலோரிகள் எரிந்து, கொழுப்பு சதவிகிதம் குறைந்துவிடுகின்றன. உடற்பயிற்சியால் வயிற்று தொப்பை குறைவது மட்டுமல்ல, பிற இடங்களில் உள்ள கொழுப்பும் கரைந்துவிடுகின்றன. கொழுப்பைக் கரைக்க ஓடுதல் அல்லது நடத்தல் சிறந்த உடற்பயிற்சியாகும்.

நாம் இளம் வயதில் வைத்திருந்தது போல வலுவான மூட்டுகள் தற்போது இருப்பதில்லை. இதனை மீட்டுக் கொண்டு வர ஜாக்கிங் அல்லது வாக்கிங் சரியாக இருக்காது. அதற்கு சரியான தீர்வு எலிப்டிகல் டிரைனர் மட்டுமே.

சைக்கிள் பயிற்சி இல்லாமல் தொப்பை குறைப்பு சாத்தியமில்லை. கார்டியோ உடற்பயிற்சிகளால் தொப்பையை குறைப்பது முழுமையடையாது. நமது வயிற்றுப் பகுதியில் உள்ள தசைகளை வலுவடையச் செய்ய வேண்டும். சைக்கிள் பயிற்சி செய்வதன் மூலம், அடிவயிறு சீரடைதல், உடல் சுழற்சி, தசைகள் செயல்பாடு அதிகமாதல் ஏற்படும்.

சீராக தொப்பையை குறைக்க, சைக்கிள் பயணம் மிகவும் உதவி செய்கிறது. மேலும் சைக்கிளில் பயணிப்பதன் மூலம் பல்வேறு இடங்களையும் பார்வையிட முடிகிறது. சைக்கிளின் வேகம், பயிற்சியின் தீவிரம் ஆகியவற்றைப் பொறுத்து, 30 நிமிடத்தில் 250 முதல் 500 கலோரிகள் கரைக்கலாம்.


பின்புறமாக உடலை சாய்த்து, முன்னால் கொண்டு வருவதன் மூலம் பெண்களுக்கு தொப்பை குறைப்பு சாத்தியமாகிறது. தரையில் நேராக படுத்துக் கொண்டு, கால்களை 90 டிகிரிக்கு உயர்த்தியும், உடலை 90 டிகிரிக்கு உயர்த்தியும் பயிற்சி செய்யலாம். 3 செட்களில் 12 முதல் 16 வரை எடுக்கலாம்.

தொப்பையை குறைக்க மிகச் சிறந்த பயிற்சி. தரையில் படுத்துக் கொண்டு, கால்களை 90 டிகிரிக்கு நேராக உயர்த்த வேண்டும். அப்போது தலையும் சிறிது உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். பயிற்சியின் தீவிரத்தைப் பொறுத்து அதிக கலோரிகளை எரிக்கலாம்.

ஒரு பெரிய ரப்பர் பந்தில், உடலை கிடத்தி கைகளை மார்பின் குறுக்காகவோ அல்லது தலைக்கு பின்புறமாகவோ வைக்கவும். உடலை பக்கவாட்டிலும், முன்னும், பின்னும் நகர்த்தி பயிற்சி செய்யலாம்.

# இதயம் ஒரு கோவில்...

சில குழந்தைகள் பிறக்கும்போதே இதயத்தில் ஓட்டையுடன் பிறப்பதாகவும், பிறந்த குழந்தைக்கு இதய அறுவை சிகிச்சை என்றும் அடிக்கடி செய்திகளில் கேள்விப்படுகிறோம். எதனால் இந்த குறைபாடு குழந்தைகளுக்கு ஏற்படுகிறது?



இயல்பாக நம் இதயத்தின் ரத்த அழுத்தம் இடமிருந்து வலது புறமாக இருக்கும். அவ்வாறு இருக்கும்போது நம் உடல் சுத்த ரத்தத்தை பாய்ச்சுகிறது. மாறாக வலமிருந்து இடமாக இருக்கும்போது நம் உடலுக்குள் அசுத்தமான ரத்தம் பாய்ச்சப்படுகிறது. இந்த செயலுக்கு பெயர்தான் ஐஷன்மெங்கர்ஸ் சிண்ட்ரோம்(Eisenmenger's syndrome) என்கிறோம்.

இதற்கு காரணம், பிறக்கும்போதே இதயத்தில் சிறிதாக துளை இருப்பதுதான். ஆரம்பகட்டத்திலேயே இதை சரி செய்யாதபட்சத்தில் ரத்த அழுத்தமானது துளை வழியாக இடது புறமிருந்து வலதுபக்கத்துக்கு அதிகரித்துக்கொண்டே வரும்.

அதன்பின் அழுத்தமானது வலதுபுறத்திலிருந்து மீண்டும் இடதுபுறம் அதிகரிக்கத் தொடங்கும். இந்தப் பாதிப்பு இந்தியாவில் 100 குழந்தைகளில் ஒருவருக்கு இருப்பதாக கூறுகிறார்கள். பிறக்கும்போதே குழந்தையின் நாக்கு, உதடு, விரல்கள், நகம் போன்றவை நீல நிறமாக இருந்தால் அது இதயத்தில் துளை இருப்பதற்கான அறிகுறி என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இக்குறைபாட்டை அறுவை சிகிச்சைமூலம் சரிசெய்யலாம் அல்லது தற்போது பலூன் டெக்னாலஜி மூலம் அறுவை சிகிச்சை இல்லாமலேயே டிவைஸ் மூலம் சரி செய்துவிடலாம். பிரதான ரத்த குழாயில் இல்லாமல் சிறுசிறு துவாரங்களாக இருந்தால் 80 சதவீதம் மருந்து மாத்திரைகள் மூலமே குணபடுத்திவிடலாம்.

# கைகளினால் சாப்பிடுவதே நன்று

குழந்தைகள் வளர வளர வீட்டில் உள்ள பெரியவர்கள் சாப்பாடு ஊட்டுவதுதான் வழக்கமாக இருக்கும். இப்போது காலம் மாறி செராமிக், போர்க் என வித விதமான ஸ்பூன்களில் உணவு கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். வளர்ந்து பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பிக்கும்போதும் மதிய உணவை சாப்பிடுவதற்காக ஸ்பூன் கொடுத்து அனுப்புகிறார்கள். அவ்வாறு செய்யாமல், கைகள் மூலமாக சாப்பிட குழந்தைகளை பழக்குவதே நல்லது.

கைகளினால் சாப்பிடும்போது தொடு உணர்வு, சுவை உணர்வு ஆகிய புலன்கள் நன்றாக வேலை செய்யும். இதனால், உணவுக்கும் அவர்களுக்கும் நேரடியாக ஒரு பந்தம் ஏற்படும். ஈடுபாட்டுடன் சாப்பிட்டு முடிப்பார்கள். இதன்மூலம் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதற்கான (Binge Eating) வாய்ப்புகளும் குறையும்.

இதற்கு வீட்டில் உள்ள பெரியவர்கள் முன் மாதிரியாக இருப்பது அவசியம். குழந்தைகளுடன் சாப்பிடும் போது ஸ்பூன் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். குழந்தையாக இருக்கும்போதே இந்த எண்ணம் பழக்கமாக மாறுவதற்கு இட்லி, பழங்கள், சப்பாத்தி, பூரி, தோசை போன்றவற்றை மதிய உணவாகக் கொடுத்து அனுப்பலாம்.

ஸ்பூன் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாது. ஸ்பூன் உபயோகிப்பதால் தாடை அமைப்பு மாறும் என்று கூறுவதற்கும் ஆதாரம் கிடையாது. ஆனால் பிளாஸ்டிக், சில்வர், செராமிக் மற்றும் டியூரபிள் ஸ்பூன் இவற்றில் எதை பயன்படுத்துகிறோம் என்பது முக்கியம். சில்வர், செராமிக் ஸ்பூன்கள் பாதுகாப்பானவை.

பிளாஸ்டிக் ஸ்பூன் உபயோகிப்பது தவறு. பிளாஸ்டிக் ஸ்பூனை பயன்படுத்தினாலும் ஒருதடவை பயன்படுத்திய பின் தூக்கி போட்டுவிட வேண்டும்.

# அறிவியல் அற்புதங்கள்

## அனிமேஷன் உணவு மேசை



லண்டனில் உள்ள லே பெடிட் செஃப் உணவகம், உணவு மேசையில் 3டி அனிமேஷன் வசதியை ஏற்படுத்தியுள்ளது. மெனு கார்ட், உணவு தட்டு, உணவு போன்றவற்றில் வாடிக்கையாளர்கள் அனிமேஷன் காட்சிகளை பார்த்து ரசிக்கலாம்.

## டெண்ட் ஆகாத கார்



டோக்கியோ கார் கண்காட்சியில் டொயோடா நிறுவனம் டெண்ட் ஆகாத எதிர்கால காரை காட்சிபடுத்தியுள்ளது. பிளாஸ்டிக் மற்றும் ரப்பாரால் ஆன உதிரிபாகங்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. முழு பாகங்களும் எல்இடி வசதி கொண்டது.

## ரோபோ குடியுரிமை



உலக அளவில் முதன் முதலில் சவுதி அரேபிய அரசு சோபியா என்கிற ரோபோவுக்கு குடியுரிமை வழங்கி உள்ளது. இந்த ரோபோவை ஹாங்காங்கைச் சேர்ந்த நிறுவனம் பெண் உருவில் உருவாக்கியுள்ளது. அச்சு அசல் மனிதர்களை போல சகஜமாக பேசியுள்ளது.


## ஆளில்லா படகு



ஆர்டிக் கடல் பகுதியின் காலநிலையை அறிய சாயில்டிரான் என்கிற ஆளில்லாத படகை செலுத்தியுள்ளது அமெரிக்க நிறுவனம். உலகம் முழுவதும் இதுபோன்ற 1000 ஆளில்லாத படகை செலுத்த இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சாதாரண படகை இயக்க ஆகும் செலவில் 5 சதவீதம் செலவு செய்தால் போதும். அமெரிக்க கடல் ஆராய்ச்சி துறை, விண்வெளி ஆராய்ச்சி துறை, உள்ளிட்ட பல நிறுவனங்களுக்கு இந்த படகு காலநிலை குறித்த தகவல்களை அளிக்கும். நீர் மூழ்கி கப்பல்கள், சட்டவிரோக கடத்தல்கள் போன்றவற்றை கண்காணிக்கவும் இந்த ஆளில்லா படகு பயன்படும்.

## புனைவு நகரம்



தென்மேற்கு சீனாவில் வித்தியாசமான வகையில் சுற்றுலா நகரம் கட்டப்பட்டு அடுத்த மாதம் திறக்கப்பட்ட உள்ளது. ஹாலிவுட் திரைப்பட கற்பனை காதாபாத்திரங்களை பிரமாண்டமாக இங்கு உருவாக்கி வருகின்றனர். வேற்று கிரகம், ஏலியன்ஸ், டிராகன் போர் என கற்பனை மற்றும் அறிவியல் புனைவுகள் கட்டிடங்களாக நிற்கின்றன. டிரான்ஸ்பார்மர் கதாபாத்திரம் 174 அடியில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நகரம் உலகம் முழுவதிலுமுள்ள அறிவியல் ஆர்வ சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் என்று இதை உருவாக்கியுள்ள ஓரியண்டல் டைம்ஸ் மீடியாவின் கூறியுள்ளது.

# இணையப் பாதுகாப்புக்கான பரிசோதனைகள்

தனிப்பட்ட தகவல்களைத் திருடும் அடையாளத் திருட்டில் தொடங்கி, மால்வேர் வைரஸ் தாக்குதல், கிரெடிட் கார்டு மோசடி, பாஸ்வேர்டு திருட்டு எனப் பலவிதங்களில் ஆன்லைனில் கள்வர்களும் விஷமிகளும் வலைவிரித்துக் காத்திருக்கின்றனர். எனவே, இணையத்தில் உலவும்போது பாதுகாப்பை உறுதி செய்துகொள்ள முன்னெச்சரிக்கை அவசியம். அந்த வகையில் இணையப் பாதுகாப்புக்காக நெட்டிசன்கள் தவறாமல் மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைகள் என்னென்ன?

### அப்டேட் தேவை


ஸ்மார்ட்போனிலோ கம்ப்யூட்டரிலோ மென்பொருள் அல்லது செயலிகளை அப்டேட் செய்யுங்கள் என நோட்டிபிகேஷன் வரும்போது, உடனே அப்டேட் செய்வதற்குப் பதில் பின்னர் நினைவூட்டவும் எனும் வாய்ப்பை கிளிக் செய்துவிட்டு கடந்து போவதுதான் பலரது வழக்கம். ஆனால், மென்பொருள்களுக்கான அப்டேட்களை நிறைவேற்றுவது மிகவும் முக்கியம். இயங்குதளம் உள்ளிட்ட மென்பொருள்களில் குறிப்பிட்ட குறை அல்லது ஓட்டைகளைக் கண்டறியும்போது அதற்கான பாதுகாப்பு உருவாக்கப்படுகிறது. மென்பொருள் உலகில் இதை செக்யூரிட்டி பேட்ச் என்கிறார்கள். இந்த மென்பொருள் ஒட்டுவேலைக்கான நினைவூட்டல்தான் அப்டேட் கோரிக்கை. எனவே, இதில் அலட்சியம் வேண்டாம். சில மாதங்களுக்கு முன்பு ரான்சம்வேர் வைரஸ் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதற்குப் பல பயனாளிகள் விண்டோஸ் இயங்குதளத்துக்கான அப்டேட்களை நிறுவாமல் விட்டதுதான் காரணம்.

### பாஸ்வேர்டு பலம்

பலவீனமான பாஸ்வேர்டைவிட இணைய பாதுகாப்புக்கான வில்லங்கம் வேறில்லை. இமெயில் முகவரி, வங்கி சேவைக்கான இணையக் கணக்கு போன்றவற்றுக்கான பாஸ்வேர்டு பலமாக இருக்கிறதா எனச் சோதியுங்கள். தேவையெனில், குறிப்பிட்ட இடைவெளியில் பாஸ்வேர்டை மாற்றுங்கள். குறிப்பாக, பெரிய அளவில் இமெயில் முகவரிகள் திருடப்பட்டது தொடர்பாக ஹேக்கர்களின் கைவரிசை பற்றிய செய்திகள் வெளியாகும்போது உங்கள் பாஸ்வேர்டுகள் மீது ஒரு கண் வைத்திருங்கள். பாஸ்வேர்டு பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதா என அடையாளம் காட்டும் 'ஹேவ் ஐ பி பாண்ட்' (https://haveibeenpwned.com/) போன்ற இணைய சேவைகளில் உங்கள் இமெயில் முகவரியை சமர்ப்பித்து அதன் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளலாம்.

### பிரைவசி பூட்டு

சமூக ஊடகத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதில் காட்டும் ஆர்வத்தைப் பலரும் அந்தத் தகவல்கள் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படும் என்பதில் உள்ள அபாயத்தை அறிவதில்லை. பொதுவெளியில் பகிர்ந்துகொள்ளும் தனிப்பட்ட தகவல்கள் ஒருவரைப் பற்றிப் பலவித செய்திகளை உணர்த்தவல்லவை. இதன் மூலம் விளம்பர வலையும் விரிக்கலாம், மோசடி வலையும் விரிக்கலாம். எனவே, சமூக ஊடகங்களில் பகிரும் தனிப்பட்ட தகவல்கள் குறித்துக் கவனமாக இருங்கள். ஃபேஸ்புக் உள்ளிட்ட பல சேவைகள், தனிப்பட்ட தகவல்களுக்கான பலவகை பிரைவசி பாதுகாப்பு அம்சங்களை அளிக்கின்றன. இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். டைம்லைன் மற்றும் டேகிங் வசதியையும் அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும்.




### செயலி அனுமதி

ஸ்மார்ட்போனில் புதிய செயலிகளை நிறுவும்போது அவை சொல்லும் நிபந்தனைகளுக்கு அனுமதி கொடுத்துவிடுகிறோம். ஆனால், எந்தச் செயலிகள் எந்த வகையான தகவல்களைச் சேகரித்து அவற்றை எப்படியெல்லாம் பயன்படுத்துகின்றன என்பது நமக்குத் தெரியாது. சில வில்லங்கச் செயலிகள் நமது தகவல்களைத் தவறான நோக்கில் பயன்படுத்தலாம். எனவே, எந்தச் செயலிக்கு என்ன வகையான அனுமதியை அளித்திருக்கிறோம், அவை தேவையா எனப் பரிசீலிப்பது அவசியம். செட்டிங்ஸ் பகுதியில் உள்ள பிரைவசி வாய்ப்பை கிளிக் செய்து இது பற்றிப் பார்வையிடலாம்.

### பிசியைக் கவனியுங்கள்

உங்கள் கம்ப்யூட்டரில் என்னென்ன செயல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைக் கவனிப்பதும் அவசியமே. விண்டோசில் டாஸ்க் மேனஜரில் சென்றுபார்த்தால், கம்ப்யூட்டர் பின்னணியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் செயலிகளைப் பார்வையிடலாம். அவற்றில் எதுவும் சந்தேகத்துக்கு உரியதாக இல்லாதவரை எந்தப் பிரச்சினையும் இல்லை.

### மால்வேர் ஸ்கேன்

உங்கள் கம்ப்யூட்டரில் நீங்கள் அறியாமலேயே மால்வேர்கள் அழையா விருந்தாளியாக வந்துவிடலாம். இமெயில் இணைப்புகளை கிளிக் செய்வதால் அல்லது வில்லங்க விளம்பரப் பக்கம் போவதால் மால்வேர்கள் ஊடுருவலாம். பொதுவாக வைரஸ் தடுப்பு மென்பொருள் இருந்தால், இவற்றை விரட்டி விடலாம். இருந்தாலும் அவ்வப்போது மால்வேர் கண்டறியும் மென்பொருளைப் பயன்படுத்தி பரிசோதிப்பது நல்லது.

### கணக்கைக் கவனி

பல இணைய சேவைகளை கூகுள் அல்லது ஃபேஸ்புக் லாகின் மூலம் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. இந்த வசதி எளிதாக இருந்தாலும், அந்த மூன்றாம் தரப்பு இணையதளங்கள் இந்த அனுமதியை எப்படிப் பயன்படுத்துகின்றன என்பது தெரியாது. எனவே, எந்தத் தளங்களுக்கு எல்லாம் அனுமதி கொடுத்திருக்கிறீர்கள் என்பதை அடிக்கடி பார்த்துக்கொள்வது நல்லது. ஜிமெயிலில் மை அக்கவுண்ட் பக்கத்தில் இது பற்றிப் பார்வையிடலாம்.

### இரண்டு அடுக்குப் பாதுகாப்பு

பாஸ்வேர்டு தவிர போனில் அனுப்பி வைக்கப்படும் குறிப்பைக் கொண்ட இரண்டு அடுக்குப் பாதுகாப்பு வசதி எப்போதுமே சிறந்தது. எந்தத் தளங்களில் எல்லாம் இந்த வசதியைப் பயன்படுத்த முடியுமோ அவற்றில் எல்லாம் பயன்படுத்திக்கொள்ளலாம். அதிலும் முக்கிய சேவைகள் எனில், நிச்சயம் 2 அடுக்குப் பாதுகாப்பு தேவை. உங்கள் இணையக் கணக்குகளை வேறு யாரேனும் பயன்படுத்தியிருக்கின்றனரா எனச் சோதிப்பதும் உங்கள் வைஃபை வசதியை வேறு நபர்கள் பயன்படுத்துகின்றனரா என்பதைச் சரி பார்த்துக்கொள்வதும் அவசியம்.

# மகள் வெளியிட்ட வீடியோ, வேலையிழந்த தந்தை!



ஆப்பிள் நிறுவன பொறியாளர் ஒருவரின் மகள் யூடியூபில் வெளியிட்ட வீடியோ வைரலானதை தொடர்ந்து, தந்தையை ஆப்பிள் நிறுவன பணியில் இருந்து நீக்கி ஆப்பிள் நிறுவனம் உத்தரவிட்டுள்ளது.

ஆப்பிள் நிறுவனத்தின் பொறியாளர் ஒருவரின் மகள் ஐபோன் X ஹேன்ட்ஸ்-ஆன் (அறிமுக) வீடியோ யூடியூபில் வைரலானதை தொடர்ந்து ஆப்பிள் நிறுவனம் குறிப்பிட்ட பொறியாளரை வேலையில் இருந்து நீக்கியுள்ளது.

ஐபோன் X இடம்பெற்றிருந்த வீடியோ ஒன்றை புரூக் அமீலியா பீட்டர்சன் என்பவர் யூடியூபில் வெளியிட்டிருந்தார். ஆப்பிள் நிறுவனத்தின் மூத்த பொறியாளரான பீட்டர்சன் ஐபோன் X சாதனத்தின் கீஊ மற்றும் வயர்லெஸ் சர்கியூட் வடிவமைப்பில் பணியாற்றியுள்ளார். அந்த வகையில் பீட்டர்சன் மகள் வெளியிட்ட வீடியோ யூடியூபில் பிரபலமானதை தொடர்ந்து ஆப்பிள் நிறுவனம் பீட்டர்சனை பணியில் இருந்து நீக்கியுள்ளது.

'எனது தந்தை ஆப்பிள் நிறுவன பணியை இழந்துவிட்டார். முன்னாள் ஆப்பிள் ஊழியரான எனது தந்தை ஐபோன் X ஸ்மார்ட்போனை நான் பயன்படுத்த எனக்கு வழங்கிய குற்றத்திற்கான முழு பொறுப்பேற்றுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட ஐபோன் X சாதனத்தை எனக்கு வழங்கியதன் மூலம் ஆப்பிள் நிறுவன விதிமுறையை அவர் மீறிவிட்டார். ஆப்பிள் நிறுவன விதிமுறைகளை மீறுவோருக்கு எவ்வித மன்னிப்பும் கிடையாது என்போதோடு குறிப்பிட்ட வீடியோவினை யூடியூபில் இருந்து நீக்க ஆப்பிள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.' என அமீலியா பீட்டர்சன் சமீபத்தில் வெளியிட்ட யூடியூப் வீடியோவில் தெரிவித்துள்ளார்.

அமீலியா வெளியிட்ட ஐபோன் X அறிமுக வீடியோவில் ஐபோன் X சார்ந்து ரகசிய தகவல்கள், இன்னும் வெளியாகாத ஆப்பிள் சாதனங்களின் குறியீட்டு பெயர்கள் மற்றும் ஆப்பிள் பணியாளர்களுக்கு மட்டுமான கியூ.ஆர் கோட் உள்ளிட்டவை ஆப்பிள் நோட்ஸ் செயலியில் காணப்பட்டது.

## தளம் புதிது: முன்னணி வலைப்பதிவுகள்

மீடியம் வலைப்பதிவு சேவையைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். வெறும் வலைப்பதிவு சேவையாக மட்டுமல்லாமல் சமூகப் பகிர்வு வசதி இணைந்த பதிப்பு மேடையாகவும் இது விளங்குகிறது. மென்பொருளாளர்கள் உள்ளிட்ட முன்னணி நபர்கள் இந்தச் சேவை மூலம் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர். மீடியம் சேவையில் ஆழமான பதிவுகளையும் படிக்கலாம். மீடியம் சேவையிலேயே பிடித்தமான எழுத்தாளர்களைப் பின்தொடரும் வசதியும் இருக்கிறது.

இணைய முகவரி: https://topmediumstories.com/

## தகவல் புதிது: கூகுள் காலண்டரில் புதிய வசதி

நிகழ்ச்சி நிரல் ஏற்பாடு, திட்டமிடலில் கைகொடுக்கும் கூகுள் காலண்டர் சேவை புதுப்பிக்கப்பட்டுள்ளது. 2011-ல் அறிமுகமான இந்தச் சேவை தற்போது புதிய வடிவமைப்பையும் புதிய அம்சங்களையும் பெற்றிருக்கிறது. தேதிகளுக்கான பெரிய ஐகான், மேம்பட்ட வண்ணங்கள், நிகழ்ச்சிகளுக்கான தெளிவான பெட்டி என இந்த வடிவமைப்பு நேர்த்தியாக உள்ளது. ஸ்பிரெட்ஷீட்கள், கோப்புகளுக்கான இணைப்பு உள்ளிட்ட அம்சங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சந்திப்பு ஏற்பாடுகள் தொடர்பான கூடுதல் தகவல்களைப் பார்வையிடுவது, நாட்காட்டியை எளிதாகப் பகிந்துகொள்வது ஆகிய வசதிகளும் உள்ளன.

மேலும் தகவல்களுக்கு; http://bit.ly/2yL2rja

## வீடியோ புதிது: புன்னகைக் குறிப்புகள்

கமராவைக் கையில் எடுத்தாலே ஸ்மைல் பிளீஸ் என்று சொல்வதுதான் நம்முடைய வழக்கம். ஆனால், போஸ் கொடுப்பவர் இயல்பாகச் சிரிப்பதும் முக்கியம். பல நேரம் கொஞ்சம் சிரியுங்களேன் என்று கூறியதுமே பலருக்குச் சிரிப்பே சிக்கலாகிவிடும். கொஞ்சம் கூடுதலாகச் சிரிக்கலாம் அல்லது உம்மென்று இருக்கலாம். இந்தச் சிக்கலுக்குத் தீர்வாகப் படமெடுப்பவரை இயற்கையாகச் சிரிக்க வைப்பதற்கான ஏழு எளிய வழிகளை ஒளிப்படக் கலைஞர் மேத்யூ ஸ்டெர்ன் யூடியூப் வீடியோ ஒன்றில் அழகாக விளக்கியுள்ளார். இந்தக் குறிப்புகள் சுவாரசியமாக உள்ளன.

வீடியோவைக் காண: https://www.youtube.com/channel/UCYX-22a35sKhA0T6ee7uZfvg

# மடிக்கும் திறன் கொண்ட டப்லெட் விரைவில்!

முன்னணி ஸ்மார்ட்போன் நிறுவனங்கள் மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்களை உருவாக்கி வருவதாக கூறப்படும் நிலையில், மடிக்கும் திறன் கொண்ட டேப்லெட் சாதனத்தை மைக்ரோசாப்ட் உருவாக்கி வருவதாக கூறப்படுகிறது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் கொரியர் என்ற பெயரில் மடிக்கக்கூடிய டேப்லெட் சாதனம் ஒன்றை உருவாக்கி வருவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியானது. கான்செப்ட் வடிவில் உருவான இந்த சாதனம், பல ஆண்டுகள் இடைவெளிக்கு பின் மீண்டும் உயிர் பெறலாம் என கூறப்படுகிறது.

அதன்படி இம்முறை வெளியாகியுள்ள தகவல்களில் மைக்ரோசாப்ட் நிறுவனம் கொரியர் போன்று காட்சியளிக்கும் மடிக்கக்கூடிய டேப்லெட் சாதனத்தை உருவாக்கி வருவதாகவும், இந்த சாதனம் அடுத்த ஆண்டு வாக்கில் அறிமுகம் செய்யப்படலாம் என கூறப்படுகிறது.

விண்டோஸ் சென்ட்ரல் சார்பில் இது குறித்து வெளியாகியுள்ள தகவல்களில் டிஜிட்டல் இன்க் வசதி கொண்ட மடிக்கக்கூடிய சாதனத்தை மைக்ரோசாப்ட் நிறுவனம் உருவாக்கி வருவதாக தெரிவித்துள்ளது. ஆண்ட்ரோமெடா என்ற குறியீட்டு பெயர் கொண்டிருக்கும் இந்த சாதனம் பார்க்க கொரியர் போன்றே காட்சியளிக்கும் என கூறப்படுறது. மேலும் இதனை புத்தகம் போன்று மடித்து, அதில் ஸ்டைலஸ் உதவியோடு குறிப்புகளை எடுக்க முடியும்.

ஆண்ட்ரோமெடா தற்சமயம் ப்ரோடோடைப் வடிவில் இருப்பதாகவும், விண்டோஸ் 10 இயங்குதளம் கொண்டு இயங்கும் என கூறப்படுகிறது. மடிக்கக்கூடிய டேப்லெட் என அழைக்கப்பட்டாலும், மடித்தால் இந்த டேப்லெட்டை பாக்கெட்டில் சுலபமாக வைத்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மொபைல் போன் போன்றே இந்த சாதனம் கொண்டு அழைப்புகளை மேற்கொள்ள முடியும். மைக்ரோசாப்ட் மடிக்கக்கூடிய டேப்லெட் ஸ்மார்ட்போன் போன்று பயன்படும் என்றாலும், இது ஸ்மார்ட்போனிற்கு மாற்றான சாதனமாக இருக்காது என கூறப்படுகிறது.





# ஒழுங்கற்ற மாதவிடாய்

## என்ன பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்?

பலராலும் கண்டுகொள்ளப்படாத மாதவிடாய்ச் சுழற்சியின் மறுபக்கமே, ஒழுங்கற்ற மாதவிடாய். இது இன்றைக்கு பல பெண்கள் சந்தித்து வரும் முக்கியமான பிரச்சனை.

பலராலும் கண்டுகொள்ளப்படாத மாதவிடாய்ச் சுழற்சியின் மறுபக்கமே, ஒழுங்கற்ற மாதவிடாய். இது இன்றைக்கு பல பெண்கள் சந்தித்து வரும் முக்கியமான பிரச்சனை.

★ பாலிசிஸ்டிக் ஒவரியன் சிண்ட்ரோம் (Polycystic Ovarian Syndrome - PCOS): ஹார்மோன் சமநிலையில்லாமல் இருக்கும்போது, பி.சி.ஓ.எஸ் ஏற்படும். இது கருமுட்டைகளில் பாதிப்பை ஏற்படுத்தும். இதைக் கவனிக்காவிட்டால், பெண்களுக்குக் கருத்தரிப்பதில்கூட பாதிப்பை ஏற்படுத்தும்.

மாதவிடாய்ச் சுழற்சியில் பாதிப்பு ஏற்படுத்துவது, இதன் மிக முக்கியமான அறிகுறி. பெரும்பாலும் பருவம் எய்திய பெண்களுக்கு, முதல் சில மாதங்களுக்கு இந்தப் பிரச்னை இருக்கும். தொடர்ந்து மாதவிடாய்ச் சுழற்சி ஒழுங்கற்று இருந்தால், இந்தப் பிரச்னை உருவாகும். உடற்பருமனாக இருப்பவர்களுக்கு இதற்கான வாய்ப்பு அதிகம். இவர்கள், உடல் எடை குறைப்பதன் மூலம் இதை சரிசெய்துவிடலாம்.

★ தைராய்டு பிரச்சனைகள் (Thyroid Problems): தைராய்டு சுரப்பிகள் சரியாக செயல்படாமல் இருக்கும்போது, மாதவிடாய் கால சுழற்சியில் பிரச்சனை ஏற்படும். இந்தப் பிரச்சனை உள்ளவர்களுக்கு, மாதவிடாய்ப் பிரச்னை மட்டுமன்றி உடல் எடை சட்டென அதிகரிப்பது அல்லது குறைவது போன்றவையும் ஏற்படும். இதில், ஹைப்போதைராய்டிஸம் (Hypothyroidism) முக்கியமான ஒரு பிரச்சனை.

வளர்சிதை மாற்றத்தின் வளர்ச்சியை இது பாதிக்கும். இதனால், உடலின் செயல்பாடுகள் யாவும் குறைந்து, உடல் சோர்வடையும். மாதவிடாய்ச் சுழற்சி மட்டுமன்றி, உடல்பருமன், கரு உருவாவதில் சிக்கல், ஹைப்பர்-கொலெஸ்ட்ரோலீமியா (Hypercholesterolemia) ஏற்படும். இதய பாதிப்புகள் போன்ற பிரச்சனைகளையும் இது ஏற்படுத்தும்.

★ ஹார்மோன் - இம்பேலன்ஸ் (Hormone imbalance) : புரொஜெஸ்ட்ரான் (Progesterone), ஈஸ்ட்ரோஜன் (Estrogen) போன்ற மாதவிடாய்க்கு உதவும் ஹார்மோன்களில் பாதிப்பு ஏற்படும்போது, மாதவிடாய்ச் சுழற்சியில் பாதிப்பை ஏற்படுத்தி உடல் அதை வெளிக்காட்டும்.

★ பெரிமெனோபாஸ் (Perimenopause): பெண்களுக்கு 'மெனோபாஸ்' எனப்படும் மாதவிடாய்ச் சுழற்சி முடியப்போகும் சில மாதங்களுக்கு முன்னர் ஒழுங்கற்ற மாதவிடாய் ஏற்படும். 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மட்டுமே இதன் (Perimenopause) காரணமாக ஒழுங்கற்ற மாதவிடாய் ஏற்படும்.

அதிகமாக ஜங்க் ஃபுட் சாப்பிடுவது உடல் கோளாறுகளை ஏற்படுத்தி உடல்பருமனுக்குக் காரணமாகும். இது, மாதவிடாயில் பிரச்னையை ஏற்படுத்தும்.

★ அதிக மனஅழுத்தத்துக்கு உள்ளானவர்களுக்கு, அதன் காரணமாக, கருமுட்டை உற்பத்தி பாதிப்படையும். அலுவல்ரீதியான அழுத்தம் அல்லது குடும்பப் பிரச்னை காரணமாக அதிகளவு அழுத்தம் ஏற்படும்போது இந்தப் பிரச்னை தலைகாட்டும். நடைபயிற்சி செய்வது, சத்தான உணவுகளை சாப்பிடுவது, தேவையான அளவு தண்ணீர் குடிப்பது போன்ற வாழ்வியல் முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் இதை சரிசெய்யலாம்.

★ புரதம், ஆன்டிஆக்ஸிடென்ட் சத்துகள் இருக்கும் உணவுகளை குறைந்த அளவில் சாப்பிடும்போது, அட்ரினல் மற்றும் தைராய்டு சுரப்பிகளில் பிரச்னை ஏற்படும். இவர்கள், சரியான உணவுப் பழக்கத்துக்கு மாறினாலே போதுமானது.

# முடிவளர்ச்சியை அதிகரிக்கும் வெந்தயம்!



வாரத்திற்கு ஒரு முறையாவது வெந்தய குளியல் முடி வளர்ச்சிக்கு கண்டிப்பானது. இது குறித்து விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

கவனிக்க மறந்துவிடுகிற ஒன்று தலைமுடி. தலைமுடியில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், மாற்றங்கள் ஏற்பட்டால் மட்டுமே தலைமுடியை கவனிக்கிறோம். நிறைய வேலைகள் இழுக்கும் என்றே பலரும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்கிறோம். அதோடு அதிக செலவாகுமே என்ற பயமும் இருக்கும். இனி அந்தக் கவலை எதுவும் தேவையில்லை. வீட்டிலிருக்கும் ஒரு பொருளைக்கொண்டு தலைமுடியை எளிதாக பராமரிக்கலாம்.

வெந்தயம் இரவில் படுக்கைக்கு போகும் முன் கையளவு வெந்தயத்தை எடுத்து சிறிய பாத்திரத்தில் குடிக்கும் நீர் ஊற்றி ஊற வைக்க வேண்டும். இரவில் மறந்து விட்டாலும் காலையில் சுமார் ஒரு மணி நேரம் ஊற வைத்தால் போதுமானது.

ஊற வைத்த வெந்தயத்தை நன்கு அரைத்து தலையில் தடவ வேண்டும். தலை முடியின் வேர் கால்களில் படும்படி தடவினால் சால சிறந்தது. தலையில் தடவிய பின் நீங்களே வெந்தயத்தின் குளிர்ச்சியை கொஞ்சம் கொஞ்சமாக உணர முடியும். சிறிது நேரம் கழித்து குளித்து விடலாம். குளிக்கும் போது வெந்தயத்தை தலையில் இருந்து நன்கு அலசி விட வேண்டும்.




இல்லையெனில் குளித்து முடித்த பின் ஆங்காங்கே வெள்ளை பொடி போன்று தலையில் தெரியும். தினமும் இதை செய்வது முடி வளருவதை சிறப்பாக ஊக்குவிக்கும். வாரத்திற்கு ஒரு முறையாவது வெந்தய குளியல் முடி வளர்ச்சிக்கு கண்டிப்பானது. வெந்தய மருத்துவம் குளிர்ச்சியான மருத்துவம். அதனால் சளி பிடித்த நாட்களில் வெந்தய குளியலை தவிர்த்து விடுங்கள்.

# முட்டையை பிரிட்ஜில் வைக்கலாமா?



அறை வெப்பநிலையில் வைத்து பராமரிக்கும் முட்டைகளை விட, பிரிட்ஜில் வைத்து பராமரிக்கும் முட்டைகள் விரைவில் கெட்டுப்போய்விடுமாம்.

நாம் வாங்கும் முட்டையை பிரிட்ஜில் வைத்து சாப்பிடுவது ஆரோக்கியமற்றது என்று ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர். அறை வெப்பநிலையில் வைத்து பராமரிக்கும் முட்டைகளை விட, பிரிட்ஜில் வைத்து பராமரிக்கும் முட்டைகள் விரைவில் கெட்டுப்போய்விடுமாம். அதிலும் மிகவும் குளிர்ச்சியான இடத்தில் பராமரிக்கும் போது, அது பாலைப்போல் திரிந்துவிடுகிறதாம்.

ஐரோப்பிய முட்டை மார்க்கெட்டிங் ஒழுங்குவிதிகளின் படி, முட்டையை மிகவும் குளிர்ச்சியான இடத்தில் பராமரித்து, பின் அறைவெப்ப நிலைக்கு கொண்டு வரும் போது, முட்டையின் மேல் அதிகம் வியர்த்து, முட்டையின் ஓட்டில் உள்ள சிறுதுளைகள் வழியே பாக்டீரியாக்கள் வேகமாக வளர்ச்சியடைந்து உள்ளே செல்லுமாம். எனவே முட்டையை வாங்கினால் அதை உடனே சமைத்து சாப்பிட்டு விட வேண்டும் அல்லது அறை வெப்பநிலையிலேயே பராமரிக்க வேண்டும்.

நாம் வாங்கும் முட்டை பிரஷ்ஷாக இருந்து, அதில் மேல்தோல் நீங்காமல் ஒட்டிக்கொண்டிருந்தால், அந்த முட்டையை பிரிட்ஜில் வைக்க கூடாது. ஒருவேளை நீங்கள் வாங்கிய முட்டையில் சால்மோனெல்லா வகை பாக்டீரியா இருந்து, அதனை பிரிட்ஜில் வைத்து பராமரித்தால், இதர முட்டைகளும் அந்த கொடிய பாக்டீரியாவால் தாக்கப்படும். எனவே இதனைத்தவிர்க்க வேண்டுமெனில், அறைவெப்பநிலையிலேயே பராமரிக்க வேண்டும். ஒருவேளை முட்டையைப்பயன்படுத்தி கேக் செய்ய வேண்டுமெனில் முட்டையை பிரிட்ஜில் வைத்து பராமரிக்கக் கூடாது. ஏனெனில் பிரிட்ஜில் வைக்கும் முட்டையினுள் உள்ள கருவானது மிகுந்த குளிர்ச்சியுடன் இருப்பதால், அதைக்கொண்டு கேக் செய்ய நினைத்தால், அந்த கேக் கடினமாக இருக்கும்.

முட்டைகளில் விரைவில் பாக்டீரியா தொற்று உண்டாகி விடும் அபாயம் உள்ளது. குறிப்பாக வயிற்றிற்கு கேடு விளைவிக்கும் சால்மோனெல்லா வகை பாக்டீரியா முட்டைகளின் ஓடுகளில் உருவாகும்.

கோழி முட்டையிடும்போது அதன் ஓடுகளில் சால்மோனெல்லா பாக்டீரியாக்கள் உருவாவது இயல்பானது. இந்த பாக்டீரியா சாதாரண வெப்ப நிலையில் உயிர் வாழ்வதில்லை. அதிக ஈரப்பதம் கொண்ட குளிர் நிலையில் மிக விரைவில் பெருக்கமடைகின்றன. இதனால் குடல் மற்றும் வயிறு சம்பந்தமான நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது.




## சூப்பரான ஸ்நாக்ஸ் கார சோமாஸி

கோதுமை மாவு - 3 கப்,
ரவை - ஒரு டேபிள்ஸ்பூன்,
உப்பு - தேவைக்கேற்ப,
எண்ணெய் - பொரிப்பதற்கு தேவையான அளவு.
மசாலா செய்வதற்கு :
உருளைக்கிழங்கு - 200 கிராம்,
கேரட் துருவல் - 4 டேபிள்ஸ்பூன்,
உப்பு - தேவைக்கேற்ப,
ஊறவைத்த - பச்சைப் பட்டாணி கால் கப்,
மஞ்சள்தூள், பெருங்காயத்தூள் - தலா ஒரு சிட்டிகை,
கொத்தமல்லித் தழை, கறிவேப்பிலை - தலா ஒரு டேபிள்ஸ்பூன்,
பெரிய வெங்காயம் - ஒன்று,
பச்சை மிளகாய் - 2,
எண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன்.

வெங்காயம், கொத்தமல்லி, ப.மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும். கேரட்டை துருவிக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் கோதுமை மாவு, உப்பு, ரவை, தண்ணீர் சேர்த்து கெட்டியாகப் பிசைந்து, 30 நிமிடம் ஊறவிடவும். கழுவி, நறுக்கிய உருளைக்கிழங்கு மற்றும் பச்சைப் பட்டாணியுடன் உப்பு, மஞ்சள்தூள் சேர்த்து குழையாமல் வேகவிடவும். வாணலியில் 2 டேபிள்ஸ்பூன் எண்ணெய் ஊற்றி... நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும். அடுத்து கேரட் துருவலயும் சேர்த்துக் கிளறி, வெந்த உருளை பட்டாணி, பெருங்காயத்தூள் சேர்த்து மேலும் வதக்கி, கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழை சேர்த்து இறக்கவும்.பிசைந்த கோதுமை மாவினை சிறிய உருண்டைகளாக உருட்டி, சப்பாத்தியாக இட்டு... 2 டேபிள்ஸ்பூன் மசாலாவை உள்ளே வைத்து மூடி நன்றாக அழுத்தி, சோமாஸிகளாக செய்யவும். கடாயில் எண்ணெயைக் காயவைத்து செய்துவைத்த சோமாஸிகளை பொரித்து எடுக்கவும்.

# கர்ப்பப்பை பத்திரம்!

நம்மில் பெரும்பாலான பெண்களுக்கு மாதவிடாய் தள்ளிப்போவது, அடிக்கடி சிறுநீர் கழித்தல் உள்ளிட்ட பிரச்னைகள் இருக்கும். அது கர்ப்பப்பை நார்திசுக் கட்டியின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

ஃபைப்ராய்டு எனப்படுகிற கர்ப்பப்பையில் வரும் நார்த்திசுக் கட்டியானது, சமீப காலம் வரை நடுத்தர மற்றும் வயதில் மூத்த பெண்களை மட்டுமே தாக்கிக் கொண்டிருந்தது. இப்போது அந்தப் பிரச்னை இளம் பெண்களுக்கும் ஏற்படுகிறது. கர்ப்பப்பையில் வருகிற ஒருவித தசைக் கட்டியே ஃபைப்ராய்டு. இதில் 3 வகைகள் உள்ளன.

ஈஸ்ட்ரோஜென் எனும் ஹார்மோன் அதிகமாவதே இதற்கு முக்கிய காரணம். பரம்பரையாகவும் இந்தப் பிரச்னை தாக்கலாம். ஃபைப்ராய்டு எனப்படும் கர்ப்பப்பை நார்த் திசுக்கட்டி அறிகுறிகள் இன்றியும் வரலாம் அல்லது கீழ்க்கண்ட அறிகுறிகளோடும் தென்படலாம்.

★ மாதவிலக்கு நாட்களில் அளவுக்கு அதிகமான ரத்தப் போக்கு.
★ மாதவிலக்கு நீண்ட நாட்கள் நீடிப்பது.
★ மாதவிலக்கே வராமல் இருப்பது.
★ மாதவிலக்கு நாட்களில் அதிக வலி.
★ உடலுறவின் போது அதிக வலி.
★ அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியநிலை ஏற்படுவது.
★ மலச்சிக்கல் ஏற்படுவது.
★ முதுகு, கால்களில் வீக்கம், வலி.
★ கருத்தரிக்க முடியாத நிலை ஏற்படுவது.
★ தொப்பை ஏற்படுவது.

அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலம் கட்டியின் இருப்பிடம் மற்றும் அளவு கண்டு பிடிக்கப்படும். 4 அல்லது 5 செ.மீ. அளவுள்ள கட்டிகள் என்றால் லேப்ராஸ்கோப்பி சிகிச்சை மூலமே சரி செய்து விடலாம். அதன் மூலம் கர்ப்பப்பையையும் பாதுகாக்கலாம். அதுவே கட்டி வளர்ந்து பெரிதாகி விட்டால் சிகிச்சையளிப்பது சிரமம்.

கர்ப்பப்பையும் பாதிக்கப்படும். இது போன்ற சூழ்நிலையில் பெரும்பாலான மருத்துவர்கள் ஹிஸ்டெரெக்டமி (கர்ப்பப்பை அகற்றும் சிகிச்சை) அல்லது மயோமெக்டமி (ஃபைப்ராய்டு எனப்படும் நார்த் திசுக்கட்டிகளை அகற்றும் சிகிச்சை) போன்றவற்றுக்கு பரிந்துரைக்கப்படும். இந்த சிகிச்சைகள் அதிக வலியுடையவை. மேலும் குணமாக அதிக நாட்கள் ஆகும். நீண்டநாள் மருத்துவமனையில் இருக்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலி

சேஷன் (அல்லது) யுட்ரைன் ஆர்டெரி எம்பாலிசேஷன் என்பது புதிய வகை சிகிச்சையாகும். இதன் மூலம் அறுவை சிகிச்சையின்றி ஊசி செலுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும். இந்த சிகிச்சை கர்ப்பப்பை நார்த் திசுக்கட்டியை அகற்றுவதுடன் கருப்பையையும் பாதுகாக்கிறது. அறுவை சிகிச்சை செய்ய அவசியம்



இல்லை என்பது இந்த சிகிச்சையின் முக்கிய அம்சமாகும். ஒரு நாள் அடிப்படையிலேயே இந்த சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த சிகிச்சையின் மூலம் அன்றைய தினமே வீடு திரும்பலாம் அல்லது அடுத்த நாள் வீடு திரும்ப முடியும். கர்ப்பப்பை நார்த் திசுக்கட்டிகளை கரைக்க தற்போது யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் என்ற நவீனமுறை பயன்படுத்தப்படுகிறது. இது இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி நிபுணர்களால் செய்யப்படும் சிகிச்சை. இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி சிகிச்சை முறையில் அறுவை சிகிச்சை இல்லாமல், இடுப்புக்கு கீழே உள்ள ரத்தக்குழாயில் சிறிய ஊசி மூலம் சிறிய பிளாஸ்டிக் குழாயை செலுத்தி, அதில், 'பாலிவினைல் பார்ட்டிகில்ஸ்' எனப்படும் பொருளை பயன்படுத்தி, கர்ப்பப்பையிலுள்ள கட்டிக்கு செல்லும் ரத்த ஓட்டம் தடுக்கப்படுகிறது.

ரத்த ஓட்டத்தை தடுப்பதால், கட்டிகள் சுருங்கி விடுகின்றன. சில மாதங்களில் மிக நல்ல முன்னேற்றத்தை உணரலாம். இந்த சிகிச்சையால், கருப்பைக்கு பாதிப்பேதும் இல்லை. ஒரு நாள் மருத்துவமனைக்கு வந்து, அன்றே சிகிச்சை முடிந்து திரும்பி விடலாம். இதனால், அறுவை சிகிச்சையின்போது ஏற்படும் தழும்புகள் கூட ஏற்படாது. யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் சாதாரண மயக்க மருந்து கொடுத்து செய்யப்படுகிறது. இதற்கு 60 நிமிடங்கள் ஆகும்.

சிறிய ஊசி மூலம் துளையிடப்படுவதால் பிளவுகளோ வடுக்களோ தழும்புகளோ ஏற்படுவதில்லை. இரண்டாம் நாள் முதல் 5 நாட்களுக்குள் வழக்கமான பணிகளில் ஈடுபட முடியும். வழக்கமான ஹிஸ்ட்ரெக்டமி சிகிச்சை முறையில் சுமார் 7 நாட்கள் மருத்துவமனையில் தங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்படும். மேலும் வழக்கமான பணிகளுக்கு திரும்ப சுமார் 2 மாதங்கள் ஆகும்.

மயோமெக்டமி சிகிச்சை முறையிலும் 4 முதல் 7 நாட்கள் வரை மருத்துவமனையில் தங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்படும். மேலும் வழக்கமான பணிகளுக்குத் திரும்ப 3 முதல் 4 வாரங்கள் ஆகும். அந்த வகையில் யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் முறை பணிக்குச் செல்லும் பெண்களுக்கு ஒரு சிறந்த வரப்பிரசாதம்தான்.

கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்யப்பட்டால் அப்போது குடல் மற்றும் சிறுநீர்ப்பை உள்ளிட்ட அருகில் உள்ள உறுப்புகளுக்கு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் ஹிஸ்ட்ரெக்டமி சிகிச்சையை சிறு வயதில் செய்து கொண்டால் இடுப்பு எலும்பு தசைத் தொகுதி பலவீனமாவதற்கும் வாய்ப்பு உண்டு. இது பின்னாளில் சிறுநீர் தொடர்பான பல்வேறு பிரச்னைகள் ஏற்பட காரணமாக அமையும். இந்தப் பிரச்சனைகள் எல்லாம் யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் முறையால் தவிர்க்கப்படும்.

லோக்கல் அனெஸ்தீசியா வகை மயக்க மருந்தின் மூலம் இந்த சிகிச்சை செய்யப்படுவதால் எந்த ஆபத்தோ பின் விளைவுகளோ ஏற்படுவதில்லை. இதய நோய்கள், நுரையீரல் பாதிப்புகள் போன்ற மற்ற வகையான நோய்கள் உள்ளவர்களுக்கு ஜெனரல் அனெஸ்தீசியா மயக்க மருந்துகள் கொடுத்து சிகிச்சை செய்ய முடியாது. அத்தகையவர்களுக்கு லோக்கல் அனெஸ்தீசியா மூலம் யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் முறையில் எளிதில் சிகிச்சை செய்யப்படுகிறது.

யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் சிகிச்சை முறையின் மற்ற முக்கியமான நன்மைகளில் ஒன்று ரத்தம் வீணாவதில்லை. அறுவை சிகிச்சை செய்யப்பட்டால் ரத்தம் வீணாகி அதன் மூலம் பல சிக்கல்கள் ஏற்படும். அது யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் முறையில் தவிர்க்கப்படுகிறது. மற்ற சிகிச்சைகளை விட யுட்ரைன் ஃபைப்ராய்டு எம்பாலிசேஷன் சிகிச்சை முறை பல்வேறு நன்மைகளைக் கொண்டது எனவும் பாதுகாப்பானது என்றும் தெரிய வந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் செய்யப்படும் ஹிஸ்டெரெக்டமி சிகிச்சையில் 75 சதவீதம் அறுவை சிகிச்சைகள் தேவையற்றது எனவும் அது தவிர்க்கப்படக்கூடியது என்றும் ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. யுட்ரைன் பைப்ராய்டு எம்பாலிசேஷன் சிகிச்சை முறை மிக குறைந்த வகையிலான துளையிடும் சிகிச்சை முறையாகும். இதன் மூலம் கர்ப்பப்பையை அகற்றாமல் காக்க முடியும். விரைந்து குணமடையலாம். நீண்ட நாள் மருத்துவமனையில் தங்கி இருக்க வேண்டிய அவசியமில்லை.

# கைத்தடி!

கங்கை நதியில் ஒரு வியாபாரி குளித்துக் கொண்டிருந்தான்! அப்போது ஒரு அழகிய கைத்தடி மிதந்து வந்து கொண்டிருந்தது! எழில் மிகுந்த அழகிய வேலைப்பாடு மிகுந்த கைத்தடி அது! அதைக் கவனித்த வியாபாரி ஆசையுடன் அதை எடுத்துக் கொண்டு கரையை நோக்கி நீந்தினான். நதி வேகமாக நீர்ச்சுழல்களுடன் ஓடிக் கொண்டிருந்தது! நீந்திக் கொண்டிருந்த வியாபாரி ஒரு நீர்ச்சுழலில் மாட்டிக் கொண்டான்!

தப்பிக்க கடும் முயற்சி செய்தான். மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு உயிர் பிழைத்தான்! போராட்டத்தின் போது நதியில் தான் ஆசையாய்க் கண்டெடுத்த கைத்தடியை நழுவ விட்டுவிட்டான்! கரைக்கு வந்து சேர்ந்த அவன், அந்த அழகான கைத்தடியை இழந்துவிட்டேனே என்று கதறினான்!

அப்போது அங்கு இருந்த ஒரு துறவி இதைக் கவனித்தார். அவர் வியாபாரியை நோக்கி,

''அப்பா நீ இங்கு வந்தபோது வெறுங்கையோடு தானே வந்தாய்?'' என்று கேட்டார்.

''ஆமாம்''

''ஆனால் இப்போது கைத்தடியை நழுவ விட்டு விட்டதாகக் கூறுகிறாயே?''

வியாபாரி நதியில் நடந்ததைக் கூறினான்.

''உன்னைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது...கங்கையில் கைத்தடி மிதந்து வந்தது....,நீ அதைச் சிறிது நேரம் வைத்திருந்தாய்....,இப்போது மீண்டும் கங்கையில் மிதந்து கொண்டு போகிறது....அப்படி இருக்கும்போது அது உன் கைத்தடி என்று எப்படிக் கூறுகிறாய்?.... இரண்டு நிமிடங்கள் கையில் வைத்திருந்ததால் அது உனதாகிவிடுமா? அது உன்னுடையது என்று சொந்தம் கொண்டாட உனக்கு உரிமை பெற்று விட்டாயா?... வாழ்வில் எதுவும் நிச்சயம் இல்லை.... கிடைக்கும்போது மகிழ்ச்சியுறவோ.... இழக்கும்போது துக்கமடையவோ ஒன்றும் இல்லை...'' என்றார் துறவி!

அதிலிருந்த ஆழமான உண்மையை உணர்ந்தான் வியாபாரி! மனம் தெளிந்தது!



## ஞான ஒளி!

புத்தர் தன் சீடர்களை அழைத்து, ''பறவைகளைப் போல் நம்பிக்கை கொள்ளுங்கள்'' என்றார்.

''தாங்கள் சொல்வது எங்களுக்கு விளங்கவில்லை''என்றனர் சீடர்கள்.

''பறவைகள் முட்டை இடுகின்றன. குஞ்சுகள் வெளி வரப் பலநாட்கள் பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் அடைகாக்கின்றன. குஞ்சுகள் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வர முடியுமோ,முடியாதோ என்று அவை ஐயம் கொள்வதில்லை....நம்பிக்கையுடன் அடைகாக்கின்றன. நீங்கள் நான் சொல்வதை நம்பிக்கையுடன் பின்பற்றினால் ஞான ஒளி பெறுவீர்கள்!''என்றார் புத்தர்!

★★★★★

## சீசரின் அறிவு!

அரசர் சீசருடைய எதிரிகள் அவரைக் குற்றம் சாட்டி எழுதிய மடல்கள் தற்செயலாக சீசரின் கைகளில் கிடைத்தன. படித்துப் பார்க்காமலேயே எல்லாவற்றையும் எரித்து விட்டார் அவர்!

''என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்?...., நீங்கள் எரிக்காமல் இருந்திருந்தால் இந்த மடல்களே எதிரிகளை அடையாளம் காணும் சான்று ஆகாதா?'' என்றார் அவரது நண்பர்.

''நண்பா! நான் எப்பொழுதும் எந்தச் சூழலிலும் கோபம் அடையக்கூடாது என்று நினைக்கிறேன். கோபத்தை உண்டாக்குகிற சான்றுகளையும் அழித்து விடுவதுதான் அதற்குச் சிறந்த வழி!....அதனால்தான் மடல்களை எரித்தேன்!''என்றார் சீசர்!

## கையெழுத்தை எப்படி அழகாக்குவது?

குழந்தையின் கையெழுத்து அழகாக இல்லை என்ற மனக்குறை உள்ள பெற்றோரா நீங்கள்? அவர்களுக்கு நீங்களே சிறு சிறு பயிற்சிகள் அளித்து அவர்களின் கையெழுத்தை நேர்த்தியாக மாற்றியமைக்க முடியும்.




குழந்தையின் எழுத்து நன்றாக இல்லை என இரட்டைக் கோடு, நான்கு கோடு நோட்டுகளை வாங்கித் தந்து, பக்கம் பக்கமாக அவர்களை எழுதச் சொல்லி வற்புறுத்தினால், அவர்களுக்கு வெறுப்புதான் ஏற்படும். குழந்தையின் கையெழுத்தை அழகாக்க, முதற்கட்டமாக ஃபைன் மோட்டார் ஸ்கில் (ஊடிணனு ஞூணிஞணிணூ குடுடிடூடூ) எனப்படும், அவர்கள் கைகளின் தசைகளை வலுப்படுத்தும் திறனை வளர்க்க வேண்டும். கை விரல்களுக்கு அடிக்கடி வேலைகள் கொடுக்க வேண்டும். இதனால் நரம்புகள் உறுதியடைந்து, எழுத்து அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வரும். அது தொடர்பான பயிற்சிகளை பார்க்கலாம்.

பல வண்ணங்களில் கிடைக்கும் சைனா களிமண்ணை குழந்தைகளுக்கு வாங்கித் தந்து, பிசைந்து விளையாட, சின்னச் சின்ன உருவங்கள் செய்யப் பழக்கப்படுத்துங்கள். இதனால் குழந்தையின் கைகள், தசைகள், கண்கள் அனைத்துக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி கிடைப்பதுடன், குழந்தையின் மனமும் ஒருங்கிணைந்து செயல்பட முடியும்.

மைதா மாவு, சோள மாவு, கோதுமை மாவு என ஏதேனும் ஒரு மாவினைப் பிசைந்து, பெரிய, அகலமான தட்டில் வைத்து, குழந்தையை அதில் ஏதேனும் எழுதியோ, வரைந்தோ பழகச் சொல்லலாம். இதனால் குழந்தையின் கைகளுக்கு நெகிழ்வுத்தன்மை கிடைக்கும்.

சில்லறைக் காசுகளை எண்ணி, அவற்றை சிறு துளையுள்ள உண்டியலில் குழந்தைகளைப் போடச்சொல்லலாம். மேலும், பல்லாங்குழி போன்ற நம் பாரம்பர்ய விளையாட்டுகளை விளையாடச் செய்யலாம். இதனால் குழந்தைகளின் நரம்புகள் வலுப்படும்; பென்சிலை வழுக்காமல் பிடித்து எழுத அவர்களின் விரல்கள் பழக்கப்படும்.

குழந்தைகள் விளையாட வைத்திருக்கும் இடுக்கியால் பொருட்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நகர்த்தச் சொல்லுங்கள். இதனால் கைகளுக்கு பிடிமானத்தன்மை அதிகரிக்கும்.

குழந்தைகள் பேப்பர்களைக் கிழித்து பந்துபோல உருட்டி விளையாடினால், தடை போடாமல் அதை அனுமதியுங்கள். இதனால் மொத்த கை நரம்புகளும் வலுப்படும். அல்லது, அக்குபஞ்சர் பந்துகளை வாங்கித் தந்தும் விளையாடச் சொல்லலாம்.

குழந்தைகளிடம் உல்லன் நூலைக் கொடுத்து அதில் மணிகள், பாசிகள் போன்றவற்றை கோக்கச் சொல்லலாம். அதேபோல தடிமனான அட்டையில் சிறுதுளைகள் போட்டு அதில் அவர்களை நூலை கோக்கச் சொல்லிப் பழக்கப்படுத்தலாம்.

உங்கள் குழந்தைக்குப் பிடித்த நிறத்தில் க்ரயான்ஸ் அல்லது கலர் பென்சிலை அவர்களிடம் கொடுத்து, முட்டைக் கூடு, காகிதக் கோப்பை போன்றவற்றில் அவர்களைப் படம் வரைந்து வண்ணம் தீட்டச் சொல்லுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் அவர்களால் எழுத்துக்களை சீராக எழுத முடியும்.

சில குழந்தைகளுக்கு குறிப்பிட்ட சில எழுத்துக்கள் மட்டும் சரிவர எழுத வராமல் இருக்கலாம். அதனால் அவர்களின் மொத்தக் கையெழுத்தும் பார்க்க சரியில்லாதது போன்று தோன்றும். எனவே, சார்ட் அல்லது கார்ட்போர்டு அட்டைகளில் அந்த எழுத்துக்களை மட்டும் பெரிதாக எழுதி, அதன்மீது க்ளேவை வைத்து அந்த எழுத்து போன்றே வடிவமைக்கச் சொல்லலாம்.

குழந்தைகளின் நரம்புகள் மெலிதாக இருக்கும் என்பதால் அவர்கள் எழுதப் பழகும்போது பிடிமானத்துக்குக் கடினமாக இருக்கும் பேனா அல்லது பென்சிலை வாங்கிக் கொடுக்காதீர்கள். இதனால் அவர்கள் கை சிரமத்துக்கு உள்ளாகும்.

குழந்தைகளை அவர்கள் கைகளை இறுக்கமாக மூடி மெதுவாகத் திறக்க சொல்லலாம். இப்படி நாள் ஒன்றுக்கு 10 முறையாவது செய்து பழக வையுங்கள்.

இதுபோன்ற பயிற்சிகளைத் தொடர்ந்து செய்துவர வைத்தால், உங்கள் குழந்தையின் கையெழுத்தில் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம்.




## நெடுநெடுவென வளர்ந்த எரிமலை

எரிமலையைப் பற்றி பாடப் புத்தகங்களில் படித்திருப்போம். அது வெடித்துச் சிதறும்போது டி.வி.யில் பார்த்திருப்போம். எரிமலைகள் பற்றி நிறைய தகவல்கள் உள்ளன. அவற்றைப் பார்ப்போமா?



எரிமலை என்பது காலியான, உள்ளே குழி போல இருக்கும் ஒரு மலை. அது, பூமியின் பரப்பிலுள்ள ஒரு வெடிப்பாகும். எரிமலை வெடிக்கும்போது பூமியின் அடி ஆழத்திலிருந்து சூடான வாயு, பாறைத் துண்டுகள், சாம்பல், மேக்மா எனும் எரிமலைக் குழம்பு ஆகியவை வெடித்துச் சிதறி வெளியேறும்.

வல்கேனோ என்பது எரிமலையைக் குறிக்கும் ஆங்கில வார்த்தை. ரோமன் நெருப்புக் கடவுளான வல்கன் என்பதிலிருந்து உருவானது இது.

பூமியின் கண்டத் தட்டுகள் சந்திக்கும் இடங்களில்தான் எரிமலைகள் அதிகமாக அமைந்திருக்கின்றன. பசிபிக் பெருங்கடலைச் சுற்றியுள்ள இடங்களில்தான் உலகின் 75 சதவீத எரிமலைகள் உள்ளன. இதை பசிபிக் நெருப்பு வளையம் என்று அழைக்கிறார்கள். இங்கேதான் உலகின் 90 சதவீத நிலநடுக்கங்கள் நிகழ்கின்றன.

பூமியின் உள்ளே அதிக வெப்பமுள்ள பாறைகள் காணப்படும் இடங்களிலும் எரிமலைகள் உள்ளன. இந்த இடங்களை ஹாட் ஸ்பாட்ஸ் என்று சொல்வார்கள். பூமியின் பல இடங்களில் இந்த ஹாட் ஸ்பாட்ஸ் உள்ளன. அதில் முக்கியமானது ஹவாய் தீவு.

பூமிக்குள் இருக்கும் வரை உருகிய பாறையின் பெயர் மேக்மா. எரிமலை வெடித்து அது வெளியே வந்த பின் லாவா என்று அழைக்கப்படுகிறது.

எரிமலை வெடிக்கும்போது சீறிப் பாயும் சாம்பல், பூமியிலிருந்து 17 மைல் உயரம் வரை வானத்தில் பயணிக்கும்.



எரிமலையிலிருந்து நீராவி, கார்பன் டை ஆக்ஸைடு, கந்தக டை ஆக்ஸைடு, ஹைட்ரஜன் சல்பைடு போன்ற வாயுக்கள் வெளியேறும்.

எரிமலை வெடிக்கும்போது நிலநடுக்கமும், சுனாமியும் வர வாய்ப்புகள் அதிகம்.


க்ரகடோவா, பம்பேய், பேலீ, வெசுவியஸ், நோவாராப்டா போன்றவை பிரபலமான எரிமலைகள் ஆகும்.

எரிமலை என்றாலே, அது கூம்பு வடிவில் இருக்கும் என்றே நினைக்கிறோம் அல்லவா? ஆனால், அது எரிமலையில் ஒருவகைதான். அகன்ற பீடபூமி, சிறு பள்ளம், டூம் வடிவ அமைப்பு ஆகிய வடிவங்களிலும் எரிமலைகள் உள்ளன. கடல் ஆழத்திலும், ஐஸ் மலையிலும்கூட எரிமலைகள் இருக்கின்றன.

உலகின் பெரிய இயங்கும் எரிமலை, ஹவாய் தீவின் மோனா லோவா (Mauna loa) ஆகும். கடலுக்கடியில் புதைந்துள்ள இதன் அடிப்பகுதி மலையுடன் சேர்த்தால், அது எவரெஸ்ட் மலையை விடப் பெரியதாகும். இந்த மலை, மொத்த ஹவாய் தீவில் பாதி அளவுக்கு உள்ளது.

பொதுவாக எரிமலைகள் உயரமாக வளர ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும். சில எரிமலைகள் வேகமாக ஒரே இரவில்கூட வளரும். மெக்ஸிகோவில் உள்ள பேரிக்யூட்டின் என்ற எரிமலை, பிப்ரவரி 20, 1943-ல் தோன்றியது. ஒரே வாரத்தில் ஐந்து மாடி உயரம் வளர்ந்தது. ஒரு வருட முடிவில் 336 மீட்டர் வளர்ந்தது. 1952-ல் அதன் வளர்ச்சி நின்றபோது அதன் உயரம் 424 மீட்டர் இருந்தது.

## நிறந்தீட்டுவோம்



## விடுகதைகள்

1. இதற்கும் 5 விரல்கள் உண்டு, ஆனால் ரத்தமும் சதையும் எலும்பும் கிடையாது...

2. மெலிதாக இருக்கும் நீரிலேயே மிதக்கும், ஆயிரம் பேர் சேர்ந்தாலும் இதைத் தூக்க முடியாது...

3. உன்னை வந்து அழுத்தும், அமுக்கும் ஆனால் உனக்குத் தெரியாது இருக்கும்...

4. ஒரே குளத்தில் ஒரே மீன், வெளியே எட்டிப் பார்த்தாலும் வேறு குளம் போகாது..

5. குதிரை ஓட ஓடக் குறையுது அதன் வால்...

6. என் பெயரைக் கேட்பவர் பலர், என்னைப் போட்டு மிதிப்பவர் பலர், ஆனாலும் நான் யார் பேரையும் கேட்பதில்லை, யாரையும் போட்டு மிதிப்பதுமில்லை...

7. பல்லைப் பிடித்து அழுத்தினால் பதறிப் பதறி நான் அழுவேன்..

8. விளையும் பயிரைக் கையில் பறிப்பவர் இல்லை... கத்தரியால் வெட்டி விடுவர் பலர்...

9. நிலமோ வெள்ளை, விதையோ கருப்பு...

**விடைகள்:**

1. க்ளவுஸ் (கையுறை)
2. நீர்க்குமிழி
3. தூக்கம்
4. நாக்கு
5. ஊசியும் நூலும்
6. தெரு
7. பியானோ
8. தலைமுடி
9. தாள், மை.

## இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு, வெளிநாட்டு நிதிச்சேர்க்கை உண்டாகும். செய்யும் தொழிலில் விருத்தி, இலாபம், சேமிப்பு கிட்டும். கணவன், மனைவி ஐக்கியம் புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு இடம்பெறும். ஆசிரியர், மாணவர் உறவு வளரும்.




இவ்வாரம் வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்படும். தேவையற்ற பயணங்களை தவிர்க்க வேண்டும். எந்த விடயமாக இருந்தாலும் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். புருஷன் மனைவிகிடையிலேயே கருத்து வேறுப்பாடுகள் இடையிடையே தோன்றி மறையும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு கிட்டும். உத்தியோகத்தர் சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் வேலைப்பழு குறைவடையும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தலாம்.




இவ்வாரம் வெளிநாட்டு நிதி வரவுகள் உண்டு. நற்செய்திகள் வந்து சேரும். செய்தொழில் விருத்தி, நிதி வசதிகள் ஏற்படும். வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் கூட்டு வாணிபமும், நன்மை தரும். புதிய முதலீடுகளை ஆரம்பிக்கலாம். பழைய கடன்கள் யாவும் வசூலாகும். ஆசிரியர், மாணவர் உறவு இவ்வாரம் நன்கு நடைபெறும்.




செய்யும் தொழிலால் மேன்மை உண்டு. ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயம் பெறும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் பெற்று புது உத்வேகம் அடைவர். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளைப் பெருக்கலாம். விளைப்பொருட்களை சந்தைப்படுத்தலினால் அதிக இலாபத்தை ஈட்டமுடியும்.ஆசிரியர் மாணவர் பெற்றோர் உறவு வலுவடையும்.




இவ்வாரம் உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் மடைந்து ஏற்றம் அடைவர். அதிகாரிகளின் ஊக்குவிப்பையும் பெறுவர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமடைந்து திருமணப் பேச்சுக்கள் தொடரும். சிலருக்கு வெளிநாட்டு சம்பந்தம் ஏற்படும். உத்தியோகப் பெண்களும் தத்தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். மாணவர் கல்வி ஊக்கமும் விடாமுயற்சியும் அடைவர்.




இவ்வாரம் ஈடுபடும் கருமங்களில் யாவும் வெற்றியளிக்கும். இது வரை இருந்து வந்த தடைகள் தாமதங்கள் யாவும் விலகும். செய்தொழில் விருத்தி,இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் உண்டாகும். உத்தியோகத்தர் பதவி செல்வாக்கு அடைவர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றமடைவர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய ஏற்றமடைவர். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும்.




ஏழரைக் கடைக்கூறு ஜென்மத்து வியாழ தோஷம் நடப்பதால் உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கொள் முதல்களையும் கட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக ஒத்துழைப்புக்களை பெற முடியாது. குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும். புத்திரர்களின் உதவி, அனுகூலம் கிட்டாது.




ஏழரை நடுக்கூறு விரய வியாழ தோஷம் இருப்பதால் அலைச்சல் மன உழைச்சல் உண்டு. அடிக்கடி பயணங்கள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளினால் வேலை அழுத்தம் உண்டு. வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நன்மை தராது. விவசாயிகள் நவீன கருவிகளை கையாண்டு ச்சி, புழுக்களின் தொல்லைகளில் இருந்து பயிர் பாதுகாப்புகளில் ஈடுபடலாம். மாணவர்களுக்கு கல்வி, ஊக்கம் தேவை.




உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் கொள்வர். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய முதலீடுகளை தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்து சேரும். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேலையில் கிடைக்கும். குடும்பம் பெண்களின் இல்லற குடும்ப நிர் வாகம் நன்கு நடைபெறும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும்.




இவ்வாரம் தனலாபம் , பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். உத்தியோகத்தர் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம். விவசாயிகள் விளைப் பொருட்களின் சந்தைப் படுத்தலினால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு அமையும்.




புண்ணிய தர்ம பாவத்தில் பார்வை விழுவதால் நோன்பு விரதம் அனுஷ்டித்தல், ஆலய தரிசனம் முதலியன ஏற்படும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழில் முன்னேற்றத்தால் நல்ல ஆதாயம் ஈட்டமுடியும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்தரர் உதவி, அனுகூலமுடன் நன்கு நடைபெறும். மாணவர் கல்வி, விளையாட்டு துறைகளில் ஊக்கமும் விடாமுயற்சியும் அடைவர். பரீட்சை பெறுபேறுகள் மன நிறைவை தரும்.




கணவன் மனைவியிடையே கருத்து ஒற்றுமை வலுவாகும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடித் திருமணப் பேச்சுக்கள் இவ்வாராமும் தொடரும். வியாபாரிகள் விவசாயிகள் தம் முதலுகேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் ஜெயமளிக்கும். ஆசிரியர், மாணவர் பெற்றோர் உறவு வலுவடையும். கல்வி, விளையாட்டுத் துறைகளில் மாணவர்கள் ஊக்கமும் விடாமுயற்சியும் அடைவர்.

# சர்வ மங்களங்களையும் தந்தருளும் கேதாரகௌரி விரதம்

கேதார கௌரி விரதம் சர்வ மங்களங்களையும் தரும் விரதம் ஆகும். கல்வி, உத்தியோகம், வியாபாரம், திருமணம் முதலானவற்றை எமக்குத் தருவதோடு நோய் நொடி அற்ற வாழ்வையும் தரவல்லது.

கேதார கௌரி விரதம் ஐப்பசி மாதம் 02ம் திகதி ஆரம்பமாகி ஐப்பசி 21ம் திகதி அமாவாசையுடன் அடுத்தமாதம் (07ம் திகதி) நிறைவுறும் விரதம் ஆகும்.

இவ்விரதத்தை ஆரம்ப தினத்தன்று சங்கற்பித்து ஆரம்பிப்பது வழக்கம்.

தினமும் வீட்டில் பூஜை வழிபாடு செய்து மாலையில் விசேஷமாக தேவாலய தர்சனஞ் செய்வது வழிபாட்டு முறையாகும். ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திர ஜபம்,திருமுறைப்பாராயணஞ் செய்தல் வேண்டும். கேதார கௌரிக்கதையை படிக்கலாம். அல்லது கோவிலில் மாலைப் பூஜையின் பின்னர் கதை படிக்கும்போது கேட்டு வணங்கலாம்.

நோயாளிகள் மதிய போசனஞ் செய்து இரவு தேவ தர்சனத்தின் பின் பால்பழம் அருந்தலாம். ஏனையோர் மாலைப் பூஜையின் பின் தானியம், பழம் சாப்பிட்டு விரதத்தை அனுஷ்டிக்கலாம்.

06ம் திகதி திருவிளக்கு பூசையினை தொடர்ந்து 07ம் திகதி உபவாசம் இருந்து பாறணை செய்து தானதர்மங்களையும் செய்து கேதார கௌரி விரதத்தை மங்களமாக நிறைவு செய்து கொள்ளலாம்

இவ் விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் அனுஷ்டிக்கின்றனர். மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்க வேண்டியும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை (கணவனை) வேண்டியும் இந்த விரதத்தினை அனுஷ்டிக்கின்றனர். மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுட்டிக்கின்றனர். விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள் தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.



சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைந்து விரதமிருந்து, வழிபட்டு அதன் பலனாக சிவபெருமானின் (இடது பக்க) பாதியுடம்பை பெற்று, அர்த்நாரிஸ்வரியாகவும்,அர்த்த நாரீஸ்வரராகவும் ஒன்றாகி விரதமே கேதார கௌரி விரதமாகும்.

கேதாரம் என்பது இமயமலைச் சாரலில் உள்ள ஒரு சிவதலம். இத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவனை நினைத்து பார்வதி தேவியாகிய கௌரி இவ் விரதத்தினை மேற்கொண்டதால் இப் பெயர் உண்டாயிற்று. சிவனுக்கு சமமான நிலையில் சக்திஅமையும் போது அது பராசக்தி எனப்போற்றப்படுகின்றது.

தென்நாட்டுச் சைவம் எனப்போற்றப்படும் சைவ சித்தாந்தம் கூறும் பரம்பொருள் சிவனாகும். சிவனின் அருள் வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் பல இருந்த போதிலும் கேதார கௌரி விரதம் பலவகையிலும் சிறப்புடைய விரதமாகக் கொள்ளப்படுகின்றது. பக்தர்கள் இவ்விரதத்தினை மன ஒருமைப்பாட்டுடனும், புனித நோக்குடனும் என்ன வரம் வேண்டி அனுஷ்டிக்கிறார்களோ அந்தந்த வரங்களை அம்பாளின் வேண்டுகோளிற்கு இணங்க சிவன் மிக விரைவாகவே கொடுத்து விடுவார் என்பது பலரது அனுபவ உண்மையாகும்.

இதனை விட சர்வலோக மாதாவாகிய பார்வதி தேவியே இந்நோன்பினை முதன் முதலில் அனுஷ்டித்து பரம்பொருளின் இடது பாகத்தினைப் பெற்றுக் கொண்டார் என்பதும், இவ் விரதத்திற்கு வழங்கப்படும் அடுத்த சிறப்பாகும். ஆண், பெண் என்ற வேறுபாடோ, வயது வேறுபாடோ இன்றி, வாழ்க்கையின் எந் நிலையில் இருப்போரும் இவ் நோன்பினை தமக்கு வேண்டிய வரங்களை வேண்டி அனுஷ்டித்து இக, பர இன்பத்தினைப் பெற்று இன்புற்று வாழ வழி செய்கின்றது. இத்தகைய சிறப்பு பெற்றகேதார கௌரி விரதம் பற்றி ஓர் புராண வரலாறு உண்டு.

கைலயங்கிரியின் சிகரத்தில் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் உமதேவி சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபையில் வீற்றிருக்கின்றார்.

அங்கே தேவவாத்தியங்கள் முழங்க கிருதாசி, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே நடன ஸ்திரீகளில் சவுந்தர்யம் மிக்கவளாகிய அரம்பையானவள் அற்புதமான நடன விசேடங்களை நடித்துக்காட்டுகிறாள்.

அப்போது அந்தரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திரமான விகட நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கின்றாள்.

தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள். பார்வதக்குகை அச் சிரிப்பொலியால் கலகலவென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவன் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியை கௌரவித்து பாராட்டுகிறார்கள்.

இவ்வேளை பிரம்மா, விஷ்ணு, தெய்வேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், அட்டதிக்குப் பாலகர்களும், முனிவர்களும், பதினெண்ணாயிரம் ரிஷிகள் என்போரும் இருவரையும் மூன்று தடவை பிரதர்சனம் செய்து வணங்கிச் சென்றனர்.

ஆனால் அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி வண்டின் உருவம் பெற்று, பரமேஸ்வரனுக்கும், பார்வதி தேவிக்கும் இடையில் சென்று (பார்வதி தேவியை வணங்காது) பரமேஸ்வரனை மட்டுமே

ஆர்.நடராஜன்
ஆலையடிவேம்பு

3 தடவை வலம் வந்து பயபக்தியோடு வணங்கினார். (வண்டின் உருவம் பெற்றதால் இம் முனிவர் பிருங்கி முனிகள் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்). பிருங்கி என்றால் வண்டு.

பிருங்கி ரிஷியின் இச்செய்கையைக் கண்டு கோபமுற்ற பார்வதிதேவி, பரமேஸ்வரனிடம் காரணம் கேட்க, பரமேஸ்வரனும் அர்த்தபுஷ்டியான ஒரு புன்முறுவலுடன் பின்வருமாறு கூறினார். தேவி! பிருங்கி முனிவர் உலக இன்பத்தை நாடுபவர் அல்ல. மாறாக மோட்சத்தை நாடுபவர். மோட்சத்தை நாடும் அவர் உலக இன்பங்களை நல்கும் உன்னை வணங்காது மோட்சத்தை நல்கும் என்னை வணங்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே தேவி எனக்கூற, இதனைக் கேள்வியுற்ற லோகமாத மேலும் கோபமுற்றவளாக எனது சக்தி இல்லாமல் மோட்சத்தை நாடும் உங்கள் பக்தரான பிருங்கி முனிவர் மோட்சத்தை அடைய முடியாது என்பதுடன் இங்கிருந்து ஒரு அடி கூட எடுத்து வைத்து தனது இருப்பிடத்தைக் கூட அண்ட முடியாது அவ்வாறான சக்தியைக் கொடுக்கும் என்னை ஏளனம் செய்தாய்.

ஆதலால் நிற்க முடியாமல் போகக் கடவாய் என முனிவருக்கு சாபம் கொடுத்தார். நிற்க முடியாது சக்தி அனைத்தையும் இழந்த முனிவர் தள்ளாடியவாறே நிலத்தில் விழப் போனார். இந்நிலையில் என் பக்தனைக் காப்பாற்றுதல் என் தர்மம் எனக் கூறி பிருங்கி முனிவரின் கையில் தண்டு (ஊன்றுகோல்) ஒன்றை சிவன் கொடுத்தார்.

தண்டினைப் பெற்றுக் கொண்ட முனிவர் சிறிது சக்தியைப் பெற்றவர் போல் லோகநாயகனுக்கு கோடானு கோடி வணக்கம் என மீண்டும் பரமேஸ்வரனை மட்டும் வணங்கி தனது ஆச்சிரமத்தை அடைந்தார்.

இதனைக் கண்ட லோகமாதாவுக்கு மேலும் கோபம் உண்டாகின்றது. பிருங்கி முனிவர் மட்டுமன்றி தனது கணவரான பரமேஸ்வரனும் தன்னை அவமதித்து விட்டார் என்ற கொடிய கோபத்தில் மற்றவர்கள் முன்பு என்னை அவமதித்த உங்களுடன் இனி நான் வாழப் போவதில்லை எனக் கூறி கைலையை விட்டு நீங்கிப் பூலோகத்துக்கு வருகிறாள். வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கிற பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள்.

ஆனால் ஆதிபராசக்தியின் அம்சமான பார்வதி தேவியின் திருப்பாதங்கள் அவ்வனத்தில் பட்டதும், மரஞ் செடி, கொடிகள் எல்லாம் புத்துயிர் பெற்று தளிர்த்தன.

மல்லிகை,முல்லை, மந்தாரை, பாரிஜாதம் போன்ற செடிகள் பூத்துக் குலுங்கியதுடன் அவற்றின் நறுமணம் வனத்தின் நாற்றிசையும் வீசுவதைக் கண்ட வால்மீகி மஹாரிஷி; தனது ஞானக் கண்ணால் தனது ஆச்சிரமம் அமைந்துள்ள வனத்தில் பரமேஸ்வரி எழுந்தருளி உள்ளதைக் கண்டார்.

முனிவர் பார்வதி தேவி எழுந்தருளியுள்ள வில்வமரத்தடிக்கு வந்து, ஆச்சரியத்துடன் தேவியை நோக்கி மும் மூர்த்திகளிலும் முதற் பொருளே! லோக மாதாவே! முக்கண்ணரின் தேவியே! முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தேவியே! தாங்கள் பூலோகம் வந்து சிறியோனின் பர்னசாலை அமைந்துள்ள வனத்தில் எழுந்தருளி இருப்பதற்கு யான் என்ன தவம் செய்தேனோ எனக் கூறி, அன்னையை மெய்சிலிர்க்க வணங்கி, தாயே! தாங்கள் பூலோகம் வந்ததற்கான காரணத்தை அடியேன் அறிந்து கொள்வதில் தவறு ஒன்றும் இல்லையே? என வினாவி மீண்டும் வணங்கி நின்றார்.

அதற்கு பார்வதி தேவி பிருங்கி முனிவரின் அலட்சியத்தால் கோபமுற்ற நான் பிரியக் கூடாத என் நாதனை விட்டுப் பிரிந்து மிகவும் நீண்ட தூரம் வந்து விட்டேன் என தனது தவறை உணர்ந்து கவலையுடன் கூறினார்.

வால்மீகி முனிவர் பரமேஸ்வரியை தனது ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்று நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட இருக்கையில் அமரச் செய்து தினமும் வணங்கி வந்தார். இவ்வேளை பார்வதிதேவியானவள் வால்மீகி முனிவரை நோக்கி எனது அறிவீனத்தால் என் சுவாமியைப் பிரிந்து இங்கே (தற்போது தென் இந்தியாவில் உள்ள மாங்காட்டு அம்மன் ஆலயம்) வந்து விட்டேன். எனவே இவ்வுலகில் இதுவரை யாரும் அனுஷ்டிக்காத ஒரு விரதத்தினை அனுஷ்டித்து இறைவனை மீண்டும் அடைந்து ஆறுதல் அடைய விரும்புகின்றேன். எனவே, அவ்வாறான விரதம் இருப்பின் கூறும்படி கேட்டார். அதற்கு வால்மீகி பின்வருமாறு கூறினார்.

தாயே! இவ்வுலகில் இதுவரை யாரும் அனுஷ்டிக்காத விரதம் ஒன்று உள்ளது. அதனை மெய்யன்புடனும் பயபக்தியுடனும் அனுஷ்டித்தால் விரத முடிவில் பரமேஸ்வரனின் அருள் பூரணமாக கிடைக்கப் பெறுவீர்கள் எனக் கூறி, அத்தகைய சிறப்புப் பெற்றதும் யாராலும் இதுவரை அனுஷ்டிக்கப்படாததுமான விரதம் கேதார கௌரி விரதம் எனக் கூறி இவ்விரதத்தின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விரத நியதிகளை பின்வருமாறு கூறுகின்றார்.

புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச தசமி தொடக்கம் ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்துத் தீபாவளித் திருநாளான அமாவாசை வரை 21 நாள்கள் பிரதி தினமும் நீராடி சுத்தமான ஆடை அணிந்து ஆலமரத்தின் கீழ் சிவலிங்கத்தை பிரதிட்டை செய்து 21 வாழைப்பழம், 21 பாக்கு, 21 மஞ்சள், 21 அதிரசம், நோன்பு நூல் என்பவற்றை நைவேத்தியமாகப் படைத்து வழிபடல் வேண்டும் என்று கூறினார். சிவனை மனதில் தியானம் செய்து விதிப்படி வணங்கியதால் 21 ஆம் நாள் அம்பிகையின் விரதத்தில் மகிழ்ந்து அம்பாளின் முன் தேவ கணங்கள் புடைசூழ ரிஷபவாகனத்தில் பூலோகத்தில் அம்பிகையின் முன் காட்சி கொடுத்து தனது இடது பாகத்தை ஈஸ்வரிக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பெற்று கைலாயம் சென்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த விரதத்தினை திருமால் அனுஷ்டித்து வைகுந்த பதவியைப் பெற்றதுடன் பிரம்மன் அனுஷ்டித்து உலகைப் படைக்கும் உயர் பதவியினைப் பெற்றார். இந்திரன் அனுஷ்டித்து

31 ஆம் பக்கம் பார்க்க....

# புலமைப்பரிசில் பரீட்சை எழுதியபின் தரம் 5 மாணவர்களின் நிலை என்ன?

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நடந்தேறிவிட்டது. ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே படிக்க ஆரம்பித்த இந்த சின்னஞ்சிறுசுகளுக்கான போட்டிப்பரீட்சை முடிவுற்றது. சிறந்;;தபெறுபேறுகளைப் பெறவேண்டும், தரம் ஐந்து பரீட்சையில் உயர் புள்ளிகள் பெறவேண்டும், பெற்றோரின் இலட்சியக் கனவு காப்பாற்றப்பட வேண்டும், வகுப்பாசிரியர், மாலைநேர ஆசிரியர், பாடசாலையின் அதிபர் போன்றோரின் பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்று இரவுபகல் பாராது கற்றுக் கொண்டே இருந்தனர்.

அதற்காக பல்வேறு பிரயத்தனங்கள், நுட்பமுறைகளைக் கையாண்டு பரீட்சையில் உயர்புள்ளி எடுப்பதற்காக தன்னைப் புடம்போற்றுக் கொண்டனர். பலதரப்பட்டவர்களின் வினாப்பொதிகள் பயிற்சிகளும் செய்து தன்னைத் தயார்படுத்திக் கொண்டனர். தனது சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டதோ என்று எண்;ணும் அளவுக்கு எல்லாத்தரப்பிலிருந்தும் மேற்பார்வை ஆதலால் ஓய்வின்றி, விளையாட்டின்றி, கொப்பியும் கையுமாக உலாவிய நாட்களே அதிகம். இவை எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டன. தனது அனுபவங்களை பகிரவேண்டும், சுதந்திரமாக உலாவ வேண்டும். துவிச்சக்கர வண்டி ஓட்டவேண்டும். தொலைக்காட்சியில் விடுபட்டுப் போன நாடகங்களை மொத்தமாக பார்க்க வேண்டும். புத்தகம் கொப்பிகளுக்கும் பிரியாவிடை. படித்து முடித்துவிட்டதான பார்வை.. இது தரம் 5 பொதுப் பரீட்சை எழுதிய மாணவன் ஒருவனது நிலைமை.

தரம் ஐந்து பரீட்சை எழுதிய மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறிய அடுத்த கனம் தனக்குள்ளே இருந்து வெளிவருகின்ற உணர்வுப் பெருமூச்சு உடலைச் சுட்டுகொண்டு வெளியே செல்கிறது. மிகவும் கலகலப்பாக பேசிக்கொண்டும், விளையாடிக் கொண்டும் நடைபயில்கின்றனர். பரீட்சை நடந்தேறிய அன்றைய மாலைப் பொழுதில் சில மாணவர்கள் அவர்களுக்குரிய கதையாடல்களுடன், சிறிய துவிச்சக்கர வண்டியில் இரு பக்கமும் அசைந்து அசைந்து தன் சிறிய கால்களால் துள்ளி மிதித்துக் கொண்டும், ஒருகையில் கிரிக்கெட் மட்டையுடன் செல்லும் காட்சியை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டேன். அவர்கள் பேசிக் கொண்டு செல்கின்ற வார்த்தைகள்தான் இங்கே முக்கியமானதாகும்.

அதாவது இரண்டு நண்பர்களுக்கிடையே நடைபெற்ற சம்பாஷனையிது. டேய் முனீர்... இன்டையோட முடிஞ்சுடா படிப்பு.. இனி விளையாட்டுத்தான். நாளைக்கு பள்ளிக்கூடத்திற்குப் போகத்தேவல. இனி என்னடா போறா? இல்ல.. நான் பெந்நாள் கழிஞ்சுதான் போவன். சேரும் அப்படித்தான் செல்லியிருக்கார். எங்கடசேர் நல்ல சேர். அடிக்கிறதுமில்ல. இனி ஆறாம்வகுப்புக்கு போனாசரிதானே.. ஆ.. எங்கடசேர் எழுதாட்டியடி, பிழையென்டாயடி, ஆப்பாடா இனி அடிவிழாது. டெ அப்பிடியில்ல. சோதின இருக்கி. அதக்குப் பொறகுதான் ஆறாம்வகுப்பு. இதவிட என்னடா ஆறாம்வகுப்பு. நாம எவ்வளவத்தான் படிச்சிட்டம். நம்பலப்போல ஆரும் படிக்கல தெரியுமடா! விளையாடிப்பொட்டு சொனங்கியும் போகலாம். எங்குவாப்பா வெளிநாட்டில இருக்கார். உம்மா ஏசமாட்டா? வாப்பா எனக்கி ஒரு டச்போன் அனுப்பப்போறாராம். நெட்டெல்லாம் பார்ப்பன். படமும் பாப்பன். இனியென்ன முசுபாத்திதான் இவ்வாறு அந்த உரையாடல் தொடர்ந்து செல்கிறது.

மாணவர்களின் ஆதங்கங்கள், அவர்களது சுவை மிக்க கனவுகள் அனைத்தையும் இழந்திருந்த இந்த ஓராண்டு இடைவெளியினை அப்பிக் கொள்ளப் போகின்றார்கள் என்பதையே இந்த உரையாடல் உணர்த்துகின்றது.

பரீட்சை எழுதிய மாணவன் ஒருவனின் தாயின் ஒப்பாரி விளக்கமிது. ராப்பகலா படிச்ச படிப்பு ஒன்டுமே வரலயாம். என்னமா படிச்சதுகள். படிச்சத்திலயும் வேலயில்லபோலகிடக்கு என்ன மாக்ஸ் வரப்போகுதோ தெரியலம்மா? தனது குழந்தை கூறியவற்றை வைத்து சக தோழியுடன் பேசியவைகளிவை. உண்மையாகவே, தரம் ஐந்து மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்ற புலமைப்பரிசில் பரீட்சை முறையானது அதன் அடித்தள நோக்கம் மாறுபட்டு இன்று பெற்றோர் அதிக கவனம் கொள்ளும் ஒரு பரீட்சையாக மாற்றம் கண்டுவிட்டது. மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை இதுவென்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.



**எஸ்.எல். மன்சூர்**

ஆனால் இன்று நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் சிறந்த பாடசாலைகளாக பரிணாமம் பெற்றுள்ள நிலையில் எந்தப் பாடசாலைக்குச் செல்வது என்பது குறைவடைந்துவிட்டது. இருப்பினும் வருமானம் குறைந்த குடும்பத்துப் பிள்ளைக்கு அதற்கான ஊக்குவிப்புப் பணம் கிடைக்கும். வசதியான, அரச தொழில்சார்ந்த பெற்றோரின் குழந்தைகளுக்கு இப்பணம் கிடைக்காது. ஆக, குறித்த நோக்கங்கள் அங்கே வெளியேற்றப்பட்டு மாணவர்கள் மாத்திரம் கற்றல் அனுபவங்களையும், தொடர்ந்தேர்ச்சியான கற்கும் செயற்பாட்டிற்கு உள்வாங்கப் படுகின்றனர்.

பல்வேறு இருப்புக்களைக் கூறிய மாணவர்களுக்கு தொடர்ந்து கற்றுக் கொடுத்துவிட்டு இப்போது விடுதலை அடைந்ததாக பல மாணவர்கள், பெற்றோர்கள் கூறினாலும் தொடர்ந்தும் அந்த மாணவர்கள் பாடசாலையிலும்சரி, வீட்டிலும்சரி அவதானிக்கப்பட்டு கவனிக்கப்படாது விட்டால் இப்பரீட்சையில் உயர்புள்ளி பெற்று சித்தியடைந்த மாணவர்கள்கூட சாதாரணதரத்துடன் அல்லது உயர்தரத்துடன் பாடசாலைக் கல்வியை முடிவுறுத்துகின்ற நிலைமைகளும் தோன்றுவதாக கடந்தகால அறிக்கைகள் கூறுகின்றன. தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களில் சுமார் 20 -30வீததிற்கும் சற்று கூடுதலான மாணவர்களே உயர்கல்வியில் சிறந்த அடைவினைப் பெறுவதாகவும் கூறப்படுகின்றது. இந்நிலையில் இவர்களை தொடர்ந்தும் கற்ற விடயங்களை தக்கவைக்கவேண்டுமாக இருந்தால் பெற்றோர், பாடசாலை, ஆசிரியர்கள் ஒன்றிணைந்து இந்த மாணவர்களுக்கு வழிகாட்டவேண்டும். இந்த வழிமுறைகள் தொடர்ந்து சாதாரணதரம், உயர்தரம் வரையிலும் செல்ல வேண்டும் என்பதுதான் நமது ஆதங்கமாகும்.

அதற்கான செயற்றிட்டங்களை இவ்வகுப்பாசிரியர்கள் தொடர்ந்து மேற்கொள்ள திட்டங்களை தீட்டவேண்டும். சில மாணவர்கள் விளங்கியிருப்பதுபோல இதன் பின்னர் படிப்பே இல்லை என்றாகும் வண்ணம் மாணவர்கள் கடுமையான எதிர்விளைவுகளைத் தாங்கியதாகவே கற்றிருக்கின்றார்கள். அல்லது கற்பதற்கு அழுத்தப் பட்டிருக்கின்றார்கள். இந்த அழுத்தத்திலிருந்து விடுதலை கிடைக்க வேண்டுமாக இருந்தால் இந்த மாணவர்கள் உளவளத்துணை சம்பந்தமான சிறுசிறு பயிற்சிகள் வழங்குதல் அவசியமாகும். அநேகமான மாணவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்காக கணிதம், தமிழ், சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள் போன்றபாடங்களை முழுமையாக கற்றிருப்பார்கள். ஆங்கிலம், சமயம், செயற்பட்டு மகிழ்வோம் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இவர்களை ஈடுபடுத்தி தொடர்ந்தும் சிறந்த புலமையாளர்களாக மாற்றம் பெறச் செய்வதில் உரியவர்கள் கருத்தாளத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

ஆனால் சில பாடசாலைகளில் இத்தகைய மாணவர்கள் கவனிக்கப்படுவதில்லை. புலமையாளர்கள் என்கிற பட்டத்தைச் சூட்டிவிட்டு எந்தவொரு ஆசிரியரும் அவர்களை எட்டியும் பார்ப்பதில்லை. கற்பித்த ஆசிரியரோ தரம் நான்கு வகுப்பினை அடுத்தாண்டிற்கு தயார்படுத்த இப்போதே அந்த மாணவர்களின் வகுப்பறையை நோக்கி நகர்வார். அதிபரும், இந்த நான்கு ஆசிரியரும் இணைந்து தரம் ஐந்து ஆசிரியரிடம் மாணவர்களை ஒப்படைப்பார்கள். பரீட்சை எழுதிய மாணவர்களின் வகுப்பில் தரம் நான்கு ஆசிரியர் பொறுப்பெடுப்பார். குறைந்த அடைவுள்ள மாணவரும், கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்களும் ஒன்றுசேர்ந்து விடுபட்டு அத்தனை விளையாட்டுகளிலும் தம்மை ஈடுபடுத்தி அந்தப் பாடசாலையின் அனைத்து வேலைகளுக்கும் இவர்களே பயன்படுத்தப்படுவார்கள். பாடம் எதுவும் நடைபெறாது. சிலவேளைகளில் வகுப்பறையில் ஆசிரியரே இருக்க மாட்டார். ஏனெனில் அவர்கள் படித்து முடித்துவிட்டார்கள். படிப்பதற்கு அங்கு ஒன்றும் இல்லை என்கிற வெற்றுக் கதைகளோடு நாட்கள் நகரும். தரம் ஆறுக்கு மாணவர்கள் ஆண்டின் இறுதியில் வகுப்பேற்றப் படுவார்கள்.

அடுத்தாண்டிலிருந்து இந்த மாணவர்கள் புதிய பாடங்களை கற்கப்போகிறார்கள். வலிந்து கற்றுக் கொண்ட மாணவர்கள் கடுமையான சுமை காரணமாக ஒருசிலர் பாடசாலைக் கல்வியை முடிவுறுத்தும் வகையில் விட்டு விட்டு பாடசாலை செல்லும் குழுவில் இணைவார்கள். கூடுதலாக புள்ளிகள் பெற்றுக் கொண்ட மாணவர் பலரது கவனம் வேறுபக்கம் திசை திருப்பப்பட்டு இறுதில் நாம் மேலே கூறியபோல ஒருசில மாணவர்களைத் தவிர அநேகமானோர் க.பொ.த மற்றும் உயர்தர் பரீட்சைகளில் குறைவான அடைவினை பெறுவார்கள். வேலையற்றோர், இடைவிலகியோர் போன்ற அணியினர் ஏலவே சமூகத்தில் உலாவருவோருடன் இணைவார்கள். இனியென்ன சமூகத்தில் தலையிடி அதிரிக்கும். இளைஞர்களாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டாலும் அந்தச் சமூகத்தில் பிரச்சினையான ஒரு குழுவாக காணப்படுவர். ஆதலால் தான் முன்கூட்டியே தன்னாலும் முடிவும் என்பதை முன்னிலைப்படுத்தி தனக்குரியவற்றை தானே நிறைவேற்றும் வகையில் இந்த மாணவர்கள் இப்போதிருந்தே வழிப்படுத்தப்படுவது அவசியமாகும்.

கிராமப்புறத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மாணவர்களும் இலவசமாக கல்வியைத் தொடர வேண்டும் என்பதற்கான திட்டத்தினை வரைந்து அனைவரும் இலவசக் கல்வியை பெறவேண்டும் என்பதற்காக அன்று சி.டபள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்களது சிந்தனையில் உதித்த ஒரு திட்டமாகவும் இந்த புலமைப்பரிசில் பரீட்சை முறை காணப்படுவதையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுறுத்த வேண்டியிருக்கிறது. எனவே, கடுமையான மன உளைச்சலை கொடுக்காத வகையில் மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியை சிறந்த முறையில் ஊட்ட வேண்டும். தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரையான வகுப்புக்களில் கலைத்திட்டத்திலுள்ளவாறு, பாடத்திட்டத்தை தேர்ச்சியடையச் செய்யும் வண்ணம் சிறந்த முறையில் கல்வியை வழங்க வேண்டும். சில மாணவர்கள் தரம் ஐந்திற்கு வந்த பிறகுதான் வேகமாக கற்பதற்கு தயார்படுத்தப்படுகின்றார்கள். இதன் காரணமாக மாணவர்கள் நெட்டுறுவாக்கம் செய்யப்படுகின்றனர்.

ஆதலால் உரிய ஆசிரியர்கள் தனக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புக்களை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கு ஏற்றவிதமான திட்டங்களைத் தயார் செய்து மாணவர்களை சிறந்த நற்பிரஜைகளாக்குவதற்கு தன்னாலான முழு ஒத்தாசைகளையும் வழங்குதல் வேண்டும். மாணவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே தலைமைத்துவப் பண்புகள், ஒழுக்கநெறி பண்புகளை ஊட்டி அதன் ஊடாக பாடசாலையிலிருந்து இடைவிலகாத மாணவர்களை உருவாக்குவதுடன், ஆர்வத்துடன் கற்று, உயர்தரத்திலும் உயர் கல்வியிலும் சிறந்த விளங்க ஆசிரியர்கள் வழிகாட்டுவதற்கு உதவுதல் அவசியமாகும். இன்று தரம் ஐந்து பரீட்சை எழுதிய மாணவர்கள் கற்று முடித்துவிட்டோம் இனி கற்பதற்கு ஒன்றுமில்லை என்று கூறியுலாவுவதற்கு நினைக்கின்ற மாணவர்களை சிறந்த முறையில் வழிப்படுத்துவதற்கு இன்றே பாடசாலைகள் தயாராக வேண்டியது மிகமிக அவசியமாகும்.

---

## சர்வ...

30 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொன்னுலகை ஆண்டு வெள்ளை யானையினையும் வாகனமாகக் கொண்டார். இவ்விரதத்தின் மகிமையை இதுதான் என யாராலும் வரையறுத்துக் கூற இயலாது.

கேதாரகௌரி விரதம அனுட்டிக்கும் முறை

கேதாரகௌரி விரதம் ஆலயத்தில் அனுஷ்டிப்பவர்கள் கேதாரகௌரி விரத ஆரம்பதினத்திலன்று கௌரி அம்பிகை சமேத கேதீஸ்வரநாதரின் சன்னிதானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கும்பத்தின் முன்பதாக அமர்ந்திருந்து பூசை வழிபாட்டிற்குரிய வலதுகையில் ஞானவிரலாகிய மோதிரவிரலில் தர்ப்பைப் பவித்திரம் அணிந்து சிவாச்சாரியர் மூலம் உங்கள் பிறந்த நட்சத்திரம் பெயர் ஆகியவற்றைக் கூறி குடும்பத்தவர் அனைவரது நன்மைகளுக்காகவும் விரத பூஜைகளை நடாத்துவதாகச் சங்கற்பம் செய்து ஸ்ரீ வரசித்தி விநாகர் வழிபாட்டுடன் ஆரம்பித்தல் அவசியமாகும்.

விரத தினங்களிலே பகலில் உணவு தூக்கம் ஆகியவற்றைத் தவிர்த்து, பழச்சாறு பால், நீர்மோர் ஆகியவற்றைமடடுமே அருந்தி தெய்வசிநதனையுடன் கழித்து, மாலையில் ஆலயத்தில் கௌரி மீனாட்சி சமேதரான கேதீஸ்வரப் பெருமானுக்கு சிறப்பாக நடைபெறும் அபிஷேக ஆராதனைகளிலும், அர்த்தநாரீஸ்வரராக இறைவனுக்கு நடைபெறும் அர்சனை வழிபாடுகளிலும் கலந்துகொள்வதுடன், கும்பத்தில் 21 தினங்களாக பூஜையில் வைக்கப்பட்டுள்ள, இருபத்தொரு இழைகளினால் உருவாக்கப்பெற்றுள்ள நோன்புக்கயிற்றில் இருக்கும் 21 முடிச்சுக்களுக்குமுரிய (கிரந்தி பூஜை) சிறப்பு மந்திரங்களை குரு மூலம் உபதேசமாகக் காதினால் கேட்டு அதனை திரும்ப உங்கள் வாயினால் பக்தியுடன் உச்சரித்து அதன்பின்னர் சிவலிங்கப்பெருமானை சிவலிங்காஷ்டக ஸ்தோத்திரத்துடன் கையில் பூவும் நீரும் ஏந்தி பிரதட்சிணம்செய்து கும்பத்துக்கு மலர்சொரிந்து வழிபடுவது அவசியமாகும்.

இன்றியமையாத காரணங்களினால் தினமும் வரமுடியாவிடின் இயன்ற தினங்களில் வந்து தவறவிட்ட பிரதட்சிண நமஸ்காரங்களையும் குறைவின்றி நிறைவேற்றிப் பூர்த்தி செய்வது அவசியமாகும். இறுதி நாளன்று பழைய நோன்புக்கயிற்றினை நீக்கிப் புதிய நோன்புக்கயிற்றினை கேதாரிகௌரி ரட்சைக் காப்பாக ஆண்கள் குருமூலம் வலது கையிலும், பெண்கள் குருமூலம் அல்லது கணவர் மூலம் அல்லது சுமங்கலிகள் மூலம் இடது கையில் அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளலாம்.

அன்றையதினம் பூரணமான உபவாசமாக இருந்து மறுநாள் பாரணம் செய்வது மிகவும் உத்தமம்.

ஒருசிலர் ஆரம்பதினத்தில் வந்து சங்கல்பம் செய்து விரதத்தைத் தொடங்கிப் பின் இறுதி மூன்று தினங்களில் அனைத்து பிரதட்சிண நமஸ்காரங்களையும் செய்து முடித்து குருவழிபாட்டுடன் நோன்புக் கயிறு வாங்கி அணிவர். பழைய காப்புக் கயிறை நீர் நிலைகளில் போடவும். பெண்களுக்கு இறுதி நாளில் ஆலயத்திற்கு வந்து பூர்த்தி செய்ய இயலாது, மாத விலக்கினால் தடங்கல் ஏற்பட்டால் அசுத்தமான மூன்று தினங்களும் ஒருவேளை உணவுடன் விரதமாக இருந்து நான்காம் நாள் மங்கள ஸ்நானம் செய்து ஆலயத்தில் வந்து பிரதட்சண நமஸ்காரங்களை நிறைவு செய்து காப்பு அணியலாம். இதற்காக இன்னொரு அமாவாசை வரும் வரை காத்திருப்பது அவசியமில்லை.

இவ்விரதத்தை ஏனைய ஒருசில விரதங்களைப் போல இத்தனைவருடகாலம் மட்டுமே அனுஷ்டிக்கவேண்டுமென்ற நியதி கிடையாது.

தொடர்ந்து அனுஷ்டிக்கும்போது வயோதிபத்தினால் தளர்ச்சியடைந்தவர்களும் நோயுற்று உடல் நலிவடைந்வர்களும் காலையிலேயே பக்தியுடன் பூஜைவழிபாடுகளை நிறைவேற்றி உச்சிப்பொழுதில் பால் பழம் அதிரசம் பலகாரங்களை உட்கொள்வதும் தவறல்ல.

ஆலயத்திற்குசெல்ல இயலாது இருப்பவர்கள்; அல்லது ஆலயம் இல்லாத ஊரில் வசிப்பவர்கள்:

புரட்டாதி மாதம் சுக்ல பட்ட தசமியில் இவ் விரத்த்தை ஆரம்பிக்க வேண்டும். இருபத்தோரிழைகள் கொண்டதும் இருபத்தொரு முடிச்சுக்கள் கொண்டதுமான நூலினால் உருவாக்கப்பட்ட மந்திரக் கயிற்றை செய்துகொண்டு அன்றுமுதல் சிவபெருமானை மண்ணால் ஆக்கப்பட்ட விம்பத்திலும், கும்பத்திலும் பூஜித்து இவ்விரத்த்தை அனுஷ்டிக்க வேண்டும்.

தூய்மையான அழகான இடத்திலே மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை அமைத்து கும்பம் வைத்து பூக்கள், வில்வம் முதலியனவற்றால் அர்ச்சனை செய்ய்யவேண்டும்.

ஒவ்வொரு நாளும் கேதாரேஸ்வரனுக்கு இருபத்தொரு எண்ணிக்கை கொண்ட அப்பம், வடை, பழம், பாக்கு, வெற்றிலை, பாயாசம், சர்க்கரை அன்னம், புளிஅன்னம் முதலிய நைவேத்தியங்கள் வைத்து, தூபதீபம் காட்டியும் சோடோபோசார பூஜை செய்தும் கேதேஸ்வரனை வழிபடுதல் வேண்டும்.

இருபத்தொரு நாளும் பூஜையில் வைக்கப்பட்ட இருப்பத்தொரு முடிச்சுக்கள் கொண்ட நூலினை இருபத்தோராவது திதியான அமவாசைத் திதியில் இடது கையில் கட்டிக்கொள்ளவேண்டும்.

தமது ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் தமது குடும்பத்தவரின், ஆயுள் விருத்தி, செல்வ விருத்தி, குடும்ப அன்னியோன்னிய அபிவிருத்தி, மனச்சங்கடங்கள் நீங்கி சந்தோஷம் பெருகவும், குழந்தைகளின் கல்வி, உத்தியோகம் பெறவும், சுபமங்கள திருமணம் கைகூடவும், குழந்தைப் பாக்கியப்பேறுகள் கிட்டவும் இவ்விரதத்தை இயன்றவரை விடாது அனுஷ்டிப்பது உத்தமம் ஆகும்.

இவ்வாறு கௌதம முனிவர் விரதமஹிமையை உலக மாதாவாகிய கௌரிதேவிக்கு உபதேசம் செய்ய, அதைக்கேட்டு அன்னை கேதாரேஸ்வரப்பெருமானை நினைந்து தவமிருந்து வழிபட, இறைவன் காட்சிகொடுத்து தேவிக்குத் தனது இடப்பாகத்தைக் கொடுத்து தன்னுடன் இணைத்து அர்த்தநாரீஸ்வரனாகி உமையொருபாகன் என்னும் சிறப்புத் திருநாமத்தைப் பெற்றார் என்பது வரலாறு.

தேவியின் வேண்டுதலினால் இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் அனைவருக்கும்; தம்பதிகள் சேமமாக இருத்தலும், பிணிநீங்கலும், வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுவதற்கும் சிவனருளைப் பரிபூரணாகப் பெறுவதற்கும், கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே இவ்விரத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

இவ்விரத முடிவில் 21 இழையினால் ஆன காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் முழங்கையிற்கும் தோள்பட்டைக்கும் இடையில் கட்டுதல் வேண்டும். மேலும் முதல் 20 நாளும் ஒரு பொழுது சூரிய அஸ்தமனத்தின் பின் உணவருந்தி, இறுதி நாளாகிய சதுர்தசி அன்று உபவாசம் இருந்து மறுநாள் காலை சூரிய உதயத்திற்கு முன்னர் பாரணம்ீ பண்ணி விரதத்தை முடித்தல் வேண்டும்.

இவ்விரதத்தினை அனுஷ்டிப்பதால் ஐஸ்வரியம் பெருகும். வறுமையொழியும், நினைத்த காரியம் கை கூடும் என்பது அனுபவ உண்மை. இந்நாளில் அம்பிக்கை சிவனை நோக்கி எம்பெருமானே இவ்விரத்தை உலகில் யார் செய்தாலும் விரும்பிய யாவற்றையும் பெறுவதற்கு அருள் புரியவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சிவன் அம்பிகையின் வேண்டுக்கோளை ஏற்று, அங்கனமே ஆகுக என்று அருள் புரிந்தார். எனவே நாமும் இவ் அரிய நோன்பினை நோற்று பரம் பொருளின் பூரண கடாட்சத்தினைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக!






கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவின் ஆரம்ப நாள் நிகழ்வு திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து தமிழர் பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகி விழா நடைபெறும் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியை சென்றடைந்தது. ஆரம்ப நிகழ்வாக பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பிரதமகுரு ஆதினகர்த்தா பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரகுருக்கள் பண்பாட்டுப் பேரணியை ஆரம்பித்து வைத்தார், நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. வளர்மதி ரவீந்திரன், முன்னாள் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி உட்பட பலர் கலந்து சிறப்பிப்பதையும் படங்களில் காணலாம்.

படம்: சேனையூர் நிருபர்






மன்னார் நானாட்டான் டிசலாசால் கல்லூரியின் வாணி விழா கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எப்.விஜயதாசன் தலையில் சிறப்பாக இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி தேசமான்ய எஸ்.லோகநாதனும் சிறப்பு விருந்தினராக இந்துசமய அபிவிருத்தி உதியோகத்தர் ஆனந்தராசா ஜீவிதா உள்ளிட்ட பெருந்திரலானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் மாணவர்களின் நடனம், நாடகம், பாட்டு, கூத்து மற்றும் வினாவிடைப் போட்டிகள் இடம் பெற்றன.

படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்






சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட மருத்துவ முகாம்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பாடசாலை முகாமைத்துவ சபை என்பவற்றின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.ரஹ்மான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இம்மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்தார்.

படம்: அஸ்லம் எஸ்.மௌலானா





காரைதீவு இராம கிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலையின் 90வது ஆண்டு நிறைவையொட்டிய மீண்டுமோர் பள்ளிக்கூடம் பண்பாட்டுப் பேரணியொன்று அண்மையில் காரைதீவில் பாடசாலைடி அதிபர் செ.மணிமாறன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. நடை பவனி ஸ்ரீ இராமகிருஸ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில முதல்வர் ஸ்ரீமத்சுவாமி அக்ஷயானந்த மஹராஜ் மற்றும் மிஷன் பிரமுகர்களை தொடர்ந்து ஏனைய பண்பாட்டு கலைஅமிசங்கள் பின் தொடர்ந்தன.

படம்: எம்.ஐ.எம்.அஸ்ஹர்





கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார திணைக்களம், இலங்கை கலைக்கழகம், அரச நாடக ஆலோசனைச் சபை ஆகியன இணைந்து நடாத்திய அரச சிறுவர் நாடக விழா -2018இன் பரிசளிப்பு வைபவம் அண்மையில் கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெற்றபோது கலைஇலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் மங்கல விளக்கேற்றுவதையும் வரையறுக்கப்பட்ட பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற வண்டிப் பயணம் நாடகத்தின் இயக்குநர் மணிசேகரனுக்கு கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ விருது வழங்குவதையும் அருகில் நாடகாசிரியர் து.அயூரன், நாடக ஆலோசனைச் சபைத் தலைவர் பெற்றிக் ரத்நாயக்க, சிரேஷ்ட சிங்கள கலைஞர் எதிரவீர சதீஸ்சந்திர, கலைக்கழகத் தலைவர் பேராசிரியர் சூரியாராச்சி ஆகியோர் உடனிருப்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற நடனத்தையும் படங்களில் காணலாம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 28.10.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.